302

302
1-57

மகான் ஷைகு

# சாஅதீ

Q7:458WE75
N56
104405

வர் பி. எம். கனி பி. ஏ., பி. எல்., எழுதியது

மகான்

## ஷைகு சாஅதி

உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள், நீதிபோதனையாளர்களுள் மகான் ஷைகு சாஅதி ஒருவராவார். உலகின் பெரும் பகுதியிலே சுற்றிப் பலவகையிலும் அனுபவமடைந்த இப்பெரியார் தமது முதிர்ந்த வயதில் 'குலிஸ்தான்', 'போஸ்தான்' ஆகிய நீதி நூற்களை எழுதினார். இந்த மகானுடைய ரஸமான வாழ்க்கை வரலாற்றையும், உலகச் சிந்தனையாளர்களிடை அவர் அடைந்துள்ள இடத்தையும், அவருடைய திகட்டாத பேரிலக்கியங்களான 'குலிஸ்தான்,' 'போஸ்தான்' பெரும் பகுதியின் மொழிபெயர்ப்பையும் இந்த நூலில் படிக்கலாம்.

விலை ரூ. 2-12-0

302
1-57

மகான்

# ஷைகு சாஅதி

ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,

எழுதியது.

முதல் பதிப்பு நவ. 1956

உரிமைப் பதிவு.

O7:458wE75
N56

விலை ரூ. 2—12—0

கிடைக்குமிடம் :

ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,

128, மூர் தெரு,

சென்னை—1.

# முன்னுரை

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கொண்டு உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள், நீதிமான்களுள் ஒருவரான இமாம் ஷைகு சாஅதி ஷிராஜி (ரஹ்மத்துல்லாஹி) யைப் பற்றிய இந்த நூல் வெளிவருகிறது. இத்தகைய ஒரு நூலை ஆக்கும் முயற்சியில் நான் வெகு காலமாகவே ஈடுபட்டிருந்தேன். எனினும், ஆண்டவன் நாட்டம் இப்போதுதான் இது வெளிவரவேண்டுமென்று இருந்திருக்கிறது.

இத்தகைய நூலைத் தயாரிக்க ஊக்கமளித்தவர் தற்சமயம் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி அதிபராகவிருக்கும் எனது அன்புக்குரிய பேராசிரியர் உயர்திரு அ. சீனிவாச ராகவன் அவர்களாவர். இது எழுதி முடிக்கப்பட்டபோது, இதை முழுவதும் படித்துப்பார்த்த அவர் இதன் பொதுவான பயன் கருதி, இதை வெளியிடத் தாமே ஏற்பாடு செய்வதாக இருந்தார். ஆனால், சந்தர்ப்பக் கோளாற்றால் அது இயலாதுபோயிற்று. அவர் தந்த ஊக்கத்துக்கு நான் என்றுங் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நூலின் ஜீவிய சரிதைப் பகுதியில் 'குலிஸ்தா'னிலும், 'போஸ்தா'னிலுமிருந்து ஏராளமான மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலின் பிற்பகுதியிலுள்ள 'குலிஸ்தான்,' 'போஸ்தான்' தொகுப்புகளில் அவை அனேகமாக மீண்டும் வராத முறையில் கவனித்திருக்கிறேன். இவ்விதமாக இவ்விரண்டு நூற்களின் பெரும் பகுதியும் இதில் இடம் பெற்றுள்ளது. இவற்றில் மீதியுள்ள சிறிய பகுதியும், சாஅதியின் கஜல்கள், பந்த் நாமா, பதாயி மொழிபெயர்ப்புகளும் இடமின்மை காரணமாக நிறுத்தப்பட்டன.

நீதியுணர்ச்சிக்கு முக்கிய இடம் தரும் யாவரும் இந்த நூலை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

ர. பா. மு. கனி.

# உள்ளடக்கம்

பக்கம்


மகான் ஷைகு சாஅதி

| | | |
|---|---|---|
| முன்மொழி | ... | 9 |
| பாலப் பருவம் | ... | 12 |
| கல்வி பயிலல் | ... | 13 |
| முரட்டு வாலிபம் | ... | 17 |
| மனமாற்றம் | ... | 22 |
| அந்திய காலம் | ... | 25 |
| குண நலன்கள் | ... | 26 |
| தெய்வச் சிந்தனையும் தயாளமும் | ... | 27 |
| விருந்தோம்பல் | ... | 29 |
| வாக்குவன்மை | ... | 32 |
| நகைச்சுவை | ... | 37 |
| குடும்ப வாழ்க்கை | ... | 41 |
| அவர் கால ஆட்சியாளர்கள் | ... | 46 |
| அற்புத சக்தி | ... | 52 |
| சாஅதியின் நூற்கள் | ... | 54 |
| சாஅதி ஸூபிக் கவிஞரா ? | ... | 55 |
| தத்துவார்த்த விளக்கங்கள் | ... | 57 |
| உலகச் சிந்தனையாளர்களிடையே சாஅதி | ... | 60 |
| வள்ளுவரும் சாஅதியும் | ... | 63 |
| 'குலிஸ்தான்' ஒரு பேரிலக்கியம் | ... | 78 |
| குலிஸ்தானை எழுதிய காரணம் | ... | 80 |
| முடிவுரை | ... | 84 |
| குலிஸ்தான் | ... | 87 |
| போஸ்தான் | ... | 179 |

## இறைவன் துதி

அளவற்ற அருளாளனும்,
நிகரற்ற அன்புடையோனுமான
அல்லா (ஹ்)வின் திருநாமத்தால்
இதைத் தொடங்குகிறேன்.

அவன் இவ்வுலகை ஆக்கிக் காப்பாற்றுபவன்;
மனித நாவில் பேச்சை வைத்தவன்;
அவன் திருநாமத்தால் இதைத் தொடங்குகிறேன்.
அவன் கருணையில் கருத்து வையாதான் நஷ்டமடைவான்.
மண்ணுலக மன்னர்கள்
அவன் முன் மண்டியிட்டு மன்ருடுகின்றனர்.
பணியாதவர்களை அவன்
பக்ஷமற்று விரட்டுவதில்லை;
பாவ மன்னிப்புக் கோருவோரை
அவன் பதறி யோடச் செய்வதுமில்லை.
அவனுடைய அறிவெனுங் கடலிலே
இவ்விரு உலகங்களும் இரு துளிகளே.
அடியார்கள் பிழை செய்தாலும்
அவன் தன் உதவியை உதறிவிடுவதில்லை;
இப்பிரபஞ்சத்திலே அவன் உணவைப் பரப்பியுள்ளான்-
நண்பரும் பகைவரும் விருந்தயர.
அவன் நிகரற்றவன்; நிரந்தரமான அரசுடையவன்.
அவன் மண்ணில் கிடப்போரை மன்னராக்குவான்;
முடி மன்னரை அடிசாயவும் செய்வான்.
தனது அன்பர் துயர் துடைத்து இன்பந் தருவான்;
தன் பகைவருக்குத்
துரும்பைக் கொண்டே துன்பமுங் கொடுப்பான்.
திரையின் பின்னிருந்து அவன் நம்மைக் காண்கிருன்;

அவன் கருணையால் நம் குற்றங்களை மன்னித்துவிடுகிறான்.
அகக் குற்றமுணர்வோர்க்கு அருகே இருக்கிறான்;
நெக்குருகுபவர் மனத்துக்கு அவன் நிம்மதி தருகிறான்.
உலகிலில்லா உண்மைகளை அவன் உணர்ந்தவன்;
நமக்குத் தெரியாத ரகசியங்களை அறிந்தவன்.
ஞாயிறும், திங்களும் சுழன்று
உலகில் நீரைப் பரப்புவது அவனால்.
பாறையினுள்ளே அவன் பருவயிரத்தை வைத்துள்ளான்.
ஒன்றுமில்லாததைக் கொண்டு உலகைப் படைத்துள்ளான்;
அவன் கல்யாண குணங்களை விரித்துரைக்கும்
நாநல முடையோர் யாரே !
அவன் கருணைப் பெருக்கை மதிப்பிடும்
மதியுடையோர் யாரே !
சிந்தனைப் பறவையால் அவன் திருச் சந்நிதானம்வரை
சிறகடித்துப் பறக்க இயலாது;
அறிவெனுங் கரம்
அவன் புகழ் என்னும் பொன் அங்கியை நெருங்க முடியாது.

## நபிபெருமானாரைப் போற்றுதல்

சாஅதி, எம்பெருமான் முகம்மது (ஸல்) அவர்களின்
முன்மாதிரியாலன்றி வேறொன்றின் மூலம்
பரிசுத்தப் பாதையில்
நடக்க முடியு மென்று நினையாதே !
அவர்கள் திருத்தூதர்களுளெல்லாம் தலைசிறந்தவர்கள்;
விமோசனப் பாதைக்கு வழிகாட்டி;
மனித வர்க்கத்துக்காகப் போராடுபவர்கள்.
அத்தகைய மகானின் புகழைச்
சாஅதி எவ்விதம் எடுத்தியம்ப இயலும் !
நபியே, இறைவனின் கருணை தங்கள் மீதிருக்கட்டும் !
சாந்தி இவ்வுலகுக்கு அருளப்படட்டும் !

---

**இந்த இறைவன் துதியும், நபிபெருமானாரைப் போற்றுதலும் ஷைகு சாஅதி தமது 'போஸ்தான்' ஆரம்பத்தில் எழுதியுள்ளவையாகும்.**

# மக்கான் ஷைகு சாஅதி

## முன்மொழி

மகான்கள் தோன்றி சன்மார்க்க ஒளி பரப்பி வந்த காலம் அது. சரிந்து கிடந்த சன்மார்க்கப் பாதையைச் சரிசெய்து, நயவஞ்சகர்களுடையவும், வேஷக்காரர்களுடையவும் திரைகளைக் கிழித் தெறிந்த - சன்மார்க்கத்துக்குப் புத்துயிர் அளித்த முஹ்யித்தீன் ஆண்டகை அப்போதுதான் பக்தா தில் தங்கள் பூத உடலை நீத்திருந்தார்கள். அஜ்மீரில் ஆத்மச் சுடர் வீசும் காஜா முயீனுத்தீன் ஆண்டகை அவர்கள் சன்மர்ர்க்க போதனை நிகழ்த்திக் கொண்டி ருந்தார்கள். அக்காலையில் தோன்றியவர்தாம் சாஅதி மகான். உலகின் சிறந்ததொரு வீரகாவி யத்தை எழுதிய பிர்தௌசியையும், ஆத்ம ஞானக் கவிதைகள் ஆக்கிய ஸனயீயையும், அத்தாரையும், காதல் காவியங்கள் எழுதிய நிஜாமியையும் தந்த பாரஸீகம் அப்போது நீதி போதனை புரிந்து உலகில் தமக்கென உன்னதமானதோர் இடத்தைத் தேடிக் கொண்ட சாஅதி மகானையும் வழங்கிற்று. ஆத்ம ஞானத் தத்துவத்தைப் பாரஸீக மொழியிலே அதி அற்புதமாக வடித்தெடுத்த மௌலானா ரூமிக்குச் சுமார் முப்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியவர் சாஅதி மகான்.

படிக்கக் கசப்பான நீதிகளை இனிய நறுஞ் சுவைத் தேனிலே தோய்த்து, தீங்கனிகளிலே புகுத்தி, உண்ண உண்ணத் தெவிட்டாத பேரமுதாக வழங்குவ தென்றால் அஃது இலகுவான செயலன்று. அந்த மகத்தான செயலை மகத்துவமிக்க முறை யில் செய்து முடித்த பெரியார் சாஅதி மகான்.

எண்பத்திரண்டு வயதைக் கடந்த முதிய நிலை யில் உலகில் இன்று உன்னதம் பெற்றுள்ள இரண்டு நீதி நூற்களை இப்பெரியார் எழுதினார்.

கற்றவர்கள் மட்டும் அமர்ந்து, படித்துச் சிந் தித்து, நயம் உணர்ந்து பாராட்டும் முறையில் சாஅதி மகான் நூற்கள் எழுதவில்லை. சாதாரண ஜனங்களும் - ஏன், சிறுவர்களுங்கூடப் - படித் துப் படித்து இன்பம் பெறும் வகையிலும், நீதி யின் பக்கல் மனம் திரும்பும் விதத்திலும் தெள்ளிய, எளிய நடையிலே தமது நூற்களை ஆக்கினார் இப் பெரியார். உலகில் நீதி போதனை செய்யும் நூற்கள் எழுதி இவ்விதம் சாதாரண ஜனங்களையும் அதிக மாகக் கவர்ந்த பெரியார்கள், சிந்தனையாளர்கள் வெகு சிலர்தாம் எனலாம். தமிழ் நாட்டில் திருவள்ளு வரும், சீன நாட்டில் கன்ஃபூஸியஸும், கிரேக்க நாட்டில் சாக்ரடீஸும், பிரான்ஸில் லா ரோஷிபோக் கோவும் நீதி போதனையாளர்களாக அமரத்துவம் பெற்ற பெரியார்களாவர். இவர்கள் அனைவரையும் விடச் சாஅதி மகான் அறநெறி போதிக்கும் முறை அற்புதமானது.

கண்ணியமான பணிவுடனே
வீரர்களின் விதியையும், மன்னர்களின் வீழ்ச்சியையும்
பாடினார் பிர்தௌஸி.
மென்மையான காதல் பைத்தியத்தைத்
தன் மேதையால் தீட்டினார் நிஜாமி.
சாஅதி வந்தார்; எடுத்தார் எழுதுகோலை.
பரந்த ஒரு பொருளை,

தகுந்த விஷயத்தைக் கருத்திலிருத்தினர்.
அதுவே மனிதனைப்பற்றியது.
சிறந்த அறிவுள்ள ஆனந்தத் துறவி-
பாரஸீகத்தின் ஒரு ஹோரஸ் அவர்.
அவர் நூற்களிலே
பால்யம் படிக்கக் கற்கிறது;
முதுமை கற்கப் படிக்கிறது.
இன்ப வரலாற்றிலே அறநெறி,
கதையிலே உண்மை வெளிப்பட,
கற்போர் மனத்தைக் கவர்கிறார் அவர்.
பொருளுக்கேற்ற பொன் நடை,
நடைக் கேற்ற நளின மொழிகள்-
இவை அவர் கூறும் விஷயத்திடம்
பற்றுதலுண்டாக்குகின்றன.

என்று பாராட்டுகிறார் ஆங்கில அறிஞர் ஆர். ஏ. நிக்கல்ஸன். உலகிலுள்ள நாகரிக பாஷைகளிலெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பெருமை சாஅதி மகானின் நூற்களுக்கு உண்டு. 'சாஅதி பாரஸீகத்துப் புல்புல்' என்று விவரிக்கிறார் சாஅதியை அடுத்து வந்த மகாகவி ஜாமி. கவிதைகளில்-அதிலும் உணர்ச்சிப் பெருக்கெடுக்கும் கஜல்கள் எழுதுவதில்-சாஅதி மிகவும் பிரஸித்தி பெற்றிருந்தார். சாஅதியைக் 'கவியரசர்' என்று வர்ணிக்கிறது ஒரு பாரஸீகக் கவிதை.

இத்தகைய மகா அறிஞரின் சுருக்கமான வரலாற்றையும், அவருடைய நூற்களின் சிறப்பையும் தமிழ் கூறும் நல்லுலகமும் அறிந்து பாராட்டுவது அவசியமாகும்.

**பாலப் பருவம்**

சாஅதி மகான் பிறந்த ஊர் பாரஸீக நாட்டில் உள்ள அழகிய நகரான ஷிராஜ் ஆகும்; பிறந்த வருடம் கி. பி. 1175. சாஅதியின் முழுப் பெயர் சாதாரணமாக முஸ்லிஹுத்தீன் ஷைக் சாஅதி ஷிராஜி என்று வழங்கப்பட்டுவந்தது. ஆனுல், பழைய பிரதிகளைப் பரிசோதித்ததில் சாஅதி மகானின் தந்தையின் பெயர்தான் முஸ்லிஹுத்தீன் என்றும், அவர் பெயர் முஷர்ரிபுத்தீன் ஷைகு சாஅதி என்றும் தெரியவருகிறது. சாஅதி மகான் நபிபெருமான் மருமகர்-நபிபெருமானின் திருப் புதல்வியை மணந்தவர்கள் ஆன-ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் வழித்தோன்றல் ஆவார். சாஅதியின் தந்தை பாரஸீக நாட்டு மன்னரான சாஅத் பின் ஜங்கி என்பவருடைய அவையில் ஊழியம் புரிந்துவந்தார். சாஅதியின் இளம் பிராயத்திலேயே அவர் தந்தையார் காலமாகி விட்டார். அதனுல், சாஅதி தமது ஏழைத் தாயாரோடு சேர்ந்து மிகவும் கஷ்டப்பட நேர்ந்தது.

சாஅதியின் தந்தை தன் புத்திரனிடம் மிகுந்த அன்புள்ளவராக நடந்து கொண்டார். தமது தனயனுக்கு விளையாட்டுச் சாமான்களை யெல்லாம் வாங்கிக் கொடுத்து, தன் செல்வனின் முகத்தில் மலரும் மகிழ்ச்சி கண்டு அவர் பூரிப்பதுண்டு.

“என் குழந்தைப் பருவத்தில் என் தந்தை (இறைவன் கருணை அவரை அணையுமாக!) எனக்கு எழுத ஒரு சின்னஞ் சிறிய மேஜையும், புஸ்தகங் களை விரித்து வைத்துப் படிக்கும் புஸ்தகம் தாங்கி

(ரஹ்யால்) யும், ஒரு தங்க மோதிரமும் வாங்கித் தந்தார். அதன்பின் பழைய சாமான்கள் வாங்கும் ஒருவன் வந்தான். அவனிடம் நான் தங்க மோதிரத்தைக் கொடுத்தேன். அவன் என் கை நிறையப் பேரீச்சம்பழம் தந்து சென்றான்" என்று தமது குழந்தைப் பருவச் சம்பவமொன்றை விவரிக்கிறார் சாஅதி. "என்மீது ஈ உட்காரவும் சம்மதியார் என் தந்தை. இப்போதோ என் கைகளிலே விலங்கு மாட்டப்படினும் எனக்காக இரங்குவாரில்லை. என் தந்தை நான் பாலனாக இருந்த காலையிலே காலமாகிவிட்டதால், அனாதையின் துக்கம் என்ன என்பதை நான் நன்கு அறிவேன்" என்கிறார் அவர்.

### கல்வி பயிலல்

சாஅதியும், அவர் தாயாரும் பிரமுகர் ஒருவருடைய பராமரிப்பில் வாழ்ந்தனர். பின்னர், சாஅதி ஷிராஜ் நகரைவிட்டு நீங்கி, அக்காலையில் கலா நிலையமாகவும், நாட்டின் தலைநகராகவும், மகான்கள் பலர் வசிக்கும் மாநகரமாகவும் விளங்கிய பக்தாத் போய்ச் சேர்ந்தார். நிஜாமியா, முஸ்தன்ஸீரியா என்ற இரண்டு மாபெரும் சர்வகலாசாலைகளைத் தன்னகத்தே கொண்ட பக்தாதில் வீதிக்கொரு பாடசாலை நடந்துவந்தது.

அது கலையின் பிறப்பிடம்;
கல்வியின் உறைவிடம்;
உலகிலே அதற்கு ஈடான நகர் ஏது?

என்று பக்தாதைப் பற்றிய வர்ணனைப் பாடல் ஒன்

றில் கவிஞர் அன்வரி குறிப்பிட்டுள்ளது போல், அக்கால நாகரிக நகரங்கள் சிலவற்றுள் ஒன்ருக விளங்கிய இந்நகரைக் கல்வி தேடும்-ஆர்வமிக்க-பலர் வந்தணைந்ததில் வியப்பில்லையன்ருே ! சாஅதி மகான் பக்தாத் வருவதற்குச் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரேயே சன்மார்க்கப் பயிர் தழைத்தோங்கப் பாடுபட்ட ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் காலமாகிவிட்டார்கள்.*

---

* ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களிடம் பக்தாதில் சாஅதி கல்வி பெற்றுவந்ததாகவும், அவர்களையே தங்கள் குருநாதராக ஏற்றுக்கொண்டதாகவும், முதல் தடவை மக்காவுக்கு அவர்களோடேயே ஹஜ்ஜுக்குச் சென்றதாகவும் வரலாற்று நூற்கள் சிலவற்றில் காணப்படுகிறது. ஆனுல், கி. பி. 1770-ல் ஜனனமான ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் கி. பி. 1166-லேயே (சந்திர வருஷக் கணக்கின்படி தங்களுடைய தொண்ணூற்ருராம் வயதில்) காலமாகிவிட்டார்கள். சாஅதி மகான் பிறந்ததோ கி. பி. 1175ல் - அதாவது முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் காலமாகி ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர். முஹ்யித்தீன் ஆண்டகையைச் சாஅதி தமது ஆத்மீகக் குருநாதராகக் கொண்டிருக்கிருர். ஆனுல், இவ்விதம் அவர்களை ஆத்மஞான வழிகாட்டியாகக் கொள்வதற்கு அவர்கள் ஜீவியத்துடன் இருந்திருக்கவேண்டுமென்றில்லை. சாஅதி மகானுடைய ஜனன வருஷம் குறித்து அபிப்பிராயபேதமுண்டு என்பதையும் இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆனுல், அவருடைய பிறந்த வருஷமாக நாம் பல நூற்களின் ஆதாரத்தின்மீது ஒப்புக்கொண்டுள்ள கி. பி. 1175-க்கு முன்னதாக அவர் பிறந்ததாக எந்த ஆசிரியரும் வாதாடவில்லை. அவர் பிறந்த வருஷம் கி. பி. 1175 தவிர், கி. பி. 1182, 1184, 1194 ஆகிய வருஷங்களை ஆசிரியர்கள் சிலர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

சாஅதி மகான் பக்தாதிலிருந்த எண்ணற்ற பள்ளிக்கூடங்களில் ஒன்றில் சேர்ந்து கல்வி பெற்று வந்தார். அந்நகரிலுள்ள செல்வர் ஒருவர் சாஅதிக்குப் பொருளுதவினுர். இவ்விதம் சன்மார்க்கக் கல்வி பயின்றுவந்த சமயமே சாஅதி கவிதைகளும் எழுதத் துணிந்துவிட்டார். ஒரு தடவை தாம் எழுதிய பாட்டு ஒன்றை நிஜாமியா சர்வகலாசாலையில் இலக்கியப் பேராசியராக இருந்த ஷம்ஷுத்தீன் என்பவருக்குச் சமர்ப்பணம் செய்து, அதை அவரி

---

இவை யாவும் போதிய ஆதாரமற்றவை என்பதுடன், நாம் குறிப்பிடும் ஆண்டுக்குப் பிந்தியவை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

சாஅதியின் 'குலிஸ்தான்' இரண்டாம் அத்தியாயத்தில் இந்த மகானைப்பற்றி ஒரு பிரஸ்தாபமுள்ளது. அது வருமாறு: மஹ்பூபு ஸுப்ஹானி அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் (முஹ்யித்தீன் ஆண்டகை) கஃபாவிலுள்ள 'ஹஜருல் அஸ்வத்' கல்லில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, "இறைவா, என்னை மன்னித்து ரக்ஷித்தருள். ஒருக்கால் எனக்குத் தண்டனை விதித்திருந்தாலும் என்னை நியாயத் தீர்ப்பு நாளில் குருடனுக எழுப்பு! –அப்படியானுல்தான் நற்கருமங்கள் செய்தோரைக் கண்டு நான் தலை குனியாமலிருக்க முடியும்" என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள்.

இத்தகைய மாபெரும் மகாத்மாவே இவ்விதம் பிரார்த்தனை செய்துள்ளார்கள் என்பது நமது சிந்தனைக்கு உரியது. இந்தச் சம்பவத்தைக்கொண்டு சாஅதி பிரஸ்தாபச் சமயத்தில் கஃபாவில் அவர்களருகில் இருந்திருப்பார் என்றும் ஊகிக்க முடியவில்லை. அவ்விதம் இந்தச் சம்பவத்தைத் தாம் பார்த்ததாகச் சாஅதி தெரிவிக்கவில்லை. தாம் கேள்விப்பட்டதை அவர் இவ்விதம் கூறியுள்ளார் என்றே நம்ப வேண்டுவதாகிறது.

டம் காட்டினுர். அந்தப் பாட்டினுல் மனம் கவரப்பட்ட பேராசிரியர், சாஅதிக்கு வேண்டும் உதவிகளைச் செய்துவந்தார். சாஅதியை நிஜாமியா சர்வகலா சாலையிலேயே மேல்படிப்புக்கும் சேர்த்துக்கொண்டார். அங்கே உலகின் பல பாகங்களிலுமிருந்து தெளிந்து எடுத்து அமர்த்தப்பட்ட பலதுறை அறிஞர்களும் போதகாசிரியர்களாக விளங்கினர். எனவே, சாஅதி மகான் தமது பாலிய வயதில் அக்காலையில் கிட்டிய சிறந்த கல்வியைப் பெறும் வாய்ப்புப் பெற்ருர். படிப்பில் நன்கு கவனஞ் செலுத்திச் சில ஆண்டுகளில் 'இ த் ர ா ர்' எனும் பட்டத்தையும் பெற்ருர். தாம் நிஜாமியா சர்வகலாசாலையில் படித்ததைத் தமது நூற்களில் பல இடங்களில் சாஅதி பிரஸ்தாபித்துள்ளார். தம்மீது பொருமை கொண்ட மாணவனைப் பற்றி அவர் நிஜாமியா சர்வகலாசாலை சரித்திரப் பேராசிரியர் அபுல் பஹ்ரி இப்னு ஜோஸியிடம் புகார் கூறியபோது அவர் சாஅதியின் புறங்கூறலை இடித்துக் கூறியதாகச் சாஅதி தமது 'போஸ்தானில்' குறிப்பிட்டுள்ளார்.

சாஅதி மகான் பக்தாதில் கல்வி பயிலும் காலையில் அக்காலத்தில் வாழ்ந்த பிரபலமான மகானும், தமது பெயரால் ஆத்மஞானப் பாதை ஒன்றை ஸ்தாபித்துச் சென்றவர்களுமான ஷஹாபுத்தீன் உமர் இப்னு அப்துல்லாஹ் ஸுஹ்ரவர்தீயைச் சந்தித்து அளவளாவும் பேற்றையும், அவர்களுடைய போதனைகளைக் கேட்கும் பாக்கியத்தையும் அடைத்திருக்கிருர். இதுபோன்று அக்காலையில் வாழ்ந்த மகான்களுடைய சபைகளை

அடுத்து அவர்களுடைய சகவாசத்தையும் பெற்ருர். "சாஅதி இளமையில் அறிஞர்கள் கூட்டத்தில் வாழ்ந்தான்; அதனுல், இறைவன் பிற்காலத்தில் அவனுக்குப் பெரும் புகழ் தந்தான்" என்று சாஅதியே தம்மைக் குறித்துக் கூறுகிருர். பெரியார்களுடன் வாலிபப் பருவத்திலிருந்தே தாம் தொடர்பு கொண்டிருந்ததுதான் தமது பிற்காலப் பெருமைக்குக் காரணமாயிற்று என்று அவர் கூறும் பணிவு கவனிக்கத்தக்கதாகும்.

சாஅதி பாலப் பருவந்தொட்டே அதிகாலையின் தொழுகை முதல், ஐங்காலத் தொழுகையையும் ஒழுங்காகத் தொழுது வந்திருக்கிருர்; ரமலான் மாத நோன்பை நோற்றுவந்திருக்கிருர்.

## முரட்டு வாலிபம்

ஆனுல், இளமையின் முறுக்கில் சாஅதியிடம் முரட்டுச் சுபாவமும் இருந்திருக்கிறது. முரட்டு இயல்புடன் அவர் இளமையில் பாடிய பாடல்களின் தொகுப்பு இன்றும் உள்ளது. ஒரு தடவை அவர் தமது தாயுடைய மனம் புண்படும்படி பேசியிருக்கிருர். அவர் சொல்கிருர்: "என் வாலிபத்தின் முறுக்கில் ஒரு சமயம் நான் என் தாயோடு திட்டிச் சண்டை போட்டேன். அப்போது அவர் மனமுண்டந்தவராக ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு அழுதார். 'இப்போது உன் அம்மாவிடம் இவ்வளவு கொடுமையாக நடந்துகொள்ளும் நீ உன் சிசுப் பருவத்தை மறந்துவிட்டாயா? அன்று உன் கையைக்கூட ஆட்டச் சக்தியில்லாமல் இருந்தாயே!' என்று அவர் புலம்பினுர்."

சாஅதி கலாசாலை படிப்பு முடிந்ததும், நாடு சுற்றலானார். பல இடங்களுக்கும் அவர் சென்று பலவிதமான அனுபவங்களை அடைந்தார். ஆங்காங்குச் சென்று ஜனங்களுடன் பழகினார்.

இத்தகைய வாலிப வயதுப் பிரயாணத்தில் இந்தியாவில் சோமநாதபுரம் வந்து அவர் அடைந்த அனுபவம் மிகவும் ரஸமானது. இதை அவர் தமது 'போஸ்தா'னில் தந்திருக்கிறார். குஜராத்திலுள்ள சோமநாதபுரத்திலிருந்த ஆலயம் ஒன்றுக்குள் சாஅதி சென்றிருக்கிறார். இவரைக் கோயில் பூசாரிகளில் ஒருவர் உள்ளே அழைத்துச் சென்று மூலஸ்தான விக்கிரஹத்தை இவருக்குக் காட்டினார். அதற்குப் பலவித அணிகள் அணிவிக்கப்பட்டிருந்தன. அதன் கண்களில் வைரங்கள் பதிக்கப்பட்டிருந்தன. எண்ணற்றவர்கள் அங்கே வந்து சாஷ்டாங்கம் செய்து சென்றனர்.

இதைக் கண்ட சாஅதி தம்மை அழைத்துச் சென்றவரிடம் கூறினார்: "அந்தப் பலமற்ற உருவின் முன் யாவரும் விழுந்தெழுவது எனக்கு வியப்பாய் இருக்கிறது. மூடப் பழக்கந்தான் இதற்குக் காரணம். இந்த விக்கிரஹத்துக்குத்தான் கையைத் தூக்கக் கூடச் சக்தியில்லையே! அதைக் குப்புற எறிந்தால் அதனால் எழுந்திருக்க முடியாதே! வெறும் கல்லைக் கண்ணாகக் கொண்ட இதனிடமிருந்து உதவி தேடுதல் அறிவீனம்" என்று.

இதைக் கேட்ட புரோகிதருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் கோயில் தர்மகர்த்தாவிடம் சாஅதி சொன்னதைக் கூறினார். தர்மகர்த்தா சாஅதியைக்

கோபத்தோடு பார்த்தார். கதையைச் சாஅதியே மேலே சொல்கிருர்: "தண்ணீருள் மூழ்குபவன் போல் நான் நிர்க்கதியாக நின்றேன். பணிவைத் தவிர வேறு ஆயுதம் எனக்குக் கிடைக்கவில்லே. மூர்க்கர் கோபங்கொள்ளும் போது சாந்தமாக இருந்தால்தான் நல்லது. எனவே, தர்மகர்த்தாவிடம் சொன்னேன், 'பெரியாரே, வேதங்களின் அந்தரங் கங்களே அறிந்தவரே, இந்த விக்கிரஹம் என்னே முற்றும் கவர்ந்துவிட்டது. அதன் மகிமையைப் பற்றி நான் ஏதும் அறியேன். அதன் தோற்றம் எனக்கு விஞேதமானதாகப் பட்டது. நான் ஊருக்குப் புதியவனுகையால் எனக்கு உண்மை விளங்கவில்லே. மற்ருேர் செய்வதைப்போல் நானும் அர்த்தம் விளங்காமலே செய்வதானுல் அது வெறும் நடிப்பாகி விடும். இந்த விக்கிரஹத்தின் மகிமை யாது? இதை ஆராதிப்பவர்களில் நான் முதலிடம் பெறுவதற் காகவே இதைக் கேட்கிறேன்' என்று.

"தர்மகர்த்தா சொன்ஞர்: 'இந்த விக்கிரஹம் பக்தர்களேக் கைதூக்கி ஆசீர்வதிக்கும் சிறப் புடையது. இதன் உண்மை உனக்குத் தெரிய வேண்டுமானுல் இன்று இரவு இங்கே இரு. இதன் பெருமையை நீ உணரலாம்' என்று."

அவ்விதமே சாஅதியும் இருந்தார். அன்று இரவு பக்தர்கள் வணங்கிய சமயம் அந்த விக்கிர ஹம் தன் கையை உயர்த்திற்று. பக்தர்கள் சென்ற பின்னர் தர்மகர்த்தா சாஅதியை வெற்றிப் புன்னகையுடன் நோக்கினுர். சாஅதியும் தமது தவறுக்காக வருந்தி அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

"எனது கண்ணீரைக் கண்ட பூசாரிகள் என் அருகே வந்து என்னை அந்தத் தந்தச் சிலையின் அருகில் அழைத்துச் சென்றனர். அது ஒரு தங்க இருக்கையின்மீது அமர்த்தப்பட்டிருந்தது. அந்தத் தங்க இருக்கை கீழே தேக்கினாலான மேடையில் பொருத்தப்பட்டிருந்தது. நான் அச்சிறிய தெய்வத்தின் கையை முத்தமிட்டேன். சில நாட்கள் நான் அங்கேயே தங்கி ஒரு பக்தனாகவே நடந்துவந்தேன். கோயில் சேவையில் என்னையும் ஒருவனாக நியமித்தார்கள். ஒரு நாள் கோயில் கதவு மூடும் தருணத்தில் நான் கோயிலுக்குள்ளேயே மறைந்துகொண்டேன். விக்கிரஹம் இருந்த தேக்கு மேடைக்குப் பின் பக்கம் தங்க வேலைப்பாடமைந்த திரையொன்று தொங்கிக்கொண்டிருந்தது. நான் அந்தத் திரையை விலக்கினேன். அங்கே பூசாரிகளில் ஒருவன் மறைந்திருந்தான். இவன் விக்கிரஹத்தின் கையில் கட்டப்பட்ட கருப்புக் கயிறு ஒன்றைத் திரை மறைவிலிருந்து இழுக்கும்போதெல்லாம் விக்கிரஹம் கையை உயர்த்துகிறது என்ற சூட்சுமத்தை நான் உடனே கண்டுகொண்டேன். என்னைக் கண்ட பூசாரி அவ்விடம் விட்டு ஓடலானான். அவன் தப்பினால் நான் உயிருடன் அங்கிருந்து போக முடியாது. எனவே, அவனை விரட்டிப் பக்கத்திலிருந்த கோயில் கிணற்றுள் தள்ளினேன். — மூங்கில் காட்டுக்கு நீ நெருப்பு வைக்கும்போது புலிகள் வரும் என்பது அறிந்து ஜாக்கிரதையாய் இரு! — எனவே, உடனேயே நான் கோயில் மதிலைத் தாண்டி அவ்வூரை விட்டே ஓடினேன்."

சாஅதி துணிச்சலும், முரட்டுத்தனமும் உள்ள இளைஞராக நெடுகிலும் சுற்றிய காலையில் இது நடைபெற்றிருக்கிறது. பிற்காலத்தில் பொறுப்பு உணர்ந்த சாஅதி இவ்விதம் துடுக்காக நடப்பதையோ பேசுவதையோ விட்டுவிட்டார். மிகுந்த பணிவுடன் நடந்துகொண்டார். ஆயினும் அப்போதும் தன் கருத்தைக் கூற யாருக்கும் அஞ்சாத வீரராகவே விளங்கினர்.

சாஅதி இந்தியா வந்து நெடுகிலும் சுற்றுப் பிரயாணம் செய்த தகவல் 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்ற கலைக் களஞ்சியத்தில் உள்ளது. அவர் சுமார் நான்கு வருஷங்களை இந்தியாவில் கழித்ததாக அந்தத் தகவல் தெரிவிக்கிறது. தமது முப்பத்தோராம் வயதுக்கும் முப்பத்தைந்தாம் வயதுக்குமிடை அவர் இவ்விதம் சுற்றியிருக்கலாம் என்று தெரிகிறது. அப்போது சுல்தான் அல்தமஷ் என்ற ராஜரிஷி டெல்லியை ஆட்சி செய்துகொண்டிருந்தார். இவர் மகான்களையும், பெரியார்களையும் மரியாதை செய்து வரவேற்பது வழக்கம். இக்காலையில் இந்தியாவில் சன்மார்க்கப் பிரசாரம் புரிந்து, அஜ்மீரில் தமது தலைமைப் பீடத்தை அமைத்துக் கொண்டிருந்த மகான் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்கள் டெல்லியில் வந்து, தங்களுடைய குருநாதரும், பக்தாதுக்கு அருகிலுள்ள ஹாரூனுபாத் என்னுமிடத்திலிருந்து டெல்லிக்கு விஜயம் செய்திருந்தவர்களுமான உதுமான் ஹாரூனியோடு சிலகாலம் அளவளாவினர்கள். அதே சமயம் சாஅதியும் இந்த இரண்டு பெரிய மகான்களுடைய சபையில் சென்றமர்ந்து போதனை

பெற்றுள்ளார். பக்தாத் சர்வகலாசாலையில் கல்வி பயின்று, தேர்ச்சியான சமய ஞானம் பெற்றிருந்த சாஅதி, தமது பேச்சுவன்மையால் இந்த மகான் களிடை நற்பெயர் பெற்ருர். அப்போதே சாஅதியின் கவிதைத் திறன் நன்கு போற்றப்பட்டுவந்தது; அவருடைய கஜல்கள் நெடுகிலும் பாராட்டப்பட் டன. எனவே, ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் ஆண்டகை அவர்கள் சாஅதியிடமிருந்து கேட்ட அவருடைய பாட்டு ஒன்றைத் தமது நூலில் ஒரு மேற்கோளுக்காக எடுத்தாண்டுள்ளார்கள். மேலும், இரண்டு ஹதீஸ்களையும் தாங்கள் சாஅதியிடமிருந்து கேட்டதாகத் தங்கள் நூலில் தந்துள்ளார்கள். டெல்லி சுல்தான் அல்தமஷும் சாஅதிக்கு அதிக மரியாதை செய்து பரிசில்கள் நல்கியிருக்கிருர். இவ் விதம் சாஅதி நான்கு வருஷங்கள் வட இந்தியா வில் தங்கியிருந்ததால் அங்குள்ள பாஷைகளை ஓரளவு பேசக் கற்றுக்கொண்டிருப்பார் என்பதும், இதனுலேயே சோமநாதபுரம் ஆலயமொன்றில் நடந்த சம்பவங்களில் அவர் அங்குள்ளவர்களுடன் (அவர்களின் மொழியிலேயே) பேச முடிந்தது சாத்தியமாகியிருக்கும் என்பதும் ஊகிக்கக் கூடி யவைதாமன்றே!

மனமாற்றம்

சாஅதியின் நாற்பதாவது வயதில் அவருடைய வாழ்க்கையில் மகத்தான மாற்றம் உண்டாயிற்று. அதுவரை ஊர் சுற்றியாக வாழ்ந்த தம்முடைய வாழ்க்கை வீணுகிவிட்டதாக அவருக்குப்பட்டது. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று பொறுப்பற்ற முறையில் தமது வாழ்நாள் கழிந்து

விட்டதே என்று அவர் மிகவும் வருந்தினர். தமது நூல்களில் ஒன்ருன 'பந்த் நாமா'வின் தொடக்கத்தில் சாஅதி எழுதுவதாவது:

உன் மதிக்கொணு வாழ்க்கையின்
நாற்பது ஆண்டுகள் மாண்டுபோயின;
எனினும், உன் வாழ்நாள்
சிறுபிள்ளைத்தனமான தாகவே கழிகிறது.
நீ இச்சைகளைத் திருப்தி செய்வதிலும்,
கேளிக்கையிலும் பொழுது போக்கிவிட்டாய்.
ஒருகணமாவது நேரிய வழியில் நடந்தாயில்லை.
நிலையற்ற வாழ்வில் நம்பிக்கை வைக்காதே!

நாற்பதாவது வயதில் தம்மிடம் உண்டான மாறுதல்பற்றி அவர் தமது உன்னதமான நூலான 'குலிஸ்தா'னின் முன்னுரையில் இவ்விதம் எழுதுகிருர்: "இதுவரை என் வாழ்க்கையையும், காலத்தையும் வீணே கழித்துவிட்டேன் என்று ஓரிரவு விசனப்பட்டுக்கொண்டிருந்தேன். உடனே, கண்ணீர் என் கல் நெஞ்சைக் கழுவிக்கொண்டு வெளியாயிற்று. எனது நிலையை நான் ஆத்மாவிடம் இவ்விதம் கூறினேன்: "போன மூச்சு மீண்டும் வராது. சாஅதி, உனக்கு நாற்பது வயது* ஆகியும்

* எந்த மனிதனுடைய வாழ்க்கையிலுமே நாற்பது வயது என்பது ஒரு முக்கியமான மைல் கல்லாகும். நாற்பதாவது வயதிலாவது தன்னைச் சீர்செய்து கொள்ளவில்லையானல் பின்னர் அவன் சீர்படுவது சிரமம் என்று சொல்வதுண்டு. சாஅதி மகான் தமது 'குலிஸ்தா'னில் இதுபற்றிக் கூறுவதாவது: "ஒரு துளி (விந்து) நீர் கருக்குழியில் நாற்பது நாள் தரிபட்டதுமே மனித உருப் பெறுகிறது. ஆனல், நாற்பது வருஷங்கள் கழிந்த பின்னும் எவனுக்குச் சரியான பொறுப்புணர்ச்சி உண்டாகவில்லையோ அவனை மனிதன் என்று கருதவே முடியாது."

இன்னும் கனவுலகில் சஞ்சரிக்கிருய். இவ்வுலக வாழ்வு நிலேயற்றது என்பதை உணரக்கூடாதா? மறு உலகுக்கு வேண்டும் தேவைகளேச் சேகரிக் காதவன் அங்கே சென்று கஷ்டப்படவேண்டு வதாகுமல்லவா! இவ்வுலக வாழ்வு நம் பிரயா ணத்திடை இளேப்பாறுவதற்குரிய தங்குமிடமே யன்றி வேறல்ல... இந்த நிலேயற்ற உலகின்மீது முழுப் பற்றுக்கொள்ளுதல் அறிவீனமாகும்.''

இவ்விதம் பச்சாதாபப்பட்டு வருந்திய சாஅதி இனி யாருடனும் பேசாது, ஓரிடத்தில் அமர்ந்து தியானத்திலீடுபடுவது என்று முடிவு கட்டியிருக் கிருர். அப்போது அவரைக் காண நண்பர் ஒருவர் வந்தார். வந்தவர் சாஅதியுடன் உரையாட முயன் ருர். சாஅதியோ மௌனத்தைக் கைவிடப் பிரியப் படவில்லே. பின்னர், வந்த நண்பர் பலவிதமாக அவரைப் பேசும்படி வற்புறுத்தவே, 'பேசும் நேரத் தில் சும்மா இருப்பதும், சும்மா இருக்கும் நேரத்தில் பேசுவதும் கூடாது' என்று தமது முடிவை மாற்றிக் கொண்டார்.

பின்னர் அவர் மகான்களே அண்டி அவர்களு டைய உபதேசங்களேக் கேட்டார். ஊர் ஊராகச் சென்று அனுபவ ஞானம் பெற்ருர். போகும் இடங் களில் மஸ்ஜிதுகளிலோ, பிரயாணிகள் தங்கும் விடுதிகளிலோ தங்குவது, உலகின் பல பாகங்களி லும் இருந்து வருபவர்களேச் சந்தித்து அளவளாவு வது-இப்படியாகப் பயணப்பட்டு மக்கா சென்ற டைந்தார். தமது ஹஜ் கடமையை முதல் தடவை யாக நிறைவேற்றிக்கொண்டார். நாற்பது வய

துக்கு மேல் தமது எழுபது வயது வரை முப்பது ஆண்டுகள் சாஅதி நாடுகளைச் சுற்றுவதில் செல விட்டார்; பதினுன்கு தடவைகள் மக்கா சென்று ஹஜ்ஜு செய்திருக்கிருர். காடு, மலை, வனம், வனந் தரம், நாடு, நகர்களில் சுற்றி அலைந்து சாஅதி பெற்ற அனுபவத்தின் பயனை அவருடைய நூற் களில் காண முடிகிறது. அரேபியா, சிறிய் ஆசியா, பலஸ்தீனம், ஸீரியா, ஈரான், எகிப்து, அபிஸீனியா, மொராக்கோ, தூனீஸ், அர்மேனியா, இந்தியா முதலிய நாடுகளில் சாஅதி விரிவாகச் சுற்றுப்பிரயாணம் செய்துள்ளார். தாம் இப்படிப் பிரயாணம் செய்ததுபற்றி அவர் சொல்வதாவது: " நான் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் சுற்றி யிருக்கிறேன் ; ஆங்காங்கு உள்ள ஜனங்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். ஒவ்வொரு மூலை யிலும் நான் ஏதோ சிலவற்றைச் சேகரித்தேன். ஒவ் வொரு பிரயாணத்திலும் நான் புதுவித அனுபவங் களைப் பெற்றேன்."

### அந்திய காலம்

இவ்விதம் நாடு சுற்றியபின் தமது சொந்த ஊரான ஷிராஜ் திரும்பிய சாஅதி ஊருக்கு வெளி யிலிருந்த காட்டில் ஒரு மலர்த் தோட்டம் உண் டாக்கி அதன் நடுவில் குடிசை அமைத்து அதில் வசிக்கலானுர். தமது அந்திய காலம் வரை அவர் அந்தத் தோட்டத்திலேயே வாழ்ந்திருந்தார். அங்கே பலர் அவருடைய சீடர்களாகச் சேர்ந்து அவரிடம் பாடங் கேட்டுவந்தனர். அவரைக் கண்டுபோக ஜனங்கள் அடிக்கடி வருவதுண்டு. இந்த நிம்மதி

யான இடத்திலிருந்துகொண்டுதான் எண்பத்து இரண்டாம் வயதுக்கு மேலே 'குலிஸ்தா'னையும், 'போஸ்தானை'யும் அவர் எழுதி முடித்தார். இவ்வி தம் மிகவும் முதிர்ந்த வயதில் உலகில் உன்னதம் பெற்ற நூற்கள் எழுதியவர்கள் மிகச் சிலரேயாவர். அதிலும் நூற்றுப் பதினைந்து வயது வரை வாழ்ந்து பூதவுடல் நீத்த மகான்களும் உலக சரிதையில் அபூர்வமானவர்கள்தாம். ஆமாம், சாஅதி கி. பி. 1291- ம் வருஷம் தமது நூற்றுப் பதினைந்தாம் வய தில்- தமது குடிசையில் நிம்மதியாகக் காலமானர். அவருடைய உடல் 'தில்குஸ்' என்ற இடத்துக்கு அருகே நீர்ச் சுனைகள் நிறைந்த செழிப்பான தோப்பினுள்ளே நல்லடக்கஞ் செய்யப்பட்டது. அவருடைய சமாதியின்மீது அவர் எழுதிய பாடல் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தது. உலகமெங்கணும் அறநெறி போதிக்கும் மகானுக ஒப்புக்கொள்ளப் பட்டுக் கொண்டாடப்படும் இப்பெரியாரின் அடக் கஸ்தலம் இப்பொழுது பாழடைந்து கிடப்பதாகச் சொல்லப்படுகிறது.

**குணநலன்கள்**

'சாஅதி சற்று குள்ளமான உருவமுடையவர் ; நல்ல அழகுள்ளவர் என்று கூறமுடியாது; அவர் தலை நீண்டிருந்தது; அவருடைய வதனத்தில் மகான்களுக்குரிய தேஜஸ் ஜொலித்தது; அவர் எளிய உடையுடுத்தினர்; தலைப்பாகையும், நீண்ட அங்கியும் அணிந்திருப்பார் ; அவர் கையில் தடி பிடித்தபடி நடப்பார்' என்று பாரஸீகப் புலவர் ஒருவர் அவர் தோற்றத்தை விவரிக்

கிருர். இத்துடன் அவருடைய 'குலிஸ்தான்', 'போஸ்தான்' ஆகிய இரண்டு நூற்களிலும் காணப் படும் அவரைப்பற்றிய குறிப்புக்களைக் கொண்டு அவர் எப்படி இருந்திருப்பார் என்பதை ஓரளவு கற்பனை செய்ய முடியும். கடுமையான பிரயாண அனுபவம், பாலை வெயிலில் நடந்து முறுக்கேறிய கால்கள், துறவிகளோடு சேர்ந்து பல நாட்கள் தொடர்ந்து பட்டினி கிடக்கப் பழகிய சடலம், நிதானம், அறிவு, தீக்ஷண்யம், குழந்தையுள்ளம், நாவன்மை போன்ற பல பண்புகள் அவருடன் ஒட்டியவையாய் இருந்திருக்கின்றன.

### தெய்வச் சிந்தனையும் தயாளமும்

சாஅதி இறைவனிடம் அசைக்க முடியாத நம் பிக்கை கொண்டவர். சன்மார்க்க அனுஷ்டானங் களையும், தொழுகையையும் அவர் ஒழுங்காக நடத்திவந்தார். ஹஜ்ரத் முஹ்யித்தீன் ஆண் டகை அவர்களிடம் ஈடுபாடுகொண்ட இப்பெரி யார், அவர்களைத் தமது ஆத்ம ஞான குருவாக ஏற்ற இந்த மகான், அவர்களுடைய போதனைப்படி யான ஆத்ம ஞான அப்பியாசங்களிலும் ஈடுபட்டு வந்திருக்கிருர். தினமும் அதிகாலையில் எழுந்து தொழுகையை முடித்துக்கொண்டு, தன்னை நோட்ட மிடுவதில் அவர் ஈடுபடுவது உண்டு. அப்போது அவர் குனிந்த தலையுடன் அமர்ந்தவாறே, "இறைவா, உன்னை நான் என்றும் மறப்பதில்லை; நீ எப்போதாவது உன் இந்த அடியானை நினைவுகூர் கிருயா?" என்று கேட்பதுண்டு. இது சாஅதியே 'குலிஸ்தா'னில் தெரிவித்துள்ள தகவலாகும்.

சாஅதி மிகுந்த தயாளமுள்ளவராக விளங்கி யிருக்கிறார். ஏழைகளிடம் அவர் அதிக அனுதாபங் காட்டினார். அவர் தமது நூற்களில் ஏழைகள்மீது அதிகமான அன்பும் பரிவும் காட்டிப் பேசுவதோடு, ஏழைகளுக்கு உதவாத செல்வர்களையும் கடுமையாக இடித்துக் காட்டுகிறார். ஏழைகளிடம் கருணை காட்டாத அரசன், ஏழைக்கு உதவாத செல்வன், ஏழையிடம் நியாயமாக நடந்துகொள்ளாத வர்த்தகன்- ஆகியவர்களை யெல்லாம் அவர் கண்டித்திருக்கிறார். தாம் சென்ற இடங்களிலெல்லாம் அவர் ஏழைகளுக்காகப் பாடுபட்டிருக்கிறார். தம்மிடம் எது இருப்பினும் அதை ஏழைகளுக்கு அவர் வழங்கி யிருக்கிறார்.

இன்றைய ஏழை நாளையப் பணக்காரனாகவும், இன்றையப் பணக்காரன் நாளைய ஏழையாகவும் ஆகும் உலக இயல்பை அவர் கதைகளால் விளக்கிக் காட்டுகிறார்.

ஏழை வீட்டிலிருந்து வரும் புகை அவனுடைய அடுப்பிலிருந்து எழுவதன்று, அவனுடைய விசன மூச்சுத்தான் என்று சாஅதி எச்சரிக்கிறார்.

அதனால், அவர் செல்வர்கள், அரசர்கள் யாவரையுமே வெறுத்தவரல்லர். செல்வன் தன் செல்வத்தையும், அரசன் தன் அரசையும் துறந்து துறவியாகிவிடவேண்டும் என்றும் அவர் கூறவில்லை. செல்வன் கருணையுள்ளவனாக, இறைவனால் தனக்குத் தரப்பட்ட செல்வத்தை நேரிய முறையில் செலவிடுபவனாக இருக்கவேண்டும் என்கிறார் அவர்.

'போஸ்தான்' முதல் அத்தியாயத்தில் சாஅதி விவரிக்கும் ஒரு நிகழ்ச்சி இதுபற்றிய அவருடைய அபிப்பிராயத்தை விளக்குவதாகும். அது வருமாறு:

பாரஸீக அரசன் துக்ளா என்பவன் ஞானிகள் நாயகம் ஒருவரைப் போய்க் கண்டான். அவரிடம் அவன் இவ்விதம் சொன்ஞன்: "என் வாழ்நாள் வீணுயிற்று. ஏழையையன்றி யார்தான் சுவர்க்கத் துக்குச் செல்ல இயலும்! எனவே, மீதியுள்ள என் காலத்தைப் பக்தி என்ற மூலையில் அமர்ந்து மூச்சு விட்டுப் போக்கலாம் என எண்ணுகிறேன்."

இது கேட்ட ஞானி கோபங்கொண்டார். அவர் இரைந்து கூறினர்: "போதுமப்பா! மதம் என்பது மக்கள் சேவைதான்; ஜெபமாலையை உருட்டுவதும், கந்தை யுடுப்பதும், பாயின்மீது அமர்ந்திருப்பது மல்ல. ஆட்சியில் அரசனுகவும், நீதியில் பக்திமா ஞகவும் இரு! சமயம் வேட்பது செயலாற்றலைத் தான், வார்த்தைகளையல்ல. செயலற்ற வெற்றுப் பேச்சு பயனற்றது."

**விருந்தோம்பல்**

விருந்தினரை உபசரிப்பதிலும் சாஅதி மிகவும் கனிவுடன் நடந்துகொள்வார். ஆனல், விருந்தினருக்கு விசேஷமாக உணவு வகைகளைத் தயாரித்து வைக்கவேண்டும் என்று அவர் எண்ணுவதில்லை. இருப்பதை மனமுவந்து கொடுப் பார்.

பிற்காலத்தில் ஒரு தடவை அவர் ஓர் ஊருக்குப் போயிருந்தார். அங்கே சாஅதியின் மேதையை

அறிந்தவர்கள் அவரைப் பெரிதும் உபசரிக்கலாயினர். அவருக்கு ஆடம்பரமான விருந்துகள் கொடுக்கலாயினர்; வகைவகையான கனிகளையும், கறிகளையும் வைத்து உபசரிக்கலாயினர். ஆனால், சாஅதி அத்தகைய விருந்து தமது முன்னர் வைக்கப் பட்டதும், "என்ன இருந்தாலும் ஷிராஜ் விருந்துக்கு இது நிகராகுமா?" என்று கூறிவந்தார். இப்படியே அவர் ஒவ்வொரு சிறந்த விருந்திலும் கூறுவதைக் கண்ட அவர் நண்பர் ஒருவர் அந்த ஷிராஜ் விருந்தின் மகத்துவத்தை நேரில் கண்டறிய வேண்டும் என்று ஆவலுடையவரானர். எனவே, சாஅதி ஊர் திரும்பியபின் இந்த நண்பர் ஷிராஜ் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். சாஅதியின் விருந்தாளியாகத் தங்கினர். பிரபுக்களின் வீடுகளில் கூடச் சாஅதி சிலாகித்துப் பேசிய அந்த ஷிராஜின் மகத்தான விருந்தைச் சுவைக்க ஆவலுள்ளவராக அவர் காத்திருந்தார். கடைசியில் உணவுண்ணும் நேரமும் வந்தது. சாஅதி தமது நண்பரோடு உணவின் முன் சென்று அமர்ந்தார். அங்கே இருந்த உணவைக் கண்ட நண்பரின் ஏமாற்றம் கரைகடந்ததாயிற்று. செல்வர்களின் வீடுகளில் நடக்கும் சிறப்பான விருந்தைக்கூடத் தமது வீட்டு விருந்தைவிட மோசமானது என்று கூறிய சாஅதி வெறும் ரொட்டியையும், கீரையையும் தமது விருந்தாளி முன் வைத்திருந்தார்! உடனே விருந்தாளி நண்பர் சாஅதியிடம் கேட்டார்: "நீங்கள் பெரிய விருந்துகளிலெல்லாம் ஷிராஜ் விருந்துக்கு இவை நிகராகுமா என்று கூறுவீர்களே அதன் காரணம் என்ன?" என்று. சாஅதி புன்னகை தவழச் சொன்னர்: "நான்

எனக்குப் பிடித்தமான எளிய உணவை உண்கிறேன். அதையே வருபவர்களுக்கும் தருகிறேன். அங்கோ விருந்துகளில் வேண்டுமென்று ஒரே தடபுடல் செய்கின்றனர். உண்மையில் உயர்ந்த விருந்து எது தெரியுமா? வீட்டிலுள்ள எளிய உணவைக் கொண்டு விருந்தாளியை உபசரிப்பது தான்" என்று. எனவே, விருந்தளிப்பதற்கென்று மிகமிகப் பிரயாசையெடுத்து விருந்தாளியைத் திணற வைப்பதைச் சாஅதி வெறுத்தார்.

சாஅதி மகானின் சுற்றுப்பிரயாணத்தின் போது செல்வன் ஒருவன் வீட்டில் அவர் விருந்துண்ண சென்ற சம்பவம் குறிப்பிடத்தக்கதாகும். சாதாரணமாக ஏழ்மையான உடையுடுத்தி யிருக்கும் சாஅதி விருந்து நடக்கும் இடத்துக்குள் நுழைந்த போது, அங்கே நின்ற காவல்காரன் முதலியவர்கள் அவரை உள்ளே போகவிடாமல் தடுத்து விட்டனர். அங்கே ஆடம்பரமாக உடையணிந்தவர்கள் மட்டும் வரவேற்கப்பட்டு வீட்டினுள் அழைத்துச் செல்லப்பட்டனர். இதைக் கண்ட சாஅதி உடனே வாடகைக்குத் துணி தரும் ஒரு கடைக்குச் சென்று உயர்தரமான உடைகளை வாங்கி அணிந்துகொண்டு விருந்து நடந்த இடத்துக்குச் சென்றார். அப்போது அவர் அதிகமும் மரியாதையுடன் வரவேற்கப்பட்டுப் பந்தியில் இடம் பெற்றார். அவர் முன் உணவு வகைகள் கொண்டு வைக்கப் பட்டபின், அவற்றைத் தாம் உண்ணாது, அவற்றில் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து, 'சாப்பிடு! உனக்குத் தான் விருந்து, எனக்கன்று' என்று கூறியவாறு அவற்றைத் தமது உடையின்மீது தேய்த்துக்

கொண்டார். அருகிலிருந்தவர்கள் அவர் ஏன் அப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டபோது, "இல்லை, முதலில் நான் சாதாரண உடையுடன் விருந்துக்கு வந்தேன்; என்னை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர்; பின்னர் இந்த உடையை இரவல் வாங்கி அணிந்துகொண்டு வந்திருக்கிறேன். உடனே மரியாதையாக வரவேற்று, விருந்து தருகிறார்கள். எனவே, இந்த மரியாதையும் உணவும் எனது உடைக்குத்தானே! அதனால்தான் அதை உண்ணும்படி ஊட்டுகிறேன்" என்று கூறித் தமது உடையின்மீது மேலும் கொஞ்சம் உணவைத் தேய்த்துக்கொண்டு அவ்விருந்து மண்டபத்தை விட்டு வெளியாகிவிட்டார். (நமது குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களும் சென்னை நகரில் இதே வித அனுபவமடைந்ததாகச் சொல்லப்படுகிறது.)

**வாக்குவன்மை**

சாஅதி பேசும்போது ஒரு குழந்தையைப்போல் சிரித்துக் கலகலப்பாகப் பேசுவார். அவருடைய பேச்சு கவர்ச்சியானதாகவும், மேலும் கேட்கவேண்டும் என்று ஆவலூட்டுவதாகவும் இருக்கும். அவரும் சளையாமல் பேசிக்கொண்டே இருப்பார். 'மகாவீரரான ஹஜ்ரத் அலீ(ரலி)யின் வாள் உறையுள்ளும், சாஅதியின் நாவு வாயுள்ளும் அடைபட்டுக்கிடக்கமாட்டா' என்று சாஅதியே ஓரிடத்தில் கூறுகிறார். அவர் வாழ்நாளை வீணாக்கக்கூடாது என்று தீர்மானித்தபோது, இனி யாருடனும் பேசுவதில்லை என்று முடிவுகட்டிப் பிறகு அதையும் மாற்றிப் பேசவேண்டிய நேரத்தில் மௌனமாய் இருப்பது சரியன்று என்று தாம் முடிவுக்கு வந்ததாக அவர்

தெரிவிக்கிருரல்லவா! 'பேச்சுவன்மையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சாஅதி இன்ன அரசன் காலத்தில் வாழ்ந்தார் என்று ஜனங்கள் பேசுவார்கள்' என்று தமது 'போஸ்தான்' சமர்ப் பணத்தில் சாஅதி தமது பேச்சுவன்மையைப் பற்றிக் குறித்துக் காட்டுகிருர்.

தப்ரேஸ் என்ற ஊர் சென்றிருந்த சாஅதி அங்கிருந்த பள்ளிவாசல் ஒன்றில் அமர்ந்து அங்கே வருபவர்களோடு சளையாது பேசிக் கொண்டிருந்தார். அப்போது உள்ளூர்க் கவிஞர் ஒருவர் அங்கே வந்தார். அவருக்குச் சாஅதியின்மீது வெறுப்பு உண்டாயிற்று. அவரை நோக்கி, ஏளன மாக, "உமக்கு எந்த ஊர்?'' என்று அந்த உள்ளூர்க் கவிஞர் வினவினர். ''செழிப்பு மிக்க ஷிராஜ் நகரம்" என்று சாஅதி பதிலளித்தார். உடனே உள்ளூர்க் கவிஞர், "இங்கே தப்ரேஸில் நாய்களைவிட ஷிராஜ் வாசிகளே அதிகமாக இருக்கின்றனர்" என்று சூடா கக் கூறினர். இதைக் கேட்ட சாஅதி வெகு அனுயா சமாக, "எங்கள் நகரில் இருப்பதற்கு நேர் விரோத மாகவல்லவா இருக்கிறது இங்கே! எங்கள் நகரில் தப்ரேஸ்காரர்களைவிட நாய்களுக்குத்தான் அதிக மதிப்பு" என்று பதிலளித்தார். இதைக் கேட்ட உள்ளூர்க் க வி ஞ ர் கோபங் கொண்டாராயினும் உடனே எதுவும் சொல்ல முடியாதவராக அமர்ந் திருந்தார். சாஅதியோ தமது உரையாடலைத் தொ ட ர் ந் து நடத்திக்கொண்டே யிருந்தார். உள்ளூர்க் கவிஞர் கைகால் முகம் கழுவுவதற் காகத் தண்ணீர் எடுக்கும் கலயம் ஒன்றைத் தம் மிடம் வைத்திருந்தார். அதன் அகன்ற வாயைச்

சுட்டிக் காட்டி உள்ளூர்க் கவிஞர் சொன்னூர், "ஷிராஜ்காரர்களின் வாய் இதைப் போலல்லவா அகன்றதாய் இருக்கிறது!" என்று. சாஅதி சளையாது பேசுவதைத்தான் அவர் இப்படிக் கிண்டல் செய்தார். உடனே சாஅதி அவர் வைத்திருந்த கலயத்தை வெடுக்கென்று பிடுங்கி அதன் உள்ளே கையைவிட்டுக் காட்டி, "தப்ரேஸ்காரர்கள் தலை இதைப் போலல்லவா காலியாக இருக்கிறது!" என்று கூறினூர். இதைக் கேட்ட தப்ரேஸ் கவிஞர் மேலே பேசமுடியாது தலைகவிழ்ந்தார்.

சாஅதியின் பேச்சுத் திறனை மட்டுமல்ல, அவருடைய அஞ்சா நெஞ்சையும் இதில் காண்கிறேம். ஒருவருடைய ஊரில் போய் இருந்து கொண்டு அந்த ஊர்க்காரர்களை நாயைவிடக் கடையர்கள் என்றும், அறிவிலிகள் என்றும் கேட்பதென்றல் அதற்குத் துணிச்சல் அவசியந்தானே! சாஅதியின் நாவன்மையையும், சட்ட ஞானத்தையும், மனத்தில் சரியென்று பட்டதை அப்படியே கூறும் அஞ்சா நெஞ்சத்தையும் காட்டும் ஒரு நிகழ்ச்சியை அவரே தமது 'போஸ்தா'னில் தந்துள்ளார். கதையைப் போல ரஸமாக விவரிக்கப் படும் அந்தச் சம்பவத்தை அவருடைய வார்த்தைகளாகவே தரலாம்:

சன்மார்க்கத்தின் சட்டதிட்டங்களைக் கசடின்றிக் கற்ற அறிஞர் ஒருவர் கந்தல் உடையுடன் ஓர் ஊரிலிருந்த கிராம நீதிபதியின் நீதிஸ்தலத்தினுள் நுழைந்து முன்னுல் கிடந்த இருக்கையில் அமர்ந்தார். இதைக் கண்டு கோபங்கொண்ட நீதிபதி

அவரை உறுத்து நோக்கினர். உடனே சேவகன் ஒருவன் வந்து அவரைப் பின்னல் சென்று அமரும்படி கூறினன். அவரும் அவ்விதமே செய்தார்.

" நீதிசபையில் இரண்டு வழக்குரைஞர்கள் ஒருவரோடு ஒருவர் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் நாவுகள் சண்டைச் சேவலைப் போல் ஒன்ருேடென்று போராடின. அவர்கள் ஒரு சிக்கலான பிரசினையைச் சிக்கலெடுக்க முயன்று முடியாது தத்தளித்தனர். கந்தலுடை அணிந்த அறிஞர் பணிவோடு எழுந்து பேசுவதற்கு அனுமதி கேட்டார். ஏளனமாக அவர்கள் அவரைப் பேச அனுமதித்தனர்.

"அவர் வார்த்தைகளைக் கடல் மடைபோல் பொழிந்தார். கேட்டோர் மனத்தில் அவர் பேச்சு பசுமரத்தாணியாகப் பதிந்தது. அவருடைய பேச்சுக் குதிரை சென்ற வேகத்தில் நீதிபதிகூடக் கழுதையைப் போல் பின்தங்கிவிட்டார்.

"அவருடைய பேச்சுச் சாதுர்யத்தை மெச்சி நீதிபதி தன் தலைப்பாகையை அவருக்குக் கொடுத்தனுப்பினர். அத்துடன், "ஏளனமாக எண்ணியதற்காக மன்னியுங்கள்" என்று வேண்டினர்.

"சேவகன் நீதிபதியின் தலைப்பாகையை அவரிடம் நீட்டினன். அவர் அதை வாங்க மறுத்துக் கூறினர் : "அகம்பாவத்தின் சின்னமான அது எனக்கு வேண்டாம்! அதை நான் அணிந்தால் என்னைத் தலைவர் என்று அழைப்பவர்களெல்லாம்

கவைக்குதவாதவர்களாக என் கண்களுக்குப் புலப் படுவார்கள். சுத்தமான தண்ணீர் தங்கக் கோப்பை யில் இருந்தாலும், மண் கோப்பையில் இருந்தாலும் ஒன்றுதானே! மனிதன் தலைக்கு வேண்டியது மூளையேயன்றித் தலைப்பாகையன்று. தலைப்பாகை யும், தாடியும் இருக்கிறது என்று பெருமை கொள்ளக் கூடாது. காரணம், ஒன்று வெறும் பஞ்சு; மற்றது மயிர். உனக்குப் பின்னால் ஆயிரம் பேர் நடந்தா லும் நீ அறிவுடையவனாக இருந்தாலன்றி உன்னை நான் மனிதன் என்று அழைக்க மாட்டேன். செல்வ னாக இருப்பதால் மட்டும் பிறரைவிடச் சிறந்தவ னாகிவிட முடியாது. பொன்னாடை போர்த்தப்பட் டிருந்தாலும் கழுதை கழுதைதான்."

"இவ்விதமாக அந்த அறிஞர் தன் பேச்சு எனும் நீரால் அங்கிருந்தவர்களின் இதயங்களைக் கழுவினார்.

"இதைக் கேட்ட நீதிபதிக்குக் கோபம் அதிக ரித்தது. அவர் தமது விரலைக் கடித்தவாறு அந்த அறிஞரை நோக்கினார். தான் பேசவேண்டிய தைப் பேசி முடித்துவிட்ட அறிஞர் மேலும் அங்கே நில்லாது சரேலென வெளியில் சென்றுவிட்டார். இந்த அதிகப்பிரசங்கி எங்கிருந்து வந்தான் என் பதை அறிப அவையிலிருந்தோர் ஆவலுற்றனர். ஓர் அதிகாரி அவரை நெடுகிலும் தேடினார். அவர் அடையாளத்தைக் கூறி, "அவரைக் கண்டீர்களா?" என்று பலரிடம் வினவினார். ஒருவர் சொன்னார், "அத்தகைய பேச்சுத் திறனுடையவர் சாஅதி ஒரு வர்தான்" என்று.

"அவ்விதம் சொன்னவரை ஆயிரம் தடவை பாராட்டலாம்; அம் மனிதன் யார் என்பதை அவர் சரியாகச் சொல்லிவிட்டாரல்லவா!"

கிராம நீதிபதியின் அவையில் அறிவுரை நிகழ்த்தியவர் தாமேதாம் என்பதைச் சாஅதி ரஸமாக விவரித்துள்ளார்.

**நகைச்சுவை**

சாஅதி நகைச்சுவை ததும்பப் பேசக்கூடியவர். அவருடைய பேச்சிலுள்ள நகைச்சுவையை அனுபவிக்க இளைஞர்கள் பலர் அவர் இருக்கையில் வந்து கூடிக் கிடப்பதுண்டு. தமது எழுத்துக்களிலும் அந்தத் திறமையை அவர் காட்டாமலில்லை. தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய நகைச்சுவைக் கருத்துக்கள் சில நமது யுகத்தில் பழையவையாகி யிருப்பினும் இன்றும் ரஸிக்கக்கூடியவையாகவே இருக்கின்றன. சாஅதியின் நகைச்சுவை எத்தகையது என்பதற்கு அவருடைய 'குலிஸ்தா'னிலிருந்து சில உதாரணங்கள் தரலாம்:

—தன் குருவிடம் சீடன் சொன்னான் : 'என்னைக் காண வருவோரால் எனக்குத் தொந்தரவாக இருக்கிறது, என் நேரமெல்லாம் வீணாகிறது' என்று.

குரு சொன்னார் : 'உன்னிடம் அப்படி வருபவர்களில் ஏழையாய் இருப்பவர்களுக்குப் பணம் கடன் கொடு; பணக்காரர்களாக இருப்போரிடம் கடன் கேள். அதன் பின்னர் உன்னை ஒருவரும் தொந்தரவு செய்யமாட்டார்கள்' என்று.

—தான் நினைக்கும் காரியம் நிறைவேறிவிட்டால் ஒரு பை பொற்காசுகளைத் துறவிகளுக்கு வினியோகிப்பதாக ஓர் அரசன் சங்கல்பித்திருந்தான். காரியம் கைகூடவே ஒரு பை நிறையப் பொற்காசுகளை அள்ளி, பணியாள் ஒருவனிடம் கொடுத்து, அதைத் துறவிகளுக்கு வினியோகித்து வருமாறு அனுப்பினான். அப்பணியாள் இளைஞன்; முன் யோசனையுள்ளவன். பகல் முழுதும் ஓரிடத்தில் தங்கியிருந்துவிட்டு இரவில் அரண்மனை திரும்பினான். பை கொண்டுபோனது போலவே பொற்காசுகள் நிறைந்ததாய் இருந்தது. அவன் அரசனை நோக்கிக் கூறினான், 'ஒரு துறவியையும் காணோம்' என்று. 'என்ன, நமது நகரில் நானூறு துறவிகள் இருப்பதாகத் தெரிகிறது, நீ ஏன் பொய் சொல்கிறாய் ?' என்று கோபத்தோடு வினவினான் அரசன். பணியாள் மிகுந்த பணிவோடு கூறினான், 'ஐயனே, துறவி பணம் விரும்ப மாட்டான்; பணம் விரும்புபவன் துறவியல்லன்' என்று.

—தோல் தைப்பவனுக்கு ஒருவர் தமது மகளை மணம் செய்து கொடுத்தார். அவன் அவள் உதட்டைக் கடித்துவிட்டான். இதை அறிந்த பெண்ணின் தந்தை மருமகனைக் கோபத்தோடு நோக்கிக் கூறினார் : 'மடையனே, உன் கையில் தினமும் அகப்படும் தோல் துண்டுகள் என்று நினைத்து அவள் உதடுகளைச் சவைத்தனையா ?' என்று.

— வெளியே சென்றிருந்த ஜோதிடன் ஒருவன் வீடு திரும்பினான். தன் மனைவி யாரோ ஒருவனோடு சல்லாபித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அவளைத் திட்டி உதைத்தான். அவள் கூச்சலிட்டாள். இதைக் கண்ட பெரியவர் ஒருவர் சொன்னார்: 'உன் சொந்த வீட்டில் உன் மனைவி சோரம் போவதை அறிய முடியாத நீ, வானத்தில் கிரஹங்களின் பெயர்ச்சியை அறிந்து பிறருடைய நிலைமையைத் தெரிவிப்பது எப்படி ?'

— நள்ளிரவில் வழிப்போக்கர் ஒருவரைத் திருடர்கள் வழிப்பறி செய்து, அவர் உடையையும் பறித்துக்கொண்டு நிர்வாணமாக விரட்டிவிட்டனர். நடுக்கும் குளிரில் அவர் நடந்தார். அவரை நோக்கி நாய்கள் குரைத்துக்கொண்டு பாய்ந்தோடி வந்தன. நாய்களை விரட்டுவதற்காக அவர் கற்களைத் தேடினார். கற்கள் தரையிலுள்ள பனியோடு உறைந்துபோய் இருந்தன. அவற்றை அசைக்க முடியவில்லை. அவருக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. அவர் சொன்னார்: 'இந்த ஊர்வாசிகள் சுத்த அயோக்கியர்களாகவல்லவா இருக்கிறார்கள் ! நாய்களை அவிழ்த்து விட்டுவிட்டுக் கற்களையெல்லாம் கட்டிப்போட்டு விட்டனரே !'

— கிழவி யொருத்தி தன்னுடைய வெள்ளை மயிருக்கு மை தடவிக் கருப்பாக்க முயன்றுகொண்டிருந்தாள். அவளிடம் நான் சொன்னேன் : 'ஏ கிழவி, உன் நரைத்த மயிரைக் கருப்பாக்கினாலும் உன் கூனல் முதுகை நிமிர்த்த முடியாது' என்று.

— ஒரு கிழவரிடம், 'நீர் ஏன் மணஞ் செய்து கொள்ளவில்லை ? ' என்று வினவினார்கள். 'கிழட்டுப் பெண்ணை மணந்துகொள்ள எனக்கு விருப்பமில்லை' என்றார் அவர். 'நீர்தான் பணக்கார

ராயிற்றே, ஒரு கன்னியை ஏன் மணந்துகொள்ளக் கூடாது ?' என விஞவினர். 'எந்தக் குமரிதான் கிழவஞன என்ஊ மணந்துகொள்ள இசைவாள் ?' என்ருர் அவர்.

— பணக்காரன் ஒருவனுடைய மகனுக்கு எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பாடஞ் சொல்லிக் கொடுத்தும் பயனற்றுப்போனது கண்ட ஆசிரியர் அந்தப் பணக்காரனிடம் வந்து கூறினர்: 'உங்கள் மகன் கொஞ்சமும் அறிவு பெறக் காணும்; ஆனல், அவன் என்ஊத்தான் முட்டாளாக்கிவருகிருன்' என்று.

— பணக்காரன் ஒருவனுடைய மகன் தன் தந்தையின் கல்லறையினருகே அமர்ந்திருந்தான். அவஊ யடுத்து ஏழை யொருவனின் மகன் தன் தகப்பனின் புதைகுழியினருகில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் இருவரும் இவ்விதம் பேசிக் கொண்டனர் :

பணக்காரன் மகன் : 'என் தந்தையின் கல்லறை கருங் கல்லால் கட்டப்பட்டு, பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு, மேல் தளத்தில் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டு விளங்குகிறது. ஆனல், உன் தந்தையைப் புதைத்த இடத்தில் வெறும் மண்மேடன்றி வேறு எதுவுமில்லே.'

ஏழையின் மகன் : 'சும்மா இரப்பா ! அந்தக் கனமான கல் பாரத்தைவிட்டு உன் தந்தை நகர்வதற்கு முன்பாக, என் தந்தை வானுலகம் போய் விடுவார்.'

குடும்ப வாழ்க்கை

சாஅதியின் குடும்ப வாழ்க்கைபற்றிப் பரிபூரண மான விவரங்கள் கிடைக்கவில்லை. நாற்பது வய துக்கு முன்னர் அவர் மணஞ் செய்துகொண்டாரா, அல்லது அதுவரை லக்ஷியமற்ற நாடோடியாக ஊர் சுற்றிப் பார்க்கும் கவனத்தில் இதுபற்றி நினைக் கவே இல்லையா என்பது தெரியவில்லை. தமது பிற்காலத்தில் அவர் அரேபியாவில் ஒரு தடவை மணம் செய்துகொண்டதாகவும், அந்த மனைவிக் குப் பிறந்த புத்திரன் காலமாகிவிட்டதாகவும் சாஅதி எழுதிய இரங்கற்பா ஒன்றிலிருந்து தெரிய வருகிறது. இந்த மணத்துக்கு முன்பு-அவருடைய நாற்பதாவது வயதுக்குப் பின்னர்-அவர் சுற்றுப் பிரயாணம் செய்த சமயம் ஒரு தடவை திருமணம் புரிந்து, ஆற்றொணுத் துன்பத்தை அனுபவித்திருக் கிறுர். அந்த விவரம் 'குலிஸ்தா'னில் தரப்பட்டுள் ளது. அது வருமாறு :

துறவிகள் என்று வேடமிட்டு உலாவியவர் களோடு சாஅதி சகவாசம் செய்திருந்தார். அவர்களுடைய துர் நடத்தையைக் கண்டு வெறுப் படைந்த அவர், அவர்களோடு சேர்ந்து வாழ்வதை விடக் காட்டு விலங்கினங்களுடன் வாழ்வது மேல் என்று எண்ணி, ஜெருஸலத்தை ஒட்டிய காட்டுக் குச் சென்றுவிட்டார். அங்கே கிழங்கு காய்களைத் தின்று காலங் கழித்தார். சிலுவைப் போருக்காக வந்த பறங்கியர் என்னும் வெள்ளையர்கள் அவரை எதிரியின் ஒற்றன் என்று சந்தேகித்துக் கைது செய்துவிட்டனர். ஏனையக் கைதிகளோடு அவர்

திரிப்போலிக்கு அனுப்பப்பட்டார். அங்கே யூதர்களோடு சேர்ந்து மண் வெட்டவும், கல்லுடைக்கவுமாக அவர் கஷ்டப்பட்டார். அச்சமயத்தில் ஹலபு என்ற நகரைச் சேர்ந்த அவருடைய பழைய நண்பர் ஒருவர் அவரைக் காண நேர்ந்தது. அவர் சாஅதியை இனம் கண்டுகொண்டார். அவருடைய நிலைமையை அறிந்து, அவருக்காகப் பத்து திர்ஹம் (வெள்ளிக் காசுகள்) சிறையதிகாரியிடம் கொடுத்து அவரை மீட்டார். அந்த நண்பர் சாஅதியைத் தமது ஊருக்கு அழைத்துச் சென்றூர். அங்கே தன் மகளைச் சாஅதிக்கு அவர் மணம் முடித்துவைத்தார். சில நாட்களில் சாஅதியின் மனைவி தன் சொரூபத்தைக் காட்டலானுள் ; தன் திரையைக் கிழித்தெறிந்தாள். எடுத்ததற்கெல்லாம் சாஅதியைத் திட்டலானுள். சாஅதி மகிழ்சியையே மறந்தவரானுர். சாஅதி சொல்கிறுர்: “நரகமும் சுவர்க்கமும் வீட்டில்தான் இருக்கின்றன. நல்லவனுக்குத் தீய மனைவி கிடைத்தால் அவன் இவ்வுலகிலேயே நரகத்தில்தான் இருப்பான்” என்று.

இந்தப் பயங்கரச் சோதனையிலிருந்து தம்மை விடுவிக்கும்படி அவர் இறைவனிடம் பிரார்த்தித்தார். அவள் எப்போதுமே அவரை ஏளனமாகவே பேசுவது வழக்கமாகிவிட்டது. இதைச் சாஅதியால் சகிக்கவே முடியவில்லை. துடுக்கும், அஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதர், அரசாங்கச் சட்டங்களையெல்லாம் துச்சமாக மதித்தவர் கேவலம், ஒரு பெண்பிள்ளையிடம் வசமாக அகப்பட்டுக்கொண்டு தமது இதயத்திலிருந்து இரத்தம் சொட்டவிட்டுக் கொண்டிருந்தார். ரோஜா மலரின் மணத்தையல்ல,

அதன் முட்கள் குத்தும் வேதனையைத்தான் தாம் அனுபவிக்க நேர்ந்தது என்றூர் மகாகவி மில்டன், தமது துயரமான இரண்டாந்தார மணவாழ்வு பற்றிக் குறிப்பிடுகையில். சாஅதி மகானும் பொறியிலகப்பட்ட புலியாகத் திணறினூர். ஒரு தடவை அவள், "உம்மை என் தகப்பனூர் பத்து திர்ஹம் கொடுத்து விலைக்கு வாங்கியதை மறந்துவிட்டீரா?" என்று பரிகசித்தபோது சாஅதி ஆத்திரத்தோடு கூறினூர், "ஆமாம், உன் அப்பன் என்னைப் பத்து திர்ஹத்துக்கு வாங்கி உன்னிடம் நூறு திர்ஹத்துக்கு விற்றுவிட்டான்" என்று.

ஒரு முஸ்லிம் மணஞ் செய்துகொள்ளும்போது, அவன் தன் மனைவிக்குக் கொடுக்கவேண்டிய 'மஹர்' என்னும் தொகை எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்பட்டுவிடும். அதைத் தன் மனைவிக்குக் கொடுப்பது அவனுடைய கடமையாகும். அவளை அவன் விவாக ரத்துச் செய்ய விரும்பினூல், இந்த 'மஹ'ரைக் கண்டிப்பாகக் கொடுத்தாகவேண்டும். சாஅதி இந்தக் கொடுமைக்காரியை மணந்து கொண்டபோது, அவர் அவளுக்குக் கொடுக்க வேண்டிய 'மஹர்' தொகையாக நூறு திர்ஹம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே, அவளை விட்டு அவர் விடுதலையடைய வேண்டுமானூல் நூறு திர்ஹம் கொடுத்தாகவேண்டும். எனவேதான், 'உன் தந்தை உன்னிடம் என்னை நூறு திர்ஹத்துக்கு விற்றுவிட்டான்' என்று சாஅதி வேதனையுடன் கூறினூர்.

பின்னர், சாஅதி தமக்கு அவளை மணம் முடித்துத் தந்த மனிதனிடம் சென்று மன்றூடினூர்.

ஐயா, நீர் என்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்தபோது எனக்கு உபகாரம் செய்வதாக எண்ணி னேன். பின்னர், சித்திரவதை மிகுந்த பெரிய சிறை யில் என்னைத் தள்ளிவிட்டீர். புலியின் வாயில் அகப்பட்ட ஆட்டைக் காப்பாற்றியவன் அதை வீட்டுக்குக் கொண்டுபோய் அறுக்கக் கத்தியைத் தீட்டிய கதையாகிவிட்டது உம் செயல். நானே தேச சஞ்சாரம் செய்யும் துறவி. என்னிடம் 'மஹர்' பணத்துக்கு மார்க்கமில்லை. தயவுகூர்ந்து உமது மகளை என்னிடமிருந்து பிரித்துக்கொள்ளும்' என்று வேண்டினர். அவரும் சாஅதிக்காக இரங்கி மஹர் தொகையைச் சேகரித்து விவாகரத்துச் செய்துவிட ஏற்பாடு செய்தார்.

குடும்ப வாழ்க்கை என்ற தேன் கூட்டில் தேனின் கொட்டுதலையன்றி வேறு சுகம் காணுதை சாஅதி, 'ஆண்டுதோறும் புது மனைவியை மணந்து கொள்! போன வருஷப் பஞ்சாங்கம் இந்த வருஷத் துக்கு உதவாது' என்று ஆத்திரமாக எழுதியுள்ளார் இது நையாண்டியாகச் சொல்லப்பட்ட வார்த்தை யேயன்றி உபதேசமன்று என்பதை மறந்துவிடக் கூடாது. உலகச் சிந்தனையாளர் வரிசையில் இடம் பெற்றுள்ள பெரியார், அறநெறிக்கு, நீதி மார்க்க துக்குத் தலையாய இடம் தரும் மகான் இப்படி வருஷத்துக்கு ஒரு புது மனைவியை மணந்துகொள் என்று யோசனை சொல்வாரா! அப்படியே ஒவ் வொரு வருஷக் கடைசியிலும் தன் மனைவியைத் 'தலாக்' செய்வதானல் மஹர் தொகைக்கு என்ன செய்யமுடியும், இது சாத்தியமான செயலா என் றெல்லாம் வினு விடுக்க இடமுண்டாகிறதல்லவா!

ஒரு திருமணத்திலேயே கொடுமையையும் இம்சையையும் கண்ட சாஅதி உண்மையில் இப்படி வருஷந்தோறும் புதிய புதிய பெண்களிடம் அகப்பட்டு அவதிப்படும்படி ஆண்களுக்கு யோசனை சொல்லவே மாட்டார். எனவே, இந்தக் கூற்று வேடிக்கையாகச் சொன்ன நையாண்டி வார்த்தையாகவும், அடிக்கடி மணந்துகொள்பவர்களைக் கேலி செய்வதாகவும்தான் இருக்க முடியும்.

இமாம் சாஅதி மற்ற விஷயங்களில் போல, திருமணம், மணவாழ்க்கை போன்ற விஷயங்களில் போதனை செய்யும்போதும் திரு குர்ஆன், நபிபெருமான் போதனை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டே எழுதுகிறார். மனைவி கீழ்ப்படிதலும் கற்பும் உடையவளாய் இருப்பின் கணவன் பாக்கியம் செய்தவன் என்கிறார் சாஅதி. கணவனின் கஷ்டத்தில் ஆறுதலளிப்பவளே அருமை மனைவியாவாள்; கணவன் மனம் கோணாது நடப்பவள் உத்தமியாவாள் என்கிறார். அவர் மேலும், (போஸ்தானில்) சொல்லுவதைப் பாருங்கள்: "ஒரு பெண் பரிசுத்தவதி யாகவும் அன்பாகப் பேசுபவளாகவும் இருந்தால் அவள் அழகற்றிருப்பினும் போற்றத்தக்கவளே.

"அழகுள்ளவளைவிட நல்லியல்புள்ள பெண்ணை மணப்பது நலமாகும். அழகியின் மனத்தில் விஷமும் இருப்பதுண்டல்லவா! தீய பெண்ணிடமிருந்து இறைவன் நம்மைக் காப்பானாக!

"கோபமுடைய மனைவியோடு காலந் தள்ளுவதைவிடச் சிறைச்சாலை சாலச் சிறந்ததாகும். விகார மனம் படைத்த மனைவியோடு வீட்டிலிருப்பதைவிடத் தேசாந்திரம் போவது மகிழ்ச்சி தருவதாகும்.

“கணவன் குரலைவிட மனைவியின் குரல் பெரிதாக எடுபடும் வீட்டில் மகிழ்ச்சிக் கதவு அடைப்பட்டுப் போய்விட்டதென்பதை அறிந்துகொள்.

“உன் மனைவி வீணாக வெளியிடங்களுக்குச் சென்றால் நீ அவளை அடி; அல்லது நீ பெண்ணைப் போல் வீட்டினுள் அவளிடத்தில் அமர்ந்திரு. அன்னிய ஆடவர் முன்னிலையில் அவள் கண் குருடாக இருக்கவேண்டும். உன் வீட்டைவிட்டு அவள் எங்கேயாவது (தனித்துப்) போவதனால் அது சவக் குழிக்காகத்தான் இருக்கவேண்டும்.

“பாதத்தை இறுக்கும் செருப்பைப் போட்டு நடந்து காலைப் புண்ணாக்கிக் கொள்வதைவிடச் செருப்பில்லாது நடப்பது நலம்; வீட்டில் கடியப் படுவதைவிட வெளியில் சுற்றுவதால் உண்டாகும் துன்பங்கள் பெரிதல்ல.’’

**அவர் கால ஆட்சியாளர்கள்**

சாஅதியின் வாழ் நாளில் பாரஸீகம் நான்கு அரசர்களுடைய ஆட்சியைக் கண்டிருக்கிறது. அவர் தமது எண்பத்து மூன்றாவது வயதில் எழுதிய ‘போஸ்தா’னில் மூன்று அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். “சாஅத் ஜங்கிக்கும், அவர் புத்திரர் அதாபக் அபூபக்கர் சாஅதுக்கும், அவர் புதல்வர் சாஅத் கபூருக்கும் புகழும், அவர்கள் நாட்டுக்குச் செழிப்பும் உண்டாகுமாக!” என்று அவர் அதில் எழுதியுள்ளார். இந்த அரசர்களின் ஆட்சி முடிவுக் குப்பின் (கி. பி. 1256-ல்) மொகலாய வமிசத்தின

ரின் ஆட்சி தொடங்கிற்று. அப்போதும் சாஅதி ஜீவியவந்தராகவே இருந்தார்.

சாஅதி தமது 'போஸ்தா'னைச் சாஅத் ஜங்கியின் புதல்வர், அதாபக் அபூபக்கர் சாஅதுக்குச் சமர்ப் பணம் செய்துள்ளார். இந்த அரசர் சாஅதியின் ஆத்ம நேயராக விளங்கினர். அவர் சாஅதியைத் தமது ஆஸ்தானக் கவிஞர் என்று அறிவித்தார். 'சாஅதி' என்ற பெயரை நமது மகான் சூடிக் கொண்டதே, இந்த அரசர் இளவரசராக இருக்கும் காலத்தில்தான். அவரிடம் கொண்டிருந்த அன்பின் காரணமாக அவருடைய பெயரிலுள்ள 'சாஅத்' என்பதிலிருந்து 'சாஅதி' என்ற தமது பெயரை அவர் உண்டாக்கிக்கொண்டார். சாஅதியின் அசல் பெயர் முஷர்ரிபுத்தீன் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனல், முன்னைய்ப் பாரஸீகப் புலவர் கள் பலர் வயிறு வளர்ப்பதற்காகவும், அரச சம்மானங்களையும், விருதுகளையும் பெற்றுப் போக வாழ்வு வாழவும் அரசர்களைப் போற்றிக் கொண்டா டிக் கொண்டிருந்தது போலச் சாஅதி அரசர்களைக் கொண்டாடவில்லை. அரசர்களின் தயவை அவர் எதிர்பார்க்கவில்லை. தம்முடைய மேதையைப் போற்றித் தம்மைப் பாராட்டிவந்த அரசர்களிடம் அவர் அன்போடு நடந்துகொண்டிருக்கிருர். 'போஸ்தா'னை அபூபக்கர் அதாபக் அரசருக்குச் சமர்ப்பணம் செய்து சாஅதி எழுதியதாவது: 'அரசர்கள் பெருமையைப் பாடும் எண்ணம் எனக் கில்லை. எனினும், இந்த நூலை இந்த நாட்டு மன்னருக்குச் சமர்ப்பிக்கிறேன். இப்போதாவது பேச்சுவன்மையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரு

மில்லாத சாஅதி அபூபக்கர் சாஅதின் காலத்தில் வாழ்ந்தவர் என்று ஜனங்கள் பேசுவார்களல்லவா!' இவ்விதம் தமது இறவாத புகழுடைய நூல் ஒன்றை அவருக்குச் சமர்ப்பித்து, இன்றளவும் அந்த அரச ருடைய பெயரும் விளங்கும்படி செய்துவிட்டா ரல்லவா !

முதலில் எழுதப்பட்ட நூலான 'குலிஸ்தா' னின் முன்னுரையிலும் அதாபக் அபூபக்கர் சாஅத் என்ற இதே அரசரை-தமது நண்பரைப்-பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குலிஸ்தான் வெளிவர அவர் பொருளுதவி செய்தாராம். அவருடைய நாடு செழிப் புடன் வாழவேண்டும் என்று சாஅதி போற்று கிறுர். மேலும், மணமுள்ள பச்சிலை வளரும் மண் ணுக்குத் தம்மை ஒப்பிட்டு அவர் எழுதுவதாவது: "நான் குளிக்கச் சென்றிருந்த இடத்தில் இனிய சுகந்தமுள்ள பச்சிலைச் செடி முளைத்திருந்தது. அந்த இடத்திலுள்ள மண்ணை எடுத்து முகர்ந்து பார்த்தபோதும் அதே இனிய மணம் வீசிற்று. அந்த மண்ணுக்கு வாசனையைத் தந்தது பச்சிலை தான். அதுபோல் நற்செயல்களையே செய்யும் இயல்புடையவராகிய அரசரோடு தொடர்பு கொண்ட நானும் மணம் பெற்றுவிட்டேன். இறைவனே, அந்த அரசருக்குக் கிருபை செய் ! அவர் செய்த நன்மைகளுக்குப் பன்மடங்கு கூலி கொடு ! அவருடைய எதிரிகளின் தீய எண்ணங் களைத் தீய்த்துவிடு ! ... ஹே அரசரே, நீர் இருக்கும் வரை இந்த நாட்டுக்குத் தீங்கு வராது. பூவுலகி லெல்லாம் உமது நாடு சுபிட்சம் மிகுந்ததாக மிளிர் கிறது. ஏழைகளைக் காப்பது உமது கடமை.

அதற்கு இறைவன் வெகுமதி அருள்வான். இறைவா, இந்த நாடு என்றும் சுபிட்சத்தோடிருக்க நீ கிருபை செய் !"

சாஅதிக்கும், அதாபக் அரசருக்கும் இருந்த அன்புறவு எத்தகையது என்பது இதில் வெளியாகிறது. இந்த அரசர்களின் ஆட்சி முடிவடைந்து, பாரஸீகத்தை மொகலாயர்கள் ஆட்சி செய்யத் தொடங்கிய பின்னரும் அரச அவையில் சாஅதிக்குப் பெருமதிப்பு அளிக்கப்பட்டே வந்தது.

இவர்களின் ஆட்சித் தொடக்கத்தில் ஷிராஜில் சேனைத் தலைவனாக இருந்தவன் அங்குள்ள ஏழை ஜனங்களைத் தன்னிடமிருந்து பேரீச்சம் பழம் வாங்கும்படி வற்புறுத்தினான். ஆனால், பேரீச்சம் பழத்தின் விலை ஒன்றுக்குப் பத்தாக இருந்தது. ஏழைகளிடம் எப்போதுமே அனுதாபமுடைய சாஅதி, ஏழைகள் கஷ்டப்படுவது கண்டு அந்த மொகலாயத் தலைவனுக்கு இது குறித்து ஒரு கடிதம் எழுதினார். உடுக்க உடைக்கே வழியற்ற ஏழை ஜனங்களைப் பெரும் பொருள் கொடுத்துப் பேரீச்சம் பழம் வாங்குமாறு நிர்ப்பந்திப்பது சரியன்று என்று அதில் குறிப்பிட்டார். அவருடைய வேண்டுகோளுக்கு அந்தத் தலைவன் பதில் பேசாது இணங்கினான். பேரீச்சம் பழத்தைக் குறைந்த விலையில் விற்கும்படி அவன் உத்தரவிட்டான்.

இரண்டாவது மொகலாய மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் அவன் ஒரு நாள் தன் மந்திரிகளோடு சாஅதி இருந்த காட்டுப் பக்கமாக வந்தான். அங்கே சாஅதி எதிர்ப்பட்டார். அரசனோடு இருந்த

மந்திரிகள் சாஅதிக்குப் பெரும் மரியாதை செய்தனர். தனக்குக்கூடச் செய்யப்படாத மரியாதை இம்முதியவருக்குச் செய்யப்படுவது ஏன் என்று அவன் மந்திரியொருவனிடம் வினவினுன். சாஅதியின் பெருமையை அந்த மந்திரி எடுத்துரைத்தான். அதன்பின் அரசனே சாஅதிக்கு அழைப்பு அனுப்பினுன். தக்க மரியாதைகளோடு அவரைத் தன் அவைக்கு அழைத்துவரச் செய்து அவரிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டான். தனக்கு ஏதாவது புத்திமதி கூறவேண்டும் என்று வினயமாகக் கேட்டுக்கொண்டான். சாஅதி சொன்னுர்: "பாவத்தின் தண்டனையையோ, புண்ணியத்தின் வெகுமதியையோ தவிர வேறு எதையும் நீ இவ்வுலகிலிருந்து மறு உலகுக்குக் கொண்டுபோக முடியாது" என்று. இது அரசன் மனத்தில் நேரடியாகப் போய்த் தாக்கிற்று. அவன் முகம் விசனத்தைக் காட்டிற்று. தமது இருப்பிடம் திரும்ப எழுந்த சாஅதி அரசன்காதில்,

'அரசன் என்போன் இறைவன் நிழலாவான்;
நிழல் முழுமுதலைப் பூரணமாகத் தொடரவேண்டும்.
தீய ஆத்மா நல்லது எதையும் செய்ய இயலாது.
நாட்டில் நிலவும் உரிமைகள் யாவும்
அரசனின் தாராளத்தால் உண்டானவைதாம்.
தவருன சிந்தனைகளே யுள்ள அரசனுல்
அவன் நாட்டுக்கே நன்மை விளையாது'

என்ற கருத்துள்ள பாட்டைக் கூறினுர்.

இந்த அரசனுடைய மந்திரி ஒருவர் சாஅதியிடம் நான்கு கேள்விகளுக்கு விடை கேட்டு ஒரு கடிதம்

எழுதினர். அவையாவன: 1. ஜின்னு இனம், மானிட இனம் இரண்டிலும் சிறந்தது எது? 2. என் எதிரி என்னிடம் பணிந்து வரும்போது நான் எப்படி நடந்துகொள்ளவேண்டும்? 3. மக்காவுக்கு 'ஹஜ்' யாத்திரை செல்பவர் அந்தக் கடமையைப் புறக் கணித்தவரைவிடச் சிறந்தவரா? 4. (நபி பெருமான் மருகர்) அலீ (ரலி) அவர்களின் சந்ததியார் மற்றவர் களைவிட மேலானவர்களா?

இந்தக் கடிதத்துடன் சாஅதியின் தருமச் செலவுக்காக ஐநூறு தீனர்களையும், ஒரு தலைப்பாகை யையும் அவர் ஒரு தூதுவன் மூலம் அனுப்பினர். ஆனல், அந்தத் தூதுவன் வழியில் ஐநூறு தீனர் களில் நூற்றைம்பது தீனர்களைத் திருடிக்கொண்டு முன்னூற்றைம்பது தீனர்களை மட்டும் சாஅதியிடம் கொண்டுவந்து கொடுத்தான். தூதுவன் பணந் திருடிவிட்டதை அவன் பேச்சிலிருந்து சாஅதி ஒருவாருக ஊகித்துக்கொண்டார். அதை மிகவும் நாசூக்காக மந்திரிக்கு இவ்விதம் ஒரு கடித மூலம் தெரியப்படுத்தினர்:

"நீர் எனக்கு அனுப்பிய பணமும், அன்பளிப்பும் வரப்பெற்றேன். உமது செல்வம் தினமும் வளரட்டும். நீர் எனக்குத் தந்த ஒவ்வொரு தீனருக்கும் ஓராண்டு வீதம் முன்னூற்று ஐம்பது ஆண்டுகள் நீர் நீடூழி வாழ்வீராக!"

இந்தக் கடிதத்தைக் கண்ட மந்திரி அவருக்கு இன்னும் ஆயிரம் தீனர்கள் அனுப்பும்படி உத்தர விட்டார். ஆனல், அந்த உத்தரவைப் பெற்ற பொருள்காப்பாளர் பணம் அனுப்பப்படுமுன்

காலமாகிவிட்டார். இதை அறிந்த மந்திரி சாஅதிக்கு ஐம்பதினுயிரம் தீனுர்கள் நன்கொடையாக அனுப்பி, அதிலிருந்து ஷிராஜில் பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு கட்டடம் கட்டுமாறு கேட்டுக்கொண்டார். ஆனுல், அவர் கேட்ட நான்கு கேள்விகளுக்கும் சாஅதி விடை எழுதி அனுப்பவில்லை. அவை மிகவும் சாதாரணமானவை என்பதால் ஒருக்கால் சாஅதி அவற்றுக்கு விடை கூருமலிருந்திருக்கலாம்.

### அற்புத சக்தி

இமாம் சாஅதியின் அற்புத சக்தி பற்றியும் பல கதைகள் கூறப்படுகின்றன. அவர் வசித்த காட்டுக் குடிசையில் குடிசைக்கு வெளியே கூடையொன்று தொங்கிக்கொண்டிருக்கும். சாஅதியைப் பார்க்க வருபவர்கள் கொண்டுவரும் உணவுப் பொருள்களில் அவரும் அவர் சீடர்களும் உண்டதுபோக மீதியை அந்தக் கூடையில் போட்டு வைப்பது வழக்கம். காட்டில் விறகு பொறுக்க வருபவர்கள் பசித்தால் அங்கே வந்து அந்தக் கூடையிலிருந்து உண வெடுத்து உண்பதுண்டு. ஒரு நாள் திருடன் ஒருவன் திருடும் நோக்கத்துடன் சாஅதியின் குடிசைப் பக்கம் வந்தான். அந்தக் கூடையுள் கையை விட்டான். அவ்வளவுதான், அவன் கை செயலற்று முடமாகிவிட்டது. உடனே அவன் கூச்சலிட்டுக் கதறலானுன். சாஅதியின் சீடர்கள் அவனைக் குடிசையுள் அழைத்துவந்தனர். சாஅதி இறைவ னிடம் பிரார்த்திக்கவே, அவனுடைய முடமான கையும் மனமுமே சீர்பட்டுவிட்டன.

சாஅதியின் நூற்பெருமையை விளக்கும் ஒரு சம்பவமும் நடந்ததாகக் கூறப்படுகிறது. அது வருமாறு :

ஷிராஜில் மார்க்கப் பக்தியுள்ள ஒருவர் சாஅதியின் புகழைக் கண்டு அவரிடம் பொருமை கொண்டிருந்தார். சாஅதி சகலராலும் மதிக்கப்படும் அளவுக்குப் பெரியவரல்லர் என்று அவர் எண்ணினுர். ஒரு நாள் அவர் கனவில் சுவர்க்கத்தைக் கண்டார். அங்கே புண்ணியாத்மாக்கள் சிலர் இறைவன் துதியைப் பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் பாடுவது என்ன என்று இவர் விசாரித்தார். அந்த ஆத்மாக்கள் பாடுவது சாஅதியின் பாடல் என்று அறிந்தார். அந்தப் பாடல் இறைவனுக்கு உவப்பானதாய் இருப்பதாகவும் அறிந்தார்.

மறு நாள் காலையில் அவர் சாஅதி இருந்த இடம் வந்தார். அங்கே தான் சுவர்க்கத்தில் கேட்ட அதே பாடலைச் சாஅதி பாடிக்கொண்டிருக்கக் கண்டார்.

புதிய தளிர்விட்ட மரத்தின்
ஒவ்வோர் இலையும்
இறைவனைத் துதிக்கும் நாவுதான்.

இதைக் கேட்ட அந்த மனிதர் சாஅதியின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இமாம் சாஅதியின் 'குலிஸ்தா'னையும், 'போஸ்தா'னையும் பாரஸீக மக்கள் திரு குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் அடுத்தபடியாகப் போற்றிக் கொண்டாடுவது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

**சாஅதியின் நூற்கள்**

'குலிஸ்தான்' (ரோஜாத் தோட்டம்), 'போஸ் தான்' (பழத் தோட்டம்) ஆகிய இரண்டையும் தவிர சாஅதி வேறு பல நூற்களும் எழுதியுள்ளார். இவ்விரண்டு நூற்களுக்கு வெகு காலத்துக்கு முன்னமேயே சாஅதியின் பாடல்கள் பாரஸீகத் தில் புகழ்பெற்றிருந்தன. தமது 'போஸ்தான்' முன்னுரையில் அவர் சொல்கிருர். "பாரஸீகத்தில் என் பாடல்கள் கூதான் நாட்டுப் புனுகைப் போல் பெருமையுடன் மதிக்கப்படுகின்றன. இன்பம் எக்களிக்கும் பூங்காவுக்குச் சாஅதி ரோஜா மலர் களைக் கொண்டு வருகிறேன். என் கவிதைகள் சர்க்கரைப் பாகில் ஊறிய பேரீச்சம் பழம் போன் றவை." 'குலிஸ்தான்' தவிர சாஅதி இருபது நூற் கள் வரை எழுதியுள்ளார். பாரஸீக மொழியில் பாடல்கள் எழுதியதுடன், அரபியிலும் கஸீதாக்கள் பல அவர் எழுதியுள்ளார். சாஅதியின் இளமையில் எழுதப்பட்டவை; சிருங்கார ரஸமுள்ளவையாய் எழுதப்பட்டவை, முதுமையில் எழுதப்பட்டவை; தத்துவார்த்தம் சம்பந்தமாக எழுதப்பட்டவை, ஆறு ரிஸாலாக்கள், நீதிப் பாடல்கள் முதலிய பாடல் தொகுதிகள் அவருடைய நூற்களில் குறிப் பிடத்தக்கவை. பாரஸீக மொழியில் அவர் எழுதிய கஸீதாக்களும், அரபியில் எழுதிய கஸீதாக்களும் தனித்தனி நூற்களாக வெளியாகியுள்ளன. 'பந்த் நாமா', 'பதாயி' என்ற நூற்களும் இவரால் எழுதப் பட்டுள்ளன.

**சாஅதி ஸூபிக் கவிஞரா ?**

சாஅதி எழுதிய கஜல்கள் உலகப் புகழ் பெற்றவை. பாரஸீகத்தில் கஜல்கள் எழுதுவதில் மௌலானு ரூமியும், இமாம் சாஅதியும், காஜா ஹாபிஸூம்தாம் பெயர் பெற்றவர்களாவர். சாஅதி யின் கஜல்கள் மிகவும் உணர்ச்சி யூட்டுபவை. ஆனுல், அவற்றில் சிருங்கார மணம் அதிகமுண்டு என்று குற்றஞ் சாட்டப்படுவதுண்டு.

இவ்வளவு பாடல்கள் எழுதியிருந்தும் சாஅதி ஒரு ஸூபிக் கவிஞர்தானு என்ற விஷயம் ஐயத்துக்கு இடம்பாடானதாகவே ஆகிவிட்டது. ஸூபிக் கவிஞர் என்ருல் ஆத்மாவைப்பற்றியும், இம்மை மறுமை யின் நிலைகள்பற்றியும், ஆத்மா இறைவனை அடை வதற்கான மார்க்கம்பற்றியும், அதில் ஆத்மா அடை யும் அனுபவங்கள்பற்றியும் கவிதை எழுதுபவர் எனலாம். இம்முறையில் மௌலானு ரூமி ஒரு மகத் தான ஸூபிக் கவிஞராக விளங்குகிருர். பரீதுத்தீன் அத்தாரும், ஹக்கீம் ஸனுயியும், ஹாபீஸூம் புகழ் பெற்ற ஸூபிக் கவிஞர்களாவர். ஆனுல், சாஅதி மகா னின் விசேஷமான வேலையோ ஜனங்களுக்கு அற நெறி போதிப்பதாகவே இருக்கிறது. இதில் அவருக்கு ஒப்பார் யாருமில்லை. ஸூபி இலக்கியத்தை வெகு நன்ருகக் கற்று, பல அரிய நூற்களை ஆங்கிலத் திலாக்கிய பேராசிரியர் ஆர். ஏ. நிக்கல்ஸன் சொல் கிருர் : “ சாஅதியின் உணர்ச்சியூட்டும் பாடல் களிலும் தான் ஒரு தர்வேஷ் அல்லது ஸூபி என் பதைவிட உலகத்தைச் சேர்ந்த, அறநெறி போதிக் கும் மனிதராகவே தம்மை அவர் காட்டிக்கொள்

கிறார்" என்று. அழுக்குப் படிந்த கந்தலுடையுடன் அவர் அலைந்துள்ளார். தர்வேஷ்கள் எனும் துறவிகளுடன் பழகியுள்ளார். அவர்களில் பலர் வெளி வேஷத் துறவிகளாய் இருப்பது கண்டு மனம் உடைந்து காட்டிற்கேகூடப் போயிருக்கிறார். துறவியின் உடையை உடுத்துக்கொண்டு உலகை ஏமாற்றுபவர்களைச் சாஅதி மிகவும் வெறுத்தார். உலக இச்சைகளைத் துறந்து ஒதுங்கவேண்டிய துறவிகள் இச்சைப் பிரியர்களாய் உழல்வதை அவர் கண்டித்திருக்கிறார். போலித் துறவுபற்றிக் 'குலிஸ்தா'னில் அவர் ஒரு கதை சொல்கிறார்: "ஒரு பக்கீர் தன் கனவில் ஓர் அரசனைச் சுவர்க்கத்திலும், ஒரு துறவியை நரகத்திலும் கண்டார். 'இப்படியா நடக்கும்? அரசன் நரகிலும், துறவி சுவர்க்கத்திலுமல்லவா இருக்க வேண்டும்!' என்று அவர் எண்ணினார். அப்போது ஒரு குரல் கேட்டது, 'துறவிகளிடம் அன்பு காட்டிய அரசன் சுவர்க்கமடைந்தான்; அரசர்களுடனேயே சதாவும் நட்புப் பூண்டிருந்த துறவி நரகமடைந்தார்' என்று. முரட்டு ஜுப்பாவும், ஜபமாலையும், ஒட்டுப் போட்ட உடையும் எதற்காக? உன்னைப் பாவாத்மாவாக்கும் தீய செயல்களை விட்டு விலகு; துறவு உடை தரிக்க வேண்டியது அவசியமில்லை. செயலில் துறவியாய் இரு; கோமாளித் தொப்பியை அணிந்துகொண்டாலும் குற்றமில்லை." இதில் தாம் சொல்வது போலச் செயலில் துறவியாய் இருந்த மகான் சாஅதி. எனவேதான், திரு குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் அறநெறியைப் போதித்து அவர் அமரரானார்.

ஆனால், சாஅதியின் நூற்களில் ஆத்மீகமான கருத்துக்கள் இல்லையென்று சொல்ல முடியாது. 'குலிஸ்தா'னிலும், 'போஸ்தா'னிலுங்கூடப் பல இடங்களில் சிந்திப்பவர்கள் ஆத்ம ஞான விளக்கம் பெற முடியும். 'குலிஸ்தா'னில் இத்தகைய விளக்கத்துக்கு இடமளிக்கும் மூன்று இடங்களை நாம் உதாரணத்துக்காக விளக்கிக் காட்டலாம்.

—-பாரஸீக நாட்டு அடிமை ஒருவனோடு ஓர் அரசன் கப்பல் பிரயாணம் தொடங்கினான். அந்த அடிமை அதற்கு முன் கடலைப் பார்த்ததுமில்லை, கப்பலில் ஏறியதுமில்லை. எனவே, அவன் உடல் நடுக்கமெடுத்தது. அவன் அழத் தொடங்கினான். அவனுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவன் அழுகையை நிறுத்தவில்லை. அரசனுடைய உல்லாசப் பிரயாணத்துக்கே அவன் கூச்சல் பெரிய இடைஞ்சலாய் இருந்தது.

கப்பலில் வைத்தியன் ஒருவன் இருந்தான். தனக்கு அனுமதி தரப்பட்டால் அவனை அமைதியாய் இருக்கும்படி செய்வதாக அவன் கூறினான். அரசனும் அனுமதியளித்தான். வைத்தியன் அந்த அடிமையைக் கடலில் எறிந்து அவன் மூழ்கிய பின் தூக்கும்படி செய்தான். அதன் பின் அந்த அடிமை ஒரு மூலையில் போய் வாய் பேசாது உட்கார்ந்துவிட்டான். இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று கேட்டபோது வைத்தியன் சொன்னான்: "இதற்கு முன் இவன் கடலில் மூழ்கியதில்லை; ஆதலால், கடலில் மூழ்கிவிடுவோமோ என்ற பயத்

தால் அழுதுகொண்டிருந்தான். இப்போது அஃது என்ன என்று அறிந்துகொண்டதால் அழுவதை நிறுத்திவிட்டான்'' என்று.

''தன் காதலியைத்
தன் அணைப்பில் வைத்திருப்பவனுக்கும்
காதலியின் வரவு நோக்கி வழிமேல்
விழி வைத்திருப்பவனுக்கும் வேற்றுமையுண்டு.

இதில் உள்ள தத்துவார்த்தம் வருமாறு: ஒருவன் பலவகையான ஆபத்துக்களில் சிக்கிக் கரையேறினுலன்றி அவன் தெய்வ அந்தரங்கத்தை (ஹமவோஸ்த்) அறிந்துணர முடியாது. பாரஸீக அடிமை என்பது ஆத்ம ஞான வழியில் பயிற்சியற்ற மனிதனைக் குறிக்கும். இத்தகையவன் தன் இச்சா பாசங்களால் (நப்ஸ்) பாதிக்கப்பட்டிருக்கிறுன். அவன் குழப்பமுற்று, மனநிலை ஸ்திரமற்றுக் கஷ்டப்படுகிறுன். சகல ஞானிகளும் இந்த அந்தரங்கத்தை உணர்ந்துள்ளனர் என்று அவனிடம் கூறப்பட்டாலும் அவனுடைய மனநிலை சீர்படுவதில்லை. அவனை ஆத்மஞான வழிகாட்டி (ஷைகு) அவநம்பிக்கை, சந்தேகம் என்னும் கடலில் தள்ளிப் பிறகு பாதுகாவல் என்ற கரையிலே சேர்க்கிறுர்; அடிப்படை உண்மையை அவன் உணரும்படி செய்கிறுர். சாஅதியின் நோக்கம் என்ன என்பது, ''தன் காதலியைத் தன் அரவணைப்பில் வைத்திருப்பவனுக்கும், காதலியின் வரவு நோக்கி வழிமேல் விழி வைத்திருப்பவனுக்கும் வேற்றுமையுண்டு'' என்பதில் நன்கு தெளிவாகிறது.

—ஒரு நாள் இரவில் மக்காப் பாலையில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அப்போது அதிகமான களைப்பினால் என் உடல் தளர்ச்சியுற்றது. நான் ஒட்டகமோட்டியிடம் சொன்னேன், "என் விதிபோல் ஆகட்டும், என்னை இங்கே விட்டுச்செல், நான் சற்றுத் தூங்கிவிட்டு வருகிறேன்" என்று.

ஒட்டகமோட்டி கூறினான்: "அண்ணா, மக்கா நகர் நெருங்கிவிட்டது; கொள்ளைக்காரர்கள் பின்னா லிருக்கின்றனர். நீர் உடனே வந்தால் தப்பித்தீர். இங்கே தங்கினால் மடிந்தொழிய வேண்டியதுதான்" என்று.

இதில் பாலைவனம் என்பது இவ்வுலக வாழ்வைக் குறிக்கிறது. மக்கமா நகர் மனித வாழ் வின் லக்ஷியத்தைக் குறிக்கிறது. ஒட்டகமோட்டி என்றது, அதற்கான பாதையைக் காட்டிப் பாது காப்பைத் தேடித் தரும் ஆத்மஞான வழிகாட்டி யான ஷைகைக் குறிக்கிறது. திருடர்கள் என்றது காமம், குரோதம், மரணம் ஆகியவையேயாகும். லக்ஷியத்தை நோக்கிப் பிரயாணம் செய்யும் நாட்ட முள்ளவன் (முரீது) இடையில் அயர்ச்சியடைந்தால் தீய சக்திகள் அவனை ஆட்கொண்டு, அவனுடைய லக்ஷியத்தை அடையவிடாது தடுத்துவிடும் என்று ஆத்மஞான வழிகாட்டி எச்சரிக்கிறார்.

—அரேபியாவில் ஒரு மலையில் திருடர் கூட்டம் ஒன்று ஒளிந்திருந்தது. மலையடியிலிருந்த பாதை யில் ஒட்டகப் பிரயாணிகள் செல்வதுண்டு. இந்தப் பாதையைத் திருடர் கூட்டம் அடைத்து வைத்திருந்தது. ஊரிலுள்ளோர் அக்கள்வர்களு

டைய அட்டகாசங் கண்டு பயந்து நடுங்கி வீட்டை விட்டு வெளியில் செல்லவே பயந்தனர். அரசனுடைய வீரர்களாலும் அந்தத் திருடர்களை அடக்க முடியவில்லை.

இதிலுள்ள பரிபாஷையாவது: மலை என்றது மனித இதயம். கொலைகாரர்கள் என்றது அங்கே குடிகொண்டுள்ள தீய குணங்கள். பிரயாணிகள் என்றது இதயத்திலிருந்து வெளிவரக்கூடிய ஞானம், அருள் நூற்கள் முதலியன. ஊரிலுள்ளவர்கள் என்றது நற்குணம். இழிகுணத்தின் அட்டகாசத்தால் நற்குணம் ஒடுங்குவதும், இதயத்திலிருந்து உதித்தெழும் ஞானம் தடைபடுதலும் இயற்கைதானே !

சாஅதியின் கஜல்கள் சிலவற்றிலும், 'ப்தாயி' என்ற நூலிலும் இத்தகைய ஆத்மீகக் கருத்துக்கள் பல பொதித்துத் தரப்பட்டே யிருக்கின்றன . எனினும், சாஅதியின் நூற்களிலுள்ள சிறந்த அம்சம் இதுவன்று; அறநெறி போதிப்பதுதான். எனவே, அவர் நீதி புகட்டும் மகானுகவே உலகில் புகழ் பெற்றுவிட்டார்.

## உலகச் சிந்தனையாளர்களிடையே சாஅதி

சாஅதி அறநெறி போதிக்கும் சிறந்ததொரு சிந்தனையாளர் என்ற முறையில் உலகின் பல்வேறு பாகங்களிலும், பல்வேறு காலங்களில் வாழ்ந்த சிந்தனையாளர்களோடு ஒப்பு நோக்கத்தக்கவராவார். இந்த முறையில் திருவள்ளுவரோடும், கன்ஃபூஸியஸோடும், ரோஷிபோக்கோவோடும், பேக்கனேடும் இவரனைய பிற சிந்தனையாளர்களோடும் கருத்து

விஷயத்தில் சாஅதியை ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் பரந்த ஆராய்ச்சியாகும். இவருடைய நூற்களில் தரப்படும் நீதிகள் மற்றச் சிந்தனையாளர்களால் எவ்விதம் வெளியிடப்படுகின்றன என்று கவனிப்பது தனித்ததோர் இன்பம் நல்குவதாகும்.

ஆங்கில நாட்டைச் சேர்ந்த பேக்கன் பிரபுவைவிடவும், பிரான்ஸில் வாழ்ந்த ரோஷிபோக்கோவைவிடவும், சீனுவில் வாழ்ந்த கன்ஃபூஸியஸை விடவும், நமது நாட்டுப் பெரியாரான திருவள்ளுவருக்கும் சாஅதிக்கும்தான் கருத்து ஒற்றுமை அதிகமாகக் காணப்படுகிறது. நீதி போதனை புரியும் - அறிநெறி போதிக்கும் சிந்தனையாளர்கள் தமது அனுபவத்துக்கு ஏற்பவும், தாம் வாழ்ந்த கால நிலைக்கு இசையவும்தான் தமது போதனைகளை வெளியிடுவார்கள். இங்கிலாந்தில் எலிஜபெத் அரசியின் அவையில் இடம்பெற்ற அரசியல்வாதியாக விளங்கிய பேக்கன் பிரபு, தமது காலத்தின் சூதுமிக்க, சூட்சிகள் நிறைந்த அரசியல் வாழ்வில் திளைத்தவராவார். இதனுல் அவருடைய போதனைகளிலும் அந்த வாழ்க்கை எதிரொலிக்கவே செய்கிறது. உதாரணமாக, பொய் சொல்வது தீமை என்பது நமது கொள்கையாய் இருக்கிறது. அதைச் சான்ருேர் பழிக்கும் வினையாகவே கருதுகிருேம். ஆனுல், பேக்கன் பிரபு செய்யும் நீதி போதனையில் பொய்க்கு இடம் தருகிருர். 'ஒவ்வொருவருக்கும், குறிப்பாக அரசியல்வாதிகளுக்குப் பொய் சொல்லத் தெரிந்திருக்கவேண்டும்' என்கிருர் அவர். இத்தகைய-ஆனுல், தமது சிந்தனையின் சிறந்த கனி

களை வழங்கிய - அறிஞரை சாஅதியோடு ஒப்பு நோக்க நம்மால் இயலவில்லை.

இது போன்றே ரோஷிபோக்கோவையும், கன்ஃபூஸியஸையும் சாஅதியுடன் ஒப்பு நோக்குவது கடினமான காரியம்தான். பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த தத்துவஞானி ரோஷிபோக்கோ கசப்பான வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றவர். இதனுல் அவர் வெளியிடும் போதனைகளும் கசப்பானவையாகவே இருக்கின்றன. உதாரணமாக, செய்நன்றி மறவாமையை நாம் போற்றிக் கொண்டாடுகிறோம். ஆனுல், இந்தப் பிரெஞ்சு ஞானி சொல்கிருர்: "நன்றி தெரிவிப்பது இன்னும் ஏதாவது உதவி பெறுவதற்கான சமிக்ஞை தான்" என்று. சீன ஞானி கன்ஃபூஸியஸ் இன்றும் அந்த நாட்டில் தெய்வமாக வழிபடப்படுகிருர். அங்கே ஊர்தோறும் அவருக்குக் கோயிலுண்டு. அவர் திருவள்ளுவருக்கு முந்திய காலத்தவர். அதாவது, கிறிஸ்துவுக்குச் சுமார் ஐந்நூறு ஆண்டுகள் முந்தியவர். இப்பெரியார் அக்கால அரசியலில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டிருக்கிருர்; நீதிபதியாகவும் தொழிலாற்றியிருக்கிருர். அரசனின் சர்வாதிகாரத்துக்கு மக்கள் உட்பட்டே ஆகவேண்டும் என்பது இவருடைய கொள்கையாகும். மண்மீது மானிடன் நடக்கவேண்டிய முறை எது என்று இவர் கருதினுரோ அதையன்றி, தெய்வம்பற்றியோ, மறு உலக வாழ்வுபற்றியோ இவர் போதனை புரிந்ததில்லை. பெண்களைப்பற்றியும், திருமணம் பற்றியும் அலட்சியமான மனப்பான்மையோடு இவர் பேசுகிருர்.

**வள்ளுவரும் சாஅதியும்**

நமது தமிழ் மொழியிலுள்ள சிறந்த நீதிநூல் திருக்குறள் ஆகும். அதிலுள்ள கருத்துக்கள் சில வற்றைச் சாஅதியின் 'குலிஸ்தா'னிலும் காணமுடி கிறது. சாஅதி தமது கருத்தை வெளியிடும் முறை திருவள்ளுவருடையதைப் போன்றதன்று. அவர் தமது அனுபவத்திலிருந்து ஒரு சம்பவம், அல்லது ஒரு கதையைத் தந்து, அதன் முடிவில் - சில சம யங்களில், அதன்இடையிலும் -நீதி போதனை புரிகி ருர்; இடையிடையேஅழகிய கவிதைகளையும் தருகி ருர்; திரு குர்ஆன் வாக்கியங்களையும் ஆங்காங்கே அப்படியே எடுத்துச் சேர்த்திருக்கிருர்; தமக்கு முன் வாழ்ந்த பெரியார் பலருடைய கருத்துக் களையும் சிற்சில இடங்களில் தருகிருர்.

திருவள்ளுவர் சிறிய குறள் வெண்பாக்களின் மூலம் நீதி போதனை செய்கிருர். அவருடைய குறள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப் புடையதுதான். விஷயத்தை விளக்கும் குறள்கள், நீதியை உபமானத்தோடு வெளியிடும் குறள்கள், அருமையான காட்சிகளையும் கதைகளையுமே கண்முன் நிறுத்தும் குறள்கள் - இப்படியாகப் பல திறப்பட்ட குறள் வெண்பாக்கள் திருக்குற ளில் உள்ளன. திருவள்ளுவரும் தமக்கு முந்திய கால அறிஞர்களின் - காமந்தகர், வெள்ளி போன் ருேரின் - கருத்துக்களைத் தம்முடைய நூற்களில் எடுத்தாண்டிருக்கிருர். சில குறள்களில் 'என்ப' என்று வருவது தாம் பிறர் கருத்துக்களை எடுத்தாள் வதைக் குறிக்கக் கையாண்ட பதமாய் இருக்கலாம்.

இனி, விரிவான விளக்கங்களின்றித் திருக்குறளிலுள்ள கருத்துக்களுக்கும், 'குலிஸ்தா'னிலுள்ள கருத்துக்களுக்கும் உள்ள ஒற்றுமையைப் பார்க்கலாம்:

—அரசனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் நெருப்போடு பழகுவது போல நடந்து கொள்ளவேண்டும். குளிர் காய்வதற்காக நெருப்பின் அருகில் இருப்பவர்கள், சுகமடைவதற்காக நெருப்புக்கு மிகவும் சமீபத்திலானால் அது சுட்டு விடும்; அதிகத் தூரத்தில் விலகியிருந்தாலோ நெருப்பின் கதகதப்பு மேலே படாது; குளிரின் கொடுமையிலிருந்து விமோசனம் கிடையாது. இது போலவே, அரசனோடு பழகுபவர்களும் எட்டியே இருந்துவிடாமலும், மிகுந்த நெருக்கங் காட்டாமலும் நடந்துகொள்ளவேண்டும். அதாவது,

> அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
> இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்

என்கிறார் திருவள்ளுவர்.

சாஅதி சொல்கிறார் : சிங்கத்தைப் பழக்கும் ஒருவனிடம் சிலர் வினவினர், 'ஏன் இந்தத் தொழிலை மேற்கொண்டாய்?' என்று. 'சிங்கம் உண்டதுபோக, மீதி உணவு எனக்குக் கிடைக்கிறது. மேலும், அதன் அருகேயிருக்கும் நான் என் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்படுகிறேன்' என்று அவன் பதிலளித்தான்.

'நீ அதன் பாதுகாவலில் இருப்பதாகச் சொல்கிறாயே, அதனிடம் இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பழகக் கூடாதோ?' என்று கேட்டார்கள்.

அவன் சொன்னான்: 'அதற்கு நான் இறையாகி விடக்கூடாதல்லவா, அதனால்தான் இன்னும் அதிகமாக அதை நெருங்குவதில்லை' என்று.

மசூஸிகள் நெருப்பை வணங்குகிறார்கள்;
ஆனால், அதில் விழுந்தால்
சாம்பலாக வேண்டியதுதான்.

அரசனிடம் நெருங்கிப் பழகுபவனுக்கு ஒரு தடவை பொற்கிளி கிடைக்கலாம்; ஒரு தடவை தலைக்கே ஆபத்து வரலாம. ஆகவே, மன்னரைச் சேர்ந்து ஒழுகுவோர் மன்னர் நிலையை அறிந்து விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமாகும். (குலிஸ்தான். அத்தியாயம் 1, கதை 15)

வள்ளுவர் அரசனோடு கேண்மை கொள்வதை நெருப்போடு பழகுவதற்கு ஒப்பிட்டார். சாஅதி சிங்கத்தோடு பழகுவதற்கு ஒப்பிட்டார்; கடைசியில் எப்படியோ நெருப்பு உபமானத்தையும் கொண்டுவந்துவிட்டார் !

—அரசனிடம் ஒரு விஷயத்தை விண்ணப்பித்துக்கொள்வதென்றால் அதற்குக் காலமும் நேரமும் உண்டு. மேலும், சொல்லக்கூடிய விஷயம், அரசனுக்கு வெறுப்புத் தராமல் இருக்கவேண்டும். இது சொல்லும் முறையைப் பொறுத்தது. அரசன் மகிழ்ச்சி கொண்டிருக்கும் சமயம் அதைத் தக்க விதத்தில் எடுத்துச் சொன்னால் அதற்கு நல்ல பயன் கிடைக்கலாம். அதாவது,

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்

என்றூர் வள்ளுவர். குறிப்பறிய வேண்டும்; காலமும் சரியானதுதானு என்று கவனிக்க வேண்டும் ; விஷயம் அரசனுக்கு வெறுப்பற்றதாக இருக்க வேண்டும். தனக்கு வேண்டும் இத்தகைய காரி யத்தையும் அரசன் விரும்பிக் கேட்கும் விதமாய் அவனிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

சாஅதி சொல்கிறூர் : ஓர் அரசனிடம் ஒருவர் உதவி கேட்டுவந்து நிற்கிறூர். அப்போது, அரசனே நாட்டு நிலைமையைப்பற்றித் தீவிரமாக யோசனை செய்துகொண்டிருக்கிறுன். வந்து நிற்பவருடைய நிலைமை அவனிடம் தெரிவிக்கப்பட்டது. அரசன் கோபத்தால் அவரை விரட்டச் சொல்கிறுன். அரசியல் விஷயங்களில் முழுக் கவனமும் கொண்டு ஏனையவற்றைக் கவனிக்க இயலாத நிலையிலுள்ள அரசனின் கோபத்திலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதே சாலச் சிறந்தது. தன் தேவையைத் தெரிவிக்கத்தக்க சந்தர்ப்பம் பாராத வனுக்கு அரசனின் உதவி கிடைப்பது அபூர்வம். உன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும்வரை வீண் பேச்சால் உன் லக்ஷியத்தை நாசஞ்செய்து கொள்ளாதே ! (குலிஸ்தான். அத். 1, கதை 13)

—இன்னெரு குறள் :

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அதாவது, தம்மைத் தோண்டுபவர்களையே தாங் கும் பூமியைப் போலத் தம்மை இகழ்பவர்களை

மன்னிப்பது தலையான கடமையாகும் என்கிறார் வள்ளுவர்.

சாஅதி சொல்கிறார்: நீ கஷ்டத்துக்கு உட்படுத்தப்பட்டால் சகித்துக்கொள்; மன்னிப்பளித்தால் நீ பாவத்தை விட்டும் பரிசுத்தமானவனாகிறாய். சகோதரா, இறுதியில் மண்ணாகப் போவதை உணர்ந்து இப்போதே மண்ணைப் போல் சகிப்புத்தன்மையோடிரு! (குலி. அத். 2, கதை 40)

வள்ளுவர் கூறும் பூமியின் உவமையையே சாஅதியும் இங்கே கூறியுள்ளார்!

—திருவள்ளுவருடைய உன்னதமான குறள்களில் இது ஒன்று:

> இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்து விடல்.

தீமைக்குப் பிரதியாகத் தீமை செய்யச் சொல்லுவது காட்டுமிராண்டியின் சட்டம். பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் என்பது யூதச் சட்டம். இஸ்லாமிய தர்மம் பதிலுக்குப் பதில்தான் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. ஒருவன் உன்னை அடித்தால், நீ அதற்காக அவனைப் பதிலுக்கு அடித்துவிட விரும்பினால் அவன் அடித்த அதே அளவுக்குத்தான் நீயும் அடிக்கலாம். அவனுடைய அடியைவிட உன்னுடையது பலமாக விழுந்து விடுமோ என்று நீ பயந்தால் அடியாதே! உன்னைப் பதிலுக்கு அடிக்கச் சொன்னது உன் கோபத்தை ஆற்றுவதற்காகத்தான். ஆனால், இறைவனின்

இறுதித் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் போல் உன் கோபத்தை ஒழிக்க முயல்.* சாந்தத் தோடு உன் கோபத்தைக் கரைத்துக் குடி. துன்பம் செய்தவனுக்கு நன்மை செய் - இதுதான் இஸ்லா மியச் சட்டம். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டச் சொல்லும் போதனையைவிடவும் பல படி மேலே - மிகவும் உன்னதமாக - இது நிற்கிறது. கஷ்டம் கொடுத்த வன், மேலும் கஷ்டம் கொடுக்க இடம்கொடு என்று சொல்வது போன்றிருக்கிறது மறு கன்னத் தைத் திருப்பிக் காட்டும் நீதி. ஆனால், துன்பம் செய்தவனுக்கு நன்மையை நாம் செய்தால் அவன் மனம் மாறத்தானே செய்யும்! அவன் தன் செயல் குறித்து வெட்கித் தலை குனியத்தானே செய்வான்! இதையே திருவள்ளுவரும் இந்தக் குறளில் அழகாகத் தந்துள்ளார்.

---

* இஸ்லாமிய உலகின் இரண்டாவது கலீபா ஹஜ்ரத் உமர்(ரலி) போரில் எதிரி ஒருவனைக் கீழே தள்ளி வெட்டு வதற்காக வாளை ஓங்கினார்கள். அச்சமயம் அவன் அவர்கள் முகத்தில் காறித் துப்பிவிட்டான். உடனே ஓங்கிய வாளை அவர்கள் அப்பாலாக்கிக்கொண்டு அவனை உயிரு டன் விட்டுவிட்டார்கள். அவர்கள் அவ்விதம் செய்த காரணம் யாது என்று அவன் வினவினான். அவர்கள் சொன்னார்கள்: ''நான் இறைவனுக்காகச் சண்டையிடுகி றேன். அதற்காகவே போரில் வாளை உபயோகிக்கிறேன். ஆனால், நீ என் முகத்தில் காறி உமிழ்ந்த பின் நான் உன்னை வெட்டியிருப்பேனாயின், என்மீது நீ துப்பியதற்குப் பழி வாங்க உன்னை நான் கொன்றவனாக, இறைவன் முன் குற்ற வாளியாக நிற்க நேரிடும். எனவேதான், வாளைக் கீழே தாழ்த்திவிட்டேன்.''

சாஅதி சொல்கிறார் : என் குருவிடம் சென்று என் நடத்தையைக் குறித்து ஒருவன் வீண் வதந்தியைப் பரப்பினான் எனப் புகார் செய்தேன். அந்தப் பெரியார் சொன்னார்: "நீ அவனுக்கு நன்மை செய்து அவன் வெட்கப்படும்படி செய்துவிடு" என்று. (குலி. அத். 2, கதை 23)

இதற்கு இலக்கணமாக ஒரு கதையையும் தருகிறார் சாஅதி : கலீபா ஹாரூனுர் ரஷீதின் மகன் தன் தந்தையிடம் வந்து ஒவன் தன் தாயின் பெயரைச் சொல்லித் தன்னைத் திட்டியதாகத் தெரிவித்தான். கலீபா ஹாரூன் தமது மந்திரிகளை விளித்து, அதற்கு என்ன தண்டனை விதிக்கலாம் என்று கேட்டார். ஒருவர் அவனைத் தூக்கிலிடவேண்டும் என்றார்; ஒருவர் அவன் நாவைத் துண்டிக்க வேண்டும் என்றார்; ஒருவர் அவனை நாடுகடத்த வேண்டும் என்றார். ஆனால், ஹாரூன் தமது மகனை நோக்கிக் கூறினார், "மகனே, அவனை மன்னித்து அவனுக்கு ஏதாவது உதவி செய்வதுதான் சிறந்ததாகும். உனக்கு அதில் இஷ்டமில்லையானால் நீயும் அவன் தாயைத் திட்டிவிடு! அதுவும், அவன் பேசிய அளவுக்கு அதிகமாகத் திட்டினால் குற்றம் உன்னுடையதாகவும், அவன் உன்மீது குற்றஞ் சாட்டக்கூடியதாகவும் ஆகிவிடும்" என்று. (குலி. அத். 1, கதை 34)

—'மருந்து' என்ற அதிகாரத்தின் முதல் குறளில் உணவுண்ணவேண்டிய அளவை வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார். மீதூண் விரும்புதலும், மிகக்

குறைவாய் உண்டலும் உடல் நலம் கெடுக்கும் என்கிறார்:

> மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று.

உணவு தேவைக்குச் சற்று அதிகமானாலோ, குறைந்தாலோ வாத பித்த சிலேத்தும நாடிகளில் கோளாறு ஏற்பட்டுவிடுமாம்.

சாஅதியும் இதை வற்புறுத்துகிறார்: ஓர் அறிஞர் மிதமாக உண் என்று தமது மகனுக்குப் போதனை புரிந்தார். "மிதமாக உண்டால் பசி அடங்குவதெப் படி?" என்று அவன் கேட்டான். அவர் சொன்னார்: "மகனே, மிதமாக இருக்கக் கற்றுக்கொள்! இறை வன் திரு குர்ஆனிலே சொல்கிறான், '(உணவை) உண்ணுங்கள்; (நீரைக்) குடியுங்கள்; ஆனால், மிதமிஞ்சியன்று' என்று. உணவு வாழ்க்கைக்கு இன்றியமையாததுதான். எனினும், வாழ்க்கையே நாசமாகும்படி உண்ணக்கூடாது. அதிகமாக உண்டால் அமிர்தமும் விஷமாகிவிடும். காய்ந்த ரொட்டியாயினும் சரியான வேளையில் உண்டால் அது அமிர்தந்தான்." (குலி. அத். 3, கதை 8)

இது சம்பந்தமாக நபிபெருமான் (ஸல்) அவர் களின் வாழ்க்கையில் நடந்த சம்பவமொன்றை வேறோர் இடத்தில் சாஅதி குறிப்பிடுகிறார். பாரஸீக அரசர் நபிபெருமானாரின் சமூகத்துக்குச் சிறந்த வைத்தியர் ஒருவரை அனுப்பிவைத்தார். ஆனால், அந்த வைத்தியர் மாதக் கணக்கில் அங்குத் தங்கி யிருந்தும் யாரும் நோய் என்று அவரிடம் மருந்து

கேட்க வரவில்லை. தாம் வேலையின்றி வாளாவிருக்க நேர்ந்ததுபற்றி அவர் நபிபெருமானிடம் முறையிட்டார். "எங்கள் மக்கள் பசித்தாலன்றிப்பு சிப்பதில்லை; முழுப் பசியும் அடங்குமுன் புசிப்பதை நிறுத்திவிடுவதுமுண்டு" என்று நபிபெருமான் அவர்கள் அந்த வைத்தியரிடம் தெரிவித்தார்கள். அதுதான் யாருக்கும் வியாதி வராத காரணம் என்றார் அந்த வைத்தியர். (குலி. அத். 3, கதை 4.)

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

என்றார் வள்ளுவர்.

சாஅதியின் 'போஸ்தா'னில் (அத்.9-ல்) இவ்விதம் காணப்படுகிறது: லுக்குமான் ஹக்கீம் வெகு அருமையாகச் சொன்னார், "பாவாத்மாவாகப் பல வருஷங்கள் வாழ்வதைவிடப் பிறவாமல் இருப்பது நலம். நஷ்டத்துக்கு விற்பதைவிடக் கடையைக் காலையிலேயே மூடிக்கொள்வது உத்தமம்" என்று.

—வள்ளுவர் சொல்கிறார் :

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ(டு) உயிரிடை நட்பு.

உரிய காலத்தில் முட்டைத் தோட்டைவிட்டு விலகிப் பறவை வெளியாகிவிடுவது போல, உடம்பை விட்டு உயிரும் விலகிவிடக் கூடியதாய் இருக்கிறதாம்.

சாஅதி சொல்கிறார் : உன் வாழ்க்கை ஒரு பறவை; அதன் பெயர் மூச்சு; கூண்டை விட்

டோடும் பறவை மீண்டும் கூண்டை அணு காது. (போஸ்தான். அத். 9)

[எனவே, நிலையாமையாகிய இவ்வுலக வாழ்வின் பராக்குகளில் கவனஞ் செலுத்தி வீணே காலந் தள்ளக்கூடாது, நற்செயல்கள் செய்யவேண்டும், பாவப் புழுதியைப் பச்சாதாபம் எனும் கண்ணீரால் கழுவிக் கொள்ளவேண்டும் என்று சாஅதி மேலும் கூறுவதாவது :]

அறிவோடு கழிக்கும் ஒரு கணம் மூடத்தன மாகப் போக்கும் முழு ஆயுளையும்விடச் சிறந்தது.

இப்பாலைப் பாதையில் நம் பார்வையை முற்றும் ஈடுபடுத்துவானேன்? நம் நண்பர்கள் போய்ச் சேர்ந்துபோனுர்கள்; நாமும் அந்தப் பாதையில் நடந்துகொண்டிருக்கிறோம். நமக்குப் பின் தோட் டத்தில் அதே மலர்கள் பூக்கும்.

ஷிராஜ் அடைந்ததும் நீ உன் காலிலுள்ள புழுதியைக் கழுவுவதுண்டல்லவா !

ஹே பாவப் புழுதி ஏறியவனே, விரைவில் நீ புது நகரொன்றில் புகுவாய். அழாதே, உன் கண் ணீரால் அந்தப் புழுதியைக் கழுவு!

—நேற்றிருந்தார் இன்றில்லாத இவ்வுலகின் தன்மையை,

நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை யுடைத்திவ் வுலகு

என்று வள்ளுவர் கூறுவது போலவே சாஅதியும் கூறுகிருர். சாஅதி சொல்கிருர் : "ஒருவன் தன்

நோயாளி நண்பனின் படுக்கை அருகில் இருந்து அவன் கவலைக்கிடமான நிலைகுறித்து இரவு முழுவதும் அழுகொண்டிருந்தான். மறுநாட் காலையில் அவன் இறந்துவிட்டான்; அந்த நோயாளி குணமடைந்துவிட்டான்.'' (குலி. அத். 2, கதை 16)

—இவ்வுலக வாழ்வும் அதன் செல்வங்களும் நிலையானவையல்ல என்று உணர்த்திய பின்னர், துறவு எது என்று வள்ளுவர் விளக்குவது போலவே சாஅதியும் விளக்குகிறார்.

உண்மையில் மனத் துறவு கொள்ளாமல் துறவி போல் வேஷமிட்டலைபவனைவிட அயோக்கியனே இல்லை என்கிறார் வள்ளுவர்.

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரில் வன்கணார் இல்.

ஒரு போலித் துறவியின் திருட்டுக் கதையைக் கூறும் சாஅதி சொல்கிறார்: "துறவு உடையளவில் மட்டுமன்று; அது உலகையும், ஆடம்பரத்தையும், மமதையையும் துறப்பதாகும். ஆனால், வீரனுடைய உடையை வீரன்தான் அணியவேண்டும்; கோழை அணிவதால் என்ன பயன்? போலித் துறவியைப் போல் சமூகத் துரோகி யாருமில்லை." (குலி. அத். 2, கதை 5)

—தான் செய்யும் குற்றம் தனக்கே நன்கு தெரியும். இது தவறான செயல் என்று தெரியும். இருந்தும் அதை ஒருவன் செய்கிறான். அப்படிப்பட்டவனுடைய வெளித் தோற்றமும், கம்பீரமும் எப்படி

யிருந்தால்தான் பயனென்ன? மக்கள் அவனைப் புகழ்வதால் பயனென்ன? வள்ளுவர் சொல்கிறார்:

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

வெளித் தோற்றத்துக்குக் கந்தர்வனைப் போலோ, மகானைப் போலோ இருப்பதனால் என்ன பயன்? தன் மனத்தில் தவறு என்று படும் காரியத்தை அவன் செய்தால் அந்த வெளித் தோற்றம் பயனற்றதாகிவிடும்.

சாஅதி சொல்கிறார்: சிலர் ஒரு பிரபுவின் நற்செயல்களைப் புகழ்ந்து பேசினர். அதைக் கேள்விப்பட்ட அந்தப் பிரபு தனக்குள் கூறிக்கொண்டார்: "மற்றோர்க்கு என் வெளித் தோற்றம் நல்லதாகப் படுகிறது. ஆனால், என் மன அழுக்குக் கண்டு நானே தலைகுனிகிறேன். ஜனங்கள் மயிலின் அழகிய பல வண்ணத் தோகை கண்டு அதை வியக்கின்றனர்; ஆனால், மயிலோ தன் விகாரமான கால்களைக் கண்டு தலைகுனிகிறது." (குலி. அத். 2, கதை 8)

—பகைவரை எப்படி அடக்கவேண்டும் என்பதிலும் வள்ளுவரும் சாஅதியும் கருத்து ஒற்றுமை காட்டுகின்றனர். ஆனால், இருவரும் வெவ்வேறு உபமானங்கள் கூறுகின்றனர்.

எதிரியின் பலத்தைப்பற்றி அலக்ஷியமாக எண்ணிவிடக் கூடாதாம்.

முள் மரத்தை அது முளைக்கும்போதே கிள்ளி எறிந்துவிடுவது எளியது. ஆனால், அது வளர்ந்து

பெரிய மரமான பிறகு அதைப் பிடுங்க முயன்ருல் அதிலுள்ள முட்கள் கை முழுவதும் குத்திக் கிழித்து விடும். பகையும் இது போன்றதுதான். வளர்ந்த பின் அதைத் தொலைப்பது என்பது கடினம் என்கிருர் வள்ளுவர்.

> இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து.

நெருப்பு சிறிய பொறியாக இருக்கும்போதே அதைக் காலால் மிதித்தோ, வாயால் ஊதியோ கூட அணைத்துவிடுவது எளிது. ஆனுல், அது பெரிதாக வளர்வதற்கு இடங் கொடுத்துவிட்டால் பிறகு அதை அழிப்பது கடினம்; அது நம்மை அழித்துவிடலாம். சாஅதி சொல்கிருர்: "பகை நெருப்புப் போன்றது. நெருப்பைச் சிறு பொறியாக இருக்கும்போது இலகுவாக அணைத்துவிடலாம். சிறு பொறி பெரு நெருப்பாக ஆகிவிட்டால் அது உலகையே விழுங்கிவிடலாம். இன்று நீ உன் எதிரிக்கு எதிராக விற்பிடித்துக் குறிபார்க்க முடிகிறது; அவனை மட்டும் உன்னை நோக்கிக் குறி பார்க்க விட்டுவிடாதே! (குலி. அத். 8, நீதி 12)

—வள்ளுவர் சொல்கிருர்:

> மருவுக மாசற்ருர் கேண்மையொன் (று) ஈத்தும்
> ஒருவுக ஒப்பிலார் நட்பு.

குற்றமற்ற பெரியார் நட்பினையே பெறவேண்டும்; உலகத்துக்கேற்ற நன்னடத்தை யற்றவர்களின் நட்பை அறியாது பெற்றிருந்தால், எதைக் கொடுத்தேனும் அதை விட்டுவிடவேண்டும்.

சாஅதி சொல்கிருர்: "நான் சிறுவனுக இருந்த போது என் தகப்பனுரோடு ஒரு திருவிழா பார்க்கச் சென்றிருந்தேன். கூட்டத்தில் நான் என் தகப்ப னுரைத் தவறவிட்டுவிட்டேன். நான் பயந்து அழு தேன். ஆனுல், விரைவில் அவர் என்னைக் கண்டு பிடித்துக் கோபத்தோடு என் காதைத் திருகினுர். "என் சட்டையைப் பிடித்துக்கொள் என்று எத்தனை தடவை சொல்வது?" என்று அவர் என்னைக் கடிந்துகொண்டார்.

"ஒரு குழந்தைக்குத் தனியாகப் போகத் தெரி யாது. எப்பாதையிலும் பிறர் காணுதபடி போவ தும் கடினம்.

"ஹே எளியவனே, நீ உன் முயற்சிகளில் ஒரு குழந்தையைப் போன்றிருக்கிருய். போ, நல்லோ ரின் சட்டை நுனியைப் பிடித்துக்கொள் ! கீழான வர்களோடு பழகாதே ! நல்லோர்கள் சவாரி செய் யும் குதிரைச் சேணத்தின் கயிற்றையாவது உறுதி யாகப் பற்றிக்கொள் !

"சாஅதியைப்போல் அறிவு எனும் தானிய மணிகளைப் பொறுக்குவாயானுல் ஆத்ம ஞான மென்ற பொக்கிஷத்தையே உண்டாக்கிக்கொள்ள லாம்." (போஸ்தான். அத். 9)

இல்வாழ்க்கைக்கு உகந்த மனைவியைப் போற் றும் வள்ளுவர், மனைவிக்குக் கீழ்ப்படிந்து அவள் தாசனுய் நடக்கும் கணவனை இகழப் 'பெண்வழிச்

'சேறல்' என்ற ஓர் அதிகாரத்தையே செலவிடுகிறார். மனைமாட்சியைப் பற்றிச் சொல்லும் இடத்தேயும்,

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்

என்கிறார். சரியான மனைவி மட்டும் வாய்க்காவிட்டால் வேறு எந்த நலன்களிருப்பினும் கணவன் வாழ்வு வரண்டதுதான் என்பது அவர் கருத்து.

சாஅதியோ தமது சொந்த வாழ்க்கையிலேயே மனைவியின் கொடுமையை அனுபிவித்துப் பார்த்தவர். தமது சொந்த வாழ்க்கை அனுபவத்தை எண்ணிப்பார்க்கும் அவர் சொல்கிறார்: "அமைதியாக வாழக்கூடிய ஒருவன் வீட்டில் காதகியாய் இருக்கும் மனைவிதான் அவ்வீட்டை நரகமாக்குகிறாள். இறைவா, இத்தகைய நரகின் கொடுமையிலிருந்து நீதான் எங்களைக் காப்பாற்றவேண்டும். நரகமும் சுவர்க்கமும் என் வீட்டினுள்தான் இருக்கின்றன." (குலி. அத். 2, கதை 35)

"கணவன் குரலைவிட ம்னைவியின் குரல் எடுப்பாக எடுபடும் வீட்டில் மகிழ்ச்சிக் கதவு அடைபட்டுவிட்டது என்பதை அறிந்துகொள்."

"உன் மனைவி வீணாக வெளியிடங்களுக்குச் சென்றால் நீ அவளை அடி; அல்லது நீ பெண்ணைப் போல் வீட்டினுள் அவளிடத்தில் அமர்ந்துகொண்டிரு. அன்னிய ஆடவர் முன்னிலையில் அவள் கண்கள் குருடாக இருக்கவேண்டும். உன் வீட்டைவிட்டு அவள் (தனியாக) எங்கேயாவது போவதானால் அது அவளுடைய சவக்குழிக்காகத்தான் இருக்கவேண்டும்."

இதுவரை தந்த உதாரணங்களிலிருந்து திருவள்ளுவருடைய நீதி போதனைக் கருத்துக்களும், சாஅதி மகானின் நீதிபோதனைக் கருத்துக்களும் ஒரே போக்குடையவையாய் இருப்பது கவனிக்கத் தக்கதாகும். இரண்டு பெரியார்களும், ஆயிரம் ஆண்டுகள் முன்னும் பின்னும் வாழ்ந்தவர்களாயினும், ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலுள்ளவர்களாயினும், வெவ்வேறு வகையில் நீதி போதனையை நடத்தியவர்களாயினும் அவர்களிடை இத்தகைய கருத்து ஒற்றுமை காணப்படுவதற்கு இருவருடைய பண்பாட்டின் மகத்துவம்தான் காரணம் எனலாம். அவர்களுடைய பெருமைக்கும் அதுதானே காரணமாகிறது!

**'குலிஸ்தான்' ஒரு பேரிலக்கியம்**

உன்னதமான ஓர் இலக்கிய சிருஷ்டியை, நெடுங்காலமாக ஜீவ வோட்டத்தோடு நின்று நிலவும் ஓர் உயரிய நூலை ஆங்கிலத்தில் 'கிளாஸிக்' (classic) என்பார்கள். சிந்தனையின் சிறந்த குழந்தைகளாக வெளிப்படும், காலத்தை வென்ற மகத்தான நூற்கள் இந்தக் 'கிளாஸிக்' என்ற பேரிலக்கியத்தில் தலையாய இடம் பெறுபவையாகும். சாஅதி மகானுடைய 'குலிஸ்தா'னும் இந்தப் பேரிலக்கியப் பட்டியலில் இடம் பெற்றதாகும். 'கிளாஸிக்' என்றால் என்ன என்பதை ஓர் இலக்கியப் பேராசிரியர் இவ்விதம் விளக்கியுள்ளார்: "மானிடர் உள்ளத்தை வளமுடையதாக்கி, அதன் செழிப்புக்கு வழிதேடி அதை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்வதே 'கிளாஸிக்' எனப்படும். அதில் இதுவரை யில்லாத

முறையில் சில நீதி போதனைகளாவது வெளியிடப் பட்டிருக்கவேண்டும்; அல்லது, எல்லாம் தனக்குத் தெரியும் என்று எண்ணிக்கொண்டிருப்பவன் மனத் திலும் அது நிரந்தரமானதோர் உணர்ச்சியை உண்டாக்குவதாய் இருக்கவேண்டும். அதிலுள்ள சிந்தனைகள், கருத்துக்கள் ஆகியவை ஒரு தனி நடையில் தரப்பட்டிருக்கவேண்டும். ஆனால், படிப் போர்க்கு அது பழக்கப்பட்ட நடைபோன்றே தோன்றவேண்டும்."

இந்த விளக்கத்தின்படி ஓர் இலக்கிய சிருஷ்டி 'கிளாஸிக்' எனும் பேரிலக்கிய வரிசையில் இடம்பெற வேண்டுமாயின் 1. அது மனிதன் இதயத்தை வளப்படுத்தி முன்னேறச் செய்யக் கூடியதாய் இருக்கவேண்டும். 2. அதில் நீதி போதனைகள் இருக்கவேண்டும்; அவையும் புதிய பாணியில் இருக்கவேண்டும். 3. தனக்கு எல்லாமே தெரியும் என்று நினைத்திருக்கும் ஒருவன் அதைப் படித்தாலும் அவன் மனத்தில் அதன் எதிரொலி முத்திரையைப் பதிக்கக்கூடியதாய் இருக்கவேண் டும். 4. படிப்பவர்களுக்கு அது பழக்கப்பட்ட நடை போன்றே தோன்றவேண்டும்.

இந்த நான்கு அம்சங்களும் 'குலிஸ்தா' னில் பரிபூரணமாகக் காணப்படுகின்றன. இந்நூலி லுள்ள 'குலிஸ்தான்' போதனைகளைப் பார்த்தாலே இந்த உண்மை நன்கு புலனாகும். வேறோர் ஆங்கில இலக்கியப் பேராசிரியர் சொன்னார், "கிளாஸிக் என்பது படிக்குந்தோறும், படித்ததைச் சிந்திக்குந் தோறும் புதுப்புது இன்பங்கள் நல்குவது" என்று.

இந்தப் பண்பும் 'குலிஸ்தா'னில் பூரணமாக இருக்கிறது. கேவலம், ஜீவனற்ற இந்த மொழிபெயர்ப்பில் கூட அவ்விதம் ஓரளவு இன்பம் கிடைக்கலாம். ஆனால், பாரஸீகப் பாஷையில் மிகவும் எளிய இனிய நடையில் சாஅதி மகான் எழுதியுள்ள பாணியைக் கற்க முடியுமானல் அதனுல் கிட்டும் இன்பமே தனியானதாகும்.

குலிஸ்தானே எழுதிய காரணம்

'குலிஸ்தா'னே எழுதிய காரணம் அதன் முகவுரையிலேயே விவரிக்கப்படுகிறது. சாஅதி ஷிராஜ் நகருக்கு வெளியில் ஒரு ரோஜாத் தோட்டத்தின் நடுவில் குடிசையமைத்தல்லவா வாழ்ந்திருந்தார்! அப்போது வசந்த ருதுவில் மலர்கள் பூத்துக் குலுங்கின. பூமி பச்சைப் பசேலென்று காட்சியளித்தது. திராட்சைக் கொடிகளில் பழங்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கிக்கொண்டிருந்தன. பறவைகளின் இனிய கானம் தோட்டமெங்கும் நிறைந்திருந்தது. பார்க்குமிடமெங்கும் ரோஜா மலர்கள் சிரித்துக் கொண்டிருந்தன. அப்போது சாஅதியின் நண்பர் ஒருவர் அவரைக் காணவந்தார். அவர் ரோஜா மலர்களின் வனப்பைப் புகழ்ந்தவாறு தமது கையிலிருந்த கைக்குட்டையில் மலர்களேக் கொய்து குவிக்கலானர். இதைக் கண்ட சாஅதிக்கு அற்புதமான எண்ணம் உதித்தது ; ஒரு பேரிலக்கியக் கரு உருவாகிவிட்டது!

சாஅதி தமது நண்பரை நோக்கிக் கூறினர்: "பருவகால மாறுதலால் மறையக்கூடிய இம்மலர்களே நீர் சேகரிப்பதேன்? அவை நாளே வாடி வதங்

கிப் போகும். இதுபோன்ற நிலையற்ற பொருட்களின் மீது ஆசைகொள்ள வேண்டாம்!" என்று. அது கேட்ட நண்பர், சாஅதி அவ்விதம் பேசக் காரணம் என்ன என்று வினவினர். சாஅதி சொன்னர்: "கண்ணுள்ளோர் கண்டு களிக்கவும், மனமுள்ளோர் எண்ணம் விரியவும் வகைசெய்யும் அற்புத மலர்களை என்னல் ஆக்க முடியும். அவை கால பேதங்களால் பாதிக்கப்படமாட்டா; அவற்றின் சுகந்தம் நிரந்தரமானதாய் இருக்கும்; அவை வாடவும் மாட்டா" என்று. இதைக் கேட்ட அந்த நண்பர் தமது துணியிலிருந்த புஷ்பங்களைக் கீழே போட்டு விட்டு எழுந்தார். "நீர் சொல்லியபடியே உடனே செய்யும்" என்று அவர் சாஅதியிடம் கூறினர். அன்றே சாஅதியின் 'ரோஜாவன' (குலிஸ்தான்) சிருஷ்டி ஆரம்பமாயிற்று. இரண்டு கதைகள் அன்றே எழுதப்பட்டன.

இவ்விதம் ஆரம்பமான 'ரோஜாவனம்' எட்டு அத்தியாயங்களோடு முடிவுற்றது. இவ்விதம் எட்டு அத்தியாயங்களாக முடித்த காரணம், "சுவர்க்கத்துக்கு எட்டு வாசல்கள் உண்டு. அதுபோல் இந்தப் பூங்காவுக்கும் எட்டு வாசல்கள் இருக்கட்டும் என்ற கருத்துத்தான்" எனச் சாஅதி கூறுகிறர். இதில் முதல் ஏழு அத்தியாயங்களிலும் கதைகளுடனும், வரலாறுகளுடனும், அனுபவங்களுடனும் கூடிய நூற்று எழுபத்தொரு நீதி போதனைகள் உள்ளன. எட்டாம் அத்தியாயத்தில் கதைகளோ, அனுபவ விவரங்களோ இல்லை; உவமைகளுடன்கூடிய எழுபத்திரண்டு நீதிகள் உள்ளன. இந்நூலில் ஒரு கதை, அல்லது வரலாறு

அல்லது ஓர் அனுபவம், அதன் முடிவில்-சில சமயங்களில் அதன் இடையிலும்-ஒரு நீதி என இவ் விதமாக அமைந்திருக்கிறது. இடையிடையே கவிதைகளும் வருகின்றன. திரு குர்ஆன் மேற்கோள்களும், பேரிலக்கியங்கள் சிலவற்றின் மேற்கோள்களும் நேரடியாகவே எடுத்துத் தரப்பட்டுள்ளன. இடையிடையே கவிதைகள் நுழைக்கப்பட்டிருப்பதால் சொல்லிவரும் கருத்து ஓரளவு பாதிக்கவே படுகிறது. ஆயினும், சாஅதி மகான் தமது மகா மேதையால் இந்த இடைஞ்ச லிடையிலும் தாம் சொல்ல வந்த நீதியைப் படிப்பவர்கள் உடனே புரிந்துகொள்ளும்படி செய்திருக்கிறார்.

'குலிஸ்தா'னின் பெருமையைப் பேர்ாசிரியர் கோவெலின் வார்த்தைகள் சுருக்கமாகவும், அருமையாகவும் விவரிக்கின்றன. அவர் சொல்கிறார்: "அந்த நூலை நாம் திறந்ததும் வாழ்க்கையிலும், செய்கையிலும் கால்வைத்துவிடுகிறோம்; வெறும் வேதாந்தாம் பேசிச் சச்சரவிடும் கூட்டத்தை விட்டு வெகு தூரம் அப்பால் போய்விடுகிறோம்; தெருக்களிலும், கடைவீதிகளிலும் நுழைகிறோம். இப்போது நாம் வெறும் உருப்படியற்ற, நிழல்களானவைபற்றிப் பேசவில்லை. உயிருள்ளவற்றை நேரடியாகக் காண்கிறோம்; கூட்டத்திலே இடிபடுகிறோம். சாஅதியின் நூலுக்குப் பின்னே, திடுக்கிடும் அனுபவங்களும், பிரயாணங்களும் அடங்கிய சாஅதியின் நீண்ட வாழ்க்கை நின்று கொண்டிருக்கிறது. அதனால், அந்நூல் புதுமையும், இயற்கையுமுள்ளதாக விளங்குகிறது. அந்நூலை

எழுதும் அந்தக் கிழவர், தாமே உணர்ந்த, நடித்த காட்சிகளை நினைவுபடுத்துகிறார். ஒவ்வொரு பாலை வனப் பிரயாணமும், ஒவ்வோர் இரவின் தீரமான அனுபவமும், பாலைவனத்துத் தங்குமிடங்கள் ஒவ்வொன்றிலும் கூடும் பிரயாணிகளும் அவருடைய நினைவிலிருந்து தொடர்ந்து வெளிப்பட்டுத் தம்முடைய கதையைக் கூறி மறைகின்றன. அவர் குழந்தைப் பருவம், அவருடைய அமைதியான வீடு, அவருடைய முரட்டு வாலிபம், நிம்மதியற்ற அலைச்சல் பருவம், அவர் ஓய்வெடுத்த முதுமை-யாவும் இனிய, அமைதி நிரம்பிய சிந்தனையின் அவைக்கு அழைக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் தத்தம் நினைவுக் குவியல்களைக் கொண்டுவந்து கொட்டுகின்றன. ”

‘ போஸ்தான் ’ (பழத்தோட்டம்) பத்து அத்தியாயங்களைக் கொண்டது. அதில் மொத்தம் நூற்று ஏழு கதைகளும், அனுபவங்களும், அவற்றின் நீதிகளும் அடங்கியுள்ளன. ‘குலிஸ்தா’னைப் போன்ற பாணியிலேயே எழுதப்பட்ட ‘போஸ்தான்’ அதைப் போன்ற அளவுக்கு வெற்றி பெற்றுவிடவில்லை. ஆனால், அதுவும் படிக்குந் தோறும் இன்பம் பயக்கும் அருமையான நீதி நூல்தான்; அதில் ஐயமேயில்லை.

## முடிவுரை

" தாம் கற்பவற்றில் அறிஞர்கள் குற்றங் காணுர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஜாஜ்வல்யமாக மின்னும் ஜரிகை பஞ்சுத்துணியில்தான் வைத்துத் தைக்கப்படுகிறது. இதில் உங்களுக்கு அத்தகைய ஜரிகை கிடைத்தால் பஞ்சுத் துணியைப்பற்றிக் குறை கூறவேண்டாம்! இறுதி நாளில் கருணையாளனுன இறைவன் நமது நற்செயல்களைக் கருதித் தீயவற்றுக்கும் மன்னிப்புத் தருவான் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. என் வார்த்தைகளில் தவருனவை இருந்தால் நீங்களும் அவ்விதம் மன்னிக்கவேண்டும் என்று வேண்டுகிறேன். ஆயிரத்திலொன்று உங்களுக்கு ஆறுதலளித்தாலும் பிறவற்றை நீங்கள் மன்னித்துவிடுங்கள்'' என்று பேரறிஞரும், மகானுமான இமாம் சாஅதியே தமது 'போஸ்தான்' முன்னுரையில் வேண்டிக்கொள்ளும்போது, அவர் வாழ்க்கை வரலாற்றையும், அவர் நூற்களின் முக்கிய பகுதிகளையும் தமிழில் தயாரித்த இச்சிறியவன் தனது திறமையின்மையால் இதில் செய்துள்ள குறைகளையும், பிழைகளையும் மன்னிக்கும்படி இதைவிட அதிகமாக அன்பர்களை வேண்டிக் கொள்வதற்கு வார்த்தையற்றவனுக இருக்கிறேன்.

புகழனைத்தும் இறைவனுக்கே உரியதாகும்.

# குலிஸ்தான்

# அத்தியாயம் 1

## அரசர்களைப்பற்றி

### 1

தூக்கிலிடும்படி அரசனுல் உத்தரவிடப்பட்ட அன்னிய நாட்டான் ஒருவன் தண்டனை விதித்த அரசனைத் தன் பாஷையில் திட்டினுன்.

வேறு வழியற்ற மனிதன் தன் நாவை அசைப்பதும், நாயின் முன்னுல் அகப்பட்டுக்கொண்டு தப்ப முடியாத பூனை நாயை எதிர்த்துப் பாய்வதும் இயற்கைதானே! தலையை வெட்டக் கத்தி வருகையிலே ஓடித் தப்பிக்க முடியாதென்ருல் கையானது கத்தியின் கூரிய முனையையும் பிடிக்கவே முயலும்.

அவன் என்ன கத்துகிருனென்று அரசன் கேட்டான். ஒரு மந்திரி சொன்னுன்: "எஜமானே, கோபத்தை யடக்கிப் பிறரை மன்னிப்போர்க்கே சுவர்க்கம் என்றும், கருணையாளரிடம் இறைவனும் அன்பு காட்டுவான் என்றும் அவன் சொல்கிருன்."

அரசன் அந்த அன்னியன்மீது கருணை காட்டி அவனை விடுதலை செய்துவிட்டான்.

அங்கிருந்த இன்னெரு மந்திரி சொன்னுன்: "மன்னரின் முன்னிருப்பவர்கள் பொய் சொல்வது சரியன்று; மதிப்புக்குரிய அரசரை இந்த அன்னியன் இழிவாகவே பேசினுன்."

இதைக் கூறிய மந்திரியை அரசன் கோபத்தோடு பார்த்துச் சொன்னுன்: "நீ சொன்ன உண்

மையைவிட அந்த மந்திரி சொன்ன பொய் எனக்கு மகிழ்ச்சி தருகிறது. அது நல்லெண்ணத்தோடு கூறப்பட்டது. இது கெட்ட உணர்ச்சியால் உண்டானது. சமாதானத்தை யுண்டாக்கும் பொய், பூசலை உண்டாக்கும் மெய்யைவிடச் சிறந்தது.”

தான் சொல்வதை அப்படியே கேட்கும் அரசனுக்கு மந்திரி நல்லவற்றையே எப்போதுஞ் சொல்ல வேண்டும். பரீதூன் அரசனின் அரண்மனை வாயிலில் எழுதியிருந்ததாவது: “சகோதரா, இவ்வுலகம் யார் வசத்ததுமன்று; உன்னைச் சிருஷ்டித்தவனைத் தியானிப்பதில் உன் நினைவை ஈடுபடுத்து. அவன் தான் உனக்குப் போதுமானவன். உன்னைப் போல் எத்தனையோ பேரை வளர்த்துப் பலிகொண்ட உலக அதிகாரத்தில் ஆசைகொள்ளாதே!”

## 2

ஓர் அரசரின் ஆஸ்தானத்தில் அறிவாற்றல் மிக்க இளைஞன் ஒருவனைக் கண்டேன். அவன் வாலிபனாயினும் முதிர்ந்த அனுபவ ரேகைகள் அவன் நெற்றியில் படர்ந்திருந்தன. நல்ல செல்வ நிலையின் அடையாளம் அவன் கன்னங்களில் காணப்பட்டது. அவனிடம் அரசன் மிகுந்த பற்றுதலுடையவனாய் இருந்தான்.

அரசனின் அவையிலிருந்தவர்கள் இது கண்டு அவன்மீது பொறாமை கொண்டனர். அவனைக் கொலை செய்யவும் முயற்சித்தனர்.

இதை அறிந்த அரசன் அந்த இளைஞனிடங் கேட்டான், அவர்கள் ஏன் அவனிடம் வெறுப்புக்

காட்டுகிறார்களென்று. இளைஞன் சொன்னான்: "தங்கள் நல்லாதரவால் நான் நற்காரியங்கள் பல செய்தேன். இதனால் பொதுஜனங்கள் என்னிடம் அன்பு காட்டுகிறார்கள். இது பொறாமைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. நான் ஒழிந்தால்தான் தங்களுக்கு நிம்மதி ஏற்படும் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

"நான் யார் மனமும் புண்படாமல் நடந்துகொள்ள முடியும். ஆனால், தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் பொறாமைக்காரர்களை எப்படித் திருப்திப்படுத்துவது?"

பொறாமைக்காரர்களே, உங்களுக்கு விடுதலை சாவோடுதான் வரும். பொறாமை என்பது சாவோடு அகலும் நோய். வௌவாலின் கண்கள் பகல் வெளிச்சத்தைப் பார்க்கச் சக்தியற்றதனால் சூரிய கிரணங்களை எப்படிக் குறைகூற முடியும்? அது போல் ஆயிரம் பிராணிகளின் கண்கள் கூசினும், சூரியன் பிரகாசிப்பது நின்றுவிடவா செய்யும்!

## 3

நௌஷேர்வான் என்ற அரசனின் மகன் ஹுர்மூஸ் பட்டத்துக்கு வந்ததும் தன் தந்தைக்கு மந்திரியாக இருந்தவர்களைச் சிறையிலிட்டான். அவன் ஏன் அவ்விதம் செய்யவேண்டும் என்று கேட்கப்பட்டபோது இவ்விதம் பதிலளித்தான்: "அவர்கள் சிறை தண்டனை பெறக்கூடிய குற்றம் ஏதும் செய்யவில்லைதான். ஆனால், அவர்கள் என்னைக் கண்டு அஞ்சுவதே எனக்கு உயிராபத்தைத் தரும் என்று நான் உணர்ந்தேன்."

அறிஞனே, உன்னைக் கண்டு அஞ்சுவோர்க்கு அஞ்சு! பாம்பு இடையன் காலைக் கடிப்பதற்குக் காரணம் தன் தலையை அவன் நசுக்கிவிடுவானே என்ற பயந்தான். வேறு வழியற்றுப்போனதாக அறியும் பூனை புலியின் கண்களையும் பிடுங்க முயற் சிக்கிறது.

4

தமாஸ்கஸ் நகரில் எஹ்யா (அலை) தர்காஹ் இருக்கிறது. அதில் ஓராண்டு நான் தங்கி இருந் தேன். அப்போது அநியாயக்காரன் என்று புகழ் பெற்ற அரசன் ஒருவன் அங்கே வந்து தொழுது பாவ மன்னிப்புக் கேட்டான்.

இந்தச் சமாதிக்குப் பல்லாயிரவர் வந்தனர். அவர்கள் எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தார்களோ, அவ்வளவுக்கு அவர்கள் வெளி யிட்ட கோரிக்கைகளும் பெரிதாக இருந்தன.

அந்த அரசன் என்னிடம், " நான் ஒரு பலம் பொருந்திய எதிரிக்கு அஞ்சுகிறேன்; இறைவனிடம் எனக்காக நீங்கள் பிரார்த்தனை செலுத்துங்கள்" என்று வேண்டினான்.

நான் சொன்னேன்: "உன் குடிகளிடம் இரக்கங் காட்டு. அதுதான் உனக்குள்ள பயத்தைப் போக் கும் மருந்து" என்று.

பலங்கொண்ட கையால் பஞ்சையின் கையை முறுக்குவது மிருகத்தனமும் கோழைத்தனமும் சேர்ந்ததாகும். ஏழைகளிடம் கடினச் சித்தங் காட்டுபவன் கீழே விழுந்தால் யாருங் கை கொடுக்க

மாட்டார்கள். வினையை விதைத்துவிட்டுத் தினையை யாராவது அறுக்க முடியுமா? ஹே கொடுங்கோலனே, உன் காதில் அடைத்திருக்கும் பஞ்சை எடுத்துவிட்டுப் பஞ்சையர்க்கு நீதி தா! இன்று நீ நீதி வழங்க மறுத்தால் அதற்குப் பதில் கிடைக்கும் நாள் ஒன்று இருப்பதை மறவாதே!

ஆதத்தின் மக்கள் (மானிடர் யாவரும்) ஒரே குலத்தினர். அவர்களுள் ஒருவர் காலத்தின் கோளாற்ருல் துன்பமுற்ருல் மற்றவர்கள் அனுதாபப்படுவர். மற்ரோர் துன்பங்களைக் கண் கொண்டு பாராத உன்னை யாராவது மனிதன் என்றழைத்தால் அவன் பெரும் பிழை செய்தவனுவான்.

5

"ஹே கொடுங்கோலனே, எத்தனை நாட்களுக்குத்தான் உன் ஹிம்சை செல்லும்? எந்நோக்கத்துக்கு இவ்வரசு உன்னிடம் வந்தது? மானிடரை நீ படுத்தும் கொடுமையைவிட உன் சாவு விரும்பத்தக்கது."

6

கேளிக்கையில் மூழ்கி இன்ப லாகிரி யேறிய அரசன் தன் கேளிக்கிரஹ ஜன்னல் மூலம் வெளியே நோக்கினுன். அங்கே குளிரில் நடு நடுங்கிக் கொண்டிருந்த அரை நிர்வாணப் பக்கீர் சொன்னுர்: "உன்னைப்பற்றி உனக்குக் கவலை யில்லாவிட்டாலும் எங்களைப்பற்றியாவது நீ சிறிது கவலைப்படக் கூடாதா?"

அரசன் மகிழ்ச்சியோடிருந்தான். ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய பை ஒன்றை அவருக்குக் கொடுத்தனுப்பினுன்.

சில நாட்களில் பக்கீர் மீண்டும் திரும்பினுர்– பழைய நிர்வாண நிலேயில்.

'துறவியின் கையில் பணமும், காதலன் மனத்தில் பொறுமையும், மடையின் வாயில் தண்ணீரும் தங்குவதில்லே.'

அவரைப்பற்றிய எண்ணமே இல்லாதிருந்த அரசனிடம் அவர் வந்து நிற்கும் நிலே தெரிவிக்கப் பட்டது. 'அரசியல் விஷயங்களில் மூழ்கிப் பிற வற்றைக் கவனிக்க அவகாசமற்ற அரசனின் கோபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்வது தான் அறிவுடைமையாகும்.'

தன் தேவையைத் தெரிவிக்கத் தக்க சந்தர்ப் பம் பாராதவனுக்கு அரசன் உதவி கிடைப்பது அபூர்வம். உன் அபிப்பிராயத்தை வெளியிடச் சந்தர்ப்பங் கிடைக்கும்வரை உன் நோக்கத்தை வீண் பேச்சால் நாசஞ் செய்துகொள்ளாதே !

அரசன் சொன்னுன்: "அத்தனே பணத்தையும் ஒரு நொடியில் விரயஞ்செய்த புத்தியற்ற பிச்சைக்காரனே நன்ருக அடித்து விரட்டுங்கள். 'பைத்துல் மால்' (பொக்கிஷம்) ஏழைகளின் பசியைத் தீர்க்கவே யன்றி இம்மாதிரி ஷைத்தான்கள் அள்ளி வீசுவதற்கன்று."

பகலில் தீவெட்டி பிடிப்பவன் இரவில் விளக் குக்கு எண்ணெய் இன்றித் திண்டாடவேண்டியது தான்.

அரசனுடைய மதிமந்திரி யொருவன் சொன்ஞன்: "இப்படிப்பட்டவர்களுக்குத் தினமும் ஏதாவது கொடுப்பதுதான் சரி. தாங்கள் உத்தரவிட்டது போல் கொடுக்காமல் விரட்டுவது சரிதாஞயினும் சிலர் இதைக் கருமித்தனம் என்று சொல்லுவார்கள். மேலும், ஒருவனிடம் முதலில் அன்பு காட்டிவிட்டுப் பின்பு அவன் மனம் உடையும்படி செய்வது சரியன்று."

தாராளம் எனும் கதவை நீ திறக்கக்கூடாது; திறந்தபின் மூடக்கூடாது. தாகமுள்ள பிராணி உப்பான கடல் நீர் பக்கம் போவதில்லை; சுத்தமான நீர் நிறைந்த சுனைக்குத்தான் போகும்.

7

பெரிய குடும்பப் பாரமுள்ள நண்பரொருவர் பிழைக்க வழியறியாது என்னிடம் வந்து அரசாங்கத்திலாவது ஒரு வேலை தேடித் தரும்படி கேட்டார்.

நான் சொன்னேன்: "அரசனிடம் வேலை செய்வோர்க்கு இருவித அச்சமிருக்கும்: ஒன்று, தன் வயிற்றுப்பாட்டைக் கவனிக்க வேண்டுமே என்பது; மற்றது, தன் தலையைக் காப்பாற்றவேண்டுமே என்பது.'

"வரி வசூலிப்பவன் தர்வேஷ் (துறவி) இடம் வந்து உன் வயல் தீர்வையைத் தா என்று கேளான்; உன் இரத்தத்தை ஊற்று, உன் ஹிருதய நரம்பை அறுத்துத் தா என்று கேட்கமாட்டான்."

நண்பரோ தாம் நேர்மையோடு நடப்பவரென்றும், தமக்கு எத்தீங்கும் வராது பார்த்துக்

கொள்வதாகவும் கூறினர். நான் மீண்டும் சொன்னேன்: "நீர் சொல்லுவது எனக்கு ஒரு நரியின் கதையை நினைவூட்டுகிறது. புலிகளையெல்லாம் பிடித்து அடித்துக் கொல்வதாகக் கேள்வியுற்ற நரியொன்று விழுந்து விழுந்து ஓடிற்றும். அது ஏன் ஓடவேண்டும் என்று கேட்டபோது, தன்னையும் புலிக் குட்டி என்று பிடித்து அடித்தால் யார் கேட்கப்போகிறுர்கள், தான் நரியென்று தெரிவதற்குள் தன் தொலி உரிக்கப்பட்டுவிடலாம், ஈராக்கிலிருந்து விஷம் இறக்கும் கல் வருவதற்குள் பாம்பு கடித்தவன் இறந்துபோகலாம் என்றதாம். அதுபோல் நீர் அறிவுத் திறமையுடையவராய் இருந்தாலும், ஒளிவிடங்களிலே ஒற்றர்களுண்டு; அவர்கள் உம் நேர்மையை மட்டுமின்றி நேர்விரோதமான குணங்களையும் குறித்துக்கொள்வர். எனவே, நீர் திருப்தி என்ற அரசாங்கத்தைக் கைப்பற்றி மற்ற எண்ணங்களை விட்டு விடுவதே நலம்."

கடல் பிரயாணத்தால் நன்மைகள் பல. ஆனுல், பாதுகாவல் வேண்டுமா, அது கரையில்தான் கிடைக்கும்.

இதற்குமேலும் நண்பர் பிடிவாதம் பிடிக்கவே, எனக்குத் தெரிந்த பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரிடம் சிபாரிஷ் செய்து நண்பருக்குக் கணக்கு வேலை வாங்கிக் கொடுத்தேன். நண்பரும் தம் திறமையால் படிப்படியாக மேலே வந்தார். அரசரும் அவர்மீது அன்பு வைத்தார். இது கண்டு நான் மகிழ்ச்சியுற்றேன்.

இச்சமயம் நான் ஹஜ் செய்யச் சென்றுவிட்டேன். நான் மக்காவிலிருந்து திரும்பிய சமயம் இந்த நண்பரும் என்னை எதிர்கொண்டு அழைத்தார். ஆனால், அவர் உடல் மெலிந்திருந்தது; தர்வேஷின் உடையுடுத்தியிருந்தார். அவர் சொன்னார்: "நீங்கள் சொன்னது போல் ஒரு விரோதியின் சூட்சியால் என்மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையின்றிச் சிறையிலடைக்கப்பட்டேன். எனது அத்தியந்த நண்பர்கள் என்று பாசாங்கு செய்தவர்கள்கூட எனக்காகப் பரிந்து பேச முன் வரவில்லை. சுருக்கமாகச் சொன்னால் நான் இந்த வாரம்வரை சிறை தண்டனை அனுபவித்தேன். மக்கா , சென்றவர்கள் சுகமே ஊர் திரும்பினர் என்ற சந்தோஷத்துக்காகக் கைதிகள் விடுவிக்கப் பட்டனர். அவர்களுள் நானும் ஒருவன்."

"வணிகன் பொற்குவியலோடு கரை சேர்கிறான்; இல்லையெனில், கடல் அலைகளோடு கரைக்கு ஒதுங்குகிறான். அரசாங்க வேலை கடற் பிரயாணம் போன்றதென்று அப்போதே நான் எச்சரிக்கவில்லையா?" என்றேன் நான். அதிகம் பேசி அவர் மனத்தைப் புண்படுத்தக் கூடாதென்று இத்துடன் நிறுத்திக்கொண்டேன்.

"அறிஞனின் நற்சொல் கேளாவிடின் உன் கால்கள் பிணைப்புறும் என்பதை நீ உணரவில்லையா? தேள்கடி விஷத்தின் வேதனையைச் சகிக்கச் சக்தியிருந்தா லொழிய, தேள் இருக்கும் பொந்துள் கையை விடாதே!"

8

ஓர் அரசன் தந்தை சேர்த்து வைத்திருந்த அளப்பரிய திரவியத்தை யாவருக்கும் அள்ளி வழங்கினான். அது பொருத ஆஸ்தானத்தான் ஒருவன் அவனை இடித்துரைத்தான். இப்படிப் பணத்தை விரயஞ் செய்வதைவிட மக்களிடமிருந்து பணம் வசூலிப்பது நலம் என்று அவன் புத்தி கூறினான்.

இதற்கு அரசன் பதிலிறுத்தான்: "சகல புகழுக்குமுரிய இறைவன் இச் சொத்துக்கு என்னை அதிபதியாக்கினான். அது இதை நான் செலவு செய்து பயனடைவதற்காகத்தான்; இதைக் காக்கும் காவலாளியாக இருப்பதற்கன்று."

நாற்பது பொக்கிஷங்களை நிரப்பி வைத்திருந்த காரூன் புகழின்றி அழிந்தான்; தனக்குப் பின் பெரும் புகழை விட்டுச் சென்ற நௌஷேர்வான் இன்னும் இறந்துவிடவில்லை.

9

வரி வசூலிப்பவன் ஒருவன் தன் அரசன் பொக்கிஷத்தை நிரப்பவேண்டுமென்ற பேராசையால் ஏழைகளின் குடிலையும் கொள்ளையடித்துவந்தான். ஆண்டவனைக்கூடப் பகைத்து ஒருவனைத் திருப்திப்படுத்த நினைப்பவனுக்கு எதிராக அவனையே ஆண்டவன் தூண்டிவிடுவான் என்ற பெரியோர் வாக்கைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை.

நெருப்பு எரிவதில் சலசப்புக் கேட்பது பூவரசம் இலைகள் எரிவதால் அன்று; துன்புற்றோர் விசன மூச்சுத்தான் நெருப்பில் சலசலக்கிறது.

மிருகங்களில் சிறந்தது சிங்கம்; தாழ்ந்தது கழுதை. எனினும், பொதி சுமக்கும் கழுதை மனிதனைத் தின்னும் சிங்கத்தைவிடச் சிறந்தது. அறிவற்றதாயினும், பொதி சுமக்கும் கழுதை மதிப்புக்குரியது. சுமை சுமக்கும் எருதும், கழுதையும் பிறர்க்குத் துன்பந் தரும் மனிதனைவிடச் சிறந்தவைகளாகும்.

அவன் கொடுமையைக் கேள்வியுற்ற அரசன் அவனைச் சித்திரவதை செய்து கொல்லும்படி உத்தரவிட்டான்.

பிரஜைகளின் நல்லெண்ணத்தைப் பெற்ருலொழிய அரசனின் அன்புக்குப் பாத்திரமாக முடியாது. ஆண்டவன் கருணைக்கு ஆளாக விரும்பினுல் அவன் சிருஷ்டிகளிடம் கருணை காட்டு. அந்த அதிகாரி தூக்கிலிடப்படுவதற்குச் சற்று முன்பு அவனுடைய கொடுமைக்கு ஆளான ஒருவன் சொன்னுன்: "உயரிய பதவியிலுள்ளோம் என்று மக்கள் பொருளைச் சூரையாட முயல்வது நல்லதன்று எலும்புத் துண்டைத் தொண்டைக்குக் கீழே போகும்படி செய்துவிடலாம்; ஆனுல், குடலில் அது குத்தும்போது வயிற்றையே கிழித்துவிடும்."

10

உம்ரு லயித்து என்ற அரசனுடைய அடிமைகளுள் ஒருவன் ஓடிவிட்டான். சிலர் சென்று அவனைப் பிடித்துவந்தனர். அந்த அடிமையை வெறுத்த அரசனின் மந்திரியொருவன், மற்ற அடிமைகளுக்குப் படிப்பினையாக இருக்கும் பொருட்டு அவனைத் தூக்கிலிட்டுவிட வேண்டுமென்று அரசனி

டம் கேட்டுக்கொண்டான். அவ்வடிமை உம்ருலயித்துவின் காலில் விழுந்து சொன்னுன்: "தங்கள் உத்தரவுக்கு அடிபணியவேண்டியவன் நான். இருப்பினும், தங்கள் உணவை உண்டு வளர்ந்தவனுதலால், இறுதிநாளில் இறைவன் முன் என் ஆத்மா தாங்கள் என்னைக் கொன்றதற்குக் காரணங் கேட்டு நிற்கக் கூடாதே என்றுதான் அஞ்சுகிறேன். அவ்விதம் தாங்கள் என்னைக் கொல்வதானுல் இறுதிநாளில் அந்தப் பாவத்துக்குத் தாங்கள் ஆளாகாத வகையில் கொல்வது நலம்."

"அது எப்படி?" என்று கேட்டான் அரசன்.

அடிமை சொன்னுன்: "இந்த மந்திரியை நான் கொல்வதற்கு மட்டும் என்னை முதலில் அனுமதியுங்கள். பிறகு அந்தக் கொலைக் குற்றத்துக்காக என்னைத் தூக்கிலிடுங்கள். அப்படியானுல் நீங்களும் கொலைக் குற்றத்திலிருந்து தப்பி, நீதி வழங்கியவர்களாகிவிடுவீர்கள்." இது கேட்ட அரசன் மந்திரியைப் பார்த்தான். மந்திரி சொன்னுன் : "பேரரசே, ஆண்டவனுக்காக இந்த முரட்டுப் பயலை விடுதலை செய்துவிடுங்கள். இல்லையெனில் என்னையும் வருத்தத்தில் அழும்படி செய்துவிடுவான். குற்றம் என்னுடையதுதான். துஷ்டனுேடு வாதாடுகையில் உனக்குத் திறமை காணுது என்பதை நீ உணர்கிருய் என்ற பெரியோர் வாக்கை நான் மறந்துவிட்டேன்."

11

ஒரு கொடியவன் ஏழைகளிடம் குறைந்த விலைக்கு விறகு வாங்கி அதை அதிக விலைக்கு விற்றுப் பணக்காரனுனுன். ஒரு துறவி அவனிடஞ்

சென்று சொன்னூர்: "நீ காண்பவர்களைக் கடிக்கும் நாகம்; வசிக்கும் வீட்டைப் பாழாக்கும் ஆந்தை.— எம்மிடையே உன் அநீதி தண்டிக்கப்படாவிட்டா லும், எல்லாம் அறிந்த அல்லா(ஹ்)விடமிருந்து நீ தப்பமுடியாது. பூவுலக மக்களிடம் அனியாயமாய் நடந்தால் அவர்கள் புகார் வான் நோக்கி எழும்.''

இதைக் கேட்ட அக்கொடியோன் அவரை ஏசிப்பேசி விரட்டிவிட்டான். ஒரு நாள் இரவு அவன் வீட்டின் சமையலறை அடுப்பிலுள்ள நெருப்பு மற்ற விறகில் பிடித்து அவன் சொத்து முழுமையையும் உண்டு, கொடுமை என்னும் மஞ்சத்தினின்றும் அவனை நரக நெருப்பு என்ற படுக்கையில் தூக்கி எறிந்துவிட்டது. அத்துறவி அப்போது அவன் முன்னூல் தோன்றினூர். அப் போது அவன் தன் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தான்: "என் வீட்டில் எப்படித் தீப் பிடித்தது என்பதையே புரிந்துகொள்ள முடிய வில்லையே'' என்று.

அதைக் கேட்ட பழைய துறவி சொன்னூர்: "ஏழைகளின் நெஞ்சத்திருந்தெழுந்த நெருப்பினூல் தானப்பா!'' என்று.

புண்பட்ட நெஞ்சத்தின் புகையிலிருந்து உன் னைக் காப்பாற்றிக்கொள்! ஏனென்றூல், ஒரு விசன மூச்சு உலகுக்கே நெருப்பு வைத்துவிடலாம்.

ஏ செல்வனே, உன் ஏழை அண்டை வீட்டா னின் குடிசை அடுப்பில் நெருப்பு இருப்பதாகத் தீர் மானிக்காதே! அவன் குடிசையிலிருந்தெழும் புகை அவன் இதயத்திருந்தெழும் விசன மூச்சுத்தான்.

கைகோஸ்ரூவின் கிரீடத்தில் இது எழுதப்பட்டிருந்தது : "எத்தனை ஆண்டுகளாக, எத்தனை தலைமுறைகளாக என் தலையின்மீது மனித வர்க்கம் நடந்துசெல்கிறது! கைவிட்டுக் கைமாறி அரசு உன்னிடம் வந்தது போல் மற்றோர் கைகளிலும் அது மாறிக்கொண்டே போகும்."

12

அரசன் மக்கள் நன்மைக்காகவேயன்றி, மக்கள் அரசன் பிரஜைகளாக மட்டும் இருப்பதற்கல்ல. அரசன் ஆட்டிடையன் போன்றவன். ஆடுகள் இடையன் சேவைக்காகவன்று; இடையன்தான் ஆடுகளைப் பராமரிக்க நியமிக்கப்பட்டிருக்கிறான். இன்று ஒருவன் செல்வத்தால் அகம்பாவங்கொண்டும், மற்றொருவன் கஷ்டத்தால் மனம் வருந்தியும் இருக்கலாம். கொஞ்ச நாள் பொறுத்துப் பார்த்தால் அகம்பாவங்கொண்ட தலையை மண் உண்டுவிடும். அந்தி நேரத்தில் பிரபு-பிச்சைக்காரன் என்ற வேற்றுமை மறைந்துவிடும்.

13

மந்திரி அரசனுக்குப் பயப்படுவது போல் அல்லா(ஹ்)வுக்கே பயந்தானானால் அவன் சுவர்க்கத்திலல்லவா இடம்பெறுவான்!

14

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் வம்சத்தான் என்று சொல்லிக்கொண்ட வேஷக்காரனொருவன் ஹிஜாஸிலிருந்து வந்த ஒட்டகப் படையோடு ஒரு

Q7:458ய£75
N56
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 104405



நகரினுள் நுழைந்தான். அவன், "நான் மக்காவி லிருந்து வரும் ஹாஜி" என்று கூறினுன். அரசனிடம் ஒரு சரமகவியை அளித்து, "இது நான் இயற்றியது" என்றுன். அரசன் அவனுக்கு நன்ருக உபசாரம் செய்யும்படி உத்தரவிட்டான். அரச சபையிலிருந்த ஒருவர் அப்போதுதான் கப்பல் பிரயாணஞ் செய்து விட்டுத் திரும்பி யிருந்தார். அவர் சொன்ஞர் : "பஸ்ராவில் இவ்வருஷம் 'குர்பானி'ப் பெருநாள் நடக்கும்போது நான் அங்கிருந்தேன். இவனையும் அங்கே கண்டேன். அப்படி இருக்கும்போது இவன் எப்படி ஹாஜியாய் இருக்கமுடியும்?"

மற்ருெருவர் சொன்ஞர் : "இப்போதுதான் நினைவு வருகிறது. இவன் தகப்பஞர் மால்டாத் தீவிலே ஒரு கிறிஸ்துவராக இருந்தார். அப்படி இருக்கும்போது இவன் எப்படி அலீ (ரலி) அவர் களின் வமிசத்தவனுக இருக்க முடியும் ?"

அவன் தான் எழுதியது என்று கூறிய சரமகவி அன்வரி என்ற புலவருடையது என்பதும் கண்டு பிடிக்கப்பட்டது.

அரசன் அவனை நன்ருக அடித்து விரட்டும்படி கட்டளையிட்டான். அப்போது அவன் சொன்னுன் : "அரசே, இன்னும் ஒன்றே ஒன்று மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். பின்பு எத்தகைய தண்டனை வேண்டுமானுலும் எனக்களியுங்கள். தங்களுக்கு மோர் கொண்டுவரும் இடைச்சி அதில் ஒரு பங்கு மோரும் இரண்டு பங்கு தண்ணீரும் சேர்த்திருப் பாள். தங்கள் அடிமை இதைக் கூறுவதற்கு மன்னித்தருள வேண்டும். பிரயாணிகள் எப்போதும் மிக அதிசயமான விஷயங்களையே பேசுவார்கள்."

இது கேட்ட அரசன், "உன் வாழ்க்கையி லேயே இது ஒன்றுதான் உண்மை சொன்னுய்'' என்று கூறி அவனுக்கு வேண்டுவன கொடுத்து அனுப்பிவைத்தான்.

15

ஒரு மந்திரி ஏழைகளிடம் இறக்கங் காட்டி யாவருக்கும் நன்மை செய்துவந்தான். அவனை அரசனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவனைச் சிறையிலடைத்துவிட்டான். யாவரும் அவன் விடுதலைக்காகப் பாடுபட்டனர்; அவனுடைய நற் குணங்களைப் பறைய்றைந்தனர். அது கேட்ட அரசனே அவனை விடுதலை செய்தான்.

இது கண்ட ஒரு பெரியவர் சொன்னுர்: "நண் பர்களின் நல்லெண்ணத்தைப் பெற நமது உயிருக்கு யிரான பொருளையும் விற்றுவிடலாம். நமக்கு நன்மை விரும்புவோர் வீட்டுப் பானையைக் கொதிக்க வைக்க நம் வீட்டுத் தட்டு முட்டுச் சாமான்களையே விறகாக உபயோகிக்கலாம். தீயவர்களுக்குக்கூட நன்மையே செய்யவேண்டும்; நாயின் வாயை ரொட்டித் துண்டால் அடைப்பது போன்றது அது.''

16

எகிப்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். ஒருவன் அரசாங்கச் சேவகம் செய்தான்; மற்றவன் தன் உடலுழைப்பால் வயிறு வளர்த்துவந் தான். ஒரு சமயம் அரசாங்க உத்தியோகம் பார்த்து வந்த சகோதரன் தன் தம்பியிடம் சொன்னுன்: "நீயும் ஏன் என்னைப் போல் அரசனிடம் தொண்டு

செய்து உன் கஷ்டங்களைப் போக்கிக்கொள்ளக் கூடாது ?'' என்று.

தம்பி பதிலுக்குக் கேட்டான் : "நீயும் ஏன் கண்ணியமான தொழில் செய்து, இந்த அடிமைத் தொழிலின் இழிவை விட்டொழிக்கக் கூடாது?"

ஞானிகளின் அறவுரை இது: தொலிக் கோதுமை உணவை உண்டு விவசாயஞ் செய்வது, பொற்கத்தி இடுப்பில் தரித்துச் சேவகஞ் செய்து நிற்பதைவிடச் சிறந்தது. அரசனுக்கு அடிபணிந்து கை கட்டி நிற்பதைவிடக் கையைச் சுண்ணும்பு குழைக்க உபயோகிப்பது நலம்.

எனது விலை மதிக்கொணு வாழ் நாள் சரத் காலத்தே என்ன உண்பது, கூதிர் காலத்தே எதை அணிவது என்பதை யோசிப்பதிலேயே விரயமாகி விட்டது. ஏ ஈன வயிறே, உன் முதுகை அடிமை வேலையில் இரு மடங்கு வளைத்துக் கொடுக்காமலிருப்பதற்காக, ஒரு துண்டு ரொட்டியோடு திருப்தி யடை !

## 17

நீதிவான் நௌஷேர்வானிடம் ஒருவர் வந்து, "தங்களுக்கு விரோதியாக இருந்த ஒருவனைச் சர்வ புகழுக்குமுரிய இறைவன் இவ்வுலகை விட்டு அகற்றிவிட்டதாகக் கேள்வியுற்றேன்" என்று தெரிவித்தார். அரசன் சொன்னுன் : " ஒரு விரோதியின்மரணத்தில் நான் மகிழ்ச்சி யடைவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், என் வாழ்வும் நிரந்தர மானதன்று.''

## 18

எகிப்து தேசம், கலீபா ஹாரூனுர் ரஷீதின் ஆட்சியின் கீழ் வந்த காலம் அது. அடிநாளில் பிர்ஔனன் என்ற கொடியோன் தானே கடவுள் என்று மமதை கொண்டு அதை ஆட்சி செய்தபடியால், அந்நாட்டுக்கு அதிபனுகும் எவனுக்கும் அந்த மமதை ஏற்பட்டுவிடும் என்று பொதுவாக ஒரு பயமிருந்துவந்தது. அதை நீக்குவதற்காக ஒன்றுக்கும் உதவாத ஓர் அடிமையைக் கொண்டு கூட எகிப்து தேசத்தை ஆட்சி செய்ய முடியும் என்று கலீபா ஹாரூன் காட்ட எண்ணினுர். உடனே அவர் கோசாயிப் என்ற முழு மூடனுன நீக்ரோவனை எகிப்து அரசனுக நியமித்துவிட்டார்.

அவன் திறமை எப்படிப்பட்டது என்பதற்கு ஒரே ஓர் உதாரணம் மட்டும் தரலாம்:

நீல நதிப் பாசனத்தில் பருத்தி விதைத்த விவசாயிகள் சிலர் மழையின்மையால் அது பயிராகவில்லை என்று அரசனிடம் வந்து முறையிட்டனர்.

அரசன் சொன்னுன்: "நீங்கள் மயிர் விதைத்திருக்கவேண்டும். அதற்குத் தண்ணீர் அவசியமிருந்திருக்காதல்லவா ! (பருத்தியைப் போல் தண்ணீர் தேவைப்படுவதை ஏன் விதைத்தீர்கள் ? )"

இதைக் கேள்வியுற்ற ஒரு ஞானி சொன்னுர்: நம் அறிவுக்கேற்ப நமக்கு ஊதியம் கிடைப்பதானுல் முட்டாளுக்கு எதுவுமே கிடைக்க முடியாது. ஆனுல், அதிர்ஷ்டம் அறிவாளிகளெல்லாம் வியக்

கும்படி அறிவிலி கையில்தான் செல்வத்தைக் கொட்டுகிறது. அதிகாரமும் அதிர்ஷ்டமும் அறிவைப் பொறுத்தவையல்ல. ஆண்டவன் உதவியாலேயே இவை கிடைக்கின்றன. உலகில் படிப்பற்றவன் கௌரவிக்கப்படுவதும், கல்விமான் அலக்ஷியஞ் செய்யப்படுவதும் சகஜமாகக் காணக்கூடியவை. பாழடைந்த மடத்தில் படுக்கப்போன சோம்பேறிக்குப் பெரும் புதையல் கிடைக்கிறது; வாழ்நாள் முழுவதும் ரஸவாதத்தில் கழிக்கும் ரஸாயனி ஏமாற்றமடைகிருன்.

## 19

ஓர் அரசன் சீனதேச அழகி யொருத்தியைக் கொண்டுவந்து வைத்திருந்தான். அவள் மீது அவனுக்கு அடங்காக் காதலுண்டாகி அவளோடு இன்பமனுவிக்க நெருங்கிஞன். அவள் மறுதளித்து விட்டாள். தன்ஞல் இயன்றவரை அவளைச் சரிப்படுத்த முயன்றும் முடியவில்லை. பலவந்தமாகக் கூடுவது மிருகத்தின் செயல், அதில் சுகமில்லை என்று அவன் நிர்ப்பந்திக்கவில்லை. ஒரு நாள் மிதமிஞ்சிய வெறியும் கோபமும் தலைக்கேறிய அவன் அவளை நீக்ரோ ஒருவனைக்கொண்டு கற்பழிக்கும்படி உத்தரவிட்டான்.

அந்த நீக்ரோவனின் மேலுதடு மூக்குவரை உயர்ந்திருந்தது. கீழுதடு தாடைக்குக் கீழ் தொங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய பயங்கர உருவங் கண்டு, 'சகீர்' என்ற வேதாளங்கூட ஓடியொளியும். அவனுடைய கட்கங்களிலிருந்து துர்க்கந்தம் வீசும் வியர்வை நீர் ஓடிக்கொண்டிருந்தது.

அழகின் சிகரம் யூசுப் (அலைஹி) அவர்களிட மிருந்ததென்ருல், விகாரத்தின் சிகரம் அவனிடம் இருந்தது என்று சொல்லலாம். அவனுடைய குரூ ரத் தோற்றத்தை வருணிக்க வார்த்தைகள் காணு. அவன் கட்கட்திலிருந்து வடியும் துர்நீர் நாற்றம் படாமல் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். அது வெயிலில் செத்துலரும் அழுகிப் போன பிரேத நாற்றம் போன்றது.

நீக்ரோவனின் காமம் கிளர்ந்தெழுந்தது. அக் கட்டழகியை அவன் கற்பழித்துவிட்டான்.

மறுநாட் காலையில் அரசன் அவளைத் தேடி ஞன்; காணவில்லை. இரவு நடந்ததைச் சிலர் அவனிடம் தெரிவித்தனர். அந்த லஜ்ஜையால் அவள் ஓடிப்போய்த் தலைமறைவாக இருக்கிருள் என்றும் அறிவித்தனர். அரசனின் கோபம் கரை புரண்டது. அவளையும், அந்த நீக்ரோவனையும் ஒன்ருகச் சேர்த்துக் கட்டி மாடியிலிருந்து கீழே அகழினுள் தள்ளிவிடும்படி அவன் உத்தரவிட்டான்.

ஒரு மந்திரி மெதுவாகக் குறுக்கிட்டுச் சொன் ஞன் : ''தங்கள் இஷ்டம்போல் இவ்வுலகம் நடை பெறட்டும். ஆட்சியும் செல்வமும் தங்கள் சித்தம் போல் வளையவரட்டும். ஆனுல், இச்சமயத்தில் நீக்ரோவன் ஒரு குற்றமும் அறியான். தங்கள் அவையிலுள்ளோர்களெல்லாம் தாங்கள் தாராள மாகத் தருவதைப் பெற்று அனுபவிக்கிருர்கள். அதுபோல அவனும்...''

அரசன் சொன்ஞன் : "ஓர் இரவு மட்டும் அவன் தன் மிருக இச்சைக்கு இடங்கொடாமல்

இருந்திருந்தால் அவனுக்கு என்ன நஷ்டம் உண்டாகிவிடும்! அவளுக்குப் பதிலாக அவனுக்கேற்ற ஒருத்தியை நான் கொடுத்திருக்க மாட்டேனு?"

மந்திரி பதில் சொன்னுன்: "அரச சிங்கமே, அறிஞர்கள் மூதுரை தாங்கள் அறியாததா? தாகத்தால் கஷ்டமுறும் ஒருவன் தெளிந்த நீருள்ள தடாகத்தைக் கண்டால் அருகில் காட்டு யானை நிற்குமே என்றுகூட எண்ணுமல் அங்குச் சென்று நீர் அருந்துவான். பசி வாட்டும் பாசாங்குக்காரன் தான் மட்டும் இருக்கும் வீட்டில் அருஞ்சுவை உண்டி நிறைந்திருப்பதைக் கண்டால், நோன்பு பிடிக்கும் ரமலான் மாதம் என்பதைக்கூட எண்ணிப்பார்க்க மாட்டான்."

இதைக் கேட்ட அரசன் கோபந் தணிந்து அந்த நீக்ரோவனை மந்திரிக்கே கொடுத்துவிட்டான். "அவ்வழகியை என்ன செய்ய?" என்று அவன் வினவினுன்.

மந்திரி: "அவளையும் அந்த நீக்ரோவனுக்கே கொடுத்துவிடுங்கள். ஏனெனில், நாய் நக்கிய எச்சிலையை நாயே தின்னட்டும்"

சந்தேகாஸ்பதமான இடங்களில் சுற்றி வருபவளை ஒருபோதும் உன் காதலியாக ஏற்றுக்கொள்ளாதே! நாற்றமடித்த தண்ணீரையே குடித்துப் பழகப்பட்ட நாவுக்குச் சுத்த ஜலம் ருசி தராது. இப்போது கிச்சிலிப் பழம் சேற்றில் விழுந்துவிட்டது. இனி அது அரசன் கைக்குப் போக லாயக்கற்றுவிட்டது. நாற்றமுள்ள வாய்பட்ட கோப்பையைப் பரிசுத்தமான மனம் விரும்பமுடியுமா?

அழகியை அரசன் அந்த நீக்ரோவனுக்கே கொடுத்துவிட்டான்.

## 20

சிக்கந்தர் என்ற மஹா அலக்ஸாந்தரிடம் கேட்டார்கள்: 'உனக்கு முந்திய அரசர்கள் வயதிலும்,செல்வத்திலும், படை பலத்திலும் வல்லவர்களாக விருந்தும், அவர்களெல்லோரும் இலகுவில் பெருத வெற்றிகளை நீ எப்படிப் பெற்ருய்? கிழக்கேயும் மேற்கேயுமுள்ள பூமிகளை நீ எப்படிக் கைப்பற்றினுய்?'

அவன் சொன்னுன்: ஆண்டவனருளால் நான் எந்த நாட்டை வென்ருலும், அந்நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்தியதில்லை. அந்நாட்டு 'அரசர்களின் பெயர்களைப் பெருமைப்படுத்தினேனேயன்றிச் சிறுமைப்படுத்தவில்லை.

பலமும் மகத்துவமும் பொருந்தியவனை அவமதித்துப் பேசுவோனை அறிவுடையார் மதியார். ஆட்சி பீடமும், நாடும், அதிகாரமும், வெற்றியும், வீரமும் பிறவும் கிட்டிய பின் வெறும் படாடோபமானவையாக ஆகிவிடுகின்றன. உன் நற்பெயர் உனக்குப் பின் உன் ஞாபகார்த்தமாக விளங்க வேண்டுமானுல், உனக்கு முன்னிருந்தோர் புகழை அவமதிக்காதே!

அத்தியாம் 2

# துறவிகளைப்பற்றி

## 21

வணக்கவாளிகள் தமது பிரார்த்தனைக்குப் பயனையும், வியாபாரிகள் தமது முதலுக்கு லாபத்தையும் தேடுகின்றனர். இறைவா, உன் அடிமையான நான் பணிவையன்று; நம்பிக்கையைக் கொண்டுவந்திருக்கிறேன். பிச்சைக்காரனாகவேயன்றி லாபந் தேடுபவனாக நான் வரவில்லை. என் தகுதிக்கு எது வெகுமதியோ அது போதாது; உன் தகுதிக்கு எதைத் தரலாமோ அதைக் கொடுத்தருள்!

இதோ என் தலையை உன் பாதத்தடியில் சமர்ப்பித்துவிட்டேன். நீ சிக்ஷித்தாலும் சரி, ரக்ஷித்தாலும் சரி. உன் அடியானுக்குச் சொந்தமான கருத்தொன்றும் இல்லை; நீ எதைச் செய்யச் சொல்கிறாயோ அதைச் செய்கிறேன்.

கஃபா வாசலில் அழுதுகொண்டும், தொழுதுகொண்டு மிருந்த ஒருவரைக் கண்டேன். “ நான் என் பணிவை ஏற்றுக்கொள் என்று கேட்கவில்லை; என் பாவங்களை உன் மன்னிப்பு என்ற பேனாவால் அடித்துவிடு என்றுதான் கேட்கிறேன் ” என்று அவர் பிரார்த்தித்தார்.

## 22

ஒரு துறவியின் வீட்டில் திருடன் ஒருவன் நுழைந்தான். அவன் வீடு முழுவதும் தேடினான். திருடுவதற்கு ஒன்றும் அகப்படவில்லை. அவனு

டைய ஏமாற்றத்தைக் கண்ட அந்தத் துறவி தான் போர்த்திருந்த கம்பளியை எடுத்து அத்திருடன் வந்த வழியில் போட்டார்.

ஆண்டவனளவில் ஈடுபட்டவர்கள் தம் எதிரியின் உள்ளத்தையும் புண்படுத்தமாட்டார் கள். உன் நண்பர்களுடனேயே சண்டையும் சச்சரவு மிடும் நீ எப்படித்தான் அந்த நிலையை அடையப் போகிருயோ ?

நீ இல்லாத இடத்தே உன்னைப் புறங்கூறுவதும், உன் முன்னர் உன்னைப் புகழ்ந்து பேசுவதும் நேர் மையானேரின் குணமன்று.

நேருக்கு நேர் பசுப் போலும், உன் மறைவில் நாய் போலும் இருப்போரை நம்பாதே ! உன்னிடம் மற்ருேரை இகழ்பவர், மற்ருேரிடம் உன்னையும் இகழ்ந்து பேசுவர்.

## 23

உன் நற்குணங்களை உள்ளங்கையில் வைத்துக் காட்டுகிருய் ; உன் தீய குணங்களையோ கட்கத்தில் மறைத்து வைத்துக்கொள்கிருய். ஹே நயவஞ்சகா, இச் செல்லாத காசைக் கொண்டு நியாயத்தீர்ப்பு நாளில் நீ எதைத்தான் வாங்கமுடியும் ?

## 24

தற்புகழ்ச்சிக்காரன் எப்போதும் தன்னைத் தானே புகழ்ந்துகொள்வான்; வெறும் புகழ்ச்சி என்ற திரையைத் தன்னைச் சுற்றிலும் தொங்கவிடு வான். ஆனல், யாவரையும் உண்மையாய்க் காணும் கண் மட்டும் பெற்றுவிட்டால் யாரும்

தன்னைவிடப் பலமற்றவரில்லை என்ற பேருண் மையை அவன் உணர்ந்துகொள்வான்.

## 25

லெபனுன் மலையில் ஸாலிஹீன் என்ற அற்பு தம் நிகழ்த்தும் ஒருவர் வசித்தார். அவருடைய புகழ் அரபு நாடு முழுவதும் பரவியிருந்தது. அவர் ஒரு தடவை தமாஸ்கஸ் நகரிலுள்ள பள்ளிவாச லுக்கு வந்தார். தொழுகைக்காக அவர் அங்குள்ள ஹௌஸில் (பெரிய நீர்த் தொட்டியில்) 'ஒலு' (கை, கால், முகம் கழுவுதல்) செய்துகொண்டிருக்கும் போது, கால் வழுக்கி அதனுள் விழுந்துவிட்டார். மிகுந்த கஷ்டத்தோடு அதைவிட்டு வெளிவந்தார். தொழுகை முடிந்த பின் அவரிடம் ஒருவர் வந்து, "எனக்கு ஒரு சந்தேகமுண்டு; தயவுசெய்து அதை நீக்கவேண்டும்" என்று கேட்டார். ஸாலி ஹீன் அதென்ன என்று கேட்கவே அவர் சொன் னுர்: "தாங்கள் கால் நனையாது சமுத்திர நீர் மேல் நடந்ததாக வெல்லாம் நான் கேள்விப்பட்டுள் ளேனே; அப்படியிருக்கக் கழுத்தளவுகூட ஆழ மில்லாத இந்த ஹௌஸில் ஏன் இப்படி விழுந்து தத்தளித்தீர்கள் ?"

பெரியார் தலைகுனிந்து சிரித்தார். சற்று நேரத் துக்குப்பின் சொன்னுர்: "நமது நபிகள் நாதர் முஹம் மது முஸ்தபா (ஸல்) அவர்களின் வாக்கொன்றை நீர் கேள்விப்பட்டதில்லையா ? அதாவது, "நான் அல்லா(ஹ்)வோடு இருக்கும் நேரமும் உண்டு; அப்போது அவன் யாரிடமுங் காட்டாத அன்பை என்னிடங் காட்டுவான். ஆனல், இது எப்போது

மன்று" என்று. அவர்கள் சில சமயங்களில் ஜிப்ரீல், மீக்காயீல் (அலைஹி) ஆகிய வானவர்களோடு சம்பாஷிப்பார்கள்; சில வேளைகளில் தம் பிராட்டியாரோடும் சம்பாஷிப்பார்கள். பெரியார்கள் காணும் அதிசயங்கள் ஒரு கண ஒளியால் ஏற்படுபவை. அவர்களுக்கு அவன் வழிகாட்டிப் பின் திகைக்க வைக்கிறான்."

ஹே அழகி, நீ உன் முகத்தைத் திறந்து கொண்டு கற்பைப்பற்றிப் போதிக்கிறாய்; பின் விலையாகும் சந்தையில் வந்து நின்று என் உணர்ச்சித் தீயை எழுப்பிவிடுகிறாய் ?

தடையென்ற திரையின்றி என் உள்ளம் பார்க்க விரும்பும் ஒருத்தியை (இறைவனை) நான் கண்டேன். ஆகவே, நான் வழியிழந்தவன் போல் நிற்கிறேன். அவள் நெருப்பை எழுப்பிவிட்டுப் பின் அதில் நீரை விட்டு அணைக்கிறாள். ஆகவே, நீ என்னை ஒரு கணம் நெருப்பாகவும், பின் நீரில் மூழ்கியவனாகவும் காண்கிறாய்.

ஒருவர் இறைவனுடைய தூதர்களுள் ஒருவரான யாகூப் (அலைஹி) அவர்களிடம் கேட்டார்: "அறிவில் சிறந்த பெரியோய், காணமற்போன தங்கள் மகன் யூசுபின் சட்டை எகிப்திலிருந்தும் அதன் மணத்தை முகர்ந்து கண்டுபிடித்துவிட்டீர்களே; ஆனால், யூசுபு அவர்கள் அருகே உள்ள கன்ஆன் கிணற்றினுள் இருந்ததைத் தங்களால் கண்டுபிடிக்க முடியாமல் போனதென்ன?" என்று.

யாகூப் (அலைஹி) பதிலிறுத்தார்கள்: "என் நிலைமை மின்னல் போன்றது. ஒரு கண ஒளியில்

எதெல்லாமோ தெரிகிறது; பின் ஒரே இருட்டாகப் போய்விடுகிறது. இக்கணத்தில் நான் சொர்க்க வாசலை மிதிப்பேன்; ஆனால், மறு கணம் என் வீட்டு வாசலை விட்டு வெளியே கால் எடுத்து வைக்க முடியாதுபோய்விடும்.”

## 26

பால்பக்கிலுள்ள பெரிய பள்ளிவாசலில் நான் மார்க்க உபன்யாசம் நிகழ்த்திக் கொண்டிருந்தேன். அங்கிருந்தவர்களோ மரம் போல உணர்ச்சியற்று அமர்ந்திருந்தார்கள். அவர்கள் நெஞ்சை நான் சொன்ன எதுவும் கௌவவில்லை. என் உத்சாகமான பேச்சு பசுமரத்தில் பட்ட நெருப்பாக இருக்கக் கண்டு நான் அசதியுற்றேன். மிருகங்களுக்கு நற் போதனை செய்வதும் குருடர்கள் முன் கண்ணாடி காட்டுவதும் இவர்களுக்கு நல்லுரை சொல்வதைப் போல்தான். அதனால் நான் என் விளக்கத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு, திரு குர்ஆனிலுள்ள, “ உங்கள் கழுத்தின் பின்புற நரம்பைவிடவும் உங்களுக்கு நாம் அருகிலிருக்கிறோம் ” என்ற இறைவன் திரு வசனத்தை ஓதினேன். அத்துடன், இக்கருத் தடங்கிய அற்புதமான பாடலையும் பாடினேன்:

‘நான் என்னோடு எத்தனை நெருக்கமாக இருக்கிறேனோ அதைவிட அதிக நெருக்கமாக என் காதலி என்னோடு ஒன்றியிருப்பாள். ஆனால், இப்போதோ அவள் என்னை விட்டு விலகி நிற்பது வியப்புக்குரியதே! அவள் என் உள்ளத்தில் உறைகிறாள்; ஆயினும், என்னினின்றும் வேறுபட்டிருக்கிறாள். இதை நான் யாரிடம் சொல்வேன், எப்படிச் சொல்வேன் !’

இவ்வார்த்தைகளின் போதை என் தலைக்கேறி நான் பாதி மயக்கத்திலே நின்றுகொண்டிருந்த சமயம், வெளியில் அப்போதே வந்த பிரயாணி ஒருவன் அது கேட்டு மனக் கிளர்ச்சியுற்ருன். அவன் கூச்சலிட்டது சபையோர் மனத்தில்கூட உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது.

நான் சொல்லிக்கொண்டேன்: "எல்லாப் புகழும் அல்லா(ஹ்)வுக்கே. எட்டி நிற்பவர்கள் அறிவைச் செலுத்துகின்றனர்; அருகேயுள்ளவர்கள் அறியாமையால் விலகி நிற்கின்றனர்."

கேட்போரிடை பிரசங்கத்தின் தன்மையை உணர்ந்து ரசிக்கும் சக்தியில்லாவிட்டால், பிரசங்கியிடம் உத்சாகத்தை எதிர்பார்க்க வேண்டாம். தன் பேச்சைச் சபையோர் ரசிக்கிருர்கள் என்றறியும் சிறந்த பிரசங்கி தன் நாவன்மையை வெளிப்படுத்துவான்.

## 27

ஓர் அரசன் ஒரு வணக்கவாளி (ஆபிது)யிடம் கேட்டான் : "நீர் எப்போதாவது என்னை நினைக்கிறீரா?" என்று.

"ஆமாம், இறைவனை மறந்திருக்கும்போது" என்று அவர் பதிலிறுத்தார்.

ஆண்டவன் வாயிலிலிருந்தும் விரட்டப்பட்டவன் எங்கும் சுற்றிச் சுற்றி வருவான். தன் வாயிலில் நுழைய அனுமதிக்கப்பட்டவனை இறைவன் வேறொரு வாயிலில் நுழையும்படி விடமாட்டான்.

## 28

ஒருவன் கூஃபாவிலிருந்து மக்காவை நோக்கிக் கால் நடையாகப் புறப்பட்டான். அவனிடம் பிரயாணத்துக்குத் தேவையுள்ள எதுவுமில்லை. ஆனால், அவன் உற்சாகத்தோடும் திடத்தோடும் இவ்விதம் சொல்லிக்கொண்டு நடந்தான்: "நான் ஒட்டகத்தின் மேலில்லை; பொதி சுமக்கும் கழுதையாகவுமில்லை. நான் யாருக்கும் எஜமானனாகவோ, அடிமையாகவோ இல்லை. இன்றையக் கஷ்டங்களைப்பற்றியோ நேற்றையப் பெருமையைப் பற்றியோ எனக்குக் கவலையே யில்லை. நான் கவலையற்ற சுதந்தர வாழ்வுடையவன்."

ஒட்டகத்தின் மேல் இருந்த பிரபு ஒருவர் அவனை நோக்கி, "நீர் எங்கே போகிறீர்? திரும்பிப் போய் விடும். இல்லையேல், இடையில் இறந்துபோவீர்" என்று எச்சரித்தார். ஆனால், அதைப் பொருட்படுத்தாது பாலையில் நடந்தான் அவன்.

பனீ மஹ்மூதின் பேரீச்சந் தோப்பை நாங்கள் அடைந்ததும் அப்பிரபுவுக்கு விதி முடிந்து விட்டது; அவர் இறந்துவிட்டார். அந்தக் கால் நடைப் பிரயாணி அவருடைய சடலத்தின் அருகில் நின்றுகொண்டு, "நடந்த கஷ்டத்திடையிலும் நான் சாகவில்லை; ஒட்டகத்தில் வந்த நீர் இறந்து விட்டீர்" என்று கூறினான்.

ஒருவன் தன் நோயாளி நண்பனின் படுக்கையருகே இருந்து இரவு முழுவதும் அழுதுகொண்டிருந்தான். மறுநாட் காலையில் அவன் இறந்து விட்டான்; அந்த நோயாளி குணமடைந்துவிட்

டான்! ஆமாம், எத்தனையோ ஜாதிக் குதிரைகள் இடைவழியில் மாண்டிருக்கின்றன; இந்த நொண்டிக் கழுதை மட்டும் சுகமே தன் பிரயாணத்தை முடித்துவிட்டது. எத்தனையோ திட சரீரிகள் இம் மண்ணுள் மறைந்துபோயினர்; ஆனுல், இந்தப் படுகாயம் பட்டவன் பிழைத்துக்கொண்டான்.

## 29

லுக்மான் ஹக்கீமிடம், "தாங்கள் யாரிடம் ஒழுக்கங்களைக் கற்றுக்கொண்டீர்கள்?" என்று கேட்கப்பட்டபோது அவர் சொன்னுர், "ஒழுக்க மற்றவர்களிடமிருந்து" என்று. "அவர்கள் நடத்தையில் கெட்ட அம்சங்களாகப் படுபவைகளை நான் விலக்கிக்கொண்டேன்" என்று அவர் மேலும் கூறினுர்.

ஒழுக்கங் கெட்டவனுக்கு நீதி சாஸ்திரம் நூறு அத்தியாயங்கள் படித்துக் காண்பிக்கப்பட்டாலும் அவை அவனுக்கு வேடிக்கையானவையாகவே படும்.

## 30

நாங்கள் பாலையில் நடந்து களைப்படைந்து இரவில் ஓரிடத்தில் தங்கினோம். எங்களிடையே இருந்த ஞானியொருவர் திடீரென அழுது கூக்குரலிட்டுக்கொண்டு பாலைவனத்துள் ஓடினுர். மறு நாள் காலையில் அவரை நான் சந்தித்தபோது அவர் அப்படி அழுததன் காரணத்தை வினவினேன். அவர் சொன்னுர் : "புல்புல் பறவையின் கீதத்தையும், சிட்டுக் குருவிகளின் கூச்சலையும், தவளைகளின் முணமுணப்பையும், காட்டு மிருகங்களின் அலறலை

யும் நான் கவனித்தேன். அவை யாவும் இறைவனைப் புகழ்வதற்காக விழித்திருக்கும்போது-இறைவன் திருநாம ஜபத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது-நான் மட்டும் மறதி என்ற தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதை உணர்ந்தேன். அதனால் அழுதேன்.''

நேற்றிரவு ஒரு புல்புல் பாடியது; நான் என் பொறுமையையும், சகிப்புத்தன்மையையும், பகுத்தறிவையும் இழந்தேன். எனது கைசேதக் குரல் என் ஆருயிர் நண்பன் ஒருவனின் காதுகளில் விழுந்திருக்கிறது. "ஒரு பறவையின் கானம் உன் உள்ளத்தை இப்படிப் பேதலிக்கச் செய்யும் என்று நான் நினைக்கவே இல்லை'' என்று அவன் சொன்னான். "பறவை ஆண்டவன் புகழைப் பாடுகிறது; நான் பேசாதிருக்கிறேனே ! இதுதானா மனித இனத்தின் தொழில்?'' என்று நான் பதிலிறுத்தேன்.

## 31

ஒரு சமயம் நான் மக்காவுக்குப் பிரயாணயஞ் செய்துகொண்டிருந்தபோது நல்லியல்பு படைத்த இளைஞன் ஒருவன் எனது நண்பனானான். நாங்கள் கருத்தாழமுள்ள கீதங்களைப் பாடிக்கொண்டிருந்தோம். எங்களோடு வந்த வணக்கவாளி ஒருவருக்கு இது வெறுப்பளித்தது. அவர் துறவிகளை இகழ்ந்து கொண்டும், (துறவிகள் ஈடுபாடு கொள்ளும் பேரின்ப) இசையைப்பற்றிக் கீழ்த்தரமாகப் பேசிக் கொண்டுமிருந்தார். நாங்கள் பனீ ஹுலால் கூட்டத்தினருடைய தோட்டத்தையடைந்தபோது ஒரு சிறுவன் அங்கிருந்த குடிசையிலிருந்து வெளிப்பட்டு அமுது பொங்கும் கீதம் பொழிந்தான். எங்களோடு

வந்த பிரஸ்தாபவணக்கவாளி ஏறியிருந்த ஒட்டகம் அது கேட்டுக் கால்களை உதைத்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கவே, அதன் மேலிருந்த வணக்க வாளி கீழே விழுந்தார். அதைப் பார்த்த நான் சொன்னேன், "ஷைகு அவர்களே, அந்த மிருகத் தின் ஆத்மா உணரக்கூடிய அளவுகூட, அக்கீத விசேஷத்தைத் தங்கள் ஆத்மா உணரவில்லையே!" என்று.

அதிகாலையில் பாடிய புல்புல் என்ன சொல் லிற்று என்பதை அறிந்தாயா? "அன்பை (இஷ்கை) அறியாத நீ என்ன மனிதன்?" என்றுதான் அது கூறிற்று.

அந்த ஒட்டகங்கூட ரசித்த பாட்டை நீ ரசிக்க வில்லையானால் உன்னைவிட மூட மிருகம் வேறில்லை. புல்லுருவி மரத்தைப் பிளந்து செல்கிறது; ஆனால், பாறையைப் பிளப்பதில்லை. நீ காண்பவையெல்லாம் அவனைப் புகழ்வதில் கருத்துக் காட்டுகின்றன. புல்புல் மட்டுமன்று அவனைப் புகழ்வது; ரோஜா விலுள்ள ஒவ்வொரு இதழும்கூட அவனைப் புகழும் நாவுதான் !

## 32

நபிபெருமானின் தோழர்களில் ஒருவரான அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நபிபெருமானை ஒரு நாளாவது போய்ப் பாராமல் இருப்பதில்லை. நபிபெருமான் (ஸல்) அவர்கள் அவரிடஞ் சொன் ஞர்கள் : "அபூ ஹுரைராவே, நீர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்னை வந்து பார்த்தால் நம் அன்பு இன்னும் அதிகமாகும்; அதாவது, நாம்

பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அதிகமாக நேசிப்ப தற்காக நீர் தினமும் வரவேண்டாம் !" என்று.

ஓர் அறிஞரிடம் சிலர், " சூரியனின் அற்புதங் களைக் கண்டும் அதனிடம் யாரும் அன்பு கொண்ட தாகத் தெரியவில்லையே, ஏன் ? " என்று கேட் டனர்.

அவர் பதிலிறுத்தார்: "காரணம், அது தினமும் காணப்படுவதுதான். மழை காலத்தில் அது மேகத் தால் திரையிடப்பட்டிருக்கும்போது யாவரும் அதனிடம் எத்தனை ஆவல் காட்டுகின்றனர் ! "

பிறரைப் பார்ப்பதில் குற்ற மொன்று மில்லை. ஆனால், அவர்கள் போதும் போதும் என்று சொல்லும் அளவிலன்று. நம்மை நாமே வினவிக் கொள்வதானல் மற்றோர் குற்றச்சாட்டுக்களை நாம் கேட்கவேண்டியதிராது.

## 33

. ஸிரியாவைச் சார்ந்த துறவி ஒருவர் காட்டி லேயே தம் தொழுகையை நடத்திக்கொண்டு, இலை குழைகளைத் தின்றுகொண்டு பல வருஷங்களைக் கழித்துவிட்டார். ஓர் அரசன் ஹஜ்ஜுக்குப் போய் விட்டு வரும்போது அவரைக் கண்டான். தன் நகருக்கு வரும்படி அவரை அழைத்தான் ; ஓர் அழகிய தோட்டத்தில் அவருக்குத் தொழுகைக் காகக் குடிசை யொன்று அமைத்துத் தருவதாகவுஞ் சொன்னன். அவரால் பிறருக்குப் பயனுண்டாகும் என்று விளக்கினன். அவர் மறுத்துவிட்டார். அரசனுடைய மந்திரியொருவன் முன்வந்து, அவர்

அங்குச் சென்று பார்க்கட்டும் என்றும், அவ்விடம் பிடியாவிட்டால் திரும்பிவிடட்டும் என்றும் தெரிவித்தான். அவரும் சம்மதித்தார்.

அரசனின் அரண்மனையை ஒட்டிய தோட்டத்தில், உள்ளத்துக்கு உவகை ஊட்டக்கூடிய குடிசை ஒன்று அவருக்கென அமைக்கப்பட்டது. அழகியின் இதழ்களை யொத்த ரோஜா மலர்களும், வனிதையின் சிலம்பை யொத்த மலர்க் கொத்துக்களும் அங்கு நிறைந்திருந்தன. தன் தாயின் பாலை இன்னுஞ் சுவைத்தறியாத குழந்தையைப் போல இனி வரவிருக்கும் மழை காலத்தை யெண்ணி அவை நடுங்கிக்கொண்டிருந்தன. மரங்கள் நிறைந்து மலர்ந்திருந்த குங்கும வர்ணக் கொன்றைப் பூக்கள் இருண்ட சோலையில் நெருப்புப் பிடித்தது போலிருந்தன.

அங்கே அரசன் ஒரு மதிமுக வதனியை அனுப்பினான். மதியின் குளுமை, இடையின் துவளல், வானுலக மங்கையின் இயல், மயிலின் சாயல் உள்ள இவளைக் கண்டால் துறவியும் பொறுமை இழப்பார்.

இந்தத் துறவியும் மதுரமான உணவை விரும்பியுண்டார் ; ஆடம்பரமான உடையை உடுத்தார்; நறுமணங் கமழும் பரிமணங்களைப் பூசினார்; பழங்களை மிதமிஞ்சித் தின்றார்; மங்கையின் அதர மதுவில் மயங்கிக் கிடந்தார்.

அழகியின் சிலம்புகள் உன் அறிவுக்கிடப்படும் விலங்கு; உன் அறிவுப் பறவையை அகப்படுத்தும் கண்ணி.

உன் அழகின் முன் என் இதயம், சமயம், அறிவு - யாவற்றையும் நான் திறை கொடுத்து விட்டேன். நான் பகுத்தறிவுப் பறவையாய் இருந் தேன்; நீ அதைப் பிடிக்கும் ராஜாளியாய் வந்தாய்!

துறவியின் பல நாள் தவமும் பெருமையும் மண்ணுயின. அவர் தேனில் விழுந்த ஈயானுர். அர சன் அவரைக் காணும் ஆவலோடு ஒரு நாள் அவர் இருக்கைக்கு வந்தான். அவர் முற்றும் மாறி இருக்கக் கண்டான். அவர் முகம் அழகாகவும், சிவந்தும், கேளிக்கைகளில் திழைத்ததாகவும் காட்சியளித்தது. அவர் மக்மல் திண்டில் சொகுசாகச் சாய்ந்துகொண் டிருந்தார். அவ் வணங்கு அவருடைய கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள். பணியாள் ஒரு வன் மயில் தோகை விசிறியால் வீசிக்கொண்டிருந் தான். அரசன் அவர் நிலைமை கண்டு மகிழ்ச்சியுற் ருன். தான் மார்க்க ஞானியரிடமும், வணக்கவாளி களிடமும் அன்பு கொண்டிருப்பதாகவும், அதனுல் தான் இவ்விதம் உபசரிப்பதாகவும் அவன் கூறினுன்.

அப்போது அங்கிருந்த அனுபவசாலியான மந்திரி யொருவர் அரசனிடஞ் சொன்னுர்: "இவர் களிடம் அன்பு கொண்டிருப்பதைக் காட்டும் முறை இதுவன்று. மார்க்க ஞானியர் (ஆலிம்) களுக்குப் பணங் கொடுக்கலாம்; அவர்கள் அதைக் கொண்டு மற்ருேர்க்குக் கல்வி புகட்டுவர். ஆனுல், துறவி (தர்வேஷ்) களுக்குப் பணங் கொடுக்கக்கூடாது; அப்படியானுல்தான் அவர்கள் துறவிகளாக இருக்க முடியும்."

துறவிக்குப் பொன் தேவையில்லை. துறவி பொன்னைப் பெற்ருல் அவர் வழி வேருகிவிடும்.

நேர்வழி நடக்கும் ஞானி பிச்சை யெடுக்கவும் மாட்டார்; பணம் பெறவும் மாட்டார். அழகியின் மென் விரல்களுக்கு வைர மோதிரமோ, காதுகளுக்குக் கம்மல்களோ தேவையில்லை.

நிம்மதியான மனம் படைத்த துறவிகளிடம் சொல்லுங்கள், அவர்களுக்குப் பிச்சைச் சோறு தேவையில்லை யென்று. அவ்வனப்புமிக்க வனிதையாளிடஞ் சொல்லுங்கள், அவளுக்கு முகச் சுண்ணமோ, சாயமோ, அணிகலனே அவசியமில்லை யென்று. நான் துறவி யெனச் சொல்லிக்கொண்டு தகாதது செய்தால் என்னை மற்றோர் துறவி யெனல் எங்ஙனம்?

## 34

காலாடிகள் சிலர் ஒரு துறவியைப் பிடித்து ஏசிப் பேசி அடித்து விரட்டினர். அவர் தன் குருநாதரிடம் வந்து தான் பட்ட கஷ்டங்களைக் கூறி வருந்தினர். குருநாதர் சொன்னர்: "மகனே, துறவிகள் (தர்வேஷ்கள்) அணியும் ஒட்டுப்போட்ட உடை துறவின் அடையாளம். அதை அணிந்து கொண்டு ஏமாற்றங்களைச் சகிக்க முடியாது தவிப்பவன் ஒரு வேஷதாரிதான். அவனுக்கு இவ்வுடை 'ஹராம்' (விலக்கப்பட்டிருக்கிறது)" என்று.

ஆழம் மிகுந்த பெரிய ஆற்றில் கல்லெறிந்தால் அது கலங்காது. ஒரு தீங்கால் மனம் புண்படும் துறவி ஆழமற்ற ஓடையைப் போன்றவன்.

நீ கஷ்டத்துக்கு உட்படுத்தப்பட்டால் சகித்துக் கொள்; மன்னிப்பளிப்பதால் நீ பாவத்தை விட்டும் பரிசுத்தமாக்கப்பட்டவனுகிருய். சகோதரா, இறு

தியில் மண்ணுகப் போவதை உணர்ந்து இப்போதே மண்ணைப் போல் சகிப்புத்தன்மையோடிரு!

35

பக்தாத் நகரில் போரில் பறக்கவிடப்பட்ட கொடிக்கும், சுருட்டி வைக்கப்பட்ட திரைத் துணிக்கும் கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது:

தெருப் புழுதியால் அழுக்கடைந்து, படையினர் கூக்குரலால் காதடைத்துப்போன கொடி சொல்லிற்று: நாம் இருவரும் ஒரே குலத்தினர்; நாம் இருவரும் அரண்மனையில் சேவை செய்பவர்கள். ஆனல், எனக்கு ஒரு கணமாவது ஓய்வில்லை; எப்பொழுதும் என்னைத் தூக்கிச் சென்றுகொண்டே இருக்கிருர்கள். நீயோ முற்றுகையின் பயங்கரத்தை அறியாதவன்; பாலையின் பருமணல் உன் மேனியில் பட்டதில்லை. அப்படி யிருந்தும் நீ ஏன் மதிப்பில் என்னைவிட உயர்ந்தவனுகக் கருதப்படுகிருய் ? மல்லிகை போன்ற மலர்க் கரத்தழகியின் ஸ்பரிசம் உனக்குத்தான் கிடைக்கிறது. மெல்லியலாரின் நறுமணம் நுகர்ந்து நீ அவர்கள் அருகிலேயே இருக்கிருய். நானே முரட்டுப் வீரர்களின் கைகளில் அவஸ்தைப்பட்டுப் புழுதியிலும் புரட்டப்படுகிறேன்.

திரைத் துணி சொல்லிற்று: நான் எப்பெழுதும் தாழ்மையோடு அந்தப்புறத்தில் பூமியில் தலைபடத் தொங்கிக்கொண்டிருக்கிறேன். உன்னைப் போல் வானை நோக்கித் தலையைத் தூக்கிப் பறந்தாடவில்லை. இறுமாப்பால் இப்படித் தலைதூக்கும் யாரும் உன்னைப் போல் இறுதியில் துயர நிலையைத்தான் அடைவர்.

36

ஒரு மணராவிலே அன்றலர்ந்த ரோஜா மலர் களோடு அருகம் புல்லும் வைத்துக் கட்டப்பட்ட மாலைகள் தொங்கிக்கொண்டிருந்தன.

“ ரோஜாவோடு சமமாக அமர இப்புல் என்ன சொக்குப் பொடி போட்டது?” என்று நான் எண்ணி னேன். புல் அழுது கூறிற்று, “ தாராள மனமுடை யோர் தம் பழைய நண்பரை மறவார். ரோஜாவின் அழகும், குணமும், மணமும் எனக்கில்லாவிடினும் நான் கேவலம், அது பிறந்த தோட்டத்திலேயே வளர்ந்தவன்” என்று.

தாராளவானின் பணியாளான நான் மதிப்புள் ளவனே, மதிப்பற்றவனே எப்படியிருப்பினும் ஆண்டவன் கருணையில் நம்பிக்கை கொண்டுள் ளேன். நான் லாபஞ் சம்பாதிக்காவிடினும், பணிவற்றவனுயினும் அவன் தன் அடியானின் குற்றங்களை மன்னிக்க முடியும். எஜமானன் நீண்ட நாட்களாகச் சேவை செய்யும் அடிமையை விடுதலை செய்வது சகஜம். இறைவா, சர்வலோக ரக்ஷகா, உன் அடிமைக்கு விடுதலை தா! சாஅதி, துறவுப் பாதையில் நட ! ஆண்டவன் சிருஷ்டியான மனி தனே, அவன் வழியைப் பின்பற்று ! இந்த வாசலை விட்டு அப்பாற் செல்பவன் அதிர்ஷ்டமற்றவன். ஏனெனில், அவன் வேறெங்கும் வழி காண முடியாது.

37

ஒரு வித்வானின் மகள் மிகுந்த குரூபியாக இருந்தாள். அவளுக்குத் தக்க வயது வந்துவிடவே அவளை மணம் முடித்துக் கொடுத்துவிட அவர்

முயன்ருர். ஆனுல், அவளுடைய நகைகளும் சொத்தும்கூட யாரையும் ஈர்க்கவில்லை. கடைசியில் அவளை ஒரு குருடனுக்கு மணம் முடித்துவைத்தார்.

சில நாட்கள் சென்ற பின் ஸிரந்தீப் (இலங்கைத்) தீவிலிருந்து கண் பார்வையை மீட்டக்கூடிய வைத்திய னெருவன் அங்கே வந்தான். அவருடைய மருமகனுக்கும் வைத்தியம் பார்க்கும்படி வித்வானிடம் பலர் கூறினர். அவர் சொன்னுர்,"இல்லை, அவன் கண் பார்வை பெற்றுவிட்டால் என் மகளை விலக்கி விடுவான்."

குரூபியின் கணவன் குருடனுய் இருப்பதே சரி.

## 38

தைரியமா, தருமமா எது விரும்பத்தக்கது என்று ஓர் அறிஞரிடம் கேட்கப்பட்டது.

அவர் சொன்னுர், "தரும சிந்தனையுள்ளவனுக்குத் தைரியம் அவசியமில்லை" என்று.

பஹ்ராம் கோர் என்ற அரசனின் கல்லறையில், "தாராளம் என்ற கை தைரியம் என்ற கையை விடப் பலம் பொருந்தியது" என்று எழுதப்பட்டிருந்தது.

ஹாத்தீம் தாயி உயிரோடில்லை. ஆனுல், அவர் செய்த தானமும் தருமமும் அவர் புகழுடம்பை நிரந்தரமாக்கிவிட்டன. உன் செல்வத்தில் நாற்பதில் ஒன்றையாவது தருமமாகக் கொடு; கத்தரித்துவிடப்படும் திராக்ஷைக் கொடிதான் அதிகமான பழங்களைத் தரும்.

## அத்தியாயம் 3

# திருப்தியைப்பற்றி

### 39

எகிப்து தேசத்தில் உயர் குடிப் பிறந்த இரண்டு இளைஞர்கள் இருந்தனர். ஒருவன் கல்வி கற்பதில் காலங் கழித்தான்; மற்றவன் பணஞ் சேர்ப்பதிலேயே நேரம் போக்கினான். சிறிது காலத்துக்குப்பின் முன்னவன் எகிப்திலேயே சிறந்த அறிஞனாகவும், பின்னவன் பெருஞ் செல்வனாகவும் விளங்கினர். செல்வன் கல்விமானை இகழ்ந்து சொன்னான், "நான் செல்வத்தின் வரம்பைக் கண்டுவிட்டேன்; நீ இன்னும் ஏழ்மை நிலையிலேயே உழல்கிறாய்" என்று. கல்விமான் பதிலளித்தான்: "சகோதரா, இறைவன் தூதர்களின் செல்வம் கல்வி; அதை நான் பெற அருள் புரிந்த அல்லா(ஹ்)வுக்கு என் நன்றி உரித்தாகும். நீயோ நம் தேசத்திலேயே மமதையின் உருவாய் இருந்து அழிந்த பிர்ஔன், ஹாமான் ஆகியோரின் செல்வத்தைப் பெற்றிருக்கிறாய்."

### 40

பணக்காரர்களே, உங்களுக்கு நியாய உணர்ச்சியும், எங்களுக்குத் திருப்தியும் ஏற்பட்டால்தான் உலகில் துயரங்கள் நீங்கும்.— ஓர் ஏழை.

### 41

தார்த்தாரியரோடு நடந்த போரில் ஒரு வீர இளைஞன் பலமான காயமடைந்தான். ஒரு வியா

பாரியிடம் அதற்கான மருந்து இருப்பதாகவும், அதில் கொஞ்சம் அவன் தந்தாலும் தரலாம் என்றும் ஒருவர் சொன்னர். ஆனல், அந்த வர்த்தகன் ஒரு கருமி; அவன் பெட்டியுள் ரொட்டிக்குப் பதில் சூரியன் இருந்திருப்பின் இறுதிநாள்வரை உலகம் இருண்டுதான் கிடக்கும்.

அவ்வீர இளைஞன் சொன்னன்: " அவனிடம் அதைக் கேட்டால் தந்தாலும் தருவான், தராவிட்டாலும் இல்லை. அதனல், புண் குணப்பட்டாலும் படலாம்; படாவிட்டாலு மில்லை. ஆனல், அவனிடம் கேட்கப்போவதே ஒரு விஷந்தான். "

கீழானவனிடம் எதுவும் கேட்பதானல் உன் உடம்போடு ஆத்மாவையும் பதிலுக்குக் கேட்பான்.

சாவாமை புகழை விற்று வாங்கக்கூடிய தாயின் அறிஞர் அதை வாங்கார்; இழிந்த வாழ்க்கை நடத்துவதைவிடக் கண்ணியமான சாவு விரும்பத்தக்கது. அன்புடையான் வீட்டுக் கூழ், அகந்தை கொண்டவன் வீட்டு அமிர்தத்தை விடச் சிறந்தது.

## 42

குடும்ப பாரம் மிகுந்த கல்விமான் ஒருவர் தம்மிடம் மதிப்பு வைத்திருந்த பிரபு ஒருவரிடஞ் சென்று தம் கஷ்டங்களை எடுத்துக் கூறினர். இதனல் அக்கனவானுக்கு அவரிடமிருந்த மதிப்புக் குறைந்தது.

கஷ்ட காலத்தில் அருமை நண்பன் முன் செல்லாதே ! அதனல் அவனுக்கும் கசப்பேற்பட்டு

விடலாம். நீ உன் துன்பத்தை ஒருவனிடஞ் சொல்வதானால் மகிழ்ச்சியும் புன்னகையும் தவழும் முகத்தோடு சொல்லு. ஏனெனில், மகிழ்ச்சி கூத்தாடும் வதனம் என்றுமே உன் காரியத்துக்கு இடையூறாகாது.

அக்கல்விமானுக்கு உதவி கிடைத்தது; ஆனால், கனவான் வைத்திருந்த மதிப்புக் குறைந்தது. தன் வீழ்ச்சியை உணர்ந்த கல்விமான் சொன்னார்: "தேவை மிக்க நேரத்தில் நீ பெறும் உணவு தரித்திரம் பிடித்தது. பானை உலையிலேறுகிறது; ஆனால், என் மதிப்பு ஆவியாய்ப் போய்விடுகிறது. அவர் என் வயிற்றுப் பாட்டுக்கு உதவி செய்தார். ஆனால், என் பெருமையை எடுத்துக்கொண்டார். 'பிச்சை புகுவதைவிடப் பட்டினி கிடந்தே வருந்தலாம்."

## 43

ஹாத்தீம் தாயியிடம், "உம்மைவிடச் சுயேச்சை மனம் படைத்த மனிதனை நீர் பார்த்ததாவது கேள்விப்பட்டதாவது உண்டா?" என்று கேட்கப்பட்டது.

அவர் சொன்னார்: "ஆமாம், நான் கண்டதுண்டு. ஒரு நாள் நாற்பது ஒட்டகங்கள் 'குர்பானி' செய்தேன். அரபிப் பிரமுகர்கள் யாவரையும் விருந்துக்கு அழைத்திருந்தேன். அதன்பின் நான் காட்டுக்குச் சென்றபோது விறகு சேகரித்துக் கொண்டிருந்த விறகு வெட்டி ஒருவனைக் கண்டேன்.

“ஹாத்தீம் வீட்டிற்கு யாவரும் பெருங் கூட்டமாக விருந்துண்ணச் சென்றனரே, நீ ஏன் போக வில்லை?'' என்று அவனிடங் கேட்டேன். அவன் சொன்னான்: “தன் உழைப்பின் ஊதியத்தை உண் பவன் ஹாத்தீம் தாயியிக்குக் கடமைப்பட்டவனு கான்'' என்று. அவன் தான் என்னைவிடச் சிறந்த வன்; மிகுந்த சுயேச்சை மனம் படைத்தவன்.

## 44

நான் மனம் வருந்தக்கூடிய அளவில் எனக்குக் குறைகள் ஏதுமில்லை. இருந்தாலும் காலில் போடச் செருப்பில்லையே என்ற வருத்தம் மட்டும் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தது. ஒரு நாள் இவ்வித எண்ணத்தோடு நான் கூஃபாவிலுள்ள பள்ளி வாசலுள் நுழைந்தேன். அங்கே காலற்ற ஒரு வனைக் கண்டேன். எனக்குக் கால்களைத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

## அத்தியாயம் 4

# மௌனத்தைப்பற்றி

### 45

கல்வியறிவுமிக்க ஒருவர் ஒரு நாஸ்திகனோடு வாதம் புரிந்தார். ஆனால், அவனுக்குச் சரியான பதில் சொல்ல முடியாது எழுந்து போய்விட்டார்.

இதைக் கண்ட ஒருவர் அவரிடங் கேட்டார்; "உங்கள் அறிவுத் திறமையாலும், கல்வியாலும், ஞானத்தாலும் அந்த நாஸ்திகனுக்குச் சரியான பதில் தரமுடியவில்லையா?" என்று.

அக் கல்விமான் சொன்னார்: "என் கல்வி யெல்லாம் திரு குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றைப் படித்ததால் உண்டானது. அவனோ இவற்றையே நம்ப மறுக்கிறான். பின் அவனோடு வாதாடுவதில் பயன் என்ன?"

திரு குர்ஆனையும், ஹதீஸையும் கொண்டு யாரைத் திருப்திப்படுத்த முடியவில்லையோ, அவ னுக்கு (மார்க்க விஷயத்தில்)ப் பதில் சொல்லாமல் இருப்பதே சிறந்த பதிலாகும்.

### 46

ஒரு மூடன் ஒரு அறிவாளியைக் கழுத்தில் துணியைப் போட்டு இழுப்பதைக் கண்ட ஒரு பெரியவர் சொன்னார்: "இந்த 'அறிவாளி உண் மையிலேயே அறிவாளியாய் இருந்தால் இந்த

மடையனேடு பேச்சுவார்த்தை வைத்துக்கொண் டிருக்க மாட்டார்.''

இரண்டு அறிஞர்களுக் கிடையே இத்தகைய பூசல் எழாது. அவசரக்காரனேடு அறிவாளி விவாதிக்க மாட்டான்.

ஒரு மூடன் கீழ்த்தரமான வார்த்தைகளைச் சொன்னுலும் மதியுள்ளோன் நல் வார்த்தைகளால் அவனைச் சமாதானஞ் செய்வான். இரண்டு அறி ஞர்கள் அபிப்பிராயபேதத்தோடு பேசிக்கொண் டிருந்தாலும் அ வ ர் க ளை ஒரு மயிரிழைகூடப் பிணைத்துவைத்திருக்க முடியும். ஆனுல், இருவ ரும் பரம முட்டாள்களாக இருந்தால் அவர்களைப் பிணைத்திருப்பது இரும்புச் சங்கிலியானுலும் தகர்ந்து போய்விடும்.

## 47

அவையில் பேசுவோர் ஒரு தடவை உபயோ கித்த வார்த்தையைக்கூட மறு தடவை உபயோகிக் கக்கூடாது. பேச்சு கவர்ச்சியாகவும், இனிமையாக வும், நம்பக்கூடியதாகவும், யாவரும் வியக்கக் கூடியதாகவும் இருப்பினும் ஒரு தடவை பேசி யதை மறு தடவை பேசாதே !

## 48

சுல்தான் மஹ்மூதின் பிரதம மந்திரியின் பெயர் ஹுஸைன் மைமாந்தி. ஒரு தடவை தனது ராஜ சபையில் சுல்தான் பிரதம மந்திரியிடம் ஏதோ இரக சியம் கூறினர்.

சபை கலைந்த பின்னர், சபையோர் சிலர் ஹுஸைன் மைமாந்தியிடம் வந்து சுல்தான் அவர் காதில் என்ன சொன்னார் என்று கேட்டார்கள்.

"நான் இரகசியத்தை வெளியிடமாட்டேன் என்றுதானே என்னிடம் அதைச் சொல்கிறார்! அப்படியிருக்க நீங்கள் ஏன் அதைக் கேட்கிறீர் கள்?" என்று மந்திரி பதிலளித்தார்.

புத்தியுள்ளவன் தான் அறிவதையெல்லாம் சொல்லி உளறமாட்டான்; அரசனின் இரகசியத் தைத் தன் வாய் வெளியிடும்படி வைத்துக்கொள்ள மாட்டான்.

## 49

கடூரமான குரல் படைத்த 'கதீபு' (பள்ளிவாச லில் உபந்நியாசம் நிகழ்த்துபவர்) ஒருவர் நல்ல குரல் படைத்தவர் போல் பாசாங்கு செய்துவந்தார். அண்டங் காக்கையின் அலறல் போலிருக்கும் அவர் திரு குர்ஆனை ஓதும் பாணி.

மிக விகாரமான குரல் கர்த்தபத்தினுடையது; அதைப்போல் குரல் படைத்த கதீபு கத்தினால் ஈரானிலுள்ள இஸ்திகார் கோட்டையே ஆட்டங் கண்டுவிடும்.

அவருடைய அந்தஸ்துக்காக மதிப்பளித்து ஊரிலுள்ளோர் அவர் குரலைப்பற்றிக் குறைகூறாமல் இருந்தனர். அப்போது அயலூரிலிருந்து அங்கு வந்திருந்த அறிஞர் ஒருவர் விஷயமறிந்து நாசூக்

காகக் கதீபிடம் பேசினர். அந்த அறிஞர் கூறினர், "நான் உம்மைக் கனவில் கண்டேன். அக்கனவு மட்டும் உண்மையாகிவிட்டால் இவ்வூரினர் சந்தோஷமடைவர்" என்று.

கதீபு அதென்ன கனவு என்று வினவினர்.

அறிஞர் சொன்னர்: "தங்கள் குரல் இனிமையானதாக மாறி, ஜனங்களெல்லாம் அதைப் புகழ்வதாகக் கனக் கண்டேன்."

சற்று நேரம் தலை குனிந்தவாறு இருந்த கதீபு தன் குறையை உணர்ந்தவராய்க் கூறினர்: "நீர் கண்ட கனவு சுபகரமானதுதான். அது என் குறையை உணரும்படி செய்துவிட்டது. இப்போது நான் உணர்கிறேன், என் குரல் கடூரமானது, அதை யாவரும் வெறுக்கிருர்கள் என்று. இனி மென்மையான குரலிலேயே - கத்தாமல்-உபந்நியாசம் செய்வதென்று உறுதிகொண்டுவிட்டேன்."

என் குற்றங்களைக் குணங்களாகப் புகழும் நண்பர் கூட்டத்தால் நான் அவதியுறுகிறேன். என் குற்றங்களைப் பறையறையும் என் எதிரி எங்கே? அவனே என் நண்பன்.

## 50

கொராசான் நாட்டுத் தலைநகரான ஸஞ்சரில் ஒரு மோதீன் 'பாங்கு' (தொழுகைக்கு அழைத்துக் குரல் எழுப்புவது) சொல்ல நியமிக்கப்பட்டார். அவர் குரல் கர்ணகடூரமாய் இருந்ததால் அவர் 'பாங்கு'

சொல்லும்போது வெறுப்பினுல் யாவரும் எழுந்து அப்பால் செல்லத் தொடங்கினர். புத்திசாலியான பள்ளிவாசல் முதவல்லி (மேற்பார்வையாளர்) அவரை அழைத்து, "இப்பள்ளிவாசலுக்கு மாதம் ஐந்து தீனுர்களுக்குப் பாங்கு சொல்லும் மோதீன் இருக்கிறுர். உமக்குப் பத்துத் தீனுர்கள் தருகிறேன். நீர் இதை விட்டுப் போய்விடும்'' என்றுர். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

கொஞ்ச நாட்களுக்குப் பின் அவர் திரும்பவும் வந்தார். முதவல்லியிடஞ் சொன்னுர்: "நீர் எனக்குப் பத்துத் தீனுர்கள் தந்து போகச் சொன்னது பெருத்த அநீதி. நான் இப்போது இருக்கும் இடத்தில் அதை விட்டு விலகுவதானுல் இருபது தீனுர்கள் தருவதாகச் சொல்கிறுர்கள்.''

முதவல்லி புன்னகையோடு சொன்னுர்: "அதை ஒத்துக்கொள்ளாதேயும். அவர்கள் ஐம்பது தீனுர்கள் வரை தருவதாகச் சொல்வார்கள்'' என்று.

உன் கடூரக் குரல் என் ஆத்மாவை வெட்டுவது போல, மண் வெட்டியைக்கொண்டு களி மண்ணைக் கூட வெட்டமுடியாது.

அத்தியாயம் 5

## இளமையைப்பற்றி

51

எத்தனேயோ வனப்பு மிக்க வனிதையரைத் தம் அந்தப்புரத்தில் வைத்துள்ள சுல்தான் மஹ்மூது மற்றப் பெண்களேவிட அழகில் குறைந்த ஆயிஷா விடம் மட்டும் ஏன் அதிகமான பிரேமை கொண்டிருக்கிருர் என்று அவருடைய பிரதமர் ஹுசைன் மைமாந்தியிடம் சிலர் வினவினர். "மனத்துக்குப் பிடிப்பது கண்ணுக்கு இனிமையாகிவிடுகிறது" என்று அவர் பதிலளித்தார்.

சுல்தானின் அன்பைப் பெற்றவன், உண்மையில் தீமையின் உருவாக இருந்தாலும், மற்ருேர்க்கு நல்லவனுகத் தோற்றமளிக்கிருன். ஆனுல், அவன் சுல்தானின் அன்பை இழந்துவிட்டால் மற்ருேர் வெறுப்புக்கும் ஆளாகிவிடுகிருன்.

வெறுப்போடு பார்க்கும் கண்களுக்கு மன்மதனும் அழகற்றவனுகத் தோன்றுவான்; ஆசையோடு நோக்கும் கண்களுக்குக் குரூபியும் அழகனுகவே படுவான்.

52

ஒரு பிரபுவிடம் அழகுமிக்க அடிமை யொருத்தியிருந்தாள். அவள்மீது அவர் தன் அன்பு முழுவதையுஞ் சொரிந்தார்.

ஒரு நாள் அவர் தம் நண்பரொருவரிடம் சொன்ஞர்: "அழகும் கம்பீரமும் மிக்க என் அடிமை கொடியவளாயும் மோசக்காரியாயும் இருக்கிருளே!" என்று.

நண்பர் சொன்ஞர்: "சகோதரரே, நீர் அவளை உம்முடைய ஆசைநாயகியாக ஆக்கிக்கொண்டு விட்டதால் அடிமையின் சேவையை இனி அவளிடமிருந்து எதிர்பாராதேயும். ஏனெனில், காதலன் - காதலி என்ற நிலைமை ஏற்பட்டதும் எஜமானன்-அடிமை என்ற வேற்றுமை பறந்துவிடுகிறது."

எஜமானன் அரம்பையொத்த பணிப் பெண்ணோடு சல்லாபிக்கத் தொடங்கிஞல் அவள், எஜமானிபோல் ஏவவும், அவர் அடிமைபோல் பணி செய்யவும் நேரும். சேடியின் வேலை தண்ணீர் தெளிப்பதும் பணி செய்வதுமாம். அவள் மயக்கும் அழகுடையவளாஞல் அவள் வேலை மிதிப்பதும் அடிப்பதுமாகிவிடும்.

## 53

ஒரு சுந்தரியைக் கண்டு காதல்கொண்ட இளைஞன் ஒருவன் பித்தன் போல் அலைந்தான்.

அவன் நண்பர்கள் அவனை எச்சரித்தார்கள்: "இந்த வீணுசையை விட்டுவிடு; இந்த வலையில் எத்தனையோ பேர் அகப்பட்டு மடிந்திருக்கின்றனர்" என்று.

அவன் பெருமூச்சு விட்டுச் சொன்ஞன்: "என் கண்கள் அவள்மீது விருப்பங்கொண்டு இமைக்கா

மல் இருக்கின்றன. என்னை எச்சரிக்காதீர்கள்'' என்று.

காதலின் அறிகுறி காதலியைத் தவிர, வேறு விதமான சிந்தனைகளே இல்லாது செய்துவிடுவது தான். உன் நலன்களுக்கே அடிமையான நீ போலிக் காதலன்; காதலன் சுயநலமற்றவனாய், தன் காதலிக்காக உயிரையே விட்டுவிடுவான்.

நான் மட்டும் அவளை நெருங்க முடியுமானால் ஒன்று அவள் முன்றானையைப் பற்றுவேன், அல்லது அவள் காலடியில் வீழ்ந்து இறப்பேன்.

அவன் உற்றார் அவன் நிலையை உணர்ந்து அவனுக்குப் புத்திமதிகள் கூறினர்; கட்டுப்பாடுகளை விதித்தனர். ஆனால், எல்லாம் பயனற்றுப்போயின.

வைத்தியனோ கசப்பு மருந்துகளைக் கொடுத் தான் ; அவன் வயிறோ இனிப்புப் பண்டங்களை விரும்பியது.

இளைஞன் காதல் பித்துக் கொள்ளக் காரண மான அழகியிடம் சிலர் சென்று, "இனிய தன்மை யும், நற்குணமும் உள்ள இளைஞன் ஒருவன் உன் மாளிகையருகேயே எப்போதும் நிற்கிறான்; அவன் கவிதை பொழியக் கேட்கிறோம்; அவன் அறிவில் ஏதோ மயக்கமும், அவன் உள்ளத்தில் நெருப்பும் சூழ்வதாகப் படுவதால் அவன் காதல் கொண்டலை கிறான் எனத் தெரிகிறது'' என்று கூறினர்.

அவள் அவன்மீது கருணை கொண்டாள்; அவன் நிற்குமிடத்துக்கு வந்தாள். அவள் வருவதைக்

கண்ட இளைஞன் மனம் படபட வென்று அடித்துக் கொண்டது.

அவள் அன்பாகக் கேட்டாள், "நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்? உம் பெயரென்ன? வேலை யென்ன?" என்று. உணர்ச்சிக் கடலில் மூழ்கிவிட்ட இளைஞனுக்குப் பேச முடியவில்லை.

நீ குர்ஆன் முழுவதையும் மனனஞ் செய்திருப் பினும், ஒரே மூச்சில் அதை ஓதக்கூடியவனாக இருப்பினும், காதலால் கட்டுண்டால் அலிபு, பே என்றுகூடச் சொல்ல முடியாது.

அழகி மேலுங் கேட்டாள், "நீர் ஏன் பதில் சொல்ல மறுக்கிறீர்? நானும் துறவிகளின் அடிமை தான்" என்று.

காதலன் தன் உணர்ச்சிப் புயலிடையில் தலை நிமிர்ந்து மிகுந்த கஷ்டத்தோடு பேசினான்: "நீ வரா திருந்தபோதெல்லாம் நான் பேசத் தயாராய் இருந் தேன். ஆனால், நீ வந்துள்ள இப்போது என் வாயடைக்கப்போகிறது. இதுவும் விசித்திரந்தான்!"

இதைத் திணறிக்கொண்டே அவன் சொல்லி முடித்ததும் அவன் தொண்டையிலிருந்து ஒரு கடூரக் குரல் வெளிப்பட்டது. அத்துடன் அவன் ஆத்மா ஆண்டவனை நோக்கிச் சென்றது.

அவன் தன் காதலியின் குடிசையருகே இறந் தது நல்லதாயிற்று; அவன் உயிரோடிருந்திருந்தால் அவளிடமிருந்து தன் உயிரை எப்படிப் பத்திரமாக மீட்பான்!

54

நான் இளைஞனாக இருந்தபோது ஒரு சிறுமியோடு நேசங் கொண்டிருந்தேன். அவள் உருவம் பொன்னை உருக்கி வார்த்தது போலிருந்தது. அவள் குரல் தேன் போன்றிருந்தது. அவள் அதர பானம் பருகுபவன் சாவா மருந்துண்பதாக உணர் வான்.

ஒரு தடவை அவள் இழைத்த தவறினால் எங்களுக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. அவள் பிரிந்து செல்லும்போது சொன்னாள்: "சூரியனின் நேசம் வௌவாலுக்குப் பிடிக்கவில்லையானால், சூரியனுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை" என்று. எனினும், அனாதரவாகப் போகிறாளே என்று எண்ணி நான் வருந்தினேன்.

நெடுநாட்களுக்குப் பின் அவளை நான் சந்தித் தேன். அவள் கந்தர்வக் குரல் கரகரத்திருந்தது! அவள் அழகுரு மறைந்துவிட்டது. அவளுடைய பளிங்குக் கன்னங்களில் சுருக்கங்கள் விழுந் திருந்தன. அவளைக் கண்டதும் நான் தாவிச் சென்று கட்டிப் பிடிப்பேன் என்று அவள் எண்ணினாள். ஆனால், நான் விலகி நின்றேன்.

உன் முகத்தில் குறுகுறுப்பு விளையாடியபோது உன்பால் ஈர்க்கப்பட்டவனை விரட்டினாய். இப்போது உன் முகத்தில் சுருக்கங்கள் விழுந்தபின் அவனைச் சமாதானப்படுத்த எண்ணுகிறாய்! உன் வசந்த காலப் பசுமை மாறி இலைகள் பழுத்துவிட்டன. நெருப்பணைந்துவிட்ட என் இதய அடுப்பில்

உன் பாவனயை வைப்பதில் பயனில்லை. எத்தனை நாட்களுக்கு உன் குலுக்கலும் மினுக்கலும்! இன்று நீ முந்தைய நிலையை அடைய முடியுமா? உன் வலையை விரும்புவோர்மேல் அதை வீசு! அன்று நீ மான்போல் துள்ளிச் சென்ருய்; இன்று குரங்குபோல் வருகிருய்! இனி உன் முகச் சுருக்கத்தை அகற்ற முடியுமா ?

நான் அவளிடம் கேட்டேன்: "உன் அழகு என்னுயிற்று ? உன் முகத்தில் ஏன் சுருக்கங்கள் உண்டாயின ?"

அவள் சொன்னுள் : "என் இளமை மறைந்ததன் துக்கக் குறிகள்தாம் இந்தச் சுருக்கங்கள்."

## 55

ஒரு வித்துவானிடம் சிலர் கேட்டனர்: மதிமுகம் படைத்த கட்டழகியோடு ஒருவன் அவள் அந்தரங்க அறையிலே தனித்திருக்கிருன். அறைக் கதவு அடைத்திருக்கிறது. அவள் சேடிகளும் போய் விட்டனர். அவன் உணர்ச்சிப் பசி மேலாடுகிறது. காமம் அவனை வதைக்கிறது. பேரீச்சம்பழங்கள் நல்ல பக்குவமடைந்துள்ளன; தோட்டக்காரனும் அவற்றை உண்ண விரும்பியழைக்கிருன் என்று அரபிகள் சொல்லுவதுபோல அவளும் மனம் இசைந்தவளாக அவனை நோக்குகிருள். இந்த நிலையில் அவள் மயக்கிலிருந்து தப்பித் தன் கற்பைக் காத்துக்கொள்ள அவனல் இயலுமா ?

வித்துவான் சொன்ன பதிலாவது: அவன் அவள் மயக்கிலிருந்து தெளிந்து தப்பித்துக்கொண்டாலும், உலகினரின் இழிவான சொற்களினின்றும் தப்ப முடியாது.

உன் உணர்ச்சியை ஒடுக்கிக் கொள்வது இயலும்; ஆனல், பிறர் நாவையடக்க உன்னல் முடியாது. பாவ மன்னிப்புக் கேட்டு ஆண்டவன் கோபத்தைக்கூடத் தணித்துவிடலாம்; ஆனல், மானிடரின் புறங்கூறலைத்தான் தணிக்க முடியாது.

56

ஒருவனுக்கு அழகிய மனைவி யொருத்தி யிருந்தாள். ஆனல், அவள் இறந்துபோனுள். அவள் தாய் மட்டும் 'மஹர்' பணத்துக்காக அடித்து வைத்த முளைபோல் அவன் வீட்டிலேயே தங்கி விட்டாள். அவள் ஒரு சிடுமூஞ்சி. அவள் தன் வீட்டிலிருப்பது அவனுக்குச் சித்திரவதையாக இருந்தது. ஆனல், 'மஹர்' பணம் கொடுக்கச் சக்தி யற்ற நிலையில் அவன் கஷ்டப்பட்டான்.

அப்போது அவன் நண்பன் ஒருவன் அவனைக் கண்டு க்ஷேமலாபங்களை விசாரித்தான்.

இவன் சொன்னன்: "என் மனைவியின் பிரிவு கூட அத்தனை கொடியதன்று; அவள் தாய் என் வீட்டிலேயே தங்கிவிட்டதுதான் சகிக்க முடியாததாய் இருக்கிறது."

மலரைக் கொய்துகொண்டு முள்ளை என்னிடம் விட்டுவிட்டாள். புதையல் போய்விட்டது; நாகம் மட்டுமே இருக்கிறது. ஆயிரம் நண்பர்களைக்

கூடப் பிரிந்திருக்கலாம்; ஆனால், ஒரு விரோதி யோடு சேர்ந்திருப்பது கடினம்.

## 57

நான் இளைஞனாய் இருந்த காலையில் ஒரு நாள் நண்பகலில், ஒரு வீதியின் வழியாய்ப் போய்க் கொண்டிருந்தேன். வெ யி லி ன் கொடுமையால் வாய் உலர்ந்தது; காற்று நெருப்பென வீசி எலும் பையே உருக்கிற்று. காலைத் தரையில் வைக்கத் தத்தளித்து ஒரு சுவர் ஓரத்தில் ஒதுங்கினேன். யாராவது குடி தண்ணீர் தரமாட்டார்களா என்று நான் எண்ணினேன். திடீரென எதிரிலிருந்த மாளிகையின் முன் வாசலில் தொங்கிய திரை வில கிற்று. உள்ளிருந்து ஓர் ஒளி வீசிற்று. ஜோதி வட்டமாக அங்கே நின்ற பெண்ணழகியின் பேரழ கைச் சொல்ல நாவில்லை. இருளிடை எழுந்த பகல வனோ, நெருப்பிடை எழுந்த அமர ஊற்றோ என்று ஐயுற்று நின்றேன். அவள் கரத்தில் பனிநீர் நிறைந்த கிண்ணத்தை ஏந்தி நின்றாள். அதில் சிறிது கற்கண்டும், ஷர்பத்தும் சேர்க்கப்பட்டிருந் தன. அதிலிருந்து எழுந்த சுகந்த மணம் அத்தரின் சத்தோ அல்லது அவளுடைய கன்னக் கதுப்பி லிருந்து எடுத்துச் சேர்க்கப்பட்ட சுகந்தமோ என்ற ஐயம் எழுந்தது.

அவள் பொற்கரத்திலிருந்து அதைப் பெற்று அருந்தித் தாகம் தீர்ந்தேன்.

என் தாகம் கடல் நீர் முழுவதும் இனியதாக இருந்து, குடித்தாலும் அடங்கக் கூடியதன்று. உன்

எழிலுருவைத் தினமும் நோக்குபவன் பாக்கியவான் தான். மதுவால் மயக்கமுற்றேன் பாதி இரவு வரைதான் போதையோடு கிடக்கிறான்; மதுக் கிண்ணமேந்திய உன்னைக் கண்டு போதை கொண்டவனோ இறுதிநாள் வரை மயக்கந் தெளிவதில்லை.

## 58

அரபு நாட்டு அரசன் ஒருவனிடம் லைலாவின் மீது பிரேமை கொண்டு மஜ்னூனனவன் வனாந்தரத்தில் அலைவதைச் சிலர் தெரிவித்தனர்.

அவனைத் தன் முன் கொண்டுவரும்படி அரசன் உத்தரவிட்டான். அவன் வந்ததும், "மனித வாழ்க்கையை வெறுத்து, மானிட இன்பங்களைத் துறந்து நீ மிருக வாழ்க்கை வாழ்வதேன்?" என்று கேட்டான்.

மஜ்னூன் அழுதுகொண்டு சொன்னான்: "நான் லைலாவைக் காதலிக்கிறேன் என்பதால் பலர் என்னைக் கேலி செய்கின்றனர். ஆனால், அவளைப் பார்த்தால் அப்படிக் கேலி செய்வார்களா?"

என் உள்ளங் கொள்ளை கொண்டவளே, உன் முகத்தைப் பார்த்தால் என்னைத் தூஷிப்பார்களா? உன்னைக் கண்டவுடனேயே தம்மை மறந்து தம் கையிலிருக்கும் பழத்தை அறுப்பதற்குப் பதிலாகத் தம் விரலை அறுத்துக்கொள்வார்களே!

மஜ்னூன் சொன்னதுபோல் அத்தனை அழகுள்ளவளா லைலா என்பதை நேரில் அறிய எண்ணினான் அரசன். அவளைத் தேடிக் கண்டுபிடித்துக்

கொண்டுவரும்படி உத்தரவிட்டான். அவ்விதமே லேலாவும் அரசனின் அந்தப்புரத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள். அரசன் அவளைப் பார்த்தான். அவளுடைய வெளுத்த நிறமும், ஒல்லியான உடலும் அவனுக்கு அருவருப்பை உண்டாக்கின. அரண்மனையிலுள்ள மோசமான சேடிகூட அவளைவிட அதிக அழகுள்ளவளாக அவனுக்குப் பட்டது. அரசனுடைய அபிப்பிராயத்தை மஜ்னூன் உணர்ந்தான். அவன் சொன்னான்: "அரசே, நான் கண்ட அழகை நீங்கள் அவளிடம் காண வேண்டுமானால் மஜ்னூனுடைய கண்களோடு அவளைப் பாருங்கள். என் போன்ற மனம் படைத்தோர்தான் என் உணர்ச்சிகளை மதிக்க முடியும். இரண்டு காய்ந்த கட்டைகளைத் தேய்த்தால்தான் நெருப்புப் பிடிக்கும். என் காதல் வருணித்த எனது காதலியின் அழகை அப் புல்லடர்ந்த பூங்காக் கேட்க முடியுமானால் அது உடல் சிலிர்த்திருக்கும். காதலின் மர்மமறியாத நீங்கள் என் ஆத்மாவை எது ஆட்டிவைக்கிறது என்பதை உணர முடியாது."

புண்ணை அறியாதவன் புண்ணின் வலியை உணரமுடியாது. நோவை அறிந்தவன்தான் நம்மிடம் இரக்கங் காட்ட முடியும். குழவியின் கொட்டுதலால் கஷ்டமடையாதவனிடம் குழவியைப்பற்றிச் சொல்லுவதில் பயனில்லை. உன் நிலை என்னுடையதைப்போல் ஆகும்வரை, என் நிலைமை ஒரு கதை போல்தான் உனக்குத் தோன்றும். என் கஷ்டத்தை இன்னொருவனுடையதோடு ஒப்பிடவேண்டாம். அவன் உப்பைக் கையில் வைத்திருக்கிறான்; நான் அதைப் புண்ணில் வைத்திருக்கிறேன்.

## 59

ஹமதான் நகரத் தலைவர் அவ்வூர் லாடங்கட்டு பவன் மகளிடம் அடங்காக் காதல் கொண்டு விட்டார். அவர் உள்ளம் என்ற லாடம் காதல் உலையில் நன்ருகக் காய்ந்துவிட்டது. அவருக்கு எதுவுமே ஓடவில்லை. அவர் புலம்பினுர்: "அவள் என் உள்ளத்தை என் கையிலிருந்து வாங்கித் தன் காலடியில் போட்டு மிதித்துவிட்டாள். அவள் நஞ்சுக் கண்கள் என்னை நிலை கலங்கச் செய்கின்றன..."

அவளுக்கு இது சற்றும் பிடிக்கவில்லை. ஒரு நாள் வழியில் இருவரும் சந்தித்தனர். அவள் அவரைத் 'திட்டிக் கல்லால் அடித்து விரட்டினுள். ஆனுல், அவருக்கோ காதலியின் அடிகள் பேரீச் சங்கனி தின்பது போல் இனிமையாய் இருந்தன. அவருடைய இனிய வாயில் அவர் கை உணவை ஊட்டுவதைவிட, அவள் கை அவர் கன்னத்தில் அறைவது அதிக இன்பந் தருவதாய் இருந்தது. "நன்ருகப் பழுக்காத திராக்ஷை புளிக்கும்; கொஞ்ச நாள் பொறுமையோடிருந்தால் இனிப்பாகிவிடும்" என்று அவர் தம் ஆவலுக்கு அணைகட்டி வைத்தார்.

அந்நகரிலுள்ளோர் அவருக்கு நற்புத்தி கூறினர். நகரின் தலைவர் இத்தகைய இழிவான முறையில் செல்லக்கூடாது என்று எடுத்துக் காட்டினர். ஐம்பதாண்டுகள் செய்த நல்ல காரியங்களால் ஏற்படும் நற்பெயரை ஒரு தீய செயல் நாசமாக்கிவிடும் என்று இடித்துக் கூறினர்.

இந்நல்லுரைகளுக்குத் தலைசாய்ப்பதாக அவர் கூறினர். "எனினும், நான் தலை நசுங்கிய பாம்பு; எங்கும் அசைய முடியாது" என்றார். அவருடைய காதல் பொறுமை அணையையும் கடந்தது.

அந்த அழகிக்குப் பல வெகுமதிகளை அனுப்பினர்; தூதும் அனுப்பினர்.

இரும்பு போன்ற உடலுள்ளவனானாலும் தங்கத்தின் முன் வளைந்து கொடுக்கிறான். தங்கம் வைத்திருப்பவன் பக்கம் தராசு சாய்கிறது. லஞ்சங் கொடுக்க முடியாதவனுக்கு அதிகாரத்திலுள்ளோர் நட்புக் கிடைப்பது கடினம்.

கடைசியில் ஒரு நாள் மாலை அவர் அவளைத் தனியாகச் சந்தித்தார். அன்றிரவு அவர் வயிற்றில் மதுவும், கைகளுள் மங்கையுமாகச் சுகித்திருந்தார்.

இச்சேவல் வழக்கம் போல் கூவாது; காதலன் இன்னும் தன் காதல் களியாட்டத்தை முடிக்கவில்லை.

அதாபக் அரசரின் அரண்மனையிலிருந்து காலை நகராவின் ஒலி எழும்வரை அக்குரும்புக்காரக் காதலன் மயங்கிவிடாது பார்த்துக்கொள். அதரங்கள் அதரங்களை மூடட்டும். அந்த உண்மைச் சேவல் கூவும்வரை அவை சேர்ந்தே இருக்கட்டும்.

இந்நிலையிலிருந்த அந்தக் கிராமத் தலைவரிடம் அவர் பணியாள் வந்து இரைந்தான்: "இன்னுமா படுக்கையில் புரள்கிறீர்கள்? உங்கள் எதிரிகள் வதந்தியைப் பரப்பிவிட்டனர். இல்லை, அவர்கள்

பரப்பியது உண்மையைத்தான். எழவிருக்கும் கேடெனும் நெருப்பை முன்னெச்சரிக்கை என்ற நீரால் அவிப்பது இலகு. நாளை (ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்) அது பெரு நெருப்பாக எழுந்துவிட்டால் உலகையே விழுங்கிவிடலாம்.''

அவர் அப்பணியாளை நோக்கிக் கூறினர்: "சிங்கம் தன் வேட்டையில் கை வைத்துவிட்டது. இனி நாயின் குரைப்புக்கு அது மிரளாது. என் எதிரி பொருமை யென்ற கையைச் சொறிந்து கொண்டிருக்கட்டுமே!"

அதே இரவு விஷயம் அரசருக்கு எட்டிற்று. தன் நாட்டில் ஓர் ஊர்த் தலைவன் இத்தகைய அக்கிரமஞ் செய்வதை அவர் கேள்விப்பட்டார். இது ஒரு வேளை எதிரிகளின் சூட்சியாய் இருந்தாலும் இருக்கலாம். எனவே, இதை நேரில் கண்டாலொழிய ஒரு நடவடிக்கையும் எடுப்பதில்லை என்று அரசர் தீர்மானித்தார்.

அவசரப்பட்டுக் கோபம் என்ற கத்தியில் கையை வைத்தால், பின்னர் அதே கையை ஆற்ருமை என்ற பல்லில் வைக்கும்படி நேருமல்லவா!

மறு நாள் அதிகாலையில் பொறுக்கியெடுத்த ஒரு சிலருடன் அரசர் அவர் சயனக் கிரஹத்துள் நுழைந்தார். விளக்குகள் இன்னும் எரிந்து கொண்டிருந்தன. கிண்ணம் உடைந்து கிடந்தது. காதலி படுக்கையிலிருந்தாள். அவர் மது மயக்கத்தில் அரசர் வந்ததையும் உணராது விழுந்து கிடந்தார். "சூரியன் உதித்துவிட்டான், எழுந்திரும்'' என்று அரசர் அவரை எழுப்பினர். அவ

ருக்குச் சற்றே சுய உணர்வு உண்டாயிற்று. தன் நிலையை உணர்ந்தார். "எத்திசையில் சூரியன் உதித்திருக்கிறுன் ?" என்று கேட்டார். "ஏன், வழக்கம் போல் கிழக்கில்தான்" என்று ஆச்சரியத் தோடு அரசர் கூறினர்.

அவர் சொன்னர்: "எல்லாப் புகழும் இறைவ னுக்கே. பாவ மன்னிப்பென்னும் கதவு இன்னும் அடைபடவில்லை. சூரியன் மேற்கிலிருந்து உதய மாகும் வரை பாவ மன்னிப்பென்னும் கதவு திறந்தே வைக்கப்பட்டிருக்கும். நான் பாவத்துக்கு மன்னிப் புக் கேட்பதாகச் சத்தியம் செய்கிறேன். இறை வனின் மன்னிப்பை நான் கேட்பேன். என் மனே பலமற்ற நிலையும், துரதிர்ஷ்டமும் இத்தகைய பாவத்துள் என்னை ஆழ்த்திவிட்டன. தாங்கள் என்னைத் தண்டிப்பதானல் அது முறைதான். ஆனல், எனக்கு மன்னிப்பளித்தால்... தண் டனையைவிட மன்னிப்புத்தானே சிறந்தது!"

அரசர் பதிலிறுத்தார் : "கைசேதமுறவேண்டிய காலம் கடந்துவிட்டது. நான் உமக்கு மரண தண்டனை விதித்துள்ளேன் என்பதைத் தெரிந்து கொள்ளும்."

திரும்பவும் கன்னம் வைக்க முடியாத திருடன் வருந்துவதால் பயன் என்ன? அந்த நெட்டையனைப் பழக் கொத்தைவிட்டுக் கையை எடுக்கும்படி எச்சரியுங்கள். குட்டையனுக்குக் கிளை எட்டாது. ருஜுவான குற்றத்தை விட்டுத் தப்புவது இலகுவானதா ?

அரசர் அவரைக் கைது செய்யும்படி உத்தர விட்டார். "தங்கள் சமூகத்தில் கேட்கக்கூடிய இன்னும் ஒரே ஒரு விஷயமுண்டு" என்ருர் அவர். அரசர் அவரை நோக்கினர். அவர் சொன்னர்: "தாங்கள் என்னை எவ்வளவுதான் வெறுத்தாலும் நான் தங்கள் பாதத்தை விடமாட்டேன். என் பாவங் களுக்கு எனக்கு ஒரு வேளை மன்னிப்புக் கிடைக்கா மலிருக்கலாம்; ஆனல், தங்கள் கருணை நிச்சயம் கிட்டும் என்று நான் நம்புகிறேன்.''

அரசர் பதில் சொன்னர்: "நீர் மிகுந்த சாதுர்ய மாகப் பேசுகிறீர். இருப்பினும், உம் திறமைக்காக நீதியை விட்டு விலகி உமக்கு உயிர்ப் பிச்சை தருவது சட்டவிரோதமாகும்; இயற்கைக்கும் பொருந்தாது. ஆகவே, மற்ருேர்க்கு ஒரு படிப்பினையாக உம்மை மதிலின்மேல் கொண்டுபோய் நிறுத்தி அகழினுள் தள்ளும்படி உத்தரவிடுகிறேன்.''

அவர் சொன்னர்: ''உலகத்துக்கு அதிபதியே, நான் தங்கள் வளர்ப்புப் பிள்ளை. இக்குற்றம் செய்த வன் நான் மட்டுமன்று. எத்தனையோ பேர் விபசாரஞ் செய்கின்றனர். அவர்களுள் ஒருவனை முதலில் மதிலிலிருந்து கீழே தள்ளினல் நானும் அதைப் பின் பற்றுகிறேன்."

அரசர் இது கேட்டுச் சிரித்து அவரை மன்னித்து விட்டார். அவர்மீது குற்றஞ் சுமத்தியவர்களைப் பார்த்துச் சொன்னர்: "யாவருமே உங்கள் சொந்தப் பாவங்களைச் சுமக்கிறீர்கள். மற்ருேரின் தவறுதல் களைக் கண்டு அவர்களைக் குறை கூருதீர்கள். தன் தவறுகளை உணர்பவன் மற்ருேர் தவறுகளைத் தம் பட்டமடிக்கமாட்டான்."

## அத்தியாயம் 6

## முதுமைபற்றி

### 60

ஒரு கிழவன் தன் கதையைக் கூறிக்கொண்டிருந்தான்; "நான் ஓர் இளம் கன்னியை மணந்து கொண்டேன்; படுக்கையறையை மலர்களால் அலங்கரித்தேன். அவளருகே இருந்துகொண்டு என் மனத்தையும், நயனங்களையும் அவள்மீது பதியச் செய்தேன். அவளுடைய நாணத்தை யகற்றிச் சகஜமான நிலையை ஏற்படுத்த எத்தனையோ இரவுகள் நான் தூங்காமலிருந்துகொண்டு வேடிக்கையான கதைகளைக் கூறி அவளைப் பரவசப்படுத்தினேன்.

ஒரு நாள் இரவு அவளிடம் சொன்னேன் : "உனக்கு நல்லதிர்ஷ்டம் பிறந்துவிட்டது. செல்வம் என்ற கண்கள் உன்னை நன்கு விளித்து நோக்குகின்றன. காரணம், என் போன்ற வயதிலும், அனுபவத்திலும், அறிவிலும், வாழ்க்கையின் நன்மை தீமைகளிலும் முதிர்ந்த அனுபவமுடைய ஒருவனை நீ அடைந்துவிட்டாய். என்னைப் போல் இத்தனை அன்பாகத் தன் காதலியிடும் கட்டளைகளை வேறு யாராவது நிறைவேற்றுவான் என்று நீ எண்ணுகிறாயா? நீ மகிழ்ச்சி பெற நான் எத்தனை இன்பமான கதைகள் கூறுகிறேன்! என் சக்திக்கு இயன்ற அளவு நான் உன்னிடம் அன்போடு நடந்துகொள்வேன். நீ என்னிடம் அன்பு காட்டாவிட்டாலும் நான் என் அன்பு முழுமையையும் உன்மீதே சொரி

வேன். நல்ல வேளையாக நீ அகம்பாவம் பிடித்த, எதிலும் யோசனையின்றிக் குதிக்கக்கூடிய முரட்டு இளைஞன் எவன் கையிலும் அகப்படவில்லை. அவ் விதம் அகப்பட்டிருந்தால் அவன் தன் காம வெறியை மட்டும் தணித்துக்கொண்டு பின்னர்ப் புதுப் பொருளை நாடிப் போய்விடுவான்; ஒவ்வோர் இரவும் வெவ்வேறு இடங்களில் சயனிப்பான்; ஒவ்வொரு பகலும் புதுப்புது ஆசை நாயகியைத் தேடி அலைவான். இளைஞர்கள் மிகுந்த சக்தியும் வனப்புமுள்ளவர்கள்தாம். ஆனால், அவர்களை நீயும் நம்ப முடியாது; நானும் நம்ப மாட்டேன். கணத்துக்குக் கணம் புதுப் புது மலரை நாடிச் செல் லும் வண்டிடம் சபலத்தையன்றி வேறு எதையும் காண முடியாது. ஆனால், என் போன்றவன் எதிலும் மிதமாய் இருப்பான். உன்னைவிட உயர்ந்த வர்களோடல்லவா நீ வாழவேண்டும்! உனக்குச் சமமானவர்களோடு வாழ்ந்தால் அந்தஸ்தேது?''

இவ்விதம் அந்தக் கிழவன் அவளோடு சல்லாப மொழி பேசி, அவளும் அதில் மயங்கிவிட்டதாக மனப்பால் குடித்தான். ஆனால், அவள் மார்பகங் கள் விம்மி அடங்கும்படி பெருமூச்சு விட்டாள். ''நீர் இவ்வளவு நேரம் பேசியது என்னைச் சீராட்டி வளர்த்தவள் சொன்ன ஒரு வாக்கியத்துக்கு ஈடா காது.* உம் போன்ற கிழவன் என்னை யொத்த கன்னியைத் தழுவுவதைவிடக் கூரிய வேலை எம் நெஞ்சில் பாய்ச்சிவிடலாம்'' என்றாள் அக்கன்னி.

---

* ''உயிருள்ள கிழவனைக் கட்டியழுவதைவிட வாலிப னின் புதைகுழியைக் கட்டியழுவது நலம்'' என்று தமது பெண்களிடம் தாய்மார்கள் கூறுவதுண்டு.

கணவனுல் திருப்தி செய்யப்படாத மனைவி இருக்கும் வீட்டில் எப்போதும் சண்டையும், பூசலும் இருந்துகொண்டே இருக்கும். கோலின் உதவி யின்றி எழுந்திருக்க இயலாத கிழவன், தன் ஆண் மையை எவ்விதம் எழச் செய்வான்?

கடைசியில் இருவருக்கும் ஒத்துவராததால் இருவரும் பிரிந்துவிட்டனர். சட்டப்படி தனியாய் இருக்க வேண்டிய காலம் கழிந்ததும், அப்பெண்ணை நற்குணமற்ற, முரட்டு, ஏழை இளைஞன் ஒருவனுக்கு மணம் முடித்து வைத்தனர். அவள் எவ்வளவோ கொடுமைக்கும் பலவந்தத்துக்கும் உள்ளானுள்; வறுமைக்கும் துன்பத்துக்கும் ஆளானுள். எனி னும், அவள் இறைவனைப் புகழ்ந்து கூறினுள்: "அல்லா(ஹ்)வே, அந்த நரகின் சித்திரவதையி லிருந்து தப்பி, இந்த நிரந்தர இன்பத்தை நான் அடைந்ததற்காக உன்னை எந்த நாவால் புகழ் வேன்!"

உன் முரட்டுத்தனம், இரக்கமின்மை ஆகிய வற்றிடையிலும் உன்னோடு நான் இன்பமாக வாழ்கி றேன். காரணம், நீ வாலிபன். உன்னோடு நரகின் நெருப்பில் எறியப்படுவதுகூட, மற்றொருவனோடு சுவர்க்கத்தில் வாழ்வதைவிட எனக்கு இன்பந் தரு வதாகும். என் அழகனின் வாயிலிருந்து வீசும் பூண்டு நாற்றமும் விருத்தன் கையிலுள்ள ரோஜா வின் மணத்தைவிட இனிமையானது.

## 61

வாலிப முறுக்கால் நான் ஒரு நாள் பாலை மண லில் வெகு வேகமாக நடந்தேன். அன்று மாலை

யில் நான் ஒரு மணல் திட்டில் களைப்படைந்து உட்கார்ந்துவிட்டேன். ஒரு முதிர்ந்த கிழவர் ஒட்டகப் பாதையைப் பின்பற்றியே நடந்து நான் இருந்த இடம் வந்துசேர்ந்தார்.

"இங்கு ஏன் உட்கார்ந்திருக்கிருய்? இது களைப் பாறச் சரியான இடமன்று. எழுந்திரு!" என்று அவர் என்னை எழுப்பினர்.

நான் சொன்னேன் : "எழுந்து நிற்கக் காலற்ற நான் எவ்விதம் நடப்பேன்?"

அவர் கூறினர் : "மெதுவாகவே நடந்து சென்று ஓரிடத்தில் தங்குவது, வேகமாக ஓடி இடை யில் விழுவதைவிட நலம் என்ற அறிஞர் மொழியை நீ கேள்விப்பட்டதில்லையா?"

உன் பிரயாணத்தின் இலக்கை அடைய விரும் பும் நீ அவசரப்படாதே! மெதுவாக நடந்து கொண்டே இரு. அரபிக் குதிரை வேகமாக நடந்து விரைவில் களைப்படைந்து நின்றுவிடுகிறது. ஒட்டகமோ மெதுவாக நடந்து, இரவு பகலாய் பிர யாணஞ்செய்து தன் இலக்கை அடைந்துவிடுகிறது.

## 62

எப்போதும் மகிழ்ச்சியும், குதூகலமும், சுறுசுறுப் பும், இனிமையான பேச்சும் உடைய இளைஞன் ஒரு வன் எங்கள் கூட்டத்தில் சேர்ந்திருந்தான். பிறகு அவன் பிரிந்து போய்விட்டான். பல ஆண்டு களுக்குப் பின்னர் அவனை ஓரிடத்தில் சந்தித்தேன். அப்போது அவன் மனைவி, குழந்தைகள் உள்ள குடும்பஸ்தனுய் விளங்கினுன். அவன் முகத்தில்

சோகம் படர்ந்திருந்தது. அவன் குதூகலத்தின் இனிமை உலர்ந்து போய்விட்டது. "ஏன் இப்படி யாகி விட்டாய் ?" என அவனிடம் வினவினேன். அவன் சொன்னான்: "நான் குழந்தைகளுக்குத் தந்தையானதும் குழந்தைபோல் விளையாடுவதை விட்டுவிட்டேன்" என்று.

இப்போது நீ முதுமையடைந்து விட்டதால் சிறுபிள்ளைத்தனத்தைக் குழந்தைகளுக்கே விட்டு விடு ! முதியவனிடம் இளமையின் விளையாட்டை எப்படிக் காணமுடியும் ? ஆற்றில் கீழே போகும் தண்ணீர் மீண்டும் மேலே வராது. பச்சையாய் இருந்த பயிர் தலை நிமிர்ந்து நின்றது. இப்போது கதிர் முற்றிவிட்டதால் தலைசாய்ந்து வீட்டது. ஆஹா ! அந்த இன்பகரமான நாட்களை எண்ணிப் பார்க்கையிலே... !

## அத்தியாயம் 7

# கல்வியைப்பற்றி

### 63

ஒரு பக்கீர் நூறு தப்புச் செய்தாலும் அவரோடிருப்பவர்கள் அதில் ஒன்றையும் கவனிப்பதில்லே. ஆனல், ஓர் அரசன் ஒரு முட்டாள்தனமான வார்த்தை சொல்லட்டும், மறு கணமே அது ஒவ்வொரு நாட்டிலும் எதிரொலிக்கும்.

### 64

நியாயவாதி ஒருவரின் மகன் தன் சிறிய தகப்பனின் பெருஞ் சொத்துக்கு வாரிசானுன். பின்னர் அவன் கேளிக்கைகளிலும், சூதிலும், டம்ப வாழ்க்கையிலும் பொருளே விரயஞ் செய்ய ஆரம்பித்தான். அவன் செய்யாத பாவமில்லே; குடிக்காத கள் இல்லே.

ஒரு நாள் நான் அவனேச் சந்தித்தபோது இவ்விதம் புத்திமதி கூறினேன் : "மகனே, வருவாய் அணேயில் தேக்கப்படவேண்டிய தண்ணீராகும். செலவோ அதனுல் சுழலக்கூடிய யந்திரமாகும். பெருஞ் செலவு செய்யப் பெருத்த வருவாய் இருக்க வேண்டும். புத்திமதிக்கும், பகுத்தறிவுக்கும் இடங் கொடு. சோம்பலேயும் அறிவீனத்தையும் விலக்கு. உன் கையிலிருப்பது காலியானுலோ நீ துன்பப்பட வேண்டியதாகும்."

போக மயக்கத்தில் இருந்த அவன் என் அறிவுரைகளேப் புறக்கணித்தான். மேலும் சொன்னுன் : "இன்று நாம் அனுபவிக்கும் சுகங்களே என்ருே வரக்கூடிய இருண்ட நாட்களேப்பற்றிப் பேசிக்

கெடுப்பது அறிவுடைமை யன்று. அதிர்ஷ்ட தேவதையின் முழு நோக்குக்கும் ஆளாகி யிருக்கும் எனக்குத் தங்கள் புத்திமதி அவசியமில்லை. என் தாராளம் யாவராலும் புகழப்படுகிறது.''

எனது போதனை பயனற்றுப்போயிற்று. எனது சூடான மூச்சு அந்தக் குளிர்ந்த இரும்பில் உறைக்க வில்லை.

சிறிது காலத்துக்குப் பின்னர் நான் அவனிடஞ் சொன்னது உண்மையாயிற்று. அவன் கந்தல் உடை யணிந்துகொண்டு வீட்டுக்கு வீடு பிச்சை கேட்டு அலைந்துகொண்டிருந்தான். அவனுடைய பரிதாப நிலை கண்டு என் மனம் இளகிற்று. ஆனால், இக் கஷ்ட நிலைமையில் நானும் அவன் மனத்தைப் புண் படுத்துவது சரியன்று எனப் பேசாதிருந்தேன்.

பண வெறியில் சோம்பேறியான ஊதாரி தன் கஷ்ட காலம் ஒன்று வரும் என்பதையே மறந்து விடுகிறான். கோடையில் இந்த மரம் பழம் நிரம்பி இருக்கிறது. அதன் பயனாய்க் கூதிர் காலத்தில் இலைகள்கூட இல்லாமல் ஆகிவிடுகிறது.

## 65

ஓர் அரசன் தன் மகனை ஒரு குருவினிடம் ஒப் படைத்துக் கல்வி புகட்டுமாறு கேட்டுக்கொண்டான். "இவன் உங்கள் சொந்தக் குழந்தை. உங்கள் சொந் தக் குழந்தைக்குப் போதிப்பது போல் இவனுக்கும் போதியுங்கள்''என்று கூறினான்.

சில வருஷங்கள் அந்த ஆசான் தன்னால் இயன்ற அளவு வரை அவனுக்குக் கல்வி போதித் துப் பார்த்தார். அவருடைய குழந்தைகள் கல்வி

யில் திறம்பட முன்னேறினர். ஆனல், அரசன் மகனுக்குக் கிரஹிக்கும் சக்தியே இல்லை. சர்வ முட்டாளாகவே விளங்கினன்.

அரசன் குருவைக் குறைகூறினன். "நீர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டீர். நான் பேசிய ஒப்பந்தத்தைப் புறக்கணித்துவிட்டீர்" என்ருன்.

குரு சொன்னர், "கல்வி யாவருக்கும் ஒன்றுதான். ஆனல், அதைக் கிரஹிக்கும் சக்திதான் வித்தியாசப்படுகிறது" என்று.

வெள்ளியும் தங்கமும் மண்ணிலிருந்துதான் எடுக்கப்படுகின்றன. ஆனல், அவை எல்லா மண்ணிலுமா அகப்படுகின்றன?

## 66

ஒரு குரு தன் சீடனிடம் இவ்விதம் சொன்னர்: ஆதி பிதா ஆதமுடைய மக்கள், தம் வயிற்றுப் பாட்டுக்கு எடுத்துக்கொள்ளும் சிரத்தையை ஆண்டவனைத் தொழுவதில் எடுத்துக்கொண்டால் சுவர்க்கத்தில் வானவர்களைவிட உயரிய இடம் பெற்றுவிடுவார்கள்.

நீ பிரக்ஞையற்ற ஜந்துவாய் உன் தாயின் கர்ப்பத்திலிருந்தபோதும் இறைவன் உன்னைப் புறக்கணித்துவிடவில்லை. அவன் உனக்கு ஆத்மாவும், அறிவும், உணர்ச்சியும், புத்தியும், யோசனையும், பேச்சும், நிதானமும், அறியும் சக்தியும், யோசிக்கும் தன்மையும் தந்தான்; உன் கைகளிலே பத்து விரல்களையும், உன் தோளிலே இரண்டு கைகளையும் பொருத்தினன். ஒன்றுக்கும் உதவாத மனி

தனே, இப்போதும் அவன் உன் அன்ருட உணவைத் தர மறந்துவிடுவான் என்று நீ எண்ண முடியுமா?

67

ஓர் அரபி தன் மகனுக்குச் செய்த உபதேசமாவது: குழந்தாய், நியாயத்தீர்ப்பு நாளில் இறைவன் நீ என்ன செய்தாய் என்று கேட்பானே தவிர, நீ யார் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று கேட்க மாட்டான். அதாவது, நீ செய்த வேலைகள் எவை எவை என்று கேட்பானேயன்றி, உன் தந்தை யார் என்று கேட்க மாட்டான்.

கஃபாவில் போர்த்தப்பட்டிருக்கும் போர்வையை ஹஜ்ஜுக்குச் செல்பவர்கள் பக்தியோடு முத்தமிடக் காரணம் அது பட்டுத் துணியாக இருப்பதன்று; புனிதமான இடத்தோடு ஐக்கியப்பட்ட அதுவும் புனிதமான தன்மையுள்ளதாகிவிட்டது என்பதனுல்தான்.

68

தேள் மற்றப் பூச்சிகளைப் போல் பிறப்பதில்லை. அது தன் தாயின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு தான் வெளிப்படுகிறது. தேள் இருக்கும் பொந்துகளில் தேளின் உடல் வெடித்துக் கிடப்பதே இதற்குத் தக்க சான்ருகும்.

இவ்விநோதமான விஷயத்தை நான் ஒரு பெரியாரிடம் சொன்னேன். "ஆமாம், குழந்தைப் பருவத்தில் ஒருவன் தன் பெற்ருேர்களிடம் எப்படி நடந்துகொள்கிருனே அவ்விதமே அவனுடைய விருத்தாப்பிய தசையில் அவன் குழந்தைகள்

அவனிடம் நடந்துகொள்ளுவர் என்பதற்கு இது ஒரு சான்றுதான் என்ருர் அவர்.

## 69

ஒரு பையன் பெரியார் ஒருவரிடஞ் சென்று தக்க பருவமுள்ளவனுனதற்கு அடையாளமென்ன என்று கேட்டான்.

அவர் சொன்னுர்: ''சாஸ்திரங்களில் இதற்கு மூன்று அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கின் றன. அவை, முறையே பதினைந்து வயதடைதல், இந்திரியம் வெளியாதல், வெட்கஸ்தலத்தில் மயிர் முளைத்தல் ஆகியவையாகும் என்று. ஆனுல், நான் சொல்கிறேன், உண்மையில் இதற்கு ஒரே ஓர் அடையாளந்தான் உண்டு என்று. உன் கீழான உணர்ச்சிகளுக்கு அடிமையாவதினின்று விலகி, இறைவனின் சேவையில் நீ ஈடுபடும் பருவமே தக்க பருவமாகும்.''

ஒரு துளி (விந்து) நீர் கருக்குழியில் நாற்பது நாட்கள் தரிபட்டதுமே மனித உருப் பெறுகிறது. ஆனுல், நாற்பது வருஷங்கள் கழிந்த பின்னும் எவ னுக்குச் சரியான பொறுப்பு உணர்ச்சி உண்டாக வில்லையோ அவனை மனிதன் என்று கருத முடியாது.

மனிதன் ஸ்தூல உருவம் மட்டும்தான் என்று எண்ணவேண்டாம்; தயாளமும், இன் சொல்லும், நற்குணமும் அவனுடைய உள் அம்சங்களாய் இருக்கவேண்டும். மனிதத் தன்மைக்கு நற்செய்கை இன்றியமையாததாகும். காவியைக்கொண்டு சுவ் ரில் மனித உருவைத் தீட்டிவிட முடியும். நற்

செயலும் கருணையுமற்றவனுக்கும் சுவரிலுள்ள சித்திரத்துக்கும் என்ன வித்தியாசம்? உன் அறிவு உலகு முழுவதையும் அடிமைப்படுத்துவதற்கன்று; ஒரே ஒருவனை - உன்னுள் உள்ள 'தான்' என்பவனை - வெற்றிகொள்வதற்கே அதைப் பெற்றிருக்கிறாய்.

## 70

மக்காவுக்குச் சென்றுகொண்டிருந்த ஹஜ் யாத்ரீகர்களுக்கிடையே கலகம் மூண்டது. சச்சரவு பெரிதாயிற்று. இதைக் கண்ட ஒரு பெரியவர் இன்னொரு பெரியவரிடங் கூறினர்: "சதுரங்க விளையாட்டில் பலகையின் உச்சிக்குப் போகும் சாதாரணச் சிப்பாய் ராணியாகிவிடுகிறது. அது மேலே செல்லச் செல்ல நல்ல நிலையடைகிறது. ஆனால், நமது சிப்பாய்களோ - கால் நடையாகச் செல்லும் பிராணிகள்-மக்காவை நெருங்க நெருங்க கீழ்த்தரமானவர்களாகி வருகின்றனர்."

நீ உண்மையில் ஹஜ்ஜுக்குச் செல்பவனா? முள்ளைத் தின்று பொறுமையாய் உன்னைச் சுமக்கும் ஒட்டகம் வெறும் பிண்டத்தைச் சுமப்பதுதான்.

## 71

கண்ணோய் கண்ட ஒருவன் மிருக வைத்தியரிடஞ் சென்று கண்ணுக்கு ஏதாவது மருந்து போடும்படி கேட்டுக்கொண்டான். அந்த வைத்தியர் வழக்கமாக மிருகங்களின் கண்ணுக்குப் போடும் மருந்தை அவன் கண்ணுக்குப் போட்டார். இதனால் அவன் கண் குருடாகிவிட்டது.

அவர்கள் இருவருக்குமிடையே சச்சரவு உண்டாகி ஊர்த் தலைவரிடம் வழக்கைக் கொண்டு

சென்றனர். அவர் சொன்னுர் : "இக் குருடனுக்குக் கண் போனது போனதுதான். இவன் ஒரு கழுதை யாக இல்லாவிட்டால் மிருக வைத்தியரிடஞ் சென்று மருந்து கேட்பானு?" என்று.

இதிலிருந்து அறியும் நீதியாவது, ஒரு விஷயத் தில் பழக்கமற்ற ஒருவனை அந்த முக்கிய விஷயத் தில் ஈடுபடுத்துவது, அவ்வாறு ஈடுபடுத்துபவ னுக்கு இழுக்கைச் சேர்க்கும். மேலும், அவன் அறி வுத் திறமையையும் மற்ருேர் இகழ்வர். பாய் நெய் பவன், நெய்தல் தொழில் செய்பவனுனுலும், அவ னைப் பட்டு நெய்யச் சொல்ல முடியாது.

**72**

மார்க்கஞானி ஒருவரின் புத்திரன் இறந்து போனுன். அவனுடைய கல்லறையின்மீது என்ன எழுதலாம் என்று அவரிடம் கேட்கப்பட்டது. "திரு குர்ஆன் வாக்கியங்கள் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவை. அவற்றை எழுதினுல் பிற்காலத்தில் மனிதர் காலால் மிதிக்கப்படவும், நாய்கள் அசுத்தப் படுத்தவும் ஏதுவாகலாம். எனவே, ஒரு ஞாபகச் சின்னமாக ஏதாவது கட்டாயம் எழுதவேண்டுமா னுல் இதை எழுதுங்கள்" என்று அவர் சொன்னுர் :

நான் : இந்தத் தோட்டத்தில் உன் ஜீவனின் சக்தியாகத் தளிர்க்கரம் நீட்டும் பச்சைச் செடிகள் கண்டு என் மனம் துள்ளுகிறது.

அவன் : திரும்பவும் வசந்தம் வரும்வரை பொறுமையோடிரு. அப்போது என் தூசியிலிருந்து கிளர்ந்தெழுந்து என் மேல் சிரித்த மலர்கள் குலுங்க நிற்கும் செடிகளைக் காணலாம்.

## 73

ஒரு பணக்காரன் தன் அடிமையைக் கட்டி வைத்துச் சித்திரவதை செய்வதைக் கண்ட ஒரு பெரியவர் சொன்னார் : "மகனே, சர்வ வல்லமை யுள்ள இறைவன் உன்னைப் போன்ற மனிதனையே உனக்குக் கீழ்ப்பட்டவனாகப் படைத்து அவன்மீது அதிகாரஞ் செலுத்தும் சக்தியை உனக்குத் தந் திருக்கிறான். அந்த நீதியாளனுக்கு நீ நன்றி தெரிவி. இவனை இத்தனை கொடுமையாக நடத்தாதே. நடத் தினால், இறுதிநாளில் உன்னைவிட அவன் உயர்ந் தவனாகிவிடுவான்.

கேவலம், பத்து திர்ஹம் கொடுத்து அவனை விலைக்கு வாங்கலாம். ஆனால், உன்னால் அவனைச் சிருஷ்டிக்க முடியுமா? எத்தனை நாளைக்கு உன் ஆண வமும், கொடுமையும், அதிகாரமும் செல்லும் என்று நினைக்கிறாய் ! உன்னைவிடப் பலம் பொருந்திய எஜமானன் ஒருவன் இருப்பதை நினைவுகூர். ஆமாம், நீ அடிமைகளுக்கும், சிறு பிரபுக்களுக்கும் எஜமானனாக இருக்கலாம். ஆனால், உனக்கும் சர்வ வல்லமையுள்ள எஜமானன் ஒருவன் இருப்பதை எண்ணிப்பார் !

நபிபெருமான் (ஸல்) அவர்களின் திருவாக்கு ஒன்றுண்டு. "நியாயத்தீர்ப்பு நாளில் நல்ல அடிமை சுவர்க்கத்துக்கும், துஷ்ட எஜமான் நரகத்துக்கும் செல்லும் காட்சி மிகப் பரிதாபமானதாய் இருக்கும்" என்பதே அது.

## 74

நான் பால்பக்கிலிருந்து ஒரு கூட்டத்தாரோடு பிரயாணஞ் செய்துகொண்டிருந்தேன். அக்கூட்

டத்தில் மகா பலசாலியான இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் அனுபவமே அறியாதவன்; செல்வத்தில் புரண்டவன்.

நானும் அந்த இளைஞனும் யாவருக்கும் முன்னுல் வேகமாக ஓடிச் சென்ருேம். வழியில் காணும் பாழ் சுவர்களைத் தன் தோளால் கீழே தள்ளவும், பெரிய மரங்களை அனுயாசமாகப் பிடுங்கி எறியவுமாக அவன் பாடிக்கொண்டே வந்தான், "யானை எங்கே, வீரனின் பலத்தை அறிய ? சிங்கம் எங்கே, வீரனின் பிடியின் ருசியை அறிய ?'' என்று.

வழியில் இரண்டு கள்ளர்கள் ஒரு குன்றின் மறைவிலிருந்து வெளிப்பட்டுக் கையில் கத்தி தடிகளோடு எங்களை வெட்டிவிடுபவர்கள்போல் வந்து நின்றனர். அந்த இளைஞனுடைய திறமையையும், திடத்தையுங் காட்டும்படி நான் அவனிடங் கூறினேன். ஆனுல், அவன் கையிலிருந்த வில் நழுவியது; அவன் உடல் நடுங்கியது. எங்களுக்கு எதிரிகளிடம் சரணடைவது தவிர, வேறு வழியில்லை என்ருயிற்று. எங்களிடமிருந்த பணத்தை அவர்கள் கவர்ந்து சென்றனர். நாங்கள் உயிர் தப்பினேம்.

சிங்கத்தையும் கயிறு கட்டி இழுத்துவரும் முக்கிய காரியத்தை அனுபவசாலியிடம் ஒப்படைக்க வேண்டும். அனுபவமற்ற இளைஞன் சிங்க வீரமும், யானைப் பலமும் பெற்றிருந்தாலும் எதிரியின் முன் நடுநடுங்கி நின்றுவிடுவான். அறிஞர்கள் சட்ட நுட்பத்தைத் தெளிவுபடுத்தத் தகுதி வாய்ந்தவர்களாக இருப்பதுபோல, அனுபவசாலிதான் போர்க்களத்தின் இரகசியங்களை அறிந்துவர முடியும்.

## அத்தியாயம் 8

## கடமைகள்பற்றி

### 75

உழைத்தும் பயன் துய்யாதவனும், கற்றும் அதனுல் பயன் பெருதவனும் ஒரே வகையினர்தாம். முன்னவன் செல்வஞ் சேர்த்தும் செலவு செய்யாதவன்; பின்னவன் அறிவு தேடியும் அதைக் கொண்டு ஆக்கந் தேடாதவன்.

நீ ஏட்டளவில் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அனுஷ்டானமின்றேல் அறிவற்றவனே. நீ ஞானியுமல்லன்; அறிஞனுமல்லன்; புஸ்தக மூட்டையைச் சுமக்கும் மிருகமே. அந்த மிருகத்தின் அறிவற்ற மூளை தான் சுமப்பது விறகுக் கட்டா, அரிய நூற்களா என்பதை எப்படி அறியும்?

### 76

நாடு அறிஞரால் அணி பெறுகிறது; சமயம் சான்ருேரால் அழகு பெறுகிறது. கூர்த்த மதியினர்க்கு அரசர் கேண்மை அவசியமன்று. ஆனுல், அரசருக்கோ கூரிய மதியுடையார் தோழமை இன்றியமையாதது. ஹே அரசனே, கற்ருேரிடம் உன் வேலையைச் சொல்! அது அரசியல் பண்டிதன் விரும்பாததாக இருந்தாலுங்கூட அவ்விதமே செய்.

### 77

ஒருவரிடம் ஒன்றைச் சொல்லவேண்டுமானுல் அதைப் பணிவோடு நயமாகச் சொல்; கோபக்

குரலில் சொன்னால் அது மதுரம் போல் இருந்தாலும் கேட்பவர் காதில் கசப்பாகவே படும்.

தீயோர்க்கு உதவி புரிதல் நல்லோர்க்குத் தீமை செய்வதாகும். மக்களை வாட்டிய துஷ்டனின் குற்றத்தை மன்னித்தல் வாட்டமுற்றோர்க்கு இன்னல் இழைத்ததாகும். நன்றியற்றவனுக்கு வேலை கொடுத்துக் கைதூக்கிவிட்டால் அவன் உன் பாகஸ்தன் என்று வாதாடச் சமயம் பார்ப்பான்.

78

அரசனின் ஆதரவும், சிறுவரின் குரலினிமையும் நம்பிக்கைக் குள்ளவையன்று. முன்னது பேய்த்தேர் போலும், பின்னது கனவு போலும் மறைந்துபோகக் கூடியவையாகும்.

79

பணத்தால் நடக்கக்கூடிய காரியத்துக்காக உடம்பால் உழைத்து உயிரை விடவேண்டாம். அரபிகள் சொல்லுவது போலச் சூழ்ச்சிக் கை தவறினால் வாள் பிடித்த கை வெளிவரட்டும். எச்சூழ்ச்சியும் பயனற்றுப்போனால் மட்டும், வாளை உறையை விட்டு வெளியே எடு !

80

துராத்மாவைக் கொன்று மனிதர்களைக் கஷ்டத்திலிருந்து காப்பவன் அவனை ஆண்டவனுடைய கோபப் பார்வையிலிருந்தே காப்பாற்றியவனாவான். கருணை காட்டல் சாலச் சிறந்தது; எனினும், கொடியோன் புண்ணுக்கு மருந்து தராதே. பாம்பிடம்

இரக்கங் காட்டி அதை அடியாது விடுபவன் மானிடர்க்கே தீமை செய்தவனுகிருன்.

81

மித மிஞ்சிய கோபம் பிறர் உன்னை நெருங்க விடாது தடுக்கும். வேண்டாத நேரத்தில் தாராளங் காட்டல் உன் அதிகாரத்தைப் பலமற்றதாக்கி விடும். மற்ருேர்க்கு மலைச்சலைத் தரும் அளவுக்குக் கடுமையாகவோ, யாவரும் தைரியமாக நெருங்கும் படி தாராளமாகவோ இருக்காதே !

82

இரண்டு வகை மனிதர்கள் நாட்டுக்கும் மதத் துக்கும் பகைவர்களாய் இருக்கிருர்கள். இவர்கள் முறையே கருணை கடாக்ஷமற்ற அரசனும், கல்வி யற்ற பக்தனுமாவார்கள். இறைவன் கட்டளைக்கு அடிபணியாத அரசனை நாடாள விடாதீர் !

83

நாகத்தின் தலையை விரோதியின் கையால் நசுக்கும்படிசெய்; இரண்டில் ஒன்ருவது ஒழிந்த தென்றிருக்கட்டும். விரோதி வெற்றியுற்ருல் பாம் பாவது செத்துப்போகிறது; இல்லை, அவன் தவறி ஞல் பாம்பாவது அவனைக் கொன்று உன் விரோதி பயத்தை அகற்றும்.

போர்க்களத்தில் இப் பகைவன் பலமற்றவன் என்று உன் எதிரியை எண்ணிவிடாதே ! வேறு வழியற்றுவிட்டது என்று அறியும் எதிரி சிங்கத்தை யும் சிதைக்கும் வீரத்தோடு போரிடலாம்.

84

நன்றல்லாத செய்திகளைக் கேள்விப் பட்டால், பிறர் அவற்றைப் பரப்பும் வரை உன் வாயால் அவற்றை வெளியிடாதே !

புல் புல் பறவையே, வசந்தத்தின் நற்செய்தியை நீ தா ! கேட்டின் தூது கொண்டுவரும் வேலையை ஆந்தைக்கு விட்டுவிடு !

85

தீர்க்காலோசனை உள்ளவனுக்கு அறிவுரைகள் சொல்லுபவனுக்குப் புத்திமதி புகட்ட ஓர் ஆள் வேண்டும்.

86

உன் எதிரி உன்னைப் புகழுவதை ஏற்றுக்கொள்ளாதே; அட்டை போன்ருரின் அமிர்தம் போன்ற மொழிகளுக்கும் செவிசாய்க்காதே! முன்னது துரோகப் படுகுழி; மற்றது உண்டு கொழுக்க வயிற்றைத் தீக்ஷண்யமாக்குதல். முட்டாள் தன்னைப் பிறர் புகழ்வதில் மயங்கிவிடுகிருன்.

உன்னிடமிருந்து உதவி பெறுவதற்காக உன்னைப் புகழ்ந்துகொண்டேயிருப்பவனுக்கு இடங்கொடாது விழிப்பாய் இரு. ஏனெனில், நீ என்ருவது அவன் மனம் வருந்தும்படி செய்துவிட்டால் பின் உன்னைப் புகழ்ந்தது போலவே அவன் உன்னிடமுள்ள எண்ணற்ற குறைகளை எடுத்துச் சொல்லித் தம்பட்டமடிப்பான்.

## 87

ஒவ்வொருவனும் தன் அறிவு பூரணமான தென்றும், தன் குழந்தை அழகு மிக்கதென்றும் எண்ணுகிருன்.

ஒரு முஸ்லிமும் யூதனும் காரசாரமாக விவாதித்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். முஸ்லிம் கோபத்தோடு சொன்னுன் : "நான் சொல்லுவது சரியில்லை என்ருல் ஆண்டவனே, என்னை ஒரு யூதனுக இறக்கும்படி செய் !"

யூதன் சொன்னுன் : "என்னுடைய வேதத்தின் மேல் சத்தியமாக நான் சொல்வது உண்மையானுல் நான் ஒரு முஸ்லிமாகச் சாகிறேன்."

அறிவின் பூண்டே இவ்வுலகில் இல்லாது போயினும் 'நான் அறியாதவன்' என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

## 88

அவசரத்தில் ஆக்கப்படும் எதுவும் வியர்த்தமாகி விடுகிறது. நாற்பது வருஷங்கள் புதைத்து வைத்திருந்த பின்னரே சீனுவில் களிமண்ணை எடுத்துப் பீங்கான் செய்கிருர்கள். பக்தாதிலோ அன்றெடுத்த களிமண்ணில் எத்தனையோ பானைகளைச் செய்து விடுகிருர்கள். இவை இரண்டுக்குமுள்ள வேற்றுமையோ நாம் அறிந்ததுதான்.

முட்டையிலிருந்து வெளிப்படும் கோழிக் குஞ்சு நடந்துசென்று தன் இரையைத் தேடத் தொடங்குகிறது. ஆனுல், பிறக்கும் குழந்தைக்கோ அவ்வித

இயல்பு இல்லை. பிறந்தவுடன் தன் தேவையைத் தேடிக்கொள்ள முயன்ற கோழிக் குஞ்சு, பின்னர் அறிவு ஏதுமற்றதாகிவிட்டது. குழந்தையோ பின்னர் அறிவிலும் பெருமையிலும் எல்லாப் பிராணிகளையும் மிஞ்சிவிடுகிறது.

கண்ணாடி எங்கும் கிடைக்கிறது. ஆகவே, அதற்கு விலை அதிகமில்லை. வைரமோ அபூர்வமானது. ஆகவே, அதன் விலையும் மதிப்பிட முடியாதது.

89

ஒரு மூடன் கழுதையைப் பேசப் பழக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதிலேயே தன் நேரம் முழுமையையும் செலவிட்டான். ஓர் அறிவாளி சொன்னான்: "இப் பயனற்ற முயற்சியால் பிறர் இகழ்ச்சியையன்றி வேறு எதைத்தான் பெறப்போகிறாய்? உன்னிடமிருந்து மிருகம் எப்படிப் பேசக் கற்றுக்கொள்ளும்? அதனிடமிருந்து நீ மௌனத்தைக் கற்றுக்கொள்!"

தான் பேசுமுன் யோசனை செய்யாதவன் அர்த்தமற்ற பதில் தரலாம். உன் பேச்சை விவாத ரீதியில் ஒழுங்குபடுத்து. அல்லது ஒரு மிருகத்தைப் போல் மௌனமாய் இரு!

90

பேச்சில் கெட்டிக்காரர்களெல்லாம் வேலையிலும் கெட்டிக்காரர்களாக இருப்பதில்லை.

முக்காட்டுக்குள் அழகிய முகம் இருப்பதாகத் தோன்றலாம்; ஆனால், திரையை விலக்கினால் கிழவியின் முகம் தென்படலாம்.

91

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாயின் மாணிக் கத்துக்குத்தான் மதிப்பேது ?

92

புலியோடு குஸ்தி செய்வதும், வாளின்மேல் கையால் குத்துவதும் புத்திமான்செய்யும் செயலன்று. அதிகப் பலமுள்ளவனுயின் கையைக் கட்டிக்கொண் டிரு. உனக்குக் கீழ்ப்படியும் முன்கோபக்காரர்களின் எதிர்ப்புக்கு இடங் கொடுத்துவிடாதே!

93

சோம்பேறிக்குச் சுறுசுறுப்பாக இருப்பவனைக் கண்டால் பிடியாது; வீட்டு நாய்க்கு வேட்டை நாயைக் கண்டால் பிடியாது குலைப்பது போல.

94

வயிற்றுப் பசி மட்டும் இல்லையெனில் பறவை வலையில் விழுவதெங்கே ? வேட்டைக்காரனும் வலை விரிப்பதெங்கே? வயிறு காலுக்குத் தளை யும், கைக்கு விலங்கும் பூட்டிவிடுகிறது. வயிற் றடிமை ஆண்டவனைத் தொழுவதைப் புறக்கணிக் கிருன்.

95

அறிவிலியோடு வாதிக்கும் அறிவாளி தன் மதிப்பைக் காப்பாற்ற முடியாது. மூடன் தன் உளறுவாய்த் தன்மையால் கை ஓங்கியவனுகிவிட் டால் அதுபற்றி ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அவன் ஒரு கல்; இரத்தினத்தை வெறுங் கல் உடைத்துவிட முடியும்.

அறிவாளி அறிவற்றவனுல் இழிவாக நடத்தப் பட்டால் அது நமக்கு ஆத்திரமுண்டாக்க வேண் டாம். ஒன்றுக்கும் உதவாத கல் தங்கக் கோப் பையை நெளியச் செய்தால் அதன் மதிப்புக் கூடி விடப் போவதுமில்லே; தங்கத்தின் மதிப்புக் குறைந்துவிடப் போவதுமில்லே.

96

முத்து சேற்றில் புதைந்து கிடந்தாலும் அதன் உயர் குணம் மாறுவதில்லே; புழுதி வானே முத்த மிடினும் அதன் இழி குணம் மாறுவதில்லே.

97

கல்வியற்ற அறிவுத் திறமை நம் அனுதாபத் துக்குரியது; அறிவுத் திறமையற்ற கல்வியும் பய னற்றது. சாம்பல் வானுற ஓங்கி வளர்ந்திருந்த மரத்திலிருந்து வந்திருந்தாலும் அதற்குத் தூசியின் அளவே மதிப்புண்டு. சர்க்கரை மதிப்புப் பெற்றி ருப்பது கரும்பிலிருந்து வந்ததனுலன்று, இனிப் பாக இருப்பதால்தான்.

உன் திறமையைக்கொண்டு நீ பெருமைப்படு! உன் முன்னேர் திறமையைக்கொண்டு பெருமைப் படாதே ! ரோஜா மலர் முட்புதரில் மலர்கிறது; இப்ராஹீம் (அலேஹி) அவர்கள் ஆஸாரில் (விக்ரகம் செய்பவரான அவர்களின் தந்தை அல்லது நெருப்பு) இருந்து வந்தார்கள்.

98

அறிஞன் மருந்துக் கடையிலுள்ள ஜாடி போன்ற வன்; மௌனமாக இருந்தாலும் உள்ளே நல்ல

சரக்கை வைத்திருப்பவன். அறிவிலி போர் முரசு போன்றவன். அவன் சலசலத்துக்கொண்டிருந்தாலும் உள்ளே விஷயமேதுமற்றவன்.

கல்வியறிவற்றவரிடையே இருக்கும் அறிவாளி குருடரிடையேயுள்ள அழகன் போன்றும், மெய் விஸ்வாசமற்றவனுடைய வீட்டிலுள்ள வேதப் புத்தகம் போன்றும் பயனற்றிருப்பான்.

99

உணர்ச்சியின் முன் அறிவு பேதலித்துவிடுகிறது - பெண் லோலன் அழகிய நங்கையைக் கண்டு மயங்குவது போல.

ஒரு பெண்ணின் அதட்டும் குரல் எதிரொலிக்கும் வாசஸ்தலத்தின் பக்கம் போவதானுல் உன் மகிழ்ச்சியை மறந்துவிடு.

100

ஆண்டவனுக்காகவன்றிச் சும்மா குகையுள் புகுந்திருக்கும் துறவி தன் இருண்ட மனக் கண்ணுடியில் எதைத்தான் பார்க்க முடியும் !

101

பாவஞ் செய்பவன் எவனுயினும் அவன் செய்வது சரியென்ருகிவிடாது. பாவாத்மா கற்றவனுக இருந்தால் அதிக நிந்தனைக்குரியவனுவான். கல்வியறிவு ஷைத்தானேடு சண்டை செய்வதற்குத் தகுந்த ஆயுதமாகும். ஆயுதமணிந்தவன் எதிரிகள் கையிலகப்பட்டால் அவன் வீரம் மாசுபடும்.

அறிவற்றவன் வழி தவறுவது இயற்கை; அவன் கண் பார்வையற்றதனுல்தான் வழி தவறினுன். ஆனுல், கற்றிருந்தும் வழி தவறுபவன் கண்ணிருந்தும் குருடனுய்க் குழியில் விழுபவன்தான் .

102

இரண்டு விஷயங்கள் பகுத்தறிவுக்கு முரணுனவை: அவை, வருவாயை மிஞ்சிய செலவும், சாவு வருதற்குமுன் தற்கொலே செய்துகொள்ளுதலுமாம்.

நீ சாக எண்ணிப் புலித் தலேயில் வாயைக் கொடுத்தாலும் உன் விதி முடியாவிட்டால் அது உன்னே ஒன்றும் செய்யாது.

103

முயற்சியற்ற பண்டிதன் பணமில்லாத காதலனேப் போலாவான்; அறிவில்லாத பிரயாணி சிறகில்லாத பறவையைப் போலாவான் ; அனுபவமில்லாக் கல்விமான் பழமில்லாத மரம் போலாவான்; கல்வியற்ற பக்தன் கதவற்ற வீட்டைப் போலாவான்.

104

திரு குர்ஆன் இறக்கப்பட்டதன் நோக்கம் அதை மனப்பாடம் பண்ணி ஒப்புவிப்பதற்கன்று; சரியான வாழ்க்கை வழியை அதன்மூலம் அமைத்துக்கொள்ளத்தான்.

105

தியானஞ் செய்யும் மூடன் கால் நடையாய் நடப்பவனுகவும், இறைவனேத் தொழாத கல்வி

மான் குதிரைமேல் ஏறிக்கொண்டு தூங்குபவனாக வும் இருக்கின்றனர்.

## 106

இமாம் கஸ்ஸாலீ(ரஹ்) அவர்கள் எண்ணற்ற சிறந்த நூற்களை எழுதியுள்ளார்கள். அவர்களிடம் சிலர் வின்வினர், அவர்கள் இத்தனை அறிவுத்திற மையை எப்படி அடைந்தார்கள் என்று. அவர்கள் சொன்னார்கள், "எனக்குத் தெரியாதவற்றை மற் றோரிடங் கேட்டுத் தெரிந்துகொள்ள நான் வெட்கப் பட்டதில்லை" என்று.

உன் நாடி திறமையான வைத்தியன் கையி லிருக்கும்போது உன் உடல் சரிப்பட்டு வருவதாக உணர். உனக்குத் தெரியாதவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்; கல்விப் பாதையில் கேட்டு அறிந்து கொள்ளல் ஒரு வழிகாட்டியாம்.

## 107

நீ ஓர் உண்மையைச் சொல்லிவிட்டுக் கஷ்டப் படுவது, ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு விடுதலை பெறுவதைவிட மேலானதாகும்.

## 108

இறைவன் சிருஷ்டியுள் மனிதனே உயர்ந் தவன்; மிகக் கடையானது நாய். எனினும், தான் தின்ற சோற்றுக்காக நன்றி காட்டும் நாய், நன்றி யற்ற மனிதனைவிட மிக மேலானது என்பது பெரியோர் அபிப்பிராயம்.

நாய் நீ கொடுத்த ஒரு கவளம் சோற்றை என்றும் மறவாது. அதன் பின் ஆயிரம் கற்களால் அடித்தாலும் உன்னைக் கடியாது. ஆனால், இழிவான மனிதனுக்கு நீ வாழ்நாள் முழுவதும் உணவளித்துவந்தாலும், என்ருவது ஒரு தீங்கு செய்துவிட்டால் அவன் உனக்கு எதிராகக் கிளம்பிவிடுவான்.

109

நல்ல சாவடையும் ஏழையைவிடத் துர் மரணமுறும் அரசன் அபாக்கியவான்தான்.

இன்பத்துக்கு இட்டுச்செல்லும் துன்பம், துன்பத்துக்குக் கொண்டுசெல்லும் இன்பத்தைவிட விரும்பத்தக்கது.

110

ஜம்ஷீத் அரசனிடங் கேட்கப்பட்டது, வலக் கை உயர்ந்ததாக இருந்தும் அதன் விரல்களில் மோதிர மணியாது, இடக் கை விரல்களில் மோதிரமணிவது ஏன் என்று. அவன் சொன்னான், "வலக் கைக்கு அது வலக் கையாக இருப்பதே சிறந்த ஆபரணமாகிவிடுகிறது" என்று.

111

ஏகத்துவத்தில் குலையா நம்பிக்கை கொண்ட அறிஞனின் பாதத்தில் பொன்னைக் குவித்தாலும், அவன் கழுத்தில் கத்தியை வைத்தாலும் அவன் மனம் அசையாது. ஆண்டவன் பயம் ஒன்றுதான் அவனுக்குண்டு.

112

திருடர்களைத் தண்டிப்பது அரசன் கடமை; கொலையாளிகளைப் பாதுகாப்பில் வைத்தல் காவலாளி

கடமை; சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பது நீதிபதி கடமை.

ஆனால், ஊர் நீதிபதியிடம் (சேர்ந்தாற்போல்) வரும் இரண்டு புகார்கள் நியாயமாகத் தீர்க்கப் பட்டன என்று சொல்வதற்கில்லை.

## 113

எல்லோர் பல்லும் புளிப்பால் கூசிவிட்டது; ஆனால், கிராம நீதிபதியின் பல் மட்டும் இனிப்புக் கேட்கிறது. அவர் ஐந்து வெள்ளரிக் காய்களை லஞ்ச மாகப் பெற்றுக்கொண்டு, பத்துப் பூசனித் தோட்டத் தையே உனக்குள்ளதுதான் என்று தீர்ப்புச் செய்துவிடுவார்.

## 114

கிழப் பருவமடைந்த வேசி விபசாரத்தை விட்டு விடலாம்; வேலையை விட்டு விலக்கப்பட்ட கிராம உத்தியோகஸ்தன் தான் கொடுமைப்படுத்துவதைக் கைவிடலாம். ஆனால், ஓர் இளைஞன் துறவியா வது, சிங்கம் போன்ற வீரன் ஆண்டவன் சேவைக் குத் தன்னை அர்ப்பணஞ் செய்வது போலாம்.

## 115

கையிலிருந்தும் செலவு செய்யாதவன், தெரிந்தும் செயலாற்ருதவன்–இவ் விரு வகையினரும் இறக் கும்போது கைசேதப்படுபவர்களாவர்.

கருமியின் குற்றங்களை யாவரும் பறையறைவர்; தாராளவானிடம் எத்தனை குறைகள் இருப்பினும் அவை அவன் தயாளத்தில் மறைந்துவிடும்.

# போஸ்தான்!

## அத்தியாயம் 1

# நீதி, நியாயம், ஆட்சிமுறைபற்றி

1

இறைவனின் இன்னருள் இகபரங் கடந்தது. புகழ் எனும் நாவு அவனுக்கு எவ்விதந்தான் துதி பாடும்! ஏ இறைவா, இவ்வரசராம் அபூபக்கரை (சாஅதியை ஆதரித்தவர்)க் காப்பாற்று. அவர் குடை நிழலில்தான் மக்களுக்குச் சுகமுண்டு. அவர் மனம் உன்னிடம் பணிவுள்ளதாக இருக்கக் கிருபை புரி. அவருடைய நம்பிக்கை என்னும் மரத்தைப் பலன்களென்னும் நற்கனிகள் நிறைந்ததாக்கு. அவர் இளமையை நீடிக்கச் செய்; அவர் வதனத்தில் கருணை நிலவக் கடாக்ஷித்தருள்.

அரசரே, தொழ வரும்போது உம்மை அரச உடைகளால் அலங்கரித்துக்கொள்ளாதீர்! ஒரு துறவியைப் போல் நின்று உமது பிரார்த்தனையைச் செலுத்தும்: "ஆக்கவும் அழிக்கவும் வல்ல கருணையாளனே, உன் சந்நிதியில் நான் அரசனல்லன், அடிமை. உன் உதவி என்ற உணவின்றேல் நான் வாடிவிடுவேன். நற்செயல் ஆற்றும் வழியை எனக்குக் காட்டு! இல்லையேல், நான் எப்படித்தான் என் மக்களுக்கு உதவிபுரிவேன்!" என்று மன்றுடிக் கேளும்.

பகலிலே செங்கோலோச்சினுல் இரவிலே இறைவனைத் துதிக்கவேண்டும். உமது பணியாளரில் சிறந்தோர்கூட உமது வாயிலில்–உம் கடைக்

கண் நோக்குக்காகக்– காத்திருக்கவில்லையா ? அது போல் நீர் ஏன் இறைவனின் இல்ல வாயிலிலே காத்திருக்கக் கூடாது ?

2

மரணப் படுக்கையிலிருந்த நௌஷேர்வான் தன் மகன் ஹுர்மூஸிடம் சொன்னதாவது: “உன் நலன்களை மட்டும் தேடிக்கொள்ளாதே. ஏழைகளை ஆதரி. ஆடுகளை ஓநாய் சுற்றி வருகையிலே இடையன் தூங்கிவிடக்கூடாது; உஷாராக இருக்க வேண்டும். ஆதரவற்றவர்க்குப் பாதுகாவல் தா. அரசன் தன் பிரஜைகளின் நன்மைக்காகவே முடியணிந்துள்ளான். அரசன் மரத்தைப் போன்றவன்; குடிகள் அம்மரத்தின் வேர்களைப் போன்றவர்கள். மகனே, மரம் வேர்களின் உதவியால்தான் நிற்கிறது. தன் நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அஞ்சும் அரசன், தன் குடிகளுக்குத் துன்பஞ் செய்யக் கூடாது. அகந்தை யுடையோருக்கும், ஆண்டவனுக்கு அஞ்சாதவர்களுக்கும் நீ அஞ்சு.”

3

தூரத்திசை நாடுகளிலிருந்து வரும் வாணிபர்களிடம் கடுமையாக நடந்துகொள்ளும் அரசன் தன் பிரஜைகளின் நலனுக்கே பாதகம் விளைவிப்பவனாவான். ஒரு நாட்டைப்பற்றி நல்ல செய்திகளைக் கேள்விப்படாவிட்டால் எந்த அறிவாளிதான் அங்குச் செல்ல இணங்குவான் ?

உனக்கு நற்பெயர் வேண்டுமானால் வியாபாரிகளையும், தேசாந்திரிகளையும் மதிப்போடு நடத்து.

ஏனெனில், அவர்கள்தாம் உன் தன்மையை உலகில் பரப்புவார்கள். ஆனால், அதே சமயத்தில் நீ மிக உஷாராகவும் இருந்துகொள்ள வேண்டும். உன் விரோதிகளே நண்பர்போல் நடித்து உனக்குக் கேட்டைத் தேடி உன்னிடம் வரலாமல்லவா?

பழைய நண்பனின் பெருமையைப் புகழ். ஏனெனில், உன்னால் போற்றப்படுபவர் சாதாரணமாக உனக்குத் துரோகம் செய்யார்.

உன் பணியாள் முதுமை யடைந்தால் அவனை நன்றாய்க் கவனி. அவனுக்கு நீ செய்யவேண்டிய கடமைகளைப் புறக்கணித்துவிடாதே! சேவை செய்யும் அவன் கை முதுமையால் தளர்ந்துவிட்டாலும், தாராளம் என்ற உன் கை மட்டும் தளர்ந்துவிடக் கூடாது.

4

அரபு நாடொன்றுக்கு ஒரு தேசாந்திரி வந்தான். அவன் சகலமுங் கற்ற பண்டிதனாகவும், பரந்த பிரயாண அனுபவம் படைத்த ஞானியாகவும் இருந்தான். அவன் அந்நாட்டு அரசனுடைய சமூகஞ் சென்றான். அரசனுக்கு அவனுடைய அறிவுத் திறம் நன்கு விளங்கியவுடனே அவனைத் தன் மந்திரியாக ஆக்கிக்கொண்டான்.

அவன் தன் வேலையை மிகுந்த திறமையோடு செய்தான். யார் மனமும் புண்படாத வகையில் நடந்தான். அரசாங்கத்திலுள்ளவர்களின் அன்பைக் கவர்ந்தான். புறங்கூறுபவர்களுக்குக்கூட அவன்மீது குற்றஞ் சொல்ல இயலவில்லை. பொரு

மைக்காரர்களும் அவனுக்குத் தீங்கு செய்யச் சந்தர்ப்பங் கிடைக்கவில்லையே என மனமுருகினர்.

எனினும், அரண்மனையிலிருந்த இரண்டு யுவதிகளிடம் இந்த மந்திரி மிகுந்த அன்புடையவனாக இருந்தான்.

இவனுக்குப் பதவி தருவதற்காக வேலையை விட்டு விலக்கப்பட்ட பழைய மந்திரி இவ் விஷயத்தை விஷமத்தோடு அரசனிடந் தெரிவித்தான்:

"அரசே, இந்தப் புது மந்திரி யார் என்பதை நான் அறியேன்; ஆனால், அவன் தங்கள் அடிமைப் பெண்கள் இருவரோடு சல்லாபிப்பது மட்டும் எனக்குத் தெரியும். அவன் பெரிய காமுகன் என்று அறிகிறேன். அவனைப் போன்றவன் தங்கள் சமூகத்துக்குக் கெட்ட பெயரைக் கொண்டுவருவதை எப்படிச் சகிப்பேன் ? தாங்கள் இந்த ஏழைக்குச் செய்துள்ள நன்மைக்குப் பின்னும் இந்த அநியாயத்தைப் பார்த்துவிட்டு நான் எப்படி மௌனமாக இருப்பேன்?'' என்றான்.

இதைக் கேட்ட அரசனுக்குக் கோபமுண்டாயிற்று. புது மந்திரியின் போக்கை அவன் கண்காணித்துவரலானான். புது மந்திரி அவ்வடிமைப் பெண்களுள் ஒருத்தியைப் பார்த்துப் புன்னகை புரிவதையும், அதற்குப் பதில் கூறும் முறையில் அவள் சிரித்த கள்ளச் சிரிப்பையும் அரசன் கவனித்தான். அவன் சந்தேகம் உறுதியாயிற்று.

அரசன் மந்திரியை அழைத்தான் : "நீ இவ்வளவு வெட்கங் கெட்ட அயோக்கியன் என்பதை அறியாமல் போனேன். இப் பெரும் பதவிக்கு நீ

தகுதியுடையவனன்று. ஆனுல், உன்னைக் குற்றம் சொல்லி என்ன பயன்? உன்னை மந்திரியாக நியமித்த நானல்லவா இதற்குப் பொறுப்பாளி!" என்று கடுமையாகப் பேசலானுன்.

மந்திரி சொன்னுன்: "என் மனம் குற்றம் என்ற கறையற்றிருக்கிறபடியினுலேயே எனக்குக் கேடு விளைவிக்க எண்ணும் பகைவனின் குரோதத்துக்கு நான் அஞ்சவேண்டுவதில்லை. இந்தக் குற்றச் சாட்டைத் தங்களிடம் சொன்னவன் யார் என்பதை நான் அறிவேன்."

அரசன்: "ஏன், பழைய மந்திரிதான் சொன்னுன்."

மந்திரி சிரித்துக்கொண்டே பேசலானுன்: "அவன் என்னைப்பற்றி என்ன புகார் சொல்லியிருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தன்னுடைய இடத்தில் நான் இருப்பதைக் காணும் பொருமைக்காரன் வேறென்ன செய்வான்? என்றைக்கு அவன் பதவி எனக்குத் தரப்பட்டதோ, அன்றே அவன் என் எதிரியாகிவிட்டானென்று நான் அறிவேன். நான் முன்னேறுவதால் தான் பின் தள்ளப்படுவதாக எண்ணும் அவன் இறுதிநாள் வரை என் எதிரியாகவே இருப்பான். தாங்கள் தயவு கூர்ந்து இதைப்பற்றிய கதை ஒன்றைக் கேட்டருள வேண்டும்.

"ஒருவருடைய கனவில் ஷைத்தான் தோன்றினுன். அவன் கம்பீரமானவனுகவும், சூரிய பிம்பம் போன்ற வதனமுள்ளவனுகவும் விளங்கினுன். கனவு காண்பவர் அவனிடம் வினவினுர்: "ஹே

ஒளி பொருந்தியவனே, மனிதர்களுக்கு உன் அழகு தெரியாது. உன்மீது உண்டான பயத்தினுல் உன்னை அவர்கள் பயங்கரமான உருவினனுகத் தீட்டியுள்ளனர்" என்று. ஷைத்தான் நகைத்தான். அவன் சொன்னுன்: "என் உருவம் அவ்வளவு கோர மானதன்று; எனினும், அதைத் தீட்டும் எழுது கோல் என் எதிரியின் கையிலல்லவா இருக்கிறது! அவன் கூட்டத்தினரை நான் சுவர்க்கத்துக்கு வெளியே தூக்கி யெறிந்தேன். அதற்காக அவன் என் உருவை இத்தனை அவலக்ஷணமாகத் தீட்டு கிருன்" என்று.

மந்திரி மேலும் தொடர்ந்தான்: "இதுபோலவே நான் நல்லவனுக இருந்தாலும், பொருமைக்காரர்கள் என்னைக் குறித்து இழிவாகவே பேசுகிருர்கள். ஆனுல், குற்றமுள்ள நெஞ்சந்தானே வருத்தமனு பவிக்கும்! குற்றமற்ற நான் பேச ஏன் பயப்பட வேண்டும்?"

அரசன் முற்றிய கோபத்தோடு மொழியலா னுன்: "அடே, இதை உன் எதிரி சொல்லக் கேட்ட தாக மட்டும் எண்ணுதே! அந்த அடிமைப் பெண் களிடம் நீ நடந்துகொள்ளும் முறையை நான் என் கண்களாலேயே கண்டேன்."

மந்திரி: "ஆமாம், தாங்கள் பிரியப்பட்டால் அதை விளக்குகிறேன். பணக்காரனை ஏழை பொரு மைக் கண்கொண்டு நோக்குவதை நீங்கள் கண்ட தில்லையா? ஒரு காலத்தில் இவ்விரு அடிமைகளைப் போல் எனக்கொரு மனைவியிருந்தாள். அவளு டைய முத்துப் பல் வரிசைகள் தந்தச் சுவர் போலி

ருந்தன. அவை பின்னர் ஒன்றன்பின் ஒன்ருய் உதிர்ந்துவிட்டன. என் மனைவியின் கடந்த கால இளமையை நினைவூட்டும் அவர்களை நான் ஏன் பொருமைக் கண்கொண்டு நோக்க மாட்டேன்?"

இவ்வுண்மை எனும் முத்தை அம் மந்திரி வெளிப்படுத்தியதும் அரசன் சொன்ஞன்: "இதை விடத் தெளிவாக விளக்க முடியாதுதான். அழகியை இந்த நோக்கோடு பார்க்கும் முதியவன் அனுதாபத் துக்குரியவன்தான். நான் சற்று யோசித்திருப்பின் ஒரு எதிரியின் பேச்சைக் கேட்டு உனக்குத் தீங்கு செய்ய நினைத்திருக்க மாட்டேன்."

பொருமைக்காரர்களின் பேச்சைப் பொருட் படுத்தாதே! அவர்கள் யோசனைப்படி நடந்தால் பின்னர் வருந்த நேரிடும்.

புறங்கூறியவனைக் கண்டித்துவிட்டு, மந்திரிக்கு அதிக மதிப்புத் தந்தான் அரசன். மந்திரியும் பல காலம் நேர்மையோடு தன் வேலையைச் செய்து புகழ் பெற்ருன்.

5

தமாஸ்கஸ் நகரில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. காதலர்கள் காதலியரைக்கூட மறந்தனர். வானம் கருமியாயிற்று; வயல்கள் பிளவுண்டன; ஈச்ச மரங் கள் ஈரமற்று உலர்ந்தன. சுனைகள் வற்றிப்போயின; அனுதைகளின் கண்ணீரை யன்றி வேறு தண் ணீரைக் காண முடியவில்லை. விதவைகளின் விம்ம லால் எழுந்த விசனப் பெருமூச்சுத்தான் வீட்டுப் புகைபோக்கி மூலம் புகையாக வெளியாயிற்று. வறியோனைப் போல் மரங்கள் இலையற்று மொட்டை யாயின; மலைகள் பசுமையற்றுப் பொட்டலாயின;

வெட்டுக்கிளிகள் தோட்டங்களை யுண்டன; மானிடர் வெட்டுக்கிளிகளை உண்டனர்.

இச்சமயம் என்னிடம் ஒரு நண்பன் வந்தான். அவன் உடம்பில் எலும்புந் தோலுமன்றி வேறு எதுவுமில்லை. அவனோ பெரும் பணக்காரன். ஆகவே, அவனுடைய மெலிந்த நிலை கண்டு நான் வியப்புற்றேன். "நண்பா, உனக்கென்ன கேடு வந்தது?" என்று வினவினேன்.

அவன் சொன்னான் : "உனக்கு அறிவில்லை? பஞ்சத்தின் கொடுமை எத்தகையது என்பதை நீ பார்க்கவில்லையா? வானிலிருந்து மழை பெய்யவுமில்லை; மக்கள் அழுகுரல் வானை எட்டவுமில்லை."

"அதனால் உனக்கேனப்பா கஷ்டம்? மாற்றில்லாதவர்களைத்தானே விஷம் கொல்லும்!" என்றேன் நான். அறிஞன் மூடனை நோக்குவதுபோல், அவன் என்னை உறுத்துப் பார்த்துவிட்டுக் கூறலானான் : "ஒருவன் பாதுகாப்பாகக் கரையில் நின்றாலும், தன் நண்பர்கள் கடலில் மூழ்குவதைச் சும்மா பார்த்துக் கொண்டு நிற்க மாட்டான். என் முகம் உணவுப் பஞ்சத்தால் வெளுக்கவில்லை. ஏழை படும் பாடு என் மனத்தை வருத்துகிறது. நான் புண்ணின்றி இருப்பதற்காக அல்லா(ஹ்)வுக்கு நன்றி செலுத்தினும், பிறர் புண்களைக் காணும்போது நடுநடுங்குகிறேன்."

தன்னருகே நோயாளியை வைத்திருப்பவனுடைய இன்பமெல்லாம் கசப்பானதாகவே இருக்கும். இரப்போனுக்கு உணவளியாதவன் சோறு விஷம் போன்று கேடு தரக்கூடியது.

அத்தியாயம் 2

## பிறர்க்கு உதவுதல்பற்றி

### 6

மிகுந்த தயாள குணமுடைய ஒருவனிடம், தன் தயாளத்தை வெளிக்குக் காட்டக்கூடிய அளவில் பணமில்லை. அவன் கடனுளியாகவும் இருந்தான். ஒரு நாள் அவனுக்கு ஓர் ஏழை இவ்விதம் கடிதம் எழுதியிருந்தான் : "இனியவரே, நான் கடனுளியாகச் சிறையிலடைபட்டேன். என் கடனைத் தீர்த்து என்னை விடுதலை செய்தீர்களாயின் என்றும் நன்றியுடையவனுக இருப்பேன்."

தயாளவான் உடனே உதவிசெய்ய எண்ணினுன். ஆனுல், கையில் காசில்லை. ஆகவே, கடன் கொடுத்தோரிடம் ஓர் ஆள் மூலம் இவ்விதம் கேட்டனுப்பினுன்: "இந்த மனிதனைச் சில காலம் விடுதலை செய்துவிட்டு அவனுக்குப் பதில் என்னை அடைத்துவைக்கிறீர்களா?" அவர்கள் அதற்குச் சம்மதிக்கவே அவன் சிறைச்சாலை சென்றுன். கடன் காரனைக் கண்டான். "எழுந்திரு, ஊரைவிட்டே ஓடிவிடு" என்றுன்.

தன் கூண்டுக் கதவு திறந்துகிடக்கக் காணும் ஊர்க்குருவி ஒரு கணங்கூடத் தாமதிப்பதில்லை. காலைக் காற்றைப்போலக் கைதி அந்நாட்டை விட்டே நகர்ந்தான். தயாளவான் சிறைப்பட்டான். அவன் யாரிடமும் உதவி தேடாது சிறையில் கிடந்து உழன்றுன்; அமைதியின்றி இரவில்கூடத் தூங்காது துன்புற்றுன்.

ஒரு சமயம் பெரியார் ஒருவர் அங்கே வந்தார்; அவனைப் பார்த்தார். "அப்பா, உன்னைப் பார்த்தால் நாணயமானவனுகத் தெரிகிறதே, நீ சிறைப்படக் காரணமென்ன ?" என்று வினவினர்.

"நான் செய்த குற்றம் ஏதுமில்லை. ஒருவன் சிறையில் துன்புறக் கண்டேன். அவனை விடுவித்து நான் கைதியானேன். ஒருவன் துன்புறும்போது நான் இன்பத்தில் வாழ விரும்பவில்லை" என்ருன் அவன்.

பின்னர் அவன் இறந்துபோனுன். ஆயினும், அவன் நற்பெயர் நிலைநின்றது.

இறவாத பெயருடையான் பாக்கியவான். புகழுடம்பை விடுத்துப் பூமியினடியில் துயில்பவன், புகழைப் புதைத்துவிட்டுப் புன்னுடம்போடு உலவுபவனைவிடச் சாலச் சிறந்தவன் ; அவன் பெயர் என்றும் நிலைநிற்கும்.

## 7

பாலையிலே நாயொன்று தாகத்தால் துடி துடிக்கக் கண்டான் ஒருவன். உடனே தன் தலைப்பாகையை அவிழ்த்து அதனுள்ளிருந்த தொப்பியில் வாளி போல் கட்டி நீர் இறைத்து அதற்குக் கொடுத்தான். அப்போது ஒரு பெரியார் சொன்னுர்: "இந்த நற்செயலுக்காக இவன் பாவங்கள் மன்னிக்கப்படலாம்" என்று.

நாயிடம் அன்பு காட்டுபவன் மனிதரிடம் அதைவிட அதிக அன்புடையானுகவன்ருே இருத்தல் வேண்டும்!

உன் சக்திக்கேற்ற முறையில் தாராளவனுக இரு. பாலேயில் ஒரு கிணறு தோண்ட உனக்கு வகையில்லே யென்ருலும், பாலேயில் தண்ணீ ரெடுத்து உதவவாவது செய் !

உழைப்பவன் தன் ஊதியத்திலிருந்து தருமங் கொடுக்கும் ஒரு காசு, உழையாதவன் வண்டி வண்டியாக அள்ளிக் கொடுப்பதைவிடச் சிரேஷ்ட மானதாம்.

தன் பலத்துக்குத் தக்கபடிதான் சேவையும் இருக்கவேண்டும்.சிட்டுக்குருவி பனங்காயைச் சுமக் காது. சிற்றெறும்புக்கு விட்டிலின் காலே பெரும் பாரமாகும்.

இன்று பிறர்க்கு நன்மை செய்; அப்படியானுல் தான் நாளே இறைவன் உன்னேக் கடுமையாக நடத்த மாட்டான்.

உன் பணியாளிடம் தாராளத்தோடிரு. காரணம், நாளே அவன் அரசனுகலாம்-சதுரங்கத் தில் சிப்பாய்கூட அரசனுவது போல.

## 8

ஓர் ஏழை நல்ல மனமற்ற பணக்கார ஞெருவனிடம் தன் துன்பங்களேக் கூறினுன். அப்படியிருந்தும் அப்பணக்காரன் உதவி ஏதும் செய்யாது கோபமாக அவனேப் போகச் சொன்னுன்.

ஏழையின் இதயத்திலிருந்து இரத்தஞ் சொட் டிற்று. அவன் சொன்னுன்: "இத்தகைய கொடிய வனுக இருப்பதும் விந்தைதான்! பிச்சை புகுவதின் துன்பத்தை இவன் அறியான் போலும்!"

பணக்காரன் தன் அடிமையைவிட்டு அவனை அடித்து விரட்டச் சொன்னான். இத்தகைய மனப் பான்மையால் அதிர்ஷ்டம் அவனைக் கைவிட்டது. அவன் செல்வம் முழுவதும் மறைந்தது. அவன் அடிமை இன்னொரு தாராளவானிடஞ் சென்றான். இந்த எஜமானன் ஏழைகளைக் கண்டால் இன்பமாக உபசரிப்பான்.

ஒரு நாள் இரவு இவன் வீட்டின் முன் ஓர் ஏழை வந்து நின்று சோறு கேட்டான். அந்தப் பணக்காரன் தன் அடிமையை அழைத்து அவனுக்கு உணவளிக்குமாறு கூறினான். ஏழைக்குப் படைக்க உணவு கொண்டுவந்த அடிமை அவனை உற்று நோக்கிவிட்டு அலறினான். எஜமானன், "ஏனப்பா அழுகிறாய் ?" என்று வினவினான். "இத் துரதிர்ஷ்டம் பிடித்த கிழவரைக் கண்டதும் என் மனம் வருந்துகிறது. ஒரு காலத்தில் இவர் பெருஞ் செல்வராய் இருந்தார்; நான் இவர் அடிமையாய் இருந்தேன்" என்று அந்த வேலைக்காரன் பதிலளித்தான்.

எஜமானன் நகைத்துச் சொன்னான்: "மகனே, இதுகுறித்து நீ வருத்தப்படவேண்டியதில்லை. காலச் சக்கரம் வெகு நியாயமாகவே சுழல்கிறது. அந்த ஏழை ஒரு காலத்தில் அகம்பாவம் பிடித்த செல்வனாய் இருந்தான். அப்போது நான் ஏழையாக அவன் வீட்டு வாசலில் நின்றேன். என்னை விரட்டச் செய்தான். அன்று நான் இருந்த நிலைக்கு இன்று அவனை விதி கொண்டுவந்துவிட்டது. இறைவனின் இரக்கப் பார்வை என் துன்பம் எனும் தூசியைக் கழுவிற்று. இறைவன் ஒரு கதவை மூடினாலும்

இன்னொரு கதவைத் திறந்துவைக்கும் கருணை யாளன்தான்."

ஏழைகள் பலர் செல்வர்களாகியுள்ளனர்; செல்வர்கள் பலர் ஓட்டாண்டிகளாகியுள்ளனர்.

9

நடக்கச் சக்தியற்ற நரியொன்றை ஒருவன் கண்டான். இது இந்நிலையில் எவ்விதம் உயிர் வாழ்கிறது என்று வியப்படைந்தான். அப்போது ஒரு புலி ஒரு மானைத் தன் வாயில் கௌவியவாறு அங்கே வந்தது. அது வயிற்றை நிரப்பிக் கொண்டு தன் வழியே சென்றது. அது விட்டுச் சென்ற எச்சிலை நரி தின்றது. மறு நாளும் எல்லாம் வல்ல இறைவன் நரிக்குப் படியளந்தான்.

அம்மனிதனின் கண்கள் திறந்தன. உண்மை யான அறிவொளியைத் தான் பார்ப்பதாக அவன் நினைத்தான். "இதன் பின் நான் ஒரு மூலையில் வாளாவிருப்பேன். ஏனெனில், யானைக்கு உணவு அதன் வலிமையாலா கிடைக்கிறது!" என்று அவன் சிந்தித்தான்.

அவ்விதமே அவன் மௌனமாகத் தன் தினசரி உணவு எங்கிருந்தாவது வரும் என்ற எண்ணத் தோடு அமர்ந்திருந்தான். யாரும் அவனைப் பொருட்படுத்தவில்லை. அவன் விரைவில் எலும் புந் தோலுமாயினன். அவன் புலன்கள் மழுங் கின. அப்போது ஒரு பள்ளிவாசலிலிருந்து இக் குரல் எழக் கேட்டான்: "ஏ உதவாக்கறை மனிதனே, எழுந்திரு! உழைக்கும் புலியாய் இரு;

நடக்க இயலா நரியாகாதே! புலியைப் போல் உழைத்து அதைப் போல் உன் ஊதியத்தில் பிறர்க்கும் மீதி வை! பிறர் விட்டுவைப்பதில் அந்த நரியைப் போல் உன் பசியைத் தணிக்க விரும்பாதே! உன் உழைப்பின் ஊதியத்தால் பயன்பெறு! உண்மையான மனிதனைப் போல் உழை; உணவில்லாதவனுக்கு உதவு!"

ஏ இளமையே, முதுமைக்குக் கைகொடுத்துத் தூக்கிவிடு. நீ விழுந்துகொண்டு, 'எனக்குக் கைகொடு' என்று வேண்டாதே. ஆண்டவனின் சிருஷ்டிக்கு உதவுபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் பயன் பெறுவார்கள் என்பதை நினைத்துப் பார்!

## 10

எமன் நாட்டு அரசன் ஒருவன் மிகுந்த தாராள மனம் படைத்தவனாக இருந்தான். அவன் முன்னர் ஹாத்தீம் தாயி என்ற தாராளவானை யாராவது புகழ ஆரம்பித்துவிட்டால் அவனுக்குக் கோபம் வந்துவிடும். "எத்தனை நாளைக்குத்தான் அந்த வெங்கனைப்பற்றிப் பேசுவீர்கள்? அவனுக்கோ ஆட்சியில்லை; அதிகாரமில்லை; செல்வமுமில்லை. எனினும், அவனை ஏன் புகழ்கிறீர்கள்?" என்று அவன் கேட்பதுண்டு.

ஒரு தடவை அவனுடைய ஆடம்பரமான விருந்துக்கு வந்திருந்த பலர் ஹாத்தீம் தாயியின் பெருமையைப் பேசலாயினர். இது கண்டு பொறுமைகொண்ட அரசன் ஒரு வீரனை அழைத்தான். "ஹாத்தீம் உயிரோடிருக்கும் வரை என்னை

யாரும் புகழ மாட்டார்கள். நீ சென்று அவனைக் கொன்று வா" என்று உத்தரவிட்டான்.

வீரன் ஹாத்தீமைத் தேடி ஊர் ஊராக வந்து கொண்டிருந்தான். வழியில் ஓரிடத்தில் இளைஞன் ஒருவனைக் கண்டான். அவ்விளைஞன் அழகனாக வும், இனிய வதனமுடையவனாகவும் இருந்தான். அவன் வீரனிடம் அன்போடு பழகினான். அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். இரவை அங்கேயே கழிக்கும்படி கேட்டுக்கொண்டான். அவனுடைய உபசாரம் வீரனின் தீய மனத்தையும் நல்லதாக மாற்றிவிட்டது.

மறு நாள் காலையில் இளைஞன் அவ்வீரனை இன் னுஞ் சில நாள் தன்னோடு தங்கும்படி கேட்டுக் கொண்டான்.

"எனக்கு அவசர வேலை இருக்கிறது. நான் இங்குத் தங்க இயலாதவனாக இருக்கிறேன்" என் றான் வீரன்.

"நீ செல்கிற வேலை என்ன என்று தெரிவிக்க முடியுமானால் நான் என்னால் இயன்ற உதவி செய் யச் சித்தமாய் இருக்கிறேன்."

"ஹே தாராளவானே, பரந்த மனமுடையோர் இரகசியத்தை வெளியிடார் என்பதை நான் அறி வேன். ஆகவே, கேளும்! இந்த நாட்டில்தான் என்று நினைக்கிறேன், ஹாத்தீம் தாயி என்ற உயரிய குணம் படைத்தோன் ஒருவன் இருக்கிறானாம். எமன் அரசர் அவனைக் கொன்றுவரும்படி உத்தரவிட்டி ருக்கிறார். அவர்களுக்குக்கிடையே என்ன சச்சரவு

என்பதை நான் அறிய முடியவில்லை. ஆகவே, அவன் இருக்குமிடத்தைக் காட்டினால் நான் நன்றியுடையவனாக இருப்பேன்" என்று வீரன் கூறினான்.

இளைஞன் சிரித்தபடியே சொன்னான்: "நான் தானப்பா ஹாத்தீம். இதோ என் தலை; உன் வாளால் அதைக் கொய்துசெல். உனக்குத் துன்பம் நேருவதையோ, நீ வந்த காரியம் கைகூடாது போவதையோ நான் விரும்பவில்லை."

வீரன் ஹாத்தீமின் கால்களில் விழுந்தான். "உன் உடலில் ஒரு மயிருக்கேனும் தீங்கிழைத்தேனாயின் நான் நாயினுங் கடையனாவேன்" என்று கூறிவிட்டு எமனை நோக்கித் திரும்பினான்.

அவன் அரசன் முன் வந்து நின்றான். அரசன் அவனை வரவேற்று சென்ற காரியம் வெற்றிதானே என்று வினவினான். வீரன் பணிவோடு கூறினான்: "அரசே, நான் ஹாத்தீமைக் கண்டேன். அவன் தாராளமும், புத்தி சாதுர்யமும் நிறைந்தவனாக இருக்கிறான். மிகுந்த திடசாலியுங்கூட. அவனுடைய உபசாரச் சுமை என் முதுகை வளைத்துவிட்டது. தாராளம் என்ற கத்தியால் அவன் என்னைக் கொன்றுவிட்டான்."

ஹாத்தீமின் தயாள குணம் முழுவதையுங் கேள்வியுற்ற அரசன் அவன் பெருமையை வியந்தான். வீரனுக்கும் வெகுமதியளித்து அனுப்பினான்.

## அத்தியாயம் 3

## அன்பைப்பற்றி

### 11

ஒரு மஸ்ஜித் வாசலில் நின்று கிழவன் ஒருவன் யாசித்துக்கொண்டிருந்தான். அவனிடம் ஒருவர் கூறினர் : "இது யாசகங் கேட்கும் இடமன்று; இங்கே நிற்காதே !" என்று.

"ஏழையின் நிலை கண்டிரங்காதவர்கள் இருக்கும் இதென்ன வீடு ?" என்றான் கிழவன்.

"அதிகம் பேசாதே, இது இறைவன் வீடு" என்றார் அவர்.

ஏழை கூக்குரலிட்டுச் சொன்னான் : "அந்தோ, நான் இந்த வாயிலிலா ஏமாற்றமுறவேண்டும் ! எந்தத் தெருவிலும் நான் ஏமாற்றமுற்றதில்லையே! இறைவன் வீட்டு வாசலிலிருந்து அப்படி ஏன் செல்லவேண்டும்? இங்கே தேவை என்ற கரத்தை நீட்டுவேன். இங்கிருந்து வெறுங் கையோடு செல்ல மாட்டேன்."

ஓராண்டு அவன் பள்ளிவாசல் வேலையைப் பார்த்துக்கொண்டு தொழுகையிலேயே நாள் போக்கினான். அதன்பின் ஒரு நாள் இரவு அவன் ஹிருதயம் பலஹீனத்தால் துடித்தது. மறு நாள் காலையில் விடி விளக்கைப்போல் அவன் உயிர் அணைந்துபோயிற்று. அந்தத் தருணத்தில் அவன் கூறினான், "அத்தாராளவானின் வீட்டுக் கதவை யார் தட்டினாலும் அது திறக்கும்" என்று.

இறைவனைத் தேடுபவன் பொறுமையோடிருக்க வேண்டும்; சகிப்புத்தன்மையுடையோனாக வேண்டும். பின்னர்தான் அவன் நாட்டம் நிறைவேறும்.

## 12

சுல்தான் மஹ்மூது கஜ்னவியைப் பற்றி ஒருவர் இவ்விதங் கூறினர்: " இந்தச் சுல்தான் தன் அடிமை ஆயாஸிடம் மிகுந்த அன்புள்ளவராக இருக்கிருரே! அவனே பார்வைக் கினியவனுகக்கூட இல்லையே! அழகும் மணமுமற்ற மலரை புல்புல்கூட விரும் பாதே! " என்று.

இது மஹ்மூது காதுக்கும் எட்டிற்று. அவர் சொன்னர், " நான் அவனிடம் அன்போடிருப்பதற் குக் காரணம் அவனிடமுள்ள நற்குணங்கள் தாம். வேறு எதுவுமில்லை" என்று.

ஒரு கணவாயில் ரத்தினங்களை ஏற்றிச் சென்ற ஒட்டகம் கீழே விழுந்து அதன் முதுகிலிருந்த ரத்தினப் பெட்டி உடைந்து ரத்தினம் சிதறிக் கிடந்த தாம். சுல்தான் இதைக் கண்டு தன் படை வீரர் களுக்கு அதைக் கொள்ளையடிக்கும்படி உத்தர விட்டாராம். உடனே அவர்கள் தத்தம் குதிரை களில் வேகமாகக் கடுகினராம். சுல்தானின் குதிரை பின் தங்கிவிட்டதாம். அவரோடு ஆயாஸ் மட்டுமே இருந்தானும். பின்னர் சுல்தான் அவனிடங் கேட் டாராம், அவன் கொள்ளையடித்தது என்ன என்று.

" ஒன்றுமில்லை. தங்களுக்குப் பின்னலேயே நான் வந்துகொண்டிருந்தேன். தங்கள் சேவை யைத் தவிர வேறு எண்ணமே என் மனத்தில் இல்லை" என்ருனும் ஆயாஸ்.

உனக்கு அரச அவையில் முக்கிய இடங் கிடைத்தால், வேறு லாபங் கருதி அரசனின் நலனை மறந்துவிடாதே.

## 13

இரவில் விளக்கைப் போல் மினுமினுக்கும் மின்மினிப் பூச்சியிடம், "நீ ஏன் பகல் நேரத்தில் வெளிவருவதில்லை?" என்று யாரோ கேட்டார்கள்.

"நான் சூரியன் முன் ஒளியற்றிருப்பதனுல் தான்" என்று சாதுர்யமாகப் பதிலளித்தது அது.

## 14

விட்டிலிடம் ஒருவர் சொன்னுர்: "சிறு பூச்சியே, உனக்குத் தகுதியானவர்களிடம் சென்று உறவு பாராட்டு. உனக்கு நம்பிக்கை தரும் இடத்துக்குப் போ. நீயா விளக்கைக் காதலிப்பது! நெருப்பின் முன் சுற்ருதே. அத்தகைய செயல் செய்யுமுன் அதற்குரிய பலம் இருக்கிறதா என்று சிந்தனைசெய்...."

விட்டில் பதிலிறுத்தது: "நான் எரிந்துபோனுலென்ன? என் இதயத்தில் காதலிருக்கிறது. இந்த நெருப்பு எனக்கு மலரைப் போல. என் சொந்த இஷ்டப்படியா நான் நெருப்பில் விழுகிறேன்? அவள் காதல் எனுஞ் சங்கிலி என் கழுத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அவள் பாதத்தடியில் சாவது எனக்குப் பரம திருப்தியளிக்கிறது. அவள் எனக்கு ஆருயிரானவளாக இருப்பதால் நான் எரிந்துபோகிறேன். என் அழிவு அவளுக்கும் வருத்தந் தரும் என்ற திருப்தியும் இருக்கிறது. கடிவாளத்தைத் தவற விட்டு நிர்க்கதியாகக் குதிரைமேல் இருப்பவனிடம், 'மெதுவாக ஓட்டு' என்று சொல்வதில் பயனென்ன?"

## அத்தியாயம் 4

# அடக்கம்பற்றி

### 15

இறைவன் சிருஷ்டியே, நீ மண்ணிலிருந்து படைக்கப்பட்டாய்; மண்ணைப்போல் தாழ்மையோடிரு! திருட்டுத்தனம், கொடுமை, அகந்தை ஆகியவற்றை அகற்று. மண்ணிலிருந்து உதித்த நீ நெருப்பைப் போலிராதே! நெருப்பு அகந்தையோடு தலைதூக்கினுல் மண் தாழ்மையோடு பணிந்துகொடுக்கிறது.

நெருப்பு அகந்தை கொண்டிருப்பதால் அதிலிருந்து பூதங்கள் படைக்கப்பட்டன; மண் பணிவோடிருப்பதால் அதிலிருந்து மானிடர் படைக்கப்பட்டனர்.

### 16

வசந்த மேகத்திலிருந்து ஒரு துளி மழை கடலை நோக்கி வந்தது. கடலின் அகண்டாகாரத்தையும், தன் சிறிய தன்மையையும் கண்டு அது வெட்கங் கொண்டது.

அது எண்ணிற்று, "கடலெங்கே, நானெங்கே! அதனேடு ஒப்பிடவே முடியாதே!" என்று.

இவ்விதமே அது நடுநடுங்கிக்கொண்டு இறங்கியபோது தன் வாயைத் திறந்துகொண்டிருந்த முத்துச் சிப்பிக்குள்ளே விழுந்தது. விதி அதை ஓர் உயரிய முத்தாக ஆக்கிற்று.

அது பணிவோடிருந்ததால் உன்னதமாக்கப் பட்டது; தன்னை இழக்கும் நிலைக்கு வந்த அது தன்னைப்பற்றிப் பிறர் போற்றும் நிலை பெற்றது அடக்கத்தால்தான்.

## 17

நற்குடியில் பிறந்தவனாகிய இளைஞன் ஒருவன் துருக்கித் துறைமுக மொன்றில் வந்திறங்கினான். அவன் அறிவும், மரியாதையும் பொருந்தியவனாகத் தெரிந்ததால் அவன் பெட்டி படுக்கையைப் பள்ளி வாசலில் வைத்துக்கொண்டு அங்கே தங்க அனு மதித்தனர்.

ஒரு நாள் பள்ளிவாசல் மோதீன், பள்ளிவாச லில் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டிச் சுத்தம் செய்யும்படி அவனிடங் கூறினார்.

உடனே இளைஞன் வெளியே சென்றான். பின் னர் திரும்பவே யில்லை. அவன் பள்ளிவாசல் வேலையைச் செய்ய விருப்பமில்லாது அவ்விதம் போய்விட்டான் என்று பெரியவர்கள் பேசிக் கொண்டனர்.

மறு நாள் பள்ளிவாசல் பணியாள் ஒருவன் அவனை வழியில் கண்டிருக்கிறான். "உன் புத்தி மாருட்டத்தால் ஓடிப் போய்விட்டாயேயப்பா ! சேவையால் மனிதர்கள் கண்ணியம் பெற முடியும் என்பதை நீ அறியாயோ !" என்று அவன் வினவி யிருக்கிறான்.

இளைஞன் அழுதுகொண்டே சொன்னானும் : "எனது ஆத்ம நண்பனே, அந்தப் புனித ஸ்தலத்தில் நான் எந்தக் குப்பையையும் அழுக்கையும் கண்டே

னில்லை, என் மன அழுக்கைத் தவிர. ஆகவே, அப்பள்ளிவாசலைப்பரிசுத்தமாக்க அங்கிருந்த அழுக்காகிய என் மனத்தை எடுத்துவந்துவிட்டேன்.''

பக்தனுக்குப் பணிவே தாரக மந்திரம். நீ நல்ல பேற்றை விரும்பினுல் தாழ்மையோடிரு; அதற்கு ஏறுவதற்கு வேறு ஏணி இல்லை என்பதை அறி.

## 18

மாரூப் கர்க்கி என்ற ஞானிகள் நாயகம் தயாளம் மிகுந்தவர்களாய் இருந்தார்கள். ஒரு தடவை நோயால் துன்புற்ற ஒருவன் அவர்கள் வீட்டுக்கு வந்தான். அவன் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது.

மாரூப் அவனைத் தன் வீட்டில் தங்கவைத்துச் சிகிச்சை செய்தார்கள். அந்த நோயாளி இரவில் தூங்குவதே யில்லை; மற்றவர்களையும் தூங்கவிடுவதில்லை; கூச்சலிட்டுக்கொண்டே இருப்பான். அவன் சாகாவிட்டாலும் அவன் கூக்குரல் பிறரைச் சாக அடித்தது. ஒருவரும் அவன் அருகே இருக்க விரும்பவில்லை. ஆனுல், மாரூப் கர்க்கி மட்டும் அவன் பக்கமிருந்து உதவி செய்துவந்தார்கள்.

பல நாட்களாகத் தூக்கமில்லாத அவர்கள் ஒரு நாள் இரவு அயர்ந்து தூங்கிவிட்டார்கள். அவர்கள் தூங்குவதைக் கண்ட நோயாளி கத்தலானுன். "நீ நாசமாய்ப் போவாய்! நன்ருகத் தின்றுவிட்டுத் தூங்கும் உனக்கெங்கே இந்த ஏழையின் துன்பம் தெரியப்போகிறது!'' என்று அவர்களைத் திட்டினுன்.

தூங்கிய அவர்கள் இதைக் கேட்கவில்லையானு லும் வீட்டிலுள்ள பெண்கள் காதில் இது விழுந்தது. அவர்கள் மாரூப் கர்க்கியை எழுப்பி, "அப்பிச்சைக் காரப் பயல் உங்களைத் திட்டுகிருன். அவன் எங் காவது சென்று சாகட்டும். வெளியே விரட்டுங்கள். கருணை காட்டுவதற்கும் சமய சந்தர்ப்பம் இருக்கி றது" என்று கூறினர்.

மாரூப் சிரித்தார்கள். "அவனுடைய பேச்சைக் கேட்டா கோபங்கொள்வது! அவன் நோயால் அவ் விதம் திட்டினுன். நாம் பலவானுக இருந்தால் பல ஹீனர்களின் பாரத்தைத் தாங்கவேண்டும். நாம் அன்பு என்ற மரம் வளர்த்தால் நற்பெயர் என்ற பழங் கிடைப்பது உறுதி" என்று கூறினுர்கள்.

அகந்தையை அகற்றுவோர் கண்ணியமடை வர்; பணிவுடையான் பாராள்வான்.

19

ஹாத்தீம் தாயியிக்குக் காது செவிடு என்று யாவரும் நம்பிவந்தனர்.

ஒரு நாள் காலையில் சிலந்திக் கூட்டில் அகப் பட்டுக்கொண்ட ஈ ஒன்றின் இரைச்சல் அவர் கவ னத்தை ஈர்த்தது. "பேராசையால் சிறையுண்ட பேதாய், பேசாமலிரு! பொறுமையைக் கைக்கொள். மனத்தை ஈர்க்கும் உணவிருக்கும் இடத்துக்கு அருகே உன்னைப் பிடிக்கும் வலையும் இருக்குமென் பதை உணர்!" என்று அதை நோக்கி ஹாத்தீம் கூறினுர்.

அவர் அருகிலிருந்த சீடர்களில் ஒருவன் கேட்டான்: எங்கள் காதுகளில் விழாத ஈயின் இரைச்சலைத் தாங்கள் கேட்டது ஆச்சரியமாக இருக்கிறதே! நிச்சயமாக உங்களுக்குக் காது செவிடல்ல."

ஹாத்தீம் கூறினுர்: "வெற்று வார்த்தைகளைக் கேட்பதைவிடச் செவிடாக இருப்பது நலம். என்னேடு இருப்பவர்கள் என் பெருமைகளைக் கூறிக் குற்றங்களை மறைக்கப் பார்த்தனர்; என்னை ஒன்றுக்கும் உதவாதவனுக ஆக்க முனைந்தனர். அவர்கள்புகழ்மொழியிலிருந்தும் தப்புவதற்காகவே நான் செவிடனுக நடித்தேன். எனக்குக் காது கேட்காது என்று எண்ணுபவர்கள் என்னிடமுள்ள நற்குணங்களையும், குற்றங்களையும் குறித்துத் தாராளமாகப் பேசுவார்கள். அப்போது நான் என் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள முடியும்; தீயவைகளை விலக்கிக்கொள்ள முடியும்."

புகழ்ச்சி எனும் கயிற்றைப் பிடித்தால் அது உன்னைப் பாதாளத்துக்குக் கொண்டுபோய்விடும். ஹாத்தீமைப் போல் செவிடாக இரு. உன்னைப் பற்றிக் குறை கூறுபவர்கள் சொல்வதற்குக் காது கொடு.

## 20

லுக்குமான் என்பவர் பட்ட மரத்தையும் தளிர்க்கச் செய்யும் மருந்துகளைக் கண்டுபிடித்த கிரேக்க நாட்டு மகான். இவரை லுக்குமான் ஹக்கீம் என்றுதான் சாதாரணமாக வழங்குவார்கள்.

இவர் கருத்த உருவினர்; ஆடம்பரமற்றவர். இவரை ஒருவன் அடிமை என்றெண்ணிப் பிடித்துச் சென்றுன்; தனக்கு வீடு கட்டுவதற்காகக் கூலியாளாக நியமித்தான்; மண் சுமக்கச் செய்தான். ஒரு வருஷம் இப்படிக் கடந்தது. பின்னர் அவன் இவர் யார் என்பதை அறிந்தான். அவனைப் பயம் கப்பிக் கொண்டது. லுக்குமான் ஹக்கீம் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.

அவ்வறிஞர் புன்னகை புரிந்தார் : "நீ மன்னிப்புக் கேட்பதால் பயன் என்ன? உன் கொடுமை காரணமாக ஓராண்டு என் உள்ளம் இரத்தம் சிந்திற்று. அதை ஒரு கணத்தில் நான் மறப்பதெங்ஙனம்? எனினும், நான் உன்னை மன்னிக்கிறேன். காரணம், உனக்குக் கிடைத்த லாபத்தால் நான் எந்த நஷ்டமும் அடைந்துவிடவில்லை. நீயோ உன் வீட்டைக் கட்டி முடித்துக்கொண்டாய்; நான் என் அறிவை அபிவிருத்தி செய்துகொண்டேன். எனக்கும் ஓர் அடிமையுண்டு. அவனையும் அடிக்கடி பளுவான வேலைகளைச் செய்யும்படி நான் கஷ்டப்படுத்துவதுண்டு. இனி நான் பட்ட கஷ்டத்தை எண்ணியாவது அவனுக்கும் துன்பம் இழைக்க மாட்டேனல்லவா !"

பலவான் கையில் கஷ்டத்துக்குள்ளான யார் தான் பலஹீனனின் கஷ்டங் கண்டு அனுதாபங் காட்ட மாட்டான்!

உன்னைவிட மேலான அந்தஸ்திலுள்ளவர்கள் உனக்குத் துன்பமிழைத்தால், உனக்குக் கீழிருப்பவர்களைக் கொடுமைக்குள்ளாக்காதே !

## அத்தியாயம் 5

# தெய்வ நாட்டம்பற்றி

### 21

இன்பம் வருவது இறைவன் அருளாலேயே, உன் புஜபலத்தால் அன்று.

இறைவன் இன்னருள் இல்லை யெனின், உன் திறமையால் செல்வஞ் சேர்ப்பது இயலாது.

எறும்பு தன் பலஹீனத்தால் வருந்தவில்லை; புலி தன் பலத்தால் உண்ணவில்லை.

உன் கை வானை எட்ட முடியாதபடியினுலே, அங்கிருந்து வரும் அருளைத் தவிர்க்க முடியாததென ஏற்றுக்கொள்.

உன் ஆயுள் பலமானதாக இருக்கும்படி விதிக்கப்பட்டிருந்தால், பாம்போ, பகையோ எதுவுமே உனக்குத் தீங்கிழைக்க முடியாது.

சாவு நெருங்கிவிட்டாலோ அமிர்தமும் உன்னைக் கொல்லும் நஞ்சாகும்.

### 22

ஒரு நாள் இரவு ஒரு கிராமவாசிக்கு விலாப் புறத்தில் வலி ஏற்பட்டுத் தூங்க முடியாமல் கஷ்டப் பட்டான். ஒரு வைத்தியர் வந்து பார்த்துவிட்டுச் சொன்னர்: "திராக்ஷை இலையைத் தின்றதனுல் இந்த வலி உண்டாகியிருக்கிறது. இன்று இரவு முழுதுங்கூடத் தாளாது; அதற்குள் அனேகமாக இவன் காலமாகிவிடுவான். தார்த்தாரியன் அம்புகூடச்

செமியாத இந்த இலையைப் போல் அத்தனை கஷ்டந் தராது” என்று.

அன்றிரவு அவ்வைத்தியர் இறந்துபோனார்; அதற்குப் பின் நாற்பத்தைந்து ஆண்டுகள் உயிரோடிருந்தான் அந்தக் கிராமவாசி!

23

ஒரு தர்வேஷ் கெட்ட குணம் படைத்த தன் மனைவியிடஞ் சொன்னார்: “அடி, விதி உன்னை விகார ரூபியாக ஆக்கியிருக்கும்போது ஏன் வாசனைச் சுண்ணங்களைத் தடவி அழகுபடுத்தப் பார்க்கிறாய்!”

பலவந்தமாக யாரே அழகு சம்பாதிக்க முடியும்? கண் மையைக்கொண்டு குருடனைப் பார்க்கும்படி செய்ய இயலுமா ?

கிரேக்க (யூனானி) நாட்டுத் தத்துவஞானிகள் கூட முள்ளிலிருந்து தேன் செய்ய முடியாது.

காட்டு மிருகத்தை மனிதனாக்க முடியாது; அதில் உன் நேரத்தை வீணாக்காதே!

முகக் கண்ணாடியில் விழும் கறையை நீக்கிவிடலாம்; ஆனால், கல்லிலிருந்து கண்ணாடி செய்யலாமா ?

உடை மரத்தில் ரோஜா மலர்வதில்லை; சூடான நீர் நீக்ரோவனை வெள்ளையாக்குவதில்லை.

விதியின் கணைகளிலிருந்து தப்ப முடியாது; எனவே, இறைவனைச் சரணடைதலே அதற்குக் கவசமாகும்.

## 24

ஒரு பருந்திடம் ஒரு கழுகு கூறிற்று: "என்னைப் போல் வெகு தூரம் யாரும் பார்க்க முடியாது" என்று.

பருந்து கேட்டது: "இருக்கலாம். ஆனால், அதோ அந்தப் பாலையில் நீ காண்பதென்ன?"

உற்றுப் பார்த்த கழுகு கூறிற்று: "அங்கே ஒரு துண்டு மாமிசங் கிடங்கக் காண்கிறேன்.'

உடனே அவை அவ்விடத்துக்குப் பறந்து சென்றன. கழுகு மாமிசத் துண்டத்தில் உட்கார்ந்ததும் அங்கே வைக்கப்பட்டிருந்த பொறியில் மாட்டிக்கொண்டது. அது அப்பொறியைக் கவனிக்கவில்லை. விதி அதை மாட்டிவிட்டது.

எல்லாச் சிப்பிகளிலும் முத்திருப்பதில்லை; எய்பவரெல்லாம் இலக்கில் அடிப்பதில்லை.

பருந்து கேட்டது, "உன் எதிரியின் பொறியைக் காண இயலாத நீ மாமிசத்தைக் கண்டதால் என்ன பயன் ?" என்று.

"எச்சரிக்கையும், விதியும் ஒன்றாகப் போவதில்லை" என்றது கழுகு.

இறைவனுடைய ஏற்பாடு வேலை செய்யும் போது நல்ல பார்வையுள்ள கண்ணும் குருடாகி விடும்.

## அத்தியாயம் 6

# திருப்தியைப்பற்றி

### 25

தன் நிலை குறித்துத் திருப்தியுருதான் இறைவனை அறிந்தவனுகான்; அவனைத் தொழுபவனுமாகான்.

திருப்தி மனிதனைச் செல்வனுக்குகிறது—இதைப் பேராசைக்காரர்களிடஞ் சொல்லுங்கள்.

ஹே தீர்மானமற்றவனே, பொறுமையோடிரு! உருளும் கல்லில் புல் முளைப்பதில்லை.

நீ அறிவுடையோனுயின் பேராசையில் உழலாதே! அறிவாளிகள் நன்மை சம்பாதிக்கிருர்கள். பேராசைக்காரன் ஏமாற்றமுறுகிருன்.

ஆனுல், உண்பதும், உறங்குவதும், விழிப்பதும் மாக்களின் நியதி; இவற்றை மடையர்கள்தாம் கைக்கொள்வார்கள்.

இறைவனை அடைவதற்காகத் தொழுபவன் அதிர்ஷ்டமுடையான்; அவன் இன்பமடைவான்.

இருளையும் ஒளியையும் பகுத்தறிய இயலாதவனுக்குப் பிசாசும் வானுலக ஆரணங்காகவே தெரியும்.

பேராசை என்ற பெருங் கல்லைத் தன் கால்களில் கட்டிக்கொண்டு (மனித) ராஜாளி எப்படி உயரே பறக்க முடியும்?

உன் உணவு விஷயத்தில் காட்டும் கருத்தை விட உன்னைப் படைத்தவன் சிந்தனையில் அதிகக் கவனஞ் செலுத்தினால் சுவர்க்கம் உன் வசத்ததாகும். முதலில் மனிதத் தன்மையை வளர்; பின்னர்ச் சுவர்க் கவாசியின் தன்மையைப் பெருக்கிக் கொள்ளலாம்.

உன் பசிக்கேற்ற அளவே உண். வயிறு புடைக்க உண்டுவிட்டு மூச்சுவிடத் திணறுபவன் எப்படி இறைவனைப் போற்ற முடியும் ?

வயிறு முற்றும் நிரம்பியவன் அறிவில்லாதவன்; பேராசையால்தான் வேட்டை மிருகம் வலையில் விழுகிறது.

## 26

துறவிகள் சிலரோடு நான் பாஸ்ராவிலுள்ள ஈச்சந் தோப்பில் நுழைந்தேன். அங்கே பெருந் தீனிக் காரன் ஒருவன் வந்துசேர்ந்தான். அவன் உடையைத் தூக்கிக் கட்டிக்கொண்டு ஒரு மரத்தில் ஏறினான். ஆனால், தலைகுப்புற விழுந்து இறந்து போனான்.

உடனே கிராமத் தலைவன் அங்கே வந்து, "யார் இவனைக் கொன்றவர் ?" என்று வினவினான்.

நான் சொன்னேன் : "அவன் வயிறு தானப்பா! வயிற்றுப் பாரத்தைத் தூக்கிக்கொண்டு மரத்தில் ஏற முடியவில்லை. அது அவனைக் கீழே விழச்செய்து கொன்றுவிட்டது."

## 27

தங்களுக்கு உணவு கிடைக்குமா என்று கவலை யுற்ற கணவனிடம் மனைவி கூறினாள்: "இதுபற்றி நீர் கவலைப்படுவது வீண். விலைக்கு வாங்கப்பட்ட அடிமை தன் எஜமானனிடம் நம்பிக்கை வைக் கிறான். எஜமானனும் அவனுக்கு உணவளிக்கிறான். இந்த அடிமை தன் எஜமானனிடம் கொள்ளும் நம்பிக்கைகூடவா உமக்கு இறைனிடமில்லை ?"

முன் காலத்தில் ஞானிகள் கல்லைப் பொன்னாகிய தாக நான் கேள்விப்பட்டதுண்டு. இது பகுத்தறி வுக்குப் பொருந்தாதது என்று எண்ணவேண்டாம். நீ திருப்தியுற்றவனாகிவிட்டால் கல்லும் பொன்னும் உனக்கு ஒன்றுதான்.

அரசனைத் தொழும் ஆண்டியிடம் கூறுங்கள், அரசன் தர்வேஷைவிட ஏழை என்று.

ஏழைக்கு ஒரு தீனார் திருப்தி யளிக்கிறது; பார ஸீகத்தில் பாதி ராஜ்யம் தன்னுடையதாய் இருந் தும் பரீதூன் திருப்தியுறவில்லை.

கவலையற்ற யாசகன் கவலை நிறைந்த அரசனை விட மேலானவன். கிராமவாசி நிம்மதியாகத் தூங்குவது போல அரசன் தூங்க முடியாது.

அகந்தை கொண்ட பணக்காரனைக் காணும் போதெல்லாம் உன் நிலைமைக்காக நீ இறைவனுக்கு நன்றி செலுத்து ; ஒருவருக்கும் தீங்கிழைக்க இயலாத உன் ஏழ்மை குறித்துப் பெருமைகொள் !

## 28

தாராளவான் செல்வனுக இல்லாதிருப்பினும் பாக்கியமுடையவனுவான். அற்பன் செல்வனுனுல் அவன் குணம் மாறிவிடும் என்று எண்ணுகிருய் !

தாராளம் என்ற வயலில் செல்வம் என்ற பயிர் நன்கு விளையும்.

சேமிப்பதிலேயே கவனஞ் செலுத்தாதே! ஓடும் தண்ணீர்தான் சுத்தமானது; ஒரு நாள் பெரு வெள்ளமாகவும் மாறக்கூடியது.

நீ ஒரு மரகதமானுல் நீ வருந்தத் தேவை யில்லை. வழியில் கிடக்கும் கல்லைத்தான் யாரும் பொருட்படுத்துவதில்லை. தங்கத்திலிருந்து இரா வப்பட்ட தூளும் மெழுகினுல் ஒத்தி எடுக்கப்படும்.

## அத்தியாயம் 7

# குரோதம், புறங்கூறல்பற்றி

## 29

போகக்கூடாது என்று விலக்கப்பட்ட (ஹராமான) பாதைகளைவிட்டும் ஆசை என்னுங் குதிரையை விலக்குபவர்கள் ருஸ்தத்தையும், சாமையும்விடச் சிறந்த வீரர்களாவர்.

புலனுணர்ச்சிக்கு அடிமையாய் உள்ள உனக்கு நீயே பெரும் விரோதி.

உன் உடல் ஒரு நகரம்; அதில் நல்லதுமுண்டு; தீயதுமுண்டு. அந்நகர்க்கு நீயே அரசன்; பகுத்தறிவே உன் மதி மந்திரி.

இந்நகரில் அகந்தையுடையார் பேராசை என்னும் வாணிபஞ் செய்வர். புகழ், நற்குணம் உடையோர் பணிந்து மிதமாய் நடப்பர். காமமும் குரோதமும் இந்நகரின் திருடர்களும் ஏமாற்றுக்காரர்களுமாகும்.

அரசன் தீயோருக்குச் சலுகையளித்தால் அறிவுடையார் அமைதியோடிருப்ப தெங்ஙனம்?

உன் இரத்தக் குழாய்களில் இரத்தம் இருப்பது போலத் தீமை, பொருமை, குரோதம் ஆகிய குணங்கள் உன் உடலில் உறைந்திருக்கின்றன. இவை உன் எதிரிகள். இவை பலம் பெற்ருல், உன் ஆட்சிக்கும் போதனைக்கும் அடங்கி நடக்கா. பகுத்தறிவென்னும் மடக்கிய முஷ்டியைக் கண்ட உடனே மட்டும் இவை பதுங்கிக்கொள்கின்றன.

காவலாளி பாரா நிற்கின்ற இடத்தில் கன்ன மிடுவோனும், காலாடியும் நெருங்க மாட்டார்கள்.

தன் எதிரிக்குத் தண்டனையளியாத தலைவன் நாளைத் தன் எதிரியால் பலமற்றவனாவான்.

கற்றதைக் காரியத்தில் காட்டுபவனுக்கு இவ்வளவு சொன்னாலே போதும்.

## 30

எகிப்து நாட்டிலே ஒரு துறவி இருந்தார். அவர் சதா மௌனமாகவே இருந்துவந்தார். தேனில் ஈ மொய்ப்பது போல அறிஞர்கள் அவரைச் சுற்றிக் கூடினர்.

ஒரு நாள் இரவு துறவி இவ்விதம் எண்ணினார் : "என் பெருமை நாவினடியில் நசுக்குண்டு கிடக்கிறது. நான் நாவை அசைக்காதிருந்தால் நான் கற்றவன் என்பதை மற்றோர் அறிவதெங்ஙனம் ?''

ஆகவே, துறவி பேசலானார் ; தன்னைச் சுற்றியிருந்த யாவருக்கும் தன் அறியாமையை வெளியாக்கினார். எகிப்திலேயே இத்தகைய அறிவிலி இருப்பானா என்று சந்தேகிக்கும்படி செய்தார். அவருடைய பக்தகோடிகள் விலகிச் சென்றனர்.

ஒன்றும் வழியற்று, தன் மூடத்தனத்தை உணர்ந்த அவர் பிரயாணஞ் செய்யத் தொடங்கினார்; ஓர் ஊர் மஸ்ஜித் சுவரில் அவர் இவ்விதம் எழுதினார் : ''பகுத்தறிவென்னும் கண்ணாடியில் என்னை நான் பார்த்திருப்பேனாயின், என் மனத்தை மறைத்திருந்த திரையைக் கிழித்தெறிந்திருக்க மாட்டேன். நான் விகார ரூபி ; எனினும், அழகனென்

றெண்ணி என் உருவத்தைப் பிறர் காண இடமளித்துவிட்டேன்.''

கொஞ்சம் பேசுபவன் பெரும் பேர் பெறுவான். மௌனம் கண்ணியமளிக்கிறது; நம் குறைகளை மறைக்கும் திரை அது.

உன் உள்ளத்தெழும் எண்ணங்களை உடனே கக்கிவிடாதே! அவற்றை ஆராய்ந்து பார்த்து வெளியிடு !

மிருகங்கள் பேசுவதில்லை; மனிதனுக்கு மட்டுமே பேசும் சக்தி அருளப்பட்டுள்ளது. ஆனால், வீண் பேச்சுப் பேசுவோர் மிருகங்களினும் கடையானவர்களாவர்.

## 31

வாக்குவாதத்தினிடையே ஒருவன் தகாத வார்த்தைகள் கூறிவிட்டான். அதனால் கோபமுற்றவர்கள் அவன் உடலை அனேகமாகக் 'கசக்கி'விட்டார்கள்.

அனுபவஸ்தன் ஒருவன் கூறினான்: "தற்பெருமைக்கார மடையனே, உன் வாய் முகையைப் போல் மூடி யிருக்குமானால், நீ இப்படிப் பூவைப் போல் கசக்கப்பட்டிருக்க மாட்டாய்!" என்று.

நெருப்பு என்பது ஜ்வாலை என்பதையும், அது நீரினால் அணைக்கப்படக்கூடியது என்பதையும் நீ அறியாயா ?

ஒருவனுக்குத் திறமை இருக்குமானால் அது பேசுமே; அவன் பேசவேண்டியதில்லையே !

உன் கையில் நல்ல புனுகு இல்லையென்றால் அது இருப்பதுபோல் பாவனை செய்யாதே! அது உன்னிடமிருந்தால் அதன் மணமே தன்னை அறிமுகப்படுத்துமே!

32

நல்லவரையோ தீயவரையோ குறித்து இழிவாகப் பேசாதே! பேசினால், அதன் மூலம் நல்லவருக்குத் தீமை இழைத்தவனாகவும், தீயவரைப் பகைத்துக்கொண்டவனாகவும் ஆகிவிடுகிறாய்.

பிறரைத் தூஷிப்பவன் தன் குற்றங்களை வெளியாக்குபவனாக ஆவான் என்பதை அறி!

நீ யாரையுங் குறித்துத் தீயவை கூறினால், அது உண்மையாக இருந்தாலும், பாவஞ் செய்தவனாகிறாய்.

33

பிறரைப்பற்றிப் புறங்கூறிக்கொண்டிருந்த ஒருவனிடம் அறிஞர் ஒருவர் இவ்விதங் கூறினார்: "என் முன்னால் யாரையும்பற்றி இழிவாகப் பேசாதே! அதனால், நான் உன்னைப்பற்றி இழிவாக எண்ண வேண்டுவதாகிறது. அவனுடைய மதிப்புக்குப் பங்கம் விளைவித்தாலுங்கூட, இவ்விதம் புறங்கூறுவதன் மூலம், உன் மதிப்பு உயர்ந்துவிடுவதில்லை."

34

நண்பன் வெளியூர் சென்றிருக்கும்போது இரண்டு காரியங்களைச் செய்யக்கூடாது: ஒன்று,

அவன் சொத்தை விரயஞ் செய்வது; மற்றது, அவனைப்பற்றிப் புறங்கூறல்.

மற்றோரை இழிவாக எண்ணுபவன் ஒரு போதும் நன்மை செய்ய இயலாது. காரணம், இன்று பிறரைப்பற்றி உன்னிடம் புறங்கூறுபவன், நாளை உன்னைப்பற்றி மற்றோரிடம் இதேவிதம் பேசலாமல்லவா !

தான் உண்டு, தன் காரியம் உண்டு என்று இருப்பவனே நல்லவன்.

## 35

மூவரைப்பற்றி மட்டும் புறங்கூறுவது நன்மை பயக்கும் :

குடிகளைக் கொடுமைப்படுத்தும் மன்னனின் தீய செயல்களைக் குறித்து அவன் இல்லாத இடத்தில் பேசி மக்களை எச்சரிக்கை செய்யலாம். இரண்டாவதாக, மானமே இல்லாதவனைப்பற்றி இவ்விதம் பேசலாம். தன் காரியங்களாலேயே தன் குற்றங்களை வெளிப்படுத்தும் இவனைக் குறித்துப் பேசுவது பாவமன்று. மூன்றாவதாகப் பொய்யான அளவைகளை வைத்துப் பித்தலாட்டஞ் செய்பவனைக் குறித்து, அவனுடைய ஒழுங்கீனம்பற்றிப் பிறரிடங் கூறலாம்.

## 36

“உங்களைப்பற்றி இன்னான் என்ன சொன்னான் தெரியுமா?” என்று ஒரு பெரியவரிடம் ஒருவன் வினவினான். பெரியவர் பதில் கூறினார் : “மூடா

உன் வாயை! என் எதிரி என்ன சொன்ஞன் என்பதை நான் அறியாதிருப்பது நலம். எதிரியைப்பற்றிக் கோள் சொல்லுபவன் எதிரியைவிட மோசமானவன். எதிரியோடு பழகுபவர்கள்தாமே அவனைப்பற்றிப் புறங்கூறமுடியும்! நீ என் எதிரியைவிட இழிந்தவன். காரணம், அவன் அந்தரங்கமாக அறிவித்ததை நீ பகிரங்கமாக்குகிருய் !"

கதை கட்டுபவன் பழைய சண்டையைப் புதுப்பிக்கிருன். சண்டை மூட்டுபவனின் கண்ணில் படாமலே ஒதுங்கவேண்டும்.

இடத்துக்கிடம் புறங்கூறி அலேவதைவிடப் படுகுழியில் விழுந்து கட்டுண்டு கிடப்பது நலம்.

சண்டை என்பது புறங்கூறுபவன் தரும் விறகைக்கொண்டு எரியும் நெருப்பாகும்.

37

பரீதூன் என்ற அரசனுடைய மந்திரி மதியூகி; திறமைசாலி. அந்த மந்திரியைப்பற்றியும் அரசனிடம் புறங்கூறலாயினர். "அந்த மந்திரியே உங்கள் இரகசிய விரோதி. அவன் நாட்டிலுள்ள குடிகளுக்கெல்லாம் பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்துள்ளான். அவற்றைத் தாங்கள் இறந்ததும் அவனிடம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று நிபந்தனையும் விதித்திருக்கிருன்" என்று சிலர் மன்னனிடங் கூறினர்.

மன்னன் கோபங்கொண்டான். ஆத்திரத்தோடு மந்திரியை நோக்கி அறைந்தான்: "ஏனப்பா

நண்பன்போல் வேஷம் போட்டு மோசஞ் செய்கிருய் ?''

மந்திரி பணிவோடு பதிலிறுத்தான் : "ஹே மகிமைமிக்க மன்னனே, எல்லா மக்களும் நீர் நீடூழி வாழ்வதை விரும்பவேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீர் காலகதியான பின்-அது என்ருவது ஒரு நாள் ஆகத்தானே செய்யும்!-அவர்கள் நான் கொடுத்தவற்றைத் திரும்பக் கொடுக்கவேண்டியதிருக்குமாதலால், அவர்கள் நீர் இன்னும் நெடுங் காலம் வாழவேண்டுமென்று பிரார்த்திப்பார்களல்லவா !''

இந்த விளக்கம் அரசனுக்குத் திருப்தியளித்தது. மந்திரி அரசனிடமிருந்து அதிக ஆதரவு பெற்ருன்.

இருவரிடையில் சச்சரவென்னும் நெருப்பைக் கிளறிவிட்டுத் தானே அதற்கு ஆகுதியாதல் பகுத்தறிவுக்குத்தான் பொருத்தமானதா?

அத்தியாயம் 8

## நன்றியைப்பற்றி

### 38

அவனுக்கு நன்றி தெரிவிக்க என்னுல் முடியாது; காரணம், அதற்குத் தகுதியான வர்ர்த்தை எனக்கு அகப்படாததுதான். என் உடம்பிலுள்ள ஒவ்வோர் உறுப்புமே அவன் சொத்து; அவை ஒவ்வொன்றுக்காகவும் நான் எப்படி நன்றி செலுத்துவேன் !

உயிரையும் உடலேயும் தந்து காக்கும் கருணையாளனுக்கே எல்லாப் புகழும். அவன் பெருமையை யாரே இயம்ப வல்லார் ! எல்லாப் புகழுரைகளும் அவன் பெருமையுள் அடங்கிவிடுகின்றன.

சிசுவிலிருந்து முதியவனுகும் வரை உன்னை அவன் எப்படிக் காத்தான் என்பதை நினைத்துப் பார் !

உன்னைப் பரிசுத்தவானுகப் படைத்தான்; ஆகவே, பரிசுத்தவானுகவே இரு ; பாவ அழுக்கேறியவனுக இறத்தல் சரியன்று.

உன் மனக் கண்ணுடியில் தூசி ஒட்டவிடாதே ! ஒரு தடவை அது மங்கினுல் பின் பிரகாசம் பெறுவதில்லை.

உன் வயிற்றுப்பாட்டுக்காக உழைக்கும்போது உன் உடல் வலுவை மட்டும் நம்பாதே !

ஏ தற்பெருமைக்காரா, உனக்குப் பலம் தந்துள்ள இறைவனை நீ ஏன் வாழ்த்தவில்லை ?

உன் முயற்சியால் ஒரு நற்செயல் செய்தால் அதன் பெருமை உனக்கே என்று எண்ணாதே ! அது இறைவன் கிருபையால் முடிந்தது என்று எண்ணு.

உன் சொந்த பலத்தால் நீ செயலாற்றவில்லை- ஒவ்வொரு கணமும் அவ்வுருவற்ற ஒருவனிடமிருந்து நீ பலம் பெறுகிறாய்.

## 39

தன் அறிவுறுத்தலுக்குச் செவிசாய்க்காத மகனின் நடத்தையால் மனம் புண்பட்ட தாய் அவன் சிசுவாக இருந்தபோது பயன்பட்ட தொட்டிலை அவனிடங் காட்டிச் சொன்னாள் : "அன்பற்றவனே, சென்றதை மறந்துவிட்டாய். ஒரு காலத்தில் சதா அழுது துடிக்கும் குழந்தையாக நீ இருக்கவில்லையா ? உனக்காக நான் எத்தனை இரவுகள் என் தூக்கத்தைத் தத்தஞ் செய்தேன் ! அன்று நீ பலமற்ற அனாதை. உன் உடலில் உட்காரும் ஈயைக்கூட ஓட்ட முடியாது. அன்று நீ தவித்தாய். ஒரு சிறு பூச்சி உனக்குக் கஷ்டம் தந்தது. இன்று நீ பலவான்களில் சிறந்தவனாக இருக்கிறாய். அது போல் திரும்பவும் உன் கல்லறையில் ஓர் எறும்பின் கடியை உன்னால் தடுக்க முடியாது. அங்கே கறையான்கள் உன் மூளையை உண்ணும்போது உன் அறிவு விளக்கைத் திரும்பவும் உன்னால் எப்படி ஏற்ற முடியும்? உன் முன்னால் இருக்கும் கிணற்றைக்

கூட அறிய முடியாத அந்தகனுய் இருக்கிருய். உனக்குக் கண் பார்வை இருப்பதற்காக நீ நன்றி செலுத்துவதானுல் நன்று; இல்லையேல், நீ குருடன் தான். உன் குரு உனக்கு அறிவுத் திறனைத் தந்து விடவில்லை. அது உன் இயற்கையோடு இறைவனுல் பொருத்தப்பட்டது. இந்த நன்கொடையை அவன் தரவில்லையானுல் உனக்கு உண்மையும் பொய்யாகவே தோன்றும்.”

## 40

உனக்காக இரவில் நிலவு தரும் சந்திரிகையும், பகலில் ஒளி வீசும் பகலவனும் தரப்பட்டுள்ளன.

உனக்காக வானம் ஒரு பணியாள் போல, வசந்த விரிப்பைப் பரப்பி இருக்கிறது.

காற்றும், பனியும், மேகமும், மழையும், இடியும், மின்னலும்-யாவும் அவன் உத்தரவுக்குக் கீழ்ப்படியும் ஏவலாட்கள். இவை நீ மண்ணில் தூவும் விதையை ஊட்டி வளர்க்கின்றன.

உனக்குத் தாகமாக இருக்கிறதே என்று தத்தளியாதே. மேகங்கள் தம் தோள்களிலே நீர் சுமந்துவருகின்றன. தேனீக்களைக்கொண்டு அவன் உனக்குத் தேனளித்தான்; காற்றைக்கொண்டு சுகந்தத்தைப் பரப்பினுன்; மரத்திலிருந்து பழங்களை, விதையிலிருந்து மரத்தைத் தந்தான்.

உனக்காகவே வானமும், சூரிய சந்திர நக்ஷத்திரங்களும் உள்ளன; அவை உன் வீட்டுக் கூரையில் ஏற்றப்பட்டுள்ள விளக்குகள்.

முட்களிலிருந்து ரோஜாவை, பூனையிலிருந்து புனுகை, நிலக் குகையிலிருந்து பொன்னை, வாடிய கொம்பிலிருந்து பச்சை இலைகளை அவன் வெளிக் கொணர்கிறான்.

அவன் தன் கையாலேயே உன் கண்களையும் புருவத்தையும் தீட்டினான். சர்வ வல்லமையும் பொருந்திய அவன் எண்ணற்ற இன்பங்களால் யாவரையும் ஊட்டுகிறான்.

இதயப்பூர்வமாக ஒவ்வொரு கணமும் நீ அவனுக்கு நன்றியளி; நன்றியளித்தல் நாவின் தொழில் மட்டுமன்று.

இறைவா, என் உள்ளம் உருகுகிறது; என் நயனங்கள் பூத்துப்போகின்றன-நீ தந்துள்ள உவமையிலா நன்கொடைகளை நோக்கும்போது.

41

துன்பத்தை அறியாதவன் ஒரு நாளைய இன்பத்தின் உயர்வை அறியான். பிச்சைக்காரனுக்குக் குளிர் கொடுமையுள்ளதாக இருக்கிறது. பணக்காரன் அதைப் பொருட்படுத்தான். நீ நன்றாக நடக்கக்கூடியவனாக இருந்தால் நொண்டிகளைப் பார்த்து அனுதாபங் காட்டு.

ஜாஹுன் நதிக்கரையிலுள்ளோர் தண்ணீரின் அருமையை அறிவதெங்ஙனம்? கோடையால் தகிக்கப்படும் மக்களிடம் அதன் பெருமையைக் கேள்! திகிரீஸ் நதிக்கரையிலிருக்கும் அரபி, பாலையில் உழலும் பிரயாணியின் தாகத்தை எப்படி அறிவான்!

நோயால் துன்புற்றவன் தேக சுகத்தின் பெருமையை அறிவான். பஞ்சு மெத்தையில் படுத் துறங்கும் உனக்கு இரவு எப்படி நீண்டதாக இருக்க முடியும் ! காய்ச்சலால் கஷ்டப்படுபவனிடங் கேள், அவன் அறிவான் இரவைக் கழிப்பது எவ்வளவு கஷ்டமானது என்பதை.

நகரா ஒலி கேட்டு எஜமானன் விழித்தெழுகி ருன். இரவைக் காவலாளி எப்படிக் கழித்தான் என்பதை அவன் கண்டானு ?

42

கொடிய குளிர் காலம். ஒரு நாள் இரவு துக்ரல் என்ற அரசன் தெருவில் ஒரு காவலாளியைக் கண் டான். அக்காவலாளி குளிரால் நடுநடுங்கிக் கொண்டிருந்தான். அதைக் கண்டு இரக்கங் கொண்ட அரசன், "நீ போர்த்துக்கொள்ள உனக்கு ஒரு கம்பளி அனுப்புகிறேன்" என்று சொல்லிச் சென்ருன்.

அரசன் அரண்மனையுள் நுழைந்தான். அங்கே மதிவதனி யொருத்தி எதிர்ப்பட்டாள். அரசன் மதியும் மயங்கியது. அந்த ஏழைக் காவலாளியைப் பற்றிய எண்ணமும் அவள் மேலாடையோடு நழு விப் போயிற்று. கம்பளி அனுப்பப்படவில்லை.

இரவு முழுவதையும் அரசன் இன்பமாகக் கழித் தான். மறு நாள் காலையில் காவலாளிகளின் தலைவன் அவனிடம் சொன்னுன் : "உங்கள் கை அந்த அழகியின் தோளைச் சுற்றியதும் அந்தத் துர திர்ஷ்டம் பிடித்த காவலாளியை மறந்துவிட்டீர்கள்.

உங்களுக்கு இரவு ஒரே கேளிக்கையாகவும் இன்ப மாகவும் இருந்திருக்கும். ஆனால், நாங்கள் எத்தனை கஷ்டத்தோடு இரவைப் போக்கினேம் என்பதைத் தாங்கள் எங்கே அறியப்போகிறீர்கள்!''

ஒட்டகத்தில் செல்லும் உல்லாசப் பிரயாணிக் குப் பாலையில் நடந்து அவதியுறும் பஞ்சைகளைப் பற்றிய கவலை இருப்பதேது ?

ஒட்டக மோட்டி கடிவாளத்தைக் கையில் பிடித்துவந்தான்; நீ ஒட்டகத்தின் முதுகில் கிடந்த தூளியில் தூங்கிக்கொண்டிருந்தாய். இடையில் வந்த காடு மலைகளை நீ கண்டாயா? கல்லையும் மண்ணை யும் நீ கண்டாயா ? கால் நடையாக வருபவர்களி டம் கேள், அவற்றில் நடப்பது எப்படி இருக்கிற தென்று.

## 43

பாதையிலே தனி வழி நடப்பவன் அழுது கொண்டு சொன்னன், "இப் பாலையில் என்னை விடத் துரதிர்ஷ்டசாலி யார் இருக்கிருர்கள்?'' என்று.

பொதி சுமக்கும் கழுதை பதில் சொல்லிற்று: "ஏ அறிவிலி, விதியின் கொடுமை குறித்து எவ்வ ளவு நேரந்தான் நீ அழுதுகொண்டிருப்பாய்? நீ ஒரு கழுதையின்மீது சவாரி செய்ய முடியாவிட்டாலும், மனிதனைச் சுமக்கும் ஒரு கழுதையாக இல்லாததற் காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்து.''

## 44

மார்க்கக் கல்வி கற்ற ஒருவர் வழியில் குடித்து விட்டுக் கிடந்த ஒருவனைக் கடந்து சென்ருர். தன்

பக்தி நிலையைப்பற்றி அகம்பாவங் கொண்ட அவர் அங்கே விழுந்து கிடந்தவனை அலக்ஷியமாகப் பார்த்துச் சென்றார்.

அக்குடிகாரன் தலையைத் தூக்கிக்கொண்டு சொன்னான்: "கிழவரே, நீர் தெய்வ கிருபை பெற்றவர் என்பதற்காக நன்றியுள்ளவராக இரும். அகந்தை துன்பத்துக்கு இடந்தரும். துன்பத்தில் உழல்பவனைக் கண்டு நகையாதீர்! நாளை இதே துன்பம் உமக்கு வரலாம். நாளை ஒரு வேளை நீரும் என்னைப் போல் வீதியில் விழுந்து கிடக்கமாட்டீர் என்பது என்ன நிச்சயம்?"

பள்ளிவாசலில் தொழுவதால் நீ இறைவனருள் பெற்றுவிட்டால், அக்கினி ஆலயத்தில் வணங்குவோரை இகழ்ச்சியோடு நோக்காதே!

தன் திருச்சித்தப்படி வழிகாட்டும் ஒருவனிடம் திரும்பு; வேறு எங்கும் உதவி தேடுதல் குருட்டுத்தனமாகும்.

## அத்தியாயம் 9

## பச்சாதாபம்பற்றி

### 45

ஒரு நாள் இரவு இளைஞர்களான சிலர் உட்கார்ந்து பாடிக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தோம்.

எங்களுக்கருகே கிழவன் ஒருவன் வாயை மூடியவாறு தலை குனிந்து உட்கார்ந்திருந்தான். ஓர் இளைஞன் அவனை நெருங்கிக் கூறினான்: "தாத்தா, நீ ஏன் இப்படி எதையோ கோட்டைவிட்டவன் போல் வருத்தத்தோடு உட்கார்ந்திருக்கிறாய்? வா, துக்கம் அகற்றித் தலை நிமிர்த்தி எங்கள் கேளிக்கையில் கலந்துகொள்."

முதியவன் இவ்வாறு பதிலிறுத்தான்: "காலைத் தென்றல் நந்தவனத்தில் வீசும்போது இளந் தளிர்கள் தம் மகிழ்ச்சிக் கரம் நீட்டி அதை வரவேற்கும். என் கன்னத்திலோ முதுமை உதயமாகிவிட்டது. உங்கள் கூட்டத்தில் சேர நான் தகுதியற்றவனாகி விட்டேன். நான் இவ்விதக் கேளிக்கைகளைக் கை கழுவிவிட்டேன். இது உங்கள் காலம். கால தேவன் என் கற்பனைச் சிறகு நரைக்கும்படி செய்து விட்டான்; பூங்காவில் புல்புலைப் போல் நான் விளையாட முடியாது. விரைவில் என் வாழ்க்கை அஸ்தமித்துவிடும். உங்களுக்கு இப்போதுதான் இளமைப் பகலவன் உதயமாகிறான். என் பாவங்களுக்காகக் குழந்தையைப் போல அழுவதைத் தவிர வேறு எனக்கு மார்க்கமில்லை." லுக்குமான் ஹக்கீம்

வெகு அருமையாகச் சொன்னர்: "பாவாத்மாவாகப் பல வருஷங்கள் வாழ்வதைவிடப் பிறவாமல் இருப்பது நலம். நஷ்டத்துக்கு விற்பதைவிடக் கடையைக் காலையிலேயே மூடிவிடுவது நலம்."

## 46

இளைஞனே, இன்று நேரிய பாதையில் செல்; நாளை முதுமை வந்தடையும். இன்று உனக்கு அவகாசமிருக்கிறது; உடற் பலமும் இருக்கிறது. மைதானம் பெரிதாக இருக்கும்போதே உன் விளையாட்டை ஒழுங்காக நடத்து.

வாழ்க்கையின் மதிப்பு அதை இழந்த பின்னரே தெரியும்.

கிழட்டுக் கழுதை கனத்த பாரத்தைச் சுமந்து செல்வதெப்படி? நீயோ விரைந்து செல்லும் குதிரையாய் இருக்கிருய்!

உடைந்த கோப்பையை ஒட்டவைத்தால் அதற்கு மதிப்புண்டா? அஜாக்கிரதையால் வாழ்க்கை எனுங் கோப்பை உன் கையிலிருந்து நழுவி விழுந்து உடைந்துவிட்டது. உடைந்ததை இனி ஒட்டவைக்கப் பார்ப்பானேன்!

## 47

ஒருவன் அதிகத் தானியத்தைச் சேகரித்து வைத்திருந்தான். அதைப்பற்றிய கவலையே கொள்ளாது அவன் மகிழ்ச்சியோடிருந்தான்.

ஓரிரவு குடிவெறியில் அவன் நெருப்புப் பற்ற வைத்தான். அது தானியக் குதிரில் பற்றித் தானியம் முழுமையையும் எரித்துவிட்டது.

மறு நாள் பானையை எல்லாம் தட்டிப்பார்த்தும் ஒரு தானிய மணிகூட அகப்படவில்லை. அவனுடைய மன வருத்தத்தை அறிந்த ஒருவர் கூறினர்: "இந்தத் துரதிர்ஷ்டத்தை நீ எதிர்பார்க்காததால் உன் குதிருக்கும் நெருப்பு வைத்துக்கொண்டாய்" என்று.

வீண் கேளிக்கையில் காலம் போக்குபவனும் தன் ஆயுள் வைக்கப்பட்டுள்ள குதிருக்கு நெருப்பிடுபவனுவான்.

சமயம், நியாயம் என்ற விதைகளை விதை. நற்பெயர் என்ற மகசூலைக் காற்றில் பறக்கவிடாதே. உனக்குத் தண்டனை வருமுன் மன்னிப்புத் தேடு. சவுக்கடி படும்போது அழுவதால் என்ன பயன் ?

## 48

இரவில் இறைவனைத் துதித்துக் கையேந்துபவன், நீதித்தீர்ப்பு நாளில் அச்சமுறமாட்டான்.

நீ புத்திசாலியாக இருந்தால் பகலில் செய்த பாவங்களுக்காக இரவில் பாவமன்னிப்புத் தேடு.

தன்னிடம் கையேந்துவோர்க்கு இறைவன் மன்னிப்பளியாது இரான்.

நீ ஆண்டவன் அடிமை எனில், பிரார்த்தனைக்காக உன் கையை உயர்த்து. நீ பாவஞ் செய்திருந்தால் அதற்காக அழுது மன்னிப்புக் கேள்.

பச்சாதாபம் என்னும் கண்ணீரால் தன் பாவத்தைக் கழுவாதவன் இறைவன் சந்நிதியின் வாயிலை நெருங்க முடியாது.

## அத்தியாயம் 10

# தொழுகையைப்பற்றி

## 49

வாருங்கள், இறைவனைத் தொழ நாம் கையை உயர்த்துவோம். நாளைப் புழுதியில் கிடக்கும் இக் கைகள் சக்தியற்றுப்போய்விடும்.

கருணை இல்லத்தின் வாயிலில் பிச்சை கேட்பவன் வெறுங்கையோடு திரும்புவான் என்று எண்ண வேண்டாம்!

இறைவா, எங்கள்மீது கருணைகாட்டு; உன் அடியார்களிடையே பாவம் புகுந்துவிட்டது.

ஹே இரக்கம் மிகுந்தவனே, உன் எல்லையற்ற அருளால் நாங்கள் வாழ்கிறோம்; உன் நன்கொடைகள், அருள்நோக்கு ஆகியவற்றுடேயே நாங்கள் படைக்கப்பட்டுவிட்டோம்.

இவ்வுலகில் படைக்கப்பட்டவற்றுளெல்லாம் பெருமை பொருந்தியவர்களாக மனிதர்களை ஆக்கினாய்; மறு உலகிலும் இத்தகைய பெருமைக்கு அவர்களை ஆளாக்கு.

இறைவா, உன் மகத்துவத்திடையிலும் நான் துன்புறுமாறு செய்துவிடாதே; என் பாவங்களுக்காக நான் வருந்தாது உன் மாட்சிமையால் மன்னிப்பளி.

உன் முன்னால் நான் வெட்கித் தலை குனிவது போதும்; பிறர் முன்னும் எனக்கு இந்தக் கதி நேராது அருள்புரி.

Q7:458ഴE75
N56



உன் கருணையின் நிழலாவது என்மீது விழுந் தால் போதும்; வானைப்போல் நான் பெருமை கொள்வேன்.

என்னை நீ உயர்த்து, பிறர் கீழே தள்ளாத முறையில்.

50

மக்கா ஷரீபிலுள்ள கஃபாவில் ஒரு பஞ்சை செய்த பிரார்த்தனை இது:

"என்னைக் கைவிட்டுவிடாதே; வேறு யாரும் எனக்குக் கைதர மாட்டார்கள். என்னை ஏற்றாலும் சரி, ஒதுக்கினாலும் சரி, உன் பாதாரவிந்தமன்றி எனக்கு வேறு புகலிடமில்லை. நான் பஞ்சை, நிர்க் கதியானவன் என்பதை நீ அறிவாய். என் தீய உணர்ச்சிகளால் நான் அடக்கப்பட்டிருந்தேன்; என் பாவத்தை மன்னித்து என்னைப் பரிசுத்தவா னாக்கு! மகிழ்ச்சி என்ற வதனத்திலிருந்து என் கண் களை மூடிவிடாதே! உன் பெருமையைப் பேசும் என் நாவைக் கட்டிப்போட்டுவிடாதே! என் வழியில் நம்பிக்கை என்ற விளக்கை ஏற்றி வை! தீமை செய் வதிலிருந்தும் என்னைக் காப்பாற்று! உன் பெருமை என்ற பகலவனின் ஒரு கிரணங்கூட எனக்குப் போதுமானது. என் நிலை குறித்து நான் ஏன் வருந்தவேண்டும்? நான் பலஹீனனாயினும், நான் யாரிடம் அபயந் தேடுகிறேனோ அவன் சர்வ வல் லமை யுடையவனல்லவா!"

ARCHIVES EGMORE, MADRAS
104405

ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய

ஆத்மஞான ஒளி விளக்குகள்

| | |
|---|---|
| ஹஜ்ரத் கௌதுல் அஃலம் 4 பாகங்கள் | ரூ. 12- 12 |
| ஹஜ்ரத் குத்புல் ஹிந்த் | 2- 8 |
| மாபெரும் மகாத்மா ரிபாயி ஆண்டகை | 2- 0 |
| திப்ப—நபவிய்யி | 1-12 |
| பாரஸீகப் பெருங் கவிஞர்கள் | 3-12 |
| கஷ்புல் கஸ்ஸாலீ | 2- 4 |
| மிஷ்காத்துல் அன்வார் | 1- 4 |
| பிழையிலிருந்து விடுதலை | 1- 4 |
| குலாஸதுத் தஸானீப் | 1- 0 |
| மகாகவி இக்பால் | 3- 0 |
| எம்பெருமான் பேசுகிறார்கள்! | 2- 0 |
| ஔராதுத் தொகுப்பு | 2- 0 |
| இஸ்லாமியக் கலைப் பண்பு | 2- 4 |

கிடைக்குமிடம்:

ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,

128, மூர் தெரு, சென்னை-1.

73
1-150

- படித்தோர் பரவசமடைகின்றனர்.
- கற்றோர் இதயங்கள் கரைந்து உருகுகின்றன.
- ஆத்மஞான விளக்கம் பெற விரும்பும் சகல மதத்தவருக்கும் பேருதவிபுரிகிறது.

### ஹஜ்ரத்

# கௌதுல் அஃலம்

(நான்கு பாகங்கள்)

இஸ்லாத்துக்குப் புத்துயிரூட்டிய மகான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் ஆதாரப் பூர்வமான சரிதையையும், புத்துயிரூட்டச் செய்த 'பத்ஹுர் ரப்பானி' அறுபத்தொரு சொற்பொழிவுகளையும், 'புதூஹுல் கைப்' முழுமையையும், கஸீதாக்களையும், காதிரிய்யாத் தரீக்காவின் திக்று அனுஷ்டான முறையையும், ஆண்டகையைப்பற்றிப் பெரியார்கள் பலர் தந்துள்ள விவரங்களையும் தெளிவான தமிழில் தரும் அரிய நூல்.

உறுதியான பைண்டிங். 1168 பக்கங்கள். முதல் பாகம் ரூ. 5—0—0. இரண்டாம் பாகம் ரூ. 3—0—0. மூன்றாம் பாகம் ரூ. 2—0—0 நான்காம் பாகம் ரூ. 2—12—0.

கிடைக்குமிடம் :

**ஆர். பி. எம். கனி பி. ஏ., பி. எல்.,**

128, மூர் தெரு, சென்னை—1.